# பொருநை வளம்

★

ஆசிரியர் :


வித்துவான் கோ வே பெருமாள், எம்ஏ, பிஓஎல்,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
ம தி தா இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-10.


★


திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140 பிரகாசம் சாலை, சென்னை-1.
1977

© கோ வே பெருமாள் (1922)

1977 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

திருநெல்வேலி–6 மதுரை–1 கோயமுத்தூர்–1
கும்பகோணம்–1 திருச்சி–2

கழக வெளியீடு : ௧௬௰௨

முதற்பதிப்பு : ஜூன் 1977

V441118
N77
119575

21197
N77

PORUNAI VALAM

அப்பர் அச்சகம், சென்னை–600 001. (1/2)

# பதிப்புரை

'பொருநை' என்னும் தாமிரபரணி யாற்றினால் வளம்பெறும் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப் படும் சிறப்பியல்புகளை எடுத்து விளக்கிக் கூறுவது இந் நூல். பொருநை நாடு எனச் சான்றோர்களால் புகழ்ந்து பாராட்டப்படும் அப் பகுதி பலவேறு சிறப்பு களையுடையது. தென்றற் காற்றோடு செந்தமிழ் மணம் பரப்பும் பொதிய மலையினை உடையது. மனங் குளிரச் செய்யும் சிறந்த அருவிகளையுடையது.

பல்வகை வளங்களோடு மருந்துச் செடிகளின் நலன்களையும் பெற்றுவரும் தாமிரவருணிநீர் உடல் வளத்தைப் பெருக்குவதோடு மனவளத்தையும் தருவ தாகும். அந்த ஆற்றில் துணையாறுகள் பல வந்து கலக்கின்றன; எட்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. அந்த ஆறு புண்ணியத்துறைகள் பலவற்றையும் பெற்றுள்ளது; வாணிகத் துறையிற் சிறந்த பேரூர் களையுடையது. சங்க காலத்திலும், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலும், பின்வந்த களப் பிரர், பல்லவர் முதல் ஆங்கிலேயர் காலம் வரை யிலும் காணப்பட்ட பல வியத்தகு உண்மைகளையும் இந் நூல் தெளிவாக விளக்குகிறது.

அகத்தியர் முதலாகப் பிற்கால மாதவச் சிவ ஞான முனிவர் ஈருகப் பொருநைக் கரையில் பிறந்து வளர்ந்த பேரறிஞர்கள்—தவமாண்பினர்கள் குறிப் பிட்டு விளக்கப்பட்டுள்ளனர். நாகரிக வளர்ச்சிக்கு

ஆற்றங்கரைகளும் அடிப்படைகளாக உள்ளன என்பதற்கேற்றபடி பொருநைக்கரையும் நாகரிகத்தை வளர்த்துள்ளது.

முன்னர்க் கழகத்தின் வழியாக 'கெடிலக்கரை நாகரிகம், 'காவிரி வளம்' என்னும் நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன ஆசிரியர். வித்துவான் கோ. வே. பெருமாள், MA., B.T அவர்கள் இந் நூலினைச் சிறந்த ஆராய்ச்சி முறையில் எழுதிக் கொடுத்தமைக்குக் கழகத்தின் நன்றியுரியதாகும்.

தமிழக உயர்பள்ளி—கல்லூரி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும், நூலகங்களுக்கும் இந் நூல் சிறந்த கல்வி விருந்தாக அமைந்துள்ளது. ஆதலின், அறிஞர் பெருமக்களும் ஆசிரிய அன்பர்களும் இந் நூலினை வாங்கிப் பயன்படச் செய்ய விரும்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

உரிமை பெற்றுள்ள இந்தியப் பெருநிலத்தின் தென்பகுதி மிகவும் தொன்மையும் முன்மையும் வாய்ந்தது என்பர்! அரும்பாடுகளுக்கு இப்பால் மொழி வழியே மாநிலங்கள் (2—10—1956) அமைந்தன; அவற்றுள் ஒன்ருகத் 'தமிழ்நாடு' (19—7—1967) திகழ்கின்றது! இங்கே வாழும் 'தமிழினத்தார்' மிகப் பழைய வரலாறு பெற்றவர்கள்; தலைசிறந்த நாகரிகம், பண்பாடு உற்றவர்கள்; அவற்றை உலகிற்கு உணர்த்தியவர்கள் ஆவர். இத்தகையோர் வாழ்ந்த தமிழகம், 'தென்ஞடு' எனப்பெற்றது. இஃது, உலகின் பழம் பெரு நாடுகளில் ஒன்று. இதனை, 'உலகின் மக்களினம் தோன்றிய முதல் இடம்' என்றும், 'மனித நாகரிகத்தின் முதல் வளர்ப்புப் பண்ணை' என்றும் அறிஞர்கள் பாராட்டி எழுதியுள்ளனர்.

உலகின் முதல் மனித இனமும் மொழியும் நாகரிகமும் பண்பாடும் தோன்றிய தென்ஞட்டின் உயிர் நாடியாகத் திகழ்வது, 'திருநெல்வேலி மாவட்டமே' என்பர்! இதனைத் 'தென்பாண்டி நாடு' என்றும், 'தென் தமிழ் நாடு' என்றும், 'பொருநை நாடு' என்றும் பலவாறு முன்ஞேரிலே புகன்றுள்ளனர். இங்கேயுள்ள 'பொதியமலை' உருவத்தில் சிறியதாயினும், உணர்விலே, உலகின் உயர்ந்த 'இமயமலை'க்கு இணையாகப் பெருமை உற்று விளங்குகின்றது. 'பொதியமும் இமயமும் போன்று நிலைபெறுக' என்று வாழ்த்து

தற்கு உரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. [''பொற் கோட்டு இமயமும் பொதியமும் போன்றே............. நடுக்கின்றி நிலையியர்.........'' புறம்—2-20 : 24] எகிப்து மக்களுக்கு 'நீல (நைல்) ஆறு' உயிர்நாடி என்பர்! அது போன்றே, தென்பாண்டி நாட்டார்க்கு, 'தண்பொருநை (தாமிரவருணி)யாறு' திகழ்கின்றது. முத்து, முத்தமிழ், தென்றல் முகிழ்க்கும் திருவிடமாக இவ் வட்டாரம் விளங்குகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய நாகரிக அடையாளங்கள், 'ஆதித்த நல்லூர்' அகழ்வாய்விலே கிடைத்துள்ளன. கொற்கையோ, பழைய வரலாறு கூறுகின்றது! திருச்செந்தூர்க் கடற்கரை நாத்திகரையும் தெய்வவுணர்வு பெறச் செய்ய வல்லது! குற்றால அருவிகளின் பருவகால நுகர்வுகள், உலகிலே வேறு எங்கும் பெற இயலாதன என்பர்! இவை போன்ற பெருஞ்சிறப்புகள் பல வற்றின் இருப்பிடமாக மிளிர்வதே, இப் பொருநை யாறு பாயும் வட்டாரம்! இந்த வட்டாரமே, சிறப்பாக தமிழ்நாட்டிற்கும், பொதுவாக உலக நாடுகள் அனைத் திற்கும் உயர்ந்த நாகரிகத்தையும், சிறந்த பண்பாட் டையும் உணர்த்தியிருக்க வேண்டும். [''யாதும் ஊரே யாவரும் கேளிர்''—புறம் - 192 : 1].

பொருநையாறு பாயும் இத் திருநெல்வேலி வட் டாரம், பெருமைகள் பலவற்றின் உறைவிடம் என லாம். இவற்றைச் சிந்திப்பவர்க்கு, பின்வரும் ஆங்கில நூல்களைப் படிப்பது, தேன்சுவை பிலிற்றுவதாக அமையும் :

(i) Manual of the Tinnevelly District (1879) A. T. Stuart, M.C.S.

(ii) Political and General History of the District of Tinnevelly (1881) Rev. R. Caldwell, D.D., L.L.D., Bishop.

(iii) Imperial Gazetteer of India Vol. xiii (1887) W. W. Hunter, L.L.D.

(iv) Imperial Gazetteer of India: Provincial series: Madras I and II (1908) Mr. W. Francis, I.C.S.

(v) The Foote Collection of Indian Pre-Historic and Proto-Historic Antiquities (1916) R. B. Foote, F.G.S.

(vi) Madras District Gazetteer: Tinnevelly (1917) H. R. Pate, I.C.S.

இவற்றுள், முதல் மூன்று நூல்களும் சென்ற நூற்றாண்டிலே யாக்கப் பெற்றன. அவை, இன்று சிதைவுறும் நிலையிலே காட்சி தருகின்றன; கிடைப்பதற்கும் அருமையாக உள்ளன. ஆதலின், கவலை கொள்கின்றேன். அவை மீண்டும் வெளியிடப் பெறுதல் வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்தல் நலமாம்!

இந்த வட்டாரத்தின் பழைமை வாய்ந்த 'பொதிய மலை', 'பொருநையாறு' ஆகியவற்றின் பெருமைகளை, வடவர்தம் இதிகாசத்துள் இயம்பினர்; புராணக் கதைகள் கற்பித்துப் புகன்றனர்; வேதத்திலே சாத்திரத்திலே விளங்க வைத்தனர்! அப் புனைந்துரை முறைகளை எல்லாம் புறக்கணித்து விட்டு, உண்மை நாடும் உணர்வோடு, "திருநெல்வேலி மாவட்ட அரசியல் பொது வரலாறு" (1881) என்னும் அருமை

வாய்ந்த ஒரு நூலை சென்ற நூற்றாண்டிலே, அயர்லாந்து நாட்டு அறிஞர், தமிழகம் வந்த கிறித்தவத் துறவியார் டாக்டர் ஆர். இராபர்ட் கால்டுவெல் ஐயர் அவர்கள் (1814—1891) ஆக்கினார்; 'திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்' (1931) எட்டையபுரம் திரு குருகுக தாசபிள்ளை இயற்றினார்; தமிழ்நாடு மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நூல் எழுதிய பயண நூல்களின் ஆசிரியர் நண்பர் திரு. "சோமலெ" (S. M. L. Lakshmanan Chettiar; b—1921) அவர்கள், "திருநெல்வேலி மாவட்டம்" பற்றித் தமிழிலே மிகத் தெளிவான நூல் ஒன்றைப் படைத்துள்ளார். இன்னவர் போன்றோர் அனைவருக்கும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

தி. தெ. சை. சி. நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் உயர்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்களிடத்திலே பெருமதிப்பு வைத்திருப்பவர்களில் நானும் ஒருவன். அப் பெரியார் அவர்களின் சிறந்த உரைகளால், கடந்த அறுபது ஆண்டுகளிலே, தமிழ் மொழியும், தமிழினமும், தமிழ்நாடும் கண்டுள்ள முன்னேற்ற நலன்கள் கணக்கில எனலாம்! கழக வெளியீடுகள் வழியே—செந்தமிழ்ச் செல்வி இதழ்கள் வாயிலாய்—அவர்கள் ஆற்றிவரும் அருந்தமிழ்ப் பணிகள் அளவில என்பதை அறியலாம். அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னரே, என்னிடம், "திருநெல்வேலி மாவட்டத்தை மட்டுமே சிந்தித்துச் சிந்தித்துச் சிறந்த ஆராய்ச்சி நூல்கள் பல எழுதலாம்" என்று அறிவுரை கூறினார்கள்; அதன் பின்னர், கடந்த 1975 மேத் திங்களிலே, தண்

பொருநை (தாமிரவருணி) யாறு குறித்து ஒரு நூல் எழுதுமாறு என்னைப் பணித்தார்கள். அதற்கிடையே, சென்ற 1976 ஏப்பிரலில், அப் பெருநூலின் சாயலிலே மாணவர்களுக்குப் பயன்படும் நடையிலும் அளவிலும் சிறு நூல் ஒன்று அக் கோடை விடு முறையிலே எழுதியனுப்ப வேண்டினார்கள்; சில பல சூழல்களால், அக் கோடை விடு முறையிலே முயன்ற பணி, இப்பொழுது தான் நிறைவு பெற்றது! எனவே, இந் நூல் கழக ஆட்சியாளர் அவர்களின் தூண்டல் பயனே ஆகும். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரியதாகும்.

இந் நூல், ''பொருநை வளம்'' என்ற பெயரிலே, 'தமிழ் வளம்' சாற்றுகின்றது எனலாம். பொருநை வட்டாரமே, தமிழக வட்டாரத்தின் முன்னோடி என்பர்! அந்த முறையிலே, இந் நூலைக் கற்றுத் துய்க்கலாம். அதன் வழியே, பெருவளம் வாய்ந்த 'பைந்தமிழ்ப் பண்பாடு'—'தமிழர் நாகரிகம்' ஆகியவற்றைத் தமிழ் மாணவர்களும், மற்றைய மக்களும் படித்து நுகரலாம். தனிசிறந்த பழந்தமிழ்ப் பண்பாடு—நாகரிகம் ஆகியவற்றைப் பாரோர்க்குப் புகட்ட வேண்டும் என்பதே, இச் சிறுநூலின் குறிக்கோள் ஆகும். இந் நூலினை, அறிஞர் பெருமக்கள் ஏற்றுப் போற்றியருள விழைகின்றேன்.

திருநெல்வேலி<br>
25—5—1977

கோ. வே. பெருமாள்.

# நன்றியுரை

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே."

இத் தொடர், நம் நாட்டுக் கவிஞர் சி. சு. பாரதியார் அவர்களின் பாட்டிலே அமைந்துள்ளது! இதனை உணருகின்றவர் நெஞ்சிலே ஒருவகை ஆர்வம் பிறக்கின்றது. "ஓர் இன்பச் சூழல்—பொதிகைமலை, குற்றால அருவி, 'பொருநை' என்னும் 'கல்பொருது இரங்கும் மல்லல் பேராறு', மனத்தூய்மை யூட்டும் திருச்செந்தூர்க் கடற்கரைக் கோவில், வளர்ந்து துலங்கும் தூத்துக்குடி வாணிகத் துறைமுகம், இவற்றின் நெஞ்சமாக நடுவே இலங்கும் திருநெல்வேலிப் பெருநகர்—அமைந்த ஒரு வட்டாரம்" ஒருவனுக்குப் பிறந்த பொன்னுடாக அமைந்திருந்தால், அஃது அவன் பெற்ற பேறு அன்றோ? மேலும், அந்த வட்டாரத்தின் பொது அரசியல் வரலாறு, தவமாண்பினர், பெருவளம், பண்பாடு-நாகரிகம் போன்றவற்றைத் துருவி ஆராயும் வாய்ப்பு அவனுக்கு வழங்கப்பெற்றால், உண்மையிலேயே, அஃது அவனுக்கு ஓர் உயர்ந்த பேறே யாகும்!

இந்த நற்பேற்றின் பயனே, 'பொருநை வளம்' என்னும் இச் சிறு நூல்! இப்பணியினை வழங்கிய கழக ஆட்சியாளர் தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்குப் பெரிதும் கடப்பாடு உடையேன். நன்றி; நன்றி; நன்றி.

திருநெல்வேலி
25—3—1977.

அன்புள்ள,
கோ. வே. பெருமாள்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொருநை நாடு | 1 |
| 2. | பொதிகை மலை | 11 |
| 3. | தண்பொருநை (தாமிரவருணி) ஆறு | 26 |
| 4. | அணைகளும் துணை ஆறுகளும் | 38 |
| 5. | பொருநை நாடு: அரசியல் பொது வரலாறு | 51 |
| 6. | பொருநைக்கரைப் பேரூர்கள் (திருக்கோவில்கள் புண்ணியத்துறைகள்) | 68 |
| 7. | தண்பொருநை தந்த தவமாண்பினர் | 93 |
| 8. | பொருநைப் பெருவளம் | 134 |
| 9. | பொருநைக்கரை நாகரிகம் | 150 |

# பொருநை வளம்

## 1. பொருநை நாடு

உலகில், அழகுக் காட்சிகள் பல பார்க்கின்ருேம். இயற்கைக் காட்சி இன்பம் தருகின்றது. மலையைப் பார்த்து மலைப்பு அடைகின்ருேம். கடலைக் கண்டு களிப்புக் கொள்கின்ருேம். ஆறு, சோலை, விலங்கு, பறவை ஆகியன ஒவ்வொன்றுமே மனத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுகின்றது! ஆற்றின் அழகை அகங் குழைந்து போற்றுகின்ருேம். ஆதலின், ஆற்றங்கரை இடங்களையே முன்னாளில் மக்கள் அதிகம் விரும்பினர்; அங்கேயே சேர்ந்து வாழ ஆசைகொண்டனர்; ஊர் அமைத்தனர்; நகர் அமைத்தனர்; 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்றனர்; உவந்து பேசி மொழி வழங்கினர்; நாடு கண்டனர்! அங்கே, நிலம் தரும் நீர்ஊற்றும், வான்தரும் மழைக் காற்றும் உண்டு! வாய்ப்பான மலைகளும், வளமான அருவிகளும் ஆறுகளும் வளம் பல தந்து நிலவும்! இயற்கையாகவே, மலையும் கடலும் எல்லைகளாக அமையும். அவை, நாட்டிற்கு வலிய அரணாக வாய்க்கும்! அங்கே, குறையாத விளைபொருள்கள் பெருகும்; செல்வம் சிறந்து விளங்கும். ஆதலின், மக்கள் தாழ்வு இல்லாச் செல்வராகத் தழைப்பர்; மகிழ்ந்து வாழ்வர். அங்கே, பசியோ, பிணியோ, பகையோ தோன்ரு; இன்பமும் காப்பும் இயங்கும்; பண்பாடு பரவும்; நாகரிகம் விரியும்! இத்தகைய ஆற்றங் கரையையே, மக்கள் வாழ்வதற்கு உரிய இடமாக நாடினர். இவ்வாறு, மனம் நாடுவதற்கு உரிய இடத்தையே, மக்கள் 'நாடு' என்றனர். பொருள் பொதிந்த இத் தமிழ்ச் சொல்லின் அருமையினைப் பாருங்கள்.

**தமிழ்நாடு :**

இந்தியப் பெருநிலம் பல மாநிலங்களைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் அந்த அந்த வட்டாரங்களில் வழங்கும்

மொழிகளையே பேசி வாழ்கின்றனர். ஆயினும், உணர்வால் ஒன்றுபட்டு வாழ்கின்றனர்! 'வேற்றுமையில் ஒற்றுமை' காணும் ஒருமை உணர்வு பெற்றுள்ளனர். தென்னிந்தியாவின் தென் பகுதியை, பழங்காலம் முதலே 'தமிழ்நாடு' என்றும், 'தமிழகம்' என்றும் சொல்லி வருகின்றனர். இதன் வட எல்லை திரு வேங்கடமலை; தென் எல்லை தென் குமரி; மேற்கே அரபிக்கடல்; கிழக்கே வங்கக் கடல். இந்த நான்கு எல்லைகளும், காலத் திற்குக் காலம் சிறுசிறு மாறுதல் உறினும், தமிழ்நாட்டின் எல்லை களாகவே நின்று நிலைத்து விளங்குகின்றன.

தமிழ்நாடு, ஏறக்குறைய நிலநடுப் பகுதியிலேயே அமைந் துள்ளது. ஆதலின், வெப்பம் மிகுதியாக உள்ளது. இதனால் பனியோ, பனிக்கட்டியோ ஆகாத தண்ணீரின் தவப்பயனை, இங்குள்ளோர் பெற்று வாழ்கின்றனர்! இங்கே காற்று உண்டு; தென்றல் உண்டு; மழை உண்டு; நீர்வளமும் நிலவளமும் உண்டு; நல்ல தட்பவெப்ப நிலை உண்டு. இதனால், இங்கே மக்கள் நிலத்தில் பயிரிடுகின்றனர்; உணவுப் பொருள்களை விளைவிக்கின்றனர்; உண்டு மகிழ்கின்றனர்; ஓய்வு நேரம் வாய்க்கப் பெறுகின்றனர்; அந்நேரங்களில் கல்வி, கைத்தொழில், கலை முதலியவற்றில் கவனம் செலுத்துகின்றனர். இதனால், இங்கு வாழும் மக்கள் உணவு, உடை, பழக்க வழக்கம், வீடு, வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் மேல்நிலை பெறும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இத் தமிழ்நாட்டின் ஊடுசுவர் போல, 'மேற்குத் தொடர்ச்சி மலைகள்' அமைந்துள்ளன. இம் மலைத் தொடரின் மேற்கே அமைந்த நிலத்தைச், 'சேரநாடு' என்று செப்பினர்; கிழக்கே அமைந்த நிலத்தின் வடபகுதியைச் 'சோழநாடு' என்று சொல் லினர்; தென்பகுதியைப் 'பாண்டியநாடு' என்று பகர்ந்தனர். இந்த மூன்று நாடுகளிலும் மக்கள் வழங்கி வந்த மொழி, 'தமிழ்மொழி'யே ஆகும். எனவே, மிகப் பழங்காலம் முதல், இந்த மூன்று நிலப் பகுதிகளையும் ஒருங்கு இணைத்துத், 'தமிழ்நாடு' என்று இலக் கியங்கள் இயம்பி உள்ளன! ஆனால், கி.பி. பன்னிரண்டாம் நூற் றூண்டிற்கு முன்னர் வரை, 'சேர நாடு' என்றிருந்த நிலப்பகுதி, இப்பொழுது 'கேரள நாடு' அல்லது 'கேரள மாநிலம்' என்று

பெயர் பெற்று விட்டது! அங்கே வழங்கிய பழந்தமிழ், 'மலையாளம்' என்னும் புது மொழியாகக் கிளைத்து விட்டது!

பொருநை நாடு:

மக்கள் பேசி மகிழும் மொழியின் பெயராலேயே, இன்று உலகில் பல நாடுகள் பெயர் பெற்றுள்ளன. அந்த நெறியிலே நம் மா நிலம், 'தமிழ்நாடு' என்றும் 'தமிழகம்' என்றும் வழங்கப் பெறுகின்றது. அங்கங்கே பாயும் ஆறுகளின் பெயரால், முன்னாளில் சில வட்டாரங்கள் 'நாடு' என்று பெயர் பெற்றதும் உண்டு. 'காவிரி ஆறு' சோழ நாட்டில் பாய்ந்தது. அதனைப் 'பொன்னியாறு' என்றும் போற்றுவர். அதனால், அந் நாட்டைக் 'காவிரிநாடு' என்றும் 'பொன்னிநாடு' என்றும் நூல்கள் போற்றுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைச் செழிக்கவைப்பது 'தண்பொருநை ஆறே' ஆகும். அதனைச் சுருக்கமாகப் 'பொருநையாறு' என்று போற்றுவர்; வடமொழியாளரோ, 'தண்பொருநை' என்பதனைத் தாமிரவருணி என்று வழங்கினர்! முன்னைத் தமிழறிஞர் இந்த வட்டாரத்தைப் 'பொருநை நாடு' என்று போற்றினர். இது பழைய 'பாண்டி நாட்'டின் தென்பகுதி அன்றோ? ஆதலின், இதனைத் 'தென்பாண்டி நாடு' என்றும் தெளிவாக வழங்கினர். மொத்தத்திலே, தமிழ் நாட்டின் தென்பகுதி ஆகிய இதனைத், 'தென்தமிழ் நாடு' என்றும் சாற்றினர்!

'பொருநை நாடு' புகழ் மிகுந்த பகுதி என்பர்; 'பழம் பெரும் பகுதி' என்றும் பாராட்டுவர்! குமரிமுனைக்குத் தெற்கே ஒரு காலத்தில் நிலப்பரப்பு நிலவியதாம்; அந் நிலப்பரப்பு பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே கடல் கொள்ளப் பெற்றதாம். எஞ்சிய பகுதியே, இப்பொழுது நாம் வாழும் இத் 'தென்னாடு' என்பர்! இதனை! முன்னர் 'நாவலந்தீவு' என்று நவின்றனர். நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப் பெற்ற நிலப்பரப்பையே, 'தீவு' என்று சொல்லுவது மரபு. இன்றுள்ள, இமயமலையும், சிந்து கங்கை பிரமபுத்திரா ஆற்றுச் சமவெளிகளும் அந் நாளில் கடலாகக் காட்சியளித்தன! பின்னரே அங்கு மலையும், நிலமும் எழுந்தன! இவற்றை மேலைநாட்டு நில ஆய்வாளர் நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர்! இவ்வாறு, தெற்கே 'குமரிக்

கண்டம்' கடல் கொள்ளப் பெறுவதற்கு முன்னரே—வடக்கே சிந்துகங்கை ஆறுகளும் இமயமலைச் சிகரங்களும் எழுவதற்கு முன்னரே—நின்று நிலைத்த திருவிடம், நாம் வாழும் இத் 'தென்னகம்' என்பர்! வரலாற்றுக் காலங்களுக்கு மிக முந்திய இச் செய்திகளை நம்பாதவர்களும் உண்டு! எப்படியோ, இத் 'தென் பாண்டித் திருநாடு' ஆகிய 'பொருநை நாடு' பழம் பெருமை மிக்க தொன்மை வாய்ந்தது என்பதை மறுப்பவர் இலர் எனலாம். இத்தகைய தொன்மைப் புகழ் வேறு நிலங்களுக்கு இல்லை! ஏனெனில், இந் நிலப் பகுதியிலேயே, முதன் முதலில் மக்கள் இனம் தோன்றியது என்பர்; முதன் முதல் தோன்றிய மொழி இங்கே நிலவியது என்பர்! ஆதலின், இந் நிலமே, முதன் முதல் மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் வளர்ப்புப் பண்ணையாக வும் விளங்கியிருக்க வேண்டும் என்று நிலநூல் வல்லுநர் நவிலு கின்றனர்.

**பொருநைக் கரைப் பெருமை:**

பெருமை மிகுந்த இந்தப் பொருநை நாட்டிலே 'பொதிய மாமலை' உண்டு; பொருநை ஆறு பாயும் அருமை உண்டு; அதன் துணையாறுகள் திகழும் வளம் உண்டு; தென்றல் வந் துலவும் திருநலன் உண்டு; தெளிந்தோர் வழங்கும் தேன் தமிழ் உண்டு; உலகப் புகழ் பெற்ற கொற்கைத் துறை முத்து உண்டு. பொதிய மலையிலிருந்து, திருநெல்வேலி வழியே கடற் கரையில் அமைந்த கொற்கைத் துறைப் பக்கமாய் மன்னார் வளை குடாவிலே சென்று கலக்கும் 'தண் பொருநையாற்'றின் இரு மருங்கிலும் அமைந்த தெய்வத் திருக்கோவில்களும், தேர்ந்த துறைகளும் பலப்பல உண்டு. இத் தண் பொருநை யாற்றங் கரைகளில் அமைந்த ஊர்களில் தோன்றிய 'தவமாண்பினர்' பல ராவார். இந்த 'ஆற்றங்கரை நாகரிகம்', சிந்துவெளி நாகரிகத் தோடு சேர்த்து எண்ணத் தகுந்த பழமையும் பெருமையும் வாய்ந்தது என்பர். இதனை, ஆதித்த நல்லூர், கொற்கை முதலிய இடங்களில் நடத்திய அகழ்வு ஆராய்ச்சிகள் அம்பலப் படுத்துகின்றன.

**பொருநை நாடு—அமைப்பு :**

இப் 'பொருநை நாடு', தென்பாண்டி நாட்டின் நெஞ்சகம் ஆகும். திருநெல்வேலி மாவட்டமே, 'தென்பாண்டி நாடு' எனப்படும். இஃது ஏறத்தாழ ஏழாயிரம் கல் பரப்பு அளவு உள்ளது. தென்வடல் நீளம் நூற்று இருபது கல். கீழ்மேல் அகலம் சுமார் அறுபது கல். இவ் வட்டாரம் ஏறக்குறைய முக் கோண வடிவம் வாய்ந்தது. இம் மாவட்டத்திலே பிறந்து, இம் மாவட்டத்திலே தவழ்ந்து, நடந்து, துள்ளி, விரைந்து ஓடி, இம் மாவட்டத்தின் கடலிலே நிறைவுறும் தண் பொருநை ஆற்றின் அமைப்பு, வியந்து பாராட்டற்கு உரியதே ஆகும். ஆதலின், இந்தப் 'பொருநையாறு', இம் மாவட்டத்தின் உயிராக வும் உயர்ந்த செல்வமாகவும் மதிக்கப் பெறுகின்றது. இதன் தெற்கே கன்னியாகுமரி மாவட்டம், வடக்கே இராமநாதபுரம் மாவட்டம், மேற்கே கேரளத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் எல்லை யாக நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலை—சிறப்பாகப் 'பொதிய மலை', கிழக்கே 'மன்னுர் குடாக்கடல்' ஆகிய இந் நான்கு திக்குகளே நெல்லை வட்டாரத்தின் எல்லைகளாக அமைந் துள்ளன. மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையாதலின், இப் பொருநை நாட்டின் மேல் பகுதி மேடாகவும், கிழக்கே வரவரப் பள்ளமாகவும் அமைந்துள்ளது. மேல்+கு=மேற்கு, கீழ்+ அக்கு=கிழக்கு என்று தமிழக நில அமைப்பே இரு திசை களுக்கும் காரணப் பெயர்களாகத் தமிழிலே வழங்கப் பெறு கின்றன எனலாம். இப் பொருநை நாடான தென்பாண்டி நாட்டின் தலைநகரம் 'திருநெல்வேலி' என்னும் திருநகரே ஆகும். இஃது இவ் வட்டாரத்தின் நடுவே அமைந்துள்ளது.

இஃது, இப் பகுதிக்கு ஒரு தனிச் சிறப்பு எனலாம். இங்கே, பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் 'ஐவகை நிலம்' உண்டு. அவை, (i) குறிஞ்சி (மலையும் மலைசார்ந்த இடங்களும்), (ii) முல்லை (காடும் காடு சார்ந்த இடங்களும்), (iii) மருதம் (வயலும் வயல் சார்ந்த நிலங்களும்), (iv) நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடங்களும்), (v) பாலை (நீர் வளமற்ற நிலம்) என்பனவாம். அம்பா சமுத்திரம், தென்காசி, செங்கோட்டை,

நான்குநேரி ஆகிய வட்டங்களின் மேலைப் பகுதிகளை, சிறந்த குறிஞ்சி நிலத்துக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். இங்குள்ள பொதிகை மலையும், குற்றால மலையும், மகேந்திர மலையும் இயற்கை எழில் வாய்ந்தனவாகும். ஆழ்வார் குறிச்சி, பூங்குறிச்சி, கல்லிடைக் குறிச்சி, கார் குறிச்சி, முருகன் குறிச்சி, பரமன் குறிச்சி ஆகிய ஊர்களின் பெயர்கள் குறிஞ்சி நிலத்தை நினைப்பூட்டுகின்றன. முல்லை நிலம் மலைகளை அடுத்துள்ள காடுகளாக அமைந்துள்ளன. செங்கோட்டை, பாபநாசம் முதலிய நிலப் பகுதிகளில் உள்ள காடுகள், தமிழ் நாட்டின் வளத்திற்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. நிலவளமும், நீர் வளமும் வாய்ந்த பொருநை ஆற்றின் கரைகள், மாண்பு மிகுந்த மருதநிலமாகச் சிறந்து விளங்குகின்றன. இதற்கு அம்பா சமுத்திரம், தென்காசி, திருநெல்வேலி, திருவைகுண்டம் ஆகிய வட்டங்களைச் சான்றாகக் குறிப்பிடலாம். வளத்திலும், வருவாயிலும், விலையிலும் நெல்லை மாவட்ட நிலங்கள், தஞ்சை மாவட்டத்திற்கு இணையானவை என்று சொல்லுவார்கள். சோழ நாட்டில் காவிரி ஆற்று வளம் உண்டு; தென்பாண்டி நாட்டில், பொருநை ஆற்று வளத்தோடு, தென்றல் காற்று வளமும் உண்டு. தென்றலும், சாரலும் இவ் வட்டாரத்திற்கே உரியன. பாப்பான் குளம், வெள்ளிக் குளம், வாகைக் குளம், செங்குளம், முள்ளிக் குளம் முதலிய ஊர்களின் பெயர்களும், 'சமுத்திரம்' என்று முடியும் ஊர்ப் பெயர்களும் வயல்வளம் மிகுந்த பொருநை நாட்டின் மருதநிலச் செழிப்பைக் காட்டுகின்றன. இம் மாவட்டத்தின் நடுவிடத்திலே, 'திருநெல்வேலி' என்னும் தலைநகர் அமைந்துள்ளது. இப் பெயரிலேயே, மருத நிலத்தின் மாண்பொருள் பொதிந்துள்ளதை உணரலாம். இம் மாவட்டத்தின் கடற்கரை, நெய்தல் நிலத்திற்கு இலக்காக விளங்குகின்றது. கடற்கரை நகரைப் 'பட்டினம்' என்பர். இங்கே, காயல் பட்டினம், வீரபாண்டியன் பட்டினம், குலசேகரன் பட்டினம் என்னும் பேரூர்கள் உள்ளன. கடல் வழியே வரும் வெளி நாட்டார்க்குத் தமிழ்நாட்டின் வாயிலாக முன்பு ஒரு காலத்தில், 'கொற்கை நகர்' அமைந்திருந்தது. அச் சிறப்பினை, இப்பொழுது 'தூத்துக்குடி' பெற்றுள்ளது. இது, சென்னைக்கு அடுத்தபடி

யாக, தமிழ் நாட்டின் பெரிய துறைமுகமாக வளர்ந்து வருகின்றது! இம் மாவட்டத்தில் பாலை நிலத்திற்கு மேற்கோளாக, நான்குநேரி வட்டத்தையும் திருச்செந்தூர் வட்டத்தின் தென் பகுதியையும் காட்டலாம்! இவ் வகைப் பாலைநிலப் பகுதியைத் தமிழ்நாட்டில் வேறு எங்கும் காண இயலாது என்பர். எனவே, இப் பொருநை நாடு, ஐந்து நில அழகினைப் பெற்றுத் திகழ்கின்றது என்பதில் ஐயம் உண்டோ?

### பொருநை நாடு—வரலாறு:

தென்பாண்டி நாட்டில் 'தண் பொருநையாறு' கடலொடு கலக்கும் இடத்தில் 'கொற்கை' என்னும் மாநகர் இருந்தது; அஃது ஒரு சிறந்த துறைமுக நகராகவும் திகழ்ந்தது! மிகப் பழங்காலத்திலே முதன் முதலில் அந் நகரில் இருந்தவாறே தமிழகம் முழுவதையும் தனி மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தான்! அப் பெரு மன்னவனுக்கு மக்கள் மூவர் இருந்தனர். அவர்களே, பாண்டியன், சேரன், சோழன் என்னும் மூவேந்தர் ஆவர். இம் மூவரும் கொற்கையில் வாழ்ந்தனர்; பொதுவாக ஆட்சி புரிந்து வந்தனர். மூவரின் வழி உரிமைச் செல்வங்களும் ஒரு சேரத் தொகுத்து வைத்த இடமே 'முக்காணி' (மூன்று காணி—உரிமைச் செல்வம்) என்று சொல்லப் பெற்றது. இம் மூவரும் பின்னர்ப் பிரியும் காலம் வந்தது! அப்பொழுது, தமிழகத்தின் மலைத்தொடருக்கு மேற்கே, சேரன் சென்று ஆண்டான்; கிழக்கே, வடபால் சோழன் சென்று வாழ்ந்தான்; தென்பால் நிலத்தைப் பாண்டியனே ஆண்டான். பின்னர், நீண்ட நெடுங்காலம் இம் மூவரும் இம் முத்தமிழ் நாட்டினை முறையே வழிவழியாக ஆண்டு வந்தனர் என்று மக்கள் பழங்கதைபகருகின்றனர்! எனவே, முத்தமிழ் வேந்தரின் மூல இடமே, 'தண் பொருநை ஆறு' பாயும் இத் தனித்தமிழ் நிலம் என்பதை உணரலாம்.

இன்றைய நாகரிக நாடுகளின் வரலாறுகள் எல்லாம், ஏறத்தாழ கடந்த ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்டனவே என்று சொல்லுவர்! ஆனால், இந் நாடுகளின் வரலாறு தோன்றுவதற்கு முன்னரே, சிறந்து இருந்த உலக

நாடுகளின் நாகரிகங்கள் சில உண்டு. அவற்றை எகிப்து நாகரிகம், கிரேக்க நாகரிகம், உரோம நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், சிந்து வெளி நாகரிகம், சீன நாகரிகம் என்று அடுக்குவர்! ஆனல், அந்த நாகரிகங்களை விட, எந்த வகையிலும் குறையாத தனி நாகரிகம், ''தமிழ் நாகரிகம்'' எனலாம். அஃது இந்தத் தண்பொருநை ஆற்றங் கரைகளிலே தழைத்தது என்பதற்கு ஐயம் இல்லை! வரலாற்றுக் காலத்திற்கு இப்பால், இப் பொருநை நாட்டிற்கு என்று தனி வரலாறு காணத் தேவை இல்லை! தென்னுட்டு வரலாறே இன்னும் தெளிவாக எழுதப் பெறவில்லை!! அந் நிலையிலே பொதுவாகத் தமிழ் நாட்டு வரலாறு—சிறப்பாகப் பாண்டி நாட்டு வரலாறு, இப் 'பொருநை நாடு' பெற்றுள்ள வரலாற்றைத் தெளிவு படுத்தும். திருநெல்வேலி மாவட்ட வரலாறு, இப்பொழுது ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாக எழுதப் பெற்றுள்ளது. சிறப்பாக, சென்ற நூற்ருண்டில் (கி. பி. 1881) வெளியிடப் பெற்றுள்ள 'திருநெல்வேலி பொது அரசியல் வரலாறு'* என்ற ஆங்கில நூலைச் சொல்லலாம்! இதுவே, இம் மாவட்டத்திற்கு வாய்த்த முதல் 'வரலாற்று நூல்' ஆகும். இதனை ஆக்கிய மறைத்திரு 'இராபர்ட் கால்டுவெல்' (கி. பி. 1814—1891) அவர்களுக்குத் தமிழர்கள் ஆகிய நாம் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையவர்கள் ஆவோம்! அவர்கள், ''தென்னிந்தியாவின் மிகப் பழமையான நாகரிகம் நனி சிறந்து விளங்கியது, 'தண் பொருநை ஆற்றின் கரை'களிலேயே'' என்று உறுதி மொழிந்துள்ளார்கள்!

பொருநை நாடு—சிறப்பு:

இப் பொருநை நாட்டில், அகத்திய முனிவர் அருந்தவம் புரிந்து தமிழ் வளர்த்த 'பொதிகை மலை' உண்டு; தமிழ் கண்டதோர் அழகிய 'தண் பொருநை ஆறு' உண்டு; இன்பத் தென்றல் காற்று உண்டு! வரலாற்றுப் புகழ் வாய்ந்த வளமான இலக்கிய நூல்கள், நகர்கள், ஊர்கள், இடங்கள் உண்டு;

*The Political and General History of the District of Tinnevelly (1881) By The Right Rev. R. CALDWELL, DD., LLD. Bishop.

சிப்பியும், முத்தும், சங்கும் கிடைக்கும் 'கடல் வளம்' உண்டு; நல்ல தமிழ் வழங்கும் நாகரிகம் உண்டு; இன்னும், இவை போன்ற எண்ணற்ற சிறப்புகள் உண்டு. நாட்டு உணர்ச்சியை ஊட்டிய எண்ணற்ற வீரர்கள் இங்கே தோன்றினர்; நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டனர்! இவ் வட்டாரம் தமிழ் மொழி வளர்ச்சியிலும் தனிப் பெரும் பணி புரிந்திருக்கின்றது; அகத்தியர், நம்மாழ்வார், குமரகுருபரர், சிவஞான முனிவர் போன்ற எண்ணற்ற பெரும் புலவர் இங்கே தோன்றினர். கிறித்தவ மதப்பணி புரிய வந்த தவத்திரு கால்டுவெல், அருள் திரு ஜி. யூ. போப்பு போன்ற மேனாட்டு அறிஞர்களைத் தமிழ்த் தொண்டர் ஆக்கிய பெருமை இம் மண்ணிற்கு உண்டு!

நிறைவுரை :

பழங் காலத்தில், பாண்டியர் ஆண்ட பாண்டி நாட்டில், இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கி யிருந்தன. பாண்டிய நாட்டின் சிறப்பைப், பழைய தமிழ் நூல்கள் மிக விரிவாகக் கூறுகின்றன. பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். புறநானூறு, பத்துப் பாட்டு முதலிய சங்க நூல்களில் பாண்டியர் புகழ் பாராட்டப் பெற்றுள்ளது. பாண்டி நாட்டின் வளமும், மதுரை, திருநெல்வேலி ஆகிய கோநகர்களின் கொற்றமும், நெடுஞ்செழியன் ஆட்சிச் சிறப்பும் 'மதுரைக் காஞ்சி' என்னும் நூலிலே விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. முத்தும் முத்தமிழும் பெற்ற திருநெல்வேலி வட்டாரம் முன்மையும் தொன்மையும் வாய்ந்தது ஆகும்.

இப் பொருநை நாட்டின் சிறந்த மலை பொதிகையே. இது தமிழகத்துக்கே சிறப்பான மலை யாகும். இந் நெல்லை மாவட்டத்தின் இன்றியமையாத ஆறு 'தண் பொருநை'யே; அஃதாவது, 'தாமிரவருணியே'. இது மிகவும் புகழ் வாய்ந்த ஆறு ஆகும். இந்த ஆறு கடலொடு கலக்கும் இடத்திலே விளங்கிய கொற்கை மாநகர், ஓர் இன்றியமையாத துறைமுக நகராக விளங்கியது. இங்கே பாண்டிய நாட்டின் கடல்வாணிகம்

செழித்து விளங்கியது. பாண்டி நாட்டு முத்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியது. உரோம் முதலிய மேலை நாடுகளுடன் விரிந்த வாணிபம் நடை பெற்றது! மேனாடுகளிலிருந்து குதிரைகளும், மதுவகைகளும், கண்ணாடிச் சாமான்களும் இறக்குமதி ஆயின. பாண்டிய நாடு பற்றி கிரேக்க, உரோம வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பு வழங்கி யுள்ளனர். பாண்டி நாடு பற்றி வடமொழி மாபாரதம் இராமாயணம் ஆகிய இதிகாச நூல்களில் குறிப்புகள் வந்துள்ளன. பாண்டியர்களால் ஆளப்பெற்ற இப் 'பொருநை நாடு' வரலாற்றிலே அழியாத இடம் பெற்றுள்ளது. இத் தென்பாண்டி மண்டலம் ஆகிய திருநெல்வேலிச் சீமைக்குப் பழமையால் வந்த பெருமை மட்டும் அல்லாமல் புதுமையால் தமிழ் நாட்டுக்கு வரும் பெருமைகளிலும், மிகுந்த பங்குகள் உண்டு! எனவே, இப் பொருநை நாடு, தமிழகத்தின் 'பொன்னேடு' ஆக மதிக்கத் தக்க மாண்புகள் வாய்ந்தது எனலாம்.

# 2. பொதிகை மலை

> "நடுக்(கு) இன்றி நிலையரோ ... ...
> ... ... ... ... ... ...
> பொன்கோட்(டு) இமயமும் பொதியமும் போன்றே!"[1]

**தென்பாண்டித் திருநாடு :**

பழங்காலத்தில் தமிழ்நாடு சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என்னும் முப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவற்றுள், 'பாண்டி நாடு' என்று சொல்லப் பெற்ற பகுதி, இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய வட்டாரம் எனலாம். இந்தப் 'பாண்டிய நாடே பழம்பெரும் நாடு' என்று பாராட்டப் பெற்றுள்ளது. இங்கேதான் செந்தமிழ் மொழி பிறந்து வளர்ந்து சிறந்தது என்பர்! முதல், இடை, கடைச் சங்கங்கள் ஆகிய முச்சங்கங்கள் தோன்றித் தமிழ் வளர்த்தன என்பர்! எண்ணற்ற புலவர் இருந்து தமிழ் வளர்த்தனர் என்பர். இப் 'பாண்டி நாடு' இரு பகுதிகளாகக் கருதப் பெற்றது. வைகை ஆறு பாயும் மதுரை வட்டாரத்தை, 'வடபாண்டி நாடு' என்று சொல்லும் வழக்கம் இல்லை! ஆனால், 'தண்பொருநை ஆறு' பாயும் தென் பகுதியைத் 'தென்பாண்டி நாடு' என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு! மணிவாசகர் தம் 'திருவாசகம்' என்னும் நூலின் உள்ளே, 'என்றும் அருள் புரிவான் நாடு, தென்பாண்டி நாடே தெளி' என்றும், 'தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே' என்றும், 'குயிலே! தென் பாண்டி நாடனைக் கூவாய்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

1. புறநானூறு—2: 20-4. முரஞ்சியூர் முடிநாகராயர், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை, பாடாண் திணையாக—செவியறிவுறுத்தி, வாழ்த்தியுள்ளார். இதில், "சேரலாதனை மலைகளில் சிறந்த 'இமயம்' போன்றும், 'பொதியம்' போன்றும், நடுக்கம் இன்றி, நிலைத்து வாழ்க" என்று அறிவுறுத்தி, வாழ்த்தியுள்ளார்.

'அபிதான சிந்தாமணி' என்னும் அகர வரிசைத் தொகுப்பு நூலில், தமிழாசிரியர் திரு. ஆ. சிங்காரவேலு அவர்கள் "'தென் பாண்டி' என்பது தமிழ்நாட்டின் ஒரு பகுதி; அது திருநெல் வேலியே" என்று தெளிவு படுத்தியுள்ளார். நன்னூல் உரை யாசிரியர்கள், 'தென்பாண்டி நாடு' என்பது, 'செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தென்திசைக் கண்ணது' என்றும், 'இது, கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டனுள் ஒன்று' என்றும் குறிப் பிட்டுள்ளனர். சிலர், 'இது பாண்டி நாட்டின் தென்பகுதியே; ஆதலின் நாஞ்சில் நாடு' என்று கருதுகின்றனர். பொதுவாக, பழைய பாண்டிய நாட்டின், தென்பகுதியாகிய 'திருநெல்வேலி மாவட்ட'மே, 'தென்பாண்டி நாடு' என்று தெளிவாக வழங்கப் பெற்றது எனலாம். இதனையே, 'பொருநை நாடு' என்று புலவர்கள் போற்றிப் புகழ்ந்தனர் என்பர்.

மேற்குத் தொடர்ச்சி மலை :

'தென்பாண்டி நாட்'டின் மேற்கு எல்லை 'மேலைமலைத் தொடர்' ஆகும். இது வடக்கே கோவை மதுரை மாவட்டங் களில் இருந்து தெற்கே கன்னியாகுமரி மாவட்டம் வரை நீண்டு கிடக்கின்றது! இத் தொடர், சில இடங்களில் நெளிந்தும், வளைந்தும், சில இடங்களில் நேராகவும் செல்கின்றது! திருநெல் வேலி மாவட்டத்திலே தென்காசி வட்டத்தில், இத் தொடர் சிறிது வளைவாகத் தெரிகின்றது; பின்னர் பாபநாசம் வரை நேராகத் தெற்கே வருகின்றது; அதன்பின் தென் கிழக்கில் வளை வாக அமைந்துள்ளது; அப்பால், தெற்கு நோக்கிக் கன்னியா குமரிக் கடல்வரை காணப்படுகின்றது; இத் தொடரின் இறுதி, குமரிமுனைக்கு அருகில் உள்ள 'மருத்து வாமலை'—மருந்து வாழ் மலையே ஆகும்.

இம் மலைத் தொடரிலே இரு கணவாய்கள் காணப் படுகின்றன. ஒன்று சிறிய கணவாய். இது வடக்கே செங் கோட்டையின் பக்கத்திலே 'ஆரியங்காவுக் கணவாய்' என்று சொல்லப் பெறுகின்றது. மற்றொன்று சற்றுப் பெரிய கணவாய்! இது, தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தின் நான்குநேரி வட்டத்தின் தென் எல்லையிலே உள்ளது. இதன் பெயர் 'ஆரல்

ஆம்பொழி'க் (ஆரல்=மதில்; பொழி=எல்லை) கணவாய்' எனப் படும். அஃது 'ஆராம் பொழி' என்று மருவி வழங்கப்பெறுகின்றது. சிலர் இதனை, 'ஆரல் வாய்மொழி' என்பர்! இந்த இரு கணவாய் களும் மேற்கு மலைத் தொடரைக் கடந்து கேரள மாநிலம் செல் வதற்கு உரிய வழிகளாக வாய்த்துள்ளன.

இம் மலைத் தொடரில் பல முடிகள் உள்ளன. இவற்றை மலை உச்சிகள் அல்லது குடுமிகள் எனலாம். வடக்கே 'சிவகிரி'யிலிருந்து தென்காசி வரை, சராசரி ஐயாயிரம் (5000) அடி உயரம் உள்ள இருபது முடிகளுக்குக் குறைவில்லாமல் காணலாம்! இவற்றுள், சிவகிரியை ஒட்டியுள்ள கள்ளக்கடை மொட்டைக் குன்று (5,725 அடி), புளியங்குடியை அடுத்துள்ள கோட்டைமலை (6,335 அடி), கிருட்டிண புரத்தை அடுத்துள்ள குளிராட்டிக் குன்று (5,876 அடி) என்பனவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்த எல்லையில் இம் மலைத்தொடர் தெற்கே வரவர உயரம் குறைந்து, ஆரியங்காவுக் கணவாய்க்குச் செல் கின்றது! இங்கே, செங்கோட்டைப் பகுதியிலிருந்து புனலூர் செல்லும் வரை கண்ணுக்கு இனிய காட்சி வழங்குகின்றது! பின்பு மீண்டும் இம் மலைத்தொடர் உயரத் தொடங்குகின்றது; குற்றாலத் திரிகூட மலை'யிலே அமைந்திருக்கும் 'பஞ்சந்தாங்கி' (5,135 அடி) முடி கண்ணைக் கவர்கின்றது! பஞ்சம் வராமல் மழை பெய்வித்து மக்களைத் தாங்கும் மலைமுடி ஆக விளங்கு கின்றது! குற்றாலச்சாரல் உலகப் புகழ் வாய்ந்தது; உடல்நலன் காக்க வல்லது! இங்குள்ள அருவிகளின் அருமை மிகவும் பெருமை வாய்ந்தது. அங்கு இருந்து 'சிற்றாறு' என்னும் 'சித்திரா நதி' புறப்படுகின்றது. பின்பு, மத்தளம் பாறை மகிழ்ச்சியூட்டு கின்றது; 'குளிராட்டி முடி' இன்பக் குளிரை ஆட்டி மகிழ்ச்சி ஊட்டுகின்றது!

இம் மலைத்தொடர், இங்கிருந்து விரியத் தொடங்கி, பாவ நாசம் பக்கம் மிகவும் அகலமாக விளங்குகின்றது. இங்கேதான், இமயமலை போன்ற புகழுக்கு உரிய 'பொதிகை மலை' இருக்கின்றது. இதனை 'அகத்தியர் மலை' என்பர்; 'அகத்தியர் கூடம்' என்பர். இதன் உயரம் 6,132 அடி! இது கோடைக் காலத்தில் மேற்கே

திருவனந்தபுரத்தில் நின்று பார்த்தாலும் தெரியும்; கிழக்கே திருநெல்வேலியில் நின்று பார்த்தாலும் தெரியும்! தென் மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று ஆகிய இரு பருவக் காற்றுகளின் முழுப் பயனையும் இம் முடி அடைகின்றது. ஆதலின், இதனை மக்கள், 'ஏகபொதிகை' என்று ஏத்திப் பாராட்டு கின்றனர்! இங்கே தான், 'தண்பொருநை யாறு' தோன்றுகின்றது. இதன் தெற்கே மலைமுடி ஐந்து தலைகளாக விளங்குகின்றது. இதனால். இதனை மக்கள், 'ஐந்தலைப் பொதிகை' என்கின்றனர். இதன் பின்னர் இம் மலைத்தொடர் தென்கிழக்காகச் சென்று, நான்குநேரி வட்ட மேற்பகுதியை அடைகின்றது. இங்கெல் லாம் ஏறத்தாழ 5000 அடி உயரம் உள்ளது! களக்காடு என்னும் ஊர்ப் பக்கத்தில் உள்ள 'வெள்ளிமலை'யிலே 'பச்சையாறு' தோன்று கிறது. திருக்குறுங்குடி என்னும் ஊர்ப் பக்கம் 6000 அடி உயர்ந்து 'மகேந்திர கிரி' என்னும் பெயர் பெறுகின்றது. பின்னர் பணகுடிக்குத் தெற்கே, 'ஆரலாம் பொழிக் கணவாய்' கடந்து, குமரிமுனைக்கு வடமேற்கே 15 கி.மீ. தொலைவில் இம் மலைத் தொடர் முடிந்து விடுகின்றது! இவ்வாறு, மேற்குமலைத் தொடர்ச்சியே, 'பொருநை நாடு' என்னும் திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு எல்லையாக விளங்குகின்றது. இதன் நீளம் ஏறத்தாழ 160 கி.மீ. எனலாம்.

### பொதிகை மலை:

மேற்கு மலைத் தொடர்ச்சியின் இடையே காட்சிதரும் இந்தப் பொதிகைமலை, தென்பாண்டி நாட்டின் பொன் முடியாய்த் திகழ்கின்றது! இதனை, மலையம், மலைய மாமலை, தென்மலை, தமிழ் மலை, அகத்தியர் மலை, பொதியம், பொதிய மலை, பொதிய மாமலை, ஏக பொதிகை முதலிய பல பெயர்களால் வழங்குவர். இப் பொதிகை மலை தொன்மைச் சிறப்பும் இலக்கியப் பெருமை யும் பெற்றுள்ளது. செந்தமிழும் சுவையும் போல, பைந்தமிழும் பொதிகை மலையும் பிரிக்க இயலாத சிறப்பை உடையன! தமிழ் இன்றேல் பொதிகை இல்லை; பொதிகை இன்றேல் தமிழ் இல்லை என்று சொல்லத் தகுந்த நிலையில் இரண்டும் பின்னிப் பிணைந்து உள்ளன! இம் மலை, சந்தனம், அகில், தேக்கு

ASSISTANT REGISTRAR OF BOOKS
25 NOV 1977
MADRAS-600 002

போன்ற பல பொருள்களையும் பொதிந்து வைத்துள்ளது. ஆதலின், இம் மலைக்குப் 'பொதியம்' 'பொதிகை' என்று பெயர் வழங்கினர் போலும்! இப் பொதிகை மலையினைத் 'தமிழ்மலை' என்றும், 'தமிழ்க் குன்று' என்றும் புலவர் போற்றினர். பொதிகை மலை தமிழ்த் தாயின் பிறப்பிடமாக அமையும் பேறு பெற்றது. தமிழ் அன்னையால் 'அகத்தியர்' பெருமை பெற்றார். 'அகத்திய முனிவர்' அங்கு வாழ்ந்து, அன்னைத் தமிழை அறிந்து, முத் தமிழுக்கும் இலக்கண நூல் ஆக்கினார். இதனால், அவர் 'தமிழ் முனிவர்' என்று வழங்கப் பெறுகின்றார். 'அகத்தியர் பலர்' என்பர்! அவர்களைப் பற்றிய பழங்கதைகள் பல உண்டு. அவர்களுள், தமிழ் உணர்ந்த அகத்தியர் 'தமிழ் முனிவர்' ஆனார்! பொதிகை மலையிலே பல கூறுகள் (பகுதிகள்) உள்ளன. அவையே மகேந்திர மலை, வெள்ளி மலை, அகத்தியர் மலை, தோரண மலை, திருக்குற்றால மலை முதலியன; அவை எல்லாம் இப் பொதிகையின் கிளைகளாகவே மதிக்கப் பெறுகின்றன.

*"திங்கள்முடி சூடுமலை; தென்றல்விளை யாடுமலை;*
*தங்குபுயல் சூழுமலை; தமிழ்முனிவன் வாழுமலை;*
*அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்*
*பொங்கருவி தூங்குமலை 'பொதியமலை' என்மலையே!"[1]*

மலையின் நிலையைப் பாருங்கள். அதன் தோற்றத்தையும் செழிப்பையும் நோக்குங்கள். ஒருவகை வியப்பு தோன்றுகின்றது அன்றோ? மனத்திலே மலைப்பு எழுகின்றது அன்றோ? எனவே, நம் தமிழ் முன்னோர் இதனை 'மலை' என்றனர்; 'தென் மலை' என்றனர்; 'மாமலை' என்று மதித்தனர்; 'மலயம்' என்று உரைத்தனர்; எனவே, இப் பொதுப் பெயர்கள் பொதிகையின் சிறப்புப் பெயர்களாகவும் சிறந்தன எனலாம்! தென்றல் இம் மலையில் பிறப்பதால், இதனைத் 'தென்றல் வரை' என்றும் சாற்றுவர். 'தென்றல் பிறந்த மலையில் தேன்தமிழும் பிறந்தது' என்று மக்கள் வழிவழியே மொழிந்து வருகின்றனர். பொருப்பு, பிறங்கல், வரை, வெற்பு, சிலம்பு, ஓங்கல், விலங்கல் என்பன

---

1. *மதுரை மீனாட்சியம்மை குறம்: கஉ. (குமரகுருபரர்) கொச்சகக் கலிப்பா.*

'மலை' என்னும் பொருளையே தருவனவாம். இதனால், 'பொருப்பு' என்னும் சொல், பொதுவாக 'மலை'யையே குறிக்கும் என்பதை உணரலாம். இருப்பினும் 'பொருப்பு' என்னும் பொதுப்பெயர், 'பொதிகை மலை'யைக் குறிக்கும் சிறப்புப் பெயர் போன்று, செந்தமிழ்ச் சான்றோர் செய்யுள் செய்துள்ளனர்.

> "பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்(து)
> இருப்பிலே இருந்து, வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை,
> நெருப்பிலே நின்று, கற்றோர் நினைவிலே நடந்(து)ஓர் ஏன
> மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்."[1]

பாண்டிய மன்னரும், 'தென்னம் பொருப்பன்' (புறம்-215 : 6) என்று தெரிவிக்கப் பெற்றுள்ளனர். இதனால், பாண்டியர், 'தென் திசையில் உள்ள அழகிய பொதிகை மலைக்கு உரியவர்' (தென்+அம்+பொருப்பு+அன்) என்னும் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதை உணரலாம். 'பொதியில் தென்றல்' (சிலம்பு - 13 : 131) என்றார் இளங்கோ அடிகள். கம்பரோ, 'தென் தமிழ் நாட்(டு) அகன் பொதியில்' என்று அகம் மகிழ்ந்து குறிப்பிட்டுள்ளார். இம் மலையைச் 'சந்தனப் பொதிகை' என்று சான்றோர் சாற்றினர்; 'புண்ணிய நெடுவரை' என்று போற்றினர்; 'வயந்த (வசந்த) மாமலை' என்று வழங்கினர்; 'மழை தவழ் பொதியில்' என்று மகிழ்ந்தனர்!

வடக்கே உள்ள 'இமய மலை'க்கு எத்தகைய பெருமைகள் உண்டோ, அத்தகைய பெருமைகள் இத் தென்னாட்டுப் 'பொதிகை மலை'க்கும் உண்டு! இவை அசைவின்றி நிலைபெற்று விளங்கும் மலைகள் ஆகும். சேரமன்னன் ஒருவனைப் புலவர் ஒருவர், 'பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று, நடுக்கு இன்றி வாழ்க' (புறம்-2 : 24) என்று வாழ்த்தியுள்ளார். பரஞ்சோதி முனிவர், பொதிகை மலையை ஓர் அழகிய பெண்ணாகவும், தண் பொருநை ஆற்றை அவள் பெற்ற மகளாகவும் உருவகம் செய்துள்ளார்; 'பொதியம்ஆம் சைலப்பாவை, பெருகு

---

1. *வில்லி பாரதம்: சிறப்புப் பாயிரம் (வரந்தருவார்) தமிழ்த் தாய் வணக்கம்.*

தண்பொருநை என்னும் பெண்மகவைப் பெற்ருள்' என்ருர்! இப் பொதிகை மலையிலே, கார்காலத்திலே கனமழை பொழியும். ஆண்டுக்கு 7·5 மீட்டர் இங்கே மழை பொழிகின்றது என்பர்! இப் பெருமையைப் பழந்தமிழ்ப் புலவர்கள் ஆகிய சங்க காலச் சான்ருேர்கள் 'மழைதவழ் பொதியில்' என்று மகிழ்ந்துரைத்தனர்; 'ஆடுமழை தவழும் கோடு உயர் பொதியில்' என்று அகம் மகிழ்ந்து பாடினர். இவ்வாறு, 'இப் பொதிய மலை', புலவர் பாடும் இலக்கியப் புகழ் பெற்று இலங்குகின்றது.

இங்கே இருபருவக் காற்றுகள் இயங்குகின்றன; அதனுல் மழைமேகங்கள் இம் மலையைப் பலமாதங்கள் மூடிக் கொண்டிருக்கின்றன. சில ஆண்டுகளில் இங்கே 75 செ. மீட்டர் மழை பெய்கின்றது. இம் மலையில் 2700 வகையான மருந்துச் செடிகள் உள்ளன என்று அறிஞர்கள் ஆராய்ந்து உள்ளனர். அவற்றின் நலன்களை இங்குள்ள தென்றல் காற்று கவர்ந்து வருகின்றது. மருந்து வாழும் இம் மலையிலிருந்து வரும் ஆறுகளின் நீரிலும் உடல் நலன் பேணும் ஊட்டம் இருக்கின்றது; மனநலன் பெருக்கும் மாண்பு உள்ளது! இம் மலையிலே, திருவிதாங்கூர் அரசு கி. பி. 1854 முதல் 1865 வரை ஒரு 'வானிலை நிலையம்' அமைத்திருந்தது! அஃது, இம்மலையின் மழையளவு, உயரம், விளைவு முதலிய பலவகை மாண்புகளை ஆராய்ந்து அளந்து உரைத்து உள்ளது.

**மேனுட்டார்:**

தமிழ்நாடு வந்த மேனுட்டு அறிஞர் பலர் ஆவர்; அவர்களில் பலர் மேலைக்கடல் வழியே சேரநாடு வந்து இறங்கினர்; தென்னுட்டு வளங்களைக் கண்டனர்; தென்னுட்டவர் வாழ்க்கை முறைகளைத் தெரிந்தனர்; சேர நாட்டிலிருந்து 'பொதிகை மலை'யைக் கடந்து, தென்பாண்டி நாட்டிற்கு வந்தனர்; 'பொருநை'யின் வளங்களையும் நலன்களையும் அறிந்தனர்; கொற்கைத் துறைமுகத்தின் பொற்கோலம் கண்டனர்; புகழ்ந்து எழுதினர்! அந் நூல்களில் ஒன்று 'பெரிபுளுசு' என்பர்! அந் நூலில் 'பொதிய மலை', 'செம்மலை' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

**மலைவளம் :**

பொதிகை, வளம் பொருந்திய மலையாகத் திகழ்கின்றது; மழைமுகில் படியும் இயல்பு உடையதாக இருக்கின்றது; தென்றல் தவழும் இயல்பு பெற்று இருக்கின்றது. அங்கே மூங்கில்கள் வளர்கின்றன; ஆரமும், அகிலும் கிடைக்கின்றன; கோங்கு, தேக்கு மரங்கள் ஓங்கி வளர்கின்றன; சந்தன மரங்கள் மிகுந்திருக்கின்றன; பல வகை மரஞ்செடி கொடிகள் நிறைந்துள்ளன. காப்பி தேயிலை முதலியன பயிராகின்றன. இவை இப் பொதிகை மலைக்கு அழகு ஊட்டுகின்றன. இம் மலைவளம், குமரகுருபரர் உள்ளத்திலே மகிழ்ச்சி ஊட்டியது போலும்! மீனாட்சியம்மைகுறம் என்ற நூல் வழியே அவர் பொதிகை வளத்தை இன்பந்தோன்றப் பாடியுள்ளார். "கரிய மலைகளிலே வெண்ணிற அருவி பேரொலியோடு வழிந்து இறங்கும்! அம் மலையிலே குறவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் அழகிய குடிசைகள் வேய்ந்துள்ளனர்; அவற்றின் முன் இறப்பில் வலைகளும் வார்களும் தொங்கும்! குடிசைகளின் முன்னால் உள்ள பாறைகளில் உரல்கள் உண்டு. அப் பாறைகளில் தினை காய்ந்துகொண்டிருக்கும். குறவர்கள் துடி, முரசு என்னும் தோல் கருவிகளை ஒலிப்பார்கள். ஆண் யானையைக் 'களிறு' என்பர்; பெண் யானையைப் 'பிடி' என்பர். அவர்களுடைய வீட்டுக் கொல்லைகளிலே பெண்மானும் யானைக் குட்டிகளும் விளையாடும்; புலியும் கலைமானும் நட்புடன் பழகும்; கல்பிளவுகளிலே வரிவேங்கையும் மடமானும் உறங்கும்! அங்கே, குறக்குடி மக்கள் வள்ளிக் கிழங்குகளைக் கல்லி எடுப்பர்; குறிஞ்சி மலர்களை முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்பர்; பழச் சாற்றையும் நறுந்தேனையும் கலந்து பருகுவர்; பசிய தழைகளையும் மரவுரிகளையும் ஆடையாக உடுப்பர்; தினைமாவும் தேனும் கலந்து விருந்தினர்க்கு உண்ணக் கொடுப்பர்; வேங்கைப் புலித் தோலால் ஆகிய படுக்கையில் படுத்து உறங்குவர்; காலையில் எழுவர்; கயற்கண்ணியின் காலில் விழுந்து வணங்கி, தீவினைகளைப் போக்குவர்!" இவ்வாறு, குறத்தியரே, பொதிகைமலை வளம் பாடி உரிமை கொண்டாடுவதாக—குறக்குடியின் இயல்பினைக் கூறுவதாக—குமரகுருபரர் கவிதை பொழிந்துள்ளார்.

"சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும் அங்(கு) ஒருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்:
... ... ... ... ... ...
தென்பொதிய மலைகாண்மற்(று) எங்கள்மலை அம்மே!"[2]

"கொழுங்கொடியில் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்;
செழுந்திணையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின் பாயலில்கண் படுப்போம்;
எழுந்துகயல் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்(கு) அடுத்த இயல்(பு) இதுகாண் அம்மே!"[3]

**ஆறுகள் :**

இவ்வாறு புலவர்களால் பாராட்டப் பெற்றுள்ள 'பொதிகை மலை' அம்பாசமுத்திரம் வட்டத்தில், 'பாபநாசம்' என்னும் பழம் பதிக்கு அருகில் பரவி விரிந்து உயர்ந்து கிடக்கின்றது. இப் பொதிகைமா மலையின் கிழக்கே "பொருநை நாடு" (திருநெல் வேலி மாவட்டம்) மன்னார்குடாக் கடல் வரை விரிந்து கிடக் கின்றது. இம் மாமலையின் மேற்கே அரபிக்கடல் வரை 'கேரள மாநிலம்' அமைந்துள்ளது. எனவே, இம் மலை இரு மாநிலங் களுக்கும் இடையே எல்லையாக உயர்ந்து காணப்படுகின்றது. ஆயினும், இம் மலையின் முழுப்பயனும் தமிழ் மாநிலத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்திற்கே பெரிதும் பயன்படு கின்றது. இம் மலையில் எப்பொழுதும் நீர் ஊறிக் கொண்டே இருக்கும். இந் நீர் சிறுசிறு கால்வாய்களாக ஓடி, பெருங்கால் வாய்களாக வடிவெடுத்து, ஆறாக மாறுகின்றது. கிழக்கு

---

2. மதுரை மீனாட்சியம்மை குறம்: கக. (குமரகுருபரர்) ஆசிரிய விருத்தம்.

3. ஷை : கஅ. ஷை ஷை

நோக்கி ஓடும் ஆறு 'தண்பொருநை யாறு' ஆகின்றது. இது திருநெல்வேலி மாவட்டத்திற்கு வாழ்வும் வளமும் வழங்குகின்றது. இது போன்றே மேற்கு நோக்கிப் புறப்படும் ஆறும் உண்டு. அதனை 'ஆன் பொருநை' என்றனர்; 'மலைநாட்டுப் பொருநை' என்றனர்; அதுவே, இப்பொழுது 'குளித்துறை ஆறு' என்றும் 'நெய்யாறு' என்றும் சொல்லப் பெறுகிறது என்பர்!

தண்பொருநை :

இந்த ஆற்றின் பழம்பெயர் 'பொருநை' ஆகும். பெருமை மிகுந்த பொதிய மலையிலே ஆண்டின் பெரும்பகுதி மழை பொழிவதால், மலைமுழுவதும் நீர்பெருகி வழியும்; அவ் வெள்ளம் பள்ளம் நோக்கிப் பாய்ந்து வரும். பொங்கி வரும் நீர்ப்பெருக்கு நிலத்தினை ஊடறுத்து ஓடிவரும்; நீரலைகள் ஒன்றோடு ஒன்று மோதும்; கற்களையும் பாறைகளையும் சாடும்; கரைகளில் வந்து தாக்கும்; அந் நீரோட்டம் நீண்ட போராட்டம் போன்று தோன்றும்; அலைகள் போரிடுவது போன்றே மோதி வரும். 'பொரு' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் 'போரிடு' என்று பொருள். எனவே, 'பொருநை' என்பது 'அலைமோதிப் போரிடும் இயல்பினது' என்னும் பொருளை உடையது ஆகும். இதனையே, பழம்புலவர் ஒருவர், 'கல்பொருது இரங்கும் மல்லல் பேராறு'[4] என்றார் போலும்! நீரின் இயல்பு குளிர்ந்து 'தண்' என்று இருப்பதே; ஆதலின், தென்பாண்டி நாட்டுச் செந்தமிழ்ப் பெரியோர், இந்த ஆற்றிற்குத் 'தண்பொருநை' என்று பெயர் சூட்டினர் போலும்! காலப் போக்கிலே இப் பழந்தமிழ்ப் பெயர் வழக்கிழந்துவிட்டது! இதன் கரையில் வந்து வாழ்ந்த வடவர்கள், இத் தமிழ்ப் பெயரைச் சிதைத்து மருவி, 'தாம்பிர பரணி' என்று சாற்றினர்!

இந்த ஆற்றின் மொத்த நீளம் 75 கல் (120 கி. மீ.) ஆகும். இது பொதிகை மலை மீதே 15 கல் (24 கி.மீ.) தொலைவு ஓடி வருகின்றது; எஞ்சிய 60 கல் (96 கி. மீ.) தொலைவே திருநெல்வேலி மாவட்டச் சமவெளியிலே ஏறத்தாழ 1750 சதுரக் கல்

---

4. புறநானூறு—192 : 8. "யாதும் ஊரே யாவரும் கேளிர்......"

(5000 சதுர கி.மீ.) பரப்பு நிலப்பகுதியைச் செழிக்கச் செய்கின்றது! மலைப் பகுதிகளிலே பேயாறு, உள்ளாறு, பாம்பாறு, காரியாறு, கௌடலையாறு, மயிலாறு, சேர்வையாறு என்னும் துணை யாறுகள் இப் பொருநை ஆற்றோடு வந்து கலந்து 'பேராறு' ஆக்குகின்றது! பின்னர் இவ்வாறு, சமவெளிப் பகுதியிலே, மணி முத்தாறு, வராக—கடனு ஆறு, பச்சையாறு, சிற்றாறு ஆகிய துணையாறுகள் கலந்து ஓடி, கிழக்கே மன்னார்குடாக் கடலிலே கலக்கின்றது. இத் தண்பொருநை யாற்றின் கரையோரப் பகுதிகள் அனைத்தும் நல்ல மருதநில மாண்பினை வழங்கி, மக்களை மகிழ்விக்கின்றன. இம் மாவட்டத்தின் ஆறுகள் அனைத்துமே, மேற்கு மலைத் தொடரில் தோன்றி, கிழக்கு நோக்கியே பாய்கின்றன.

அருவிகளும், அணைகளும் :

இயற்கை அன்னை இருந்து மகிழும் இன்பப் பூங்காக்களைப் போலவே, பொதிகை மலையின் எழில் இடங்கள் பல உள்ளன. அவை பொருநையும், அதன் துணையாறுகளும் தோன்றி வரும் இடங்களில் அமைந்துள்ளன. உயரம் மிகுந்த மேல் மலையில் தோன்றி ஓடிவரும் 'தண்பொருநையாறு' ஓரிடத்தில் ஏறத்தாழ 30 மீட்டர் உயரத்திலிருந்து அருவியாகப் பெரும்பாறையின்மீது பாய்ந்து விழுகின்றது! அழகு மிகுந்த அந்த இடத்தை, 'வான தீர்த்தம்' அல்லது 'பாண தீர்த்தம்' என்பர்! அங்கே எவராலும் தனியே செல்ல இயலாது! இருள் சூழ்ந்த காடுகளும், இடர் செய்யும் விலங்குகளும் அங்கே உண்டு! போவதற்கு அரிய வழி தான்; ஆயினும், மக்கள் முயன்று சென்று அங்கே நீராடுவது வழக்கம்! அந்த 'வான அருவி'யிலே சென்று நீராடுபவர்களுக்குத் தீராத நோய்களும் நீங்கிவிடும் என்று அந்த வட்டார மக்கள் நம்புகின்றனர்!

இதன் கிழக்கே, இரண்டு மலைச்சுவர்களை இணைத்துத் தண் பொருநையாற்றின் குறுக்கே ஒரு பேர்அணை கட்டப் பட்டுள்ளது. அதனைப் 'பாபநாசம் அணை' (நீர்த்தேக்கம்) என்பர். இந்த அணை வரை, பேருந்து வண்டிகள் செல்வதற்கு உரிய

முறையிலே செவ்விய வழிகள் அமைக்கப் பெற்றுள்ளன. இதற்கு 'மேலணை' என்று பெயர். இஃது 5500 மி. க. அடி கொள்ளளவு உடையது; 1942இல் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. மேலணையிலிருந்து 9 கி.மீ. தொலைவிலே ஆற்றின் போக்கில் மற்றோர் அணை கட்டப்பெற்றுள்ளது. இதற்குக் 'கீழணை' என்று பெயர். இந்த அணையின் அடியில் இரண்டு பெரிய குழாய்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வணையிலுள்ள நீர் இக் குழாய்களின் வழியே 1230 மீட்டர் நீளம் மலைச்சரிவில் கீழ் நோக்கிச் செல்கின்றது; ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நான்கு குழாய்களின் வழியாக நீர் செல்கின்றது. இக் குழாய்கள் கீழ் நோக்கிச் செல்லும் கடைசி இடத்திலே, 'பாபநாசம் மின்சார உற்பத்தி நிலையம்' கட்டப்பெற்றுள்ளது.

'கீழணை' கட்டப்பெற்றுள்ள இடத்தின் பக்கத்திலே, 'கலியாண தீர்த்தம்' என்னும் அருவி வீழ்ந்த இடம் உள்ளது! அந்த அருவி 100 மீட்டர் உயரத்தில்திருந்து மிகவும் அழகாக வீழ்ந்து கொண்டிருந்தது! இந்த அருவியில் நீராடினால், செய்த 'பாவம் விநாசம்' ஆகும் (நீங்கும்) என்பது, மக்கள் நம்பிக்கை. ஆதலின், இந்த அருவி வீழ்ந்த வட்டாரம் 'பாப விநாசம்' என்னும் பெயரைப் பெற்றது. அப் பெயர் மருவி 'பாபநாசம்' என்று வழங்கப் பெறுகின்றது. கீழணை கட்டப்பட்ட பின்னர், இப் பேரருவி மறைந்து போயிற்று! இந்த அருவி வீழ்ந்த பள்ளத்தாக்கின் பக்கத்திலே, நாற்புறமும் மலை சூழ்ந்த நடுவிடத்திலே 'அகத்தியர் கோவில்' உள்ளது; அவர் வழிபட்ட 'முருகன் கோவி'லும் உள்ளது. கோட்டை மலைப் பகுதியில் சிதைவு பெற்ற கோட்டை காணப்பெறுகின்றது. இவ்வாறு மலைகளின் கரடு முரடான வழிகளிலே, 'தண்பொருநையாறு' ஏறத்தாழ 15 கல் (24 கி. மீ.) கடந்து 'பாபநாசம்' வந்து அடைகின்றது. பின்னர் நெல்லை மாவட்டச் சமவெளிகளிலே ஏறக்குறைய 60 கல் (96 கி. மீ.) தொலைவு பாய்ந்து, அம்பா சமுத்திரம், திருநெல்வேலி, சீவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய நான்கு வட்டங்களை வளப்படுத்தி, இறுதியில், புன்னைக்காயல் என்னும் ஊரின் பக்கத்திலே மன்னார் கடலிலே கலந்துவிடுகின்றது.

**மலையம் வாழும் மக்கள் :**

'மலையம்' ஆகிய 'பொதிகை மலை'யிலே பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பொதுவாக அவர்கள் மலைக் குறவர்கள் என்று வழங்கப் பெறுகின்றனர். இவர்களுள், பளிஞர், பலியர், காணியர், என்னும் இனப் பிரிவுகள் காணப்படுகின்றன. பலியர், காணியர் என்பார் மேலை மலைத் தொடரின் வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மலைப் பகுதியில் இருந்து நிலப் பகுதியாகிய சமவெளிக்கு வருவது இல்லை! இன்னும் இவர்கள் நாகரிகமோ பண்பாடோ பெறவில்லை எனலாம். அவர்கள் காட்டை அழித்து கரடு முரடான நிலங்களைத் திருத்திப் பயிரிடுகின்றனர்; உடலால் நன்கு உழைத்து வாழ்கின்றனர். 'அகத்திய முனிவரும் அரிய சித்தர்களும் வாழ்ந்த பொதிகை மலையிலே', இன்று குறவர்களும், பளிஞர்களும் வாழ்ந்து வரு கின்றனர்! 'பளிஞர்' குடியிருப்புகள் மலை உச்சியில் 'வான அருவி'க்கு மேலே இருப்பதைக் காணலாம். பொதிகை மலை யிலே, காப்பி, தேயிலைத் தோட்டங்கள் உண்டு. 'மாஞ்சோலை' என்ற பகுதியிலே விளையும் தேயிலை சுவை மிக்கது என்பர்.

பளிஞர் :

இவர்கள் பளிங்கர், புளிஞர், புளியர், என்ற பெயர்களால் குறிப்பிடப் பெறுகின்றனர். 'நாகரிகம்' என்ற பெயரால் பரவி யுள்ள பழக்க வழக்கங்கள் இவர்களிடம் இல்லை. இவர்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்வே வாழுகின்றனர்; மூலிகைச் சாறுகளை மருந்தாகக் குடிப்பர்; புல்லாங்குழல் போன்ற ஒரு வகை இசைக் கருவியால் குழல் வாசிப்பர்; அணையாமல் தீ வளர்ப்பர்; 'கஞ்சா' பயிரிடுவர்; மலையாளச் சாயலில் தமிழ் பேசுவர். நாக பீடத்துக்கு முன்னர் ஈட்டியை நட்டு, முழு நிலாப் பூசை செய்வர்; தாரை தப்பட்டைகள் ஒலிப்பர்; குறிஞ்சிப் பண்களில் குழல் வாசிப்பர். பளிஞர் குலத்துக் கன்னிப் பெண்கள் பாறையிலிருந்து பாடுவர்; தமக்கு வாய்க்க இருக்கும் கணவர் சிறந்த வீரர்களாக விளங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவர்; பத்திப் பாடல்கள் பாடுவர்!

பலியர் :

இவர்கள் குட்டையான தோற்றம் உடையவர்கள்; சதுர மான முகமும் தடித்த உதடுகளும் பரந்த தலைமுடியும் உடைய வர்கள்; மலைக் குகைகளிலும், இயற்கையாக அமைந்த குடைவு களிலும் வாழ்கின்றனர்; சில இடங்களில் தேக்குமர இலைகளால் கூரைகள் அமைத்துக் கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இந்த இனத்து ஆண்களும் பெண்களும் முழங்காலுக்கு மேலே சிறிய ஆடைகளையே உடுத்துவர்; மார்பில் துணி அணியார்; நீராடார்; ஒருவகைச் சிதைந்த தமிழில் பேசுவர். பெண்களும் மரம் ஏறுவர். இந்த இனத்து மக்கள் பலவகைக் கிழங்குகளையும், காய்கனிகளையும் உண்கின்றனர்; தேன் எடுப்பர்; மான்களை வேட்டையாடுவர். மலைச் சரிவுகளில் உள்ள தோட்டங்களைக் காவல் காத்து வருவாய் பெறுவர்; கள்ளும் இறைச்சியும் உண்பர்; குழந்தைகளுக்குப் புலிப் பல்லையோ நகத்தையோ கட்டுவர்; ஓர் ஆடவர் பல பெண்களை மணப்பர்.

காணியர் :

பொதிகை மலையில் காணியர் என்னும் இனத்தவரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய குடியிருப்புக்கு 'வாடி' என்று பெயர். இவர்களின் குடிசைகள் புல்லாலும், மூங்கிலாலும் அமைக்கப் பெற்று இருக்கும். இவர்கள் பலியரைக் காட்டிலும், சிறிது முற்போக்கு வாய்ந்தவர்கள். இவர்கள் கஞ்சா, சோளம், மிளகாய், வாழை முதலியவற்றையும் பயிரிடுகின்றனர். இவர் களுடைய குடியிருப்புக்கு ஒரு தலைவன் உண்டு! அவனுக்கு அடங்கியே எல்லோரும் நடக்கின்றனர். இவர்கள் வில், அம்பு போன்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். 'சொரிமுத்து ஐயன்' இவர்களின் வழிபடு தெய்வம்! இவர்கள் திருமண ஒப்பந்தம் செய்து கொள்வர்; அதனைப் பலரும் மதித்து நடப்பர். சிலர் மண நீக்கமும் செய்து விடுகின்றனர்! இவர்கள் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளையும் கலந்து பேசுகின்றனர்.

பாபநாசக் கீழணைக்கட்டுப் பகுதியிலே, காணியச் சிறுவர் சிறுமியர்களுக்கு இந் நாளில், அரசு ஒரு பள்ளி நிறுவியுள்ளது.

அவர்கள் உணவு, உடை முதலிய எல்லாச் செலவுகளையும் அரசே ஏற்று வருகின்றது. அவர்களுக்கு அங்கே ஓலைப்பாய் பின்னுதல், மூங்கில் கூடை முடைதல் போன்ற தொழில்கள் கற்பிக்கப் படுகின்றன.

நிறைவுரை :

இவ்வாறு சிறந்தோங்கும் இப் 'பொதிகை மலை' 'பொருநை நாடு' பெற்றுள்ள பெரும் பேறு எனலாம். இது, பழங்காலப் பாண்டியர்களின் பொன்மலையாக மதிக்கப் பெற்றது; செந்தமிழ் மக்களின் 'தென்மலை'யாக மதிக்கப் பெறுகின்றது. இப் 'பொதிகை மலை', திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு எல்லை யாகத் திகழினும், தமிழகத்தின் 'பொன்முடி'யாகவே போற்றப் பெற்று வருகின்றது எனலாம்.

# 3. தண்பொருநை ஆறு

## (தாமிர வருணி)

**சிறப்பும் பெருமையும் :**

தென்னிந்தியாவின் நிலப்பகுதி, வடக்கே இருந்து தெற்கே வரவர அகலம் சுருங்கிக் கொண்டே வருகின்றது! இதன் தென்கோடி மாநிலங்கள் இரண்டு, அவற்றை மேற்குத் தொடர்ச்சி மலை, ஊடு சுவர் போல நின்று பிரிக்கின்றது! மேற்கு மலைத் தொடரின் மேற்கே அரபிக் கடல்வரை 'கேரள மாநிலம்'; கிழக்கே வங்கக் கடல்—மன்னார்விரிகுடாக் கடல் வரை 'தமிழ்நாடு' அமைந்துள்ளது. கேரளத்தின் தரைப்பகுதி மேல் கடலை நோக்கிச் சரிந்துள்ளது. தமிழகத்தின் தரைப்பகுதி கீழைக் கடலை நோக்கிச் சரிவாக அமைந்துள்ளது! நெருங்கி இணையவரும் இரு கடல்களுக்கும் இடையேயுள்ள இந்த நிலப் பகுதியின் அகலம் மிகவும் குறைவானதேயாகும். தமிழகத்தின் தென்பகுதி ஆகிய, திருநெல்வேலி மாவட்டத்திற்கும் தென் கேரள நாட்டிற்கும் இடையே, மேற்கு மலைத் தொடர்ச்சியின் புகழ் வாய்ந்த 'பொதிகை மலை' அமைந்துள்ளது! பொதிகை மலையின் மேற்கே தோன்றும் ஆறுகள் மேல்கடலை நோக்கி மலையாள நாட்டில் பாய்கின்றன; பொதிகையின் கிழக்கே தோன்றும் ஆறுகள் கீழைக்கடலை நோக்கித் 'தென் தமிழ்நாட்'டில் பாய்கின்றன; 'தண்பொருநை' என்னும் 'தாமிரவருணி' ஆறு, மேற்கே 'பெரிய பொதிகை' என்னும் 'அகத்தியர்மலை'யிலே தோன்றி, திருநெல்வேலி மாவட்டத்திலே ஓடி, கிழக்கே மன்னார் வளைகுடாக் கடலிலே கலக்கின்றது. ஒரு மாவட்டத்திற் குள்ளேயே தோன்றி முடியும் இச் சீராறு, உலகின் பேராறு களை நோக்க, நீளத்தில் மிகவும் சிறியதுதான்! ஆயினும், சிறப்பு மிகுந்தது!! இது, நீளத்திலே பெரிய ஆருக இல்லா விடினும், பெருமை வாய்ந்தது என்பர்!

**தமிழக—ஆறுகள் :**

தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஆறு என்னும் பெருமிதம் தருவது, 'காவிரி'யே. இதனைப் 'பொன்னி' என்றும் புகல்வர். இதன் நீளம் 768 கி.மீ. என்பர். இது குடகு நாட்டில் தோன்று கின்றது; கன்னட நாட்டினுள் புகுந்து கடந்து வருகின்றது; தமிழ்நாட்டுக்கு வளம் தந்து 'பூம்புகார்' அருகே வங்கக் கடலிலே கலக்கின்றது. இதற்கு அடுத்த ஆறு 'தென்பெண்ணை' எனலாம். இது கன்னட மாநிலத்துக் கோலார் வட்டத்தில் தோன்றி, தமிழ் நாட்டில் பாய்ந்து வங்கக் கடலிலே முடிகின் றது. இதன் நீளம் 400 கி. மீ. ஆகும். பின்னர் 'பாலாறு' சொல்லப் பெறுகின்றது. இதுவும் கன்னட மாநிலக் கோலார் வட்டத்திலே பிறக்கின்றது; தமிழ்நாடு வந்து சிறக்கின்றது; வங்கக் கடலிலே முடிகின்றது. இதன் நீளம் 368 கி.மீ. என்பர். தமிழகத்திலே தோன்றித் தமிழகத்திலேயே முடியும் சிறந்த ஆறுகள் 'வைகை'யும், 'தண்பொருநை'யுமே ஆகும். இவற்றுள், 'வைகையாறு' மேற்கு மலைத் தொடரிலே தோன்றி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களை வளமாக்கி, வங்கக் கடலிலே வடிகின்றது; 264 கி.மீ. தொலைவு ஓடுகின்றது. இறுதியாகத், தமிழகத்தின் தென்கோடியில் திருநெல்வேலி மாட்டத்தில் தோன்றி, அதே மாவட்டத்தில் நிறைவுறும் ஆறு. 'பொருநை' என்னும் பெயர் பூண்டு பெருமை உறுகின்றது! மொத்தம் 120 கி. மீ. தொலைவே ஓடுகின்றது. இதுவே, 'தண் பொருநை' என்றும், 'தாமிரவருணி' என்றும் வழங்கப் பெறுகின் றது. இவற்றையே, நாட்டுக் கவிஞர் சி. சு. பாரதியார் பின் வருமாறு பாடி மகிழ்ந்தார் :

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வைகை பொருநைநதி—என
மேவிய ஆறு பலஓடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

**வளம்மிகு பொருநை :**

இந்தத் 'தண்பொருநை யாறு' உருவத்திலே—நீளத்திலே— சிறியதுதான்; ஆயினும், சிறப்பும் பெருமையும் சான்றது!

'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பது பழமொழி. இந்தச் சீராறு, பல துணையாறுகளை இணைத்துக் கொண்டு 'பேராறு' ஆகின்றது! இதற்கு, மலைவளப் பெருமை, மண்வளப் பெருமை, துணையாறுகளின் இணைப்புச் சிறப்பு, அணைக்கட்டு களின் அமைப்பு, வரலாற்றுவளப் பெருமை, கடல்வளப் பெருமை, துறைமுகப்பெருமை, வாணிகப் பெருமை, போக்கு வரவு வளப் பெருமை, வயல்வளப் பெருமை, தொழில்வளப் பெருமை, புண்ணியத் துறைகள்—புகழ்மிகு நகர்ப் பெருமை, நீர் வள ஊர்ப் பெருமை, பெரியோர், புலவர் ஆகிய தவமாண்பினர் பெருமை, திருக்கோவில் பெருமை, கல்வி, கலை, இலக்கியப் பெருமை, தென்பாண்டி நாட்டு மக்கள் பண்பாடு—நாகரிகச் சிறப்பு முதலிய அனைத்து வளங்களும் சிறப்புற அமைந்த பெருமை உண்டு! எனவே, 'மூர்த்தி சிறிதாயினும், கீர்த்தி பெரிது' என்னும் பழமொழி எழுந்துள்ளது! திருவள்ளுவர்,

> "உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்(கு)
> அச்சாணி அன்னார் உடைத்து"

என்றும் திருக்குறள் (667) வழங்கினார்! ஔவை மூதாட்டியார் "உடல் சிறியர் என்றிருக்க வேண்டா!" என்று 'மூதுரை' கூறினார்!

**ஆற்றங்கரை நாகரிகம் :**

ஆற்றுநீர் மக்கள் உடல்நலம் பேண உதவுகின்றது. மக்கள் உள்ளம் மாண்பு பெறுவதற்கும் ஆற்றுநீரே உற்ற துணை ஆகின்றது. ஆதலின், ஆறு தோன்றும் மலையிலே, மக்கள் மன நலன் விரிகின்றது என்பர்; ஆற்றங்கரைகளிலே, மக்களின் பண்பாடும்—மாபெரும் நாகரிகமும் வளர்ந்தன என்று அறிஞர் வரைந்துள்ளனர். உலகம் புகழும் எகிப்திய நாகரிகம் நீல (நைல்) ஆற்றங்கரையிலே எழுந்தது. பார் போற்றும் பாபிலோனிய நாகரிகம் உயூப்பிரதீசு, தைக்கிரீசு எனும் இரட்டை ஆற்றங்கரைகளில் அரும்பியது. பழம் பெரும் சீன நாகரிகம் மஞ்சள் ஆற்றங்கரைகளில் மலர்ந்தது. தொல் திராவிட நாகரிகம் சிந்து ஆற்றங்கரை வெளிகளிலே துலங்

கியது. பல்லவர் நாகரிகம் வேகவதி ஆற்றங்கரைக் காஞ்சியிலே விஞ்சியது. சோழர் நாகரிகம் பொன்னி யாற்றங்கரையிலும் பூம்புகார் நகரிலும் பொலிந்தது. சேரர் நாகரிகம் ஆன் பொருநை ஆற்றங்கரைகளில் செறிந்திருந்தது. பிற்காலப் பாண்டியர் நாகரிகம் வைகைக் கரைகளில் மதுரை மாநகரிலே வளர்ந்தன. இவை போலவே, பழந்தமிழர் நாகரிகத்தின் படப் பிடிப்பு ஆகிய பழம் பாண்டிய நாகரிகம் 'தண்பொருநை ஆற்'றங் கரைகளில் தழைத்தது! உலகப் புகழ் பெற்ற பழம் பெரும் நாகரிகம் வளர்ந்த அடையாளச் சுவடுகள், இத் தண் பொருநைக் கரைகளில் ஆதித்த நல்லூர், கொற்கை ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள நில அகழ்வு ஆய்வுகளால் அறிய வருகின்றன.

### பொருநை ஆற்றின் பெருமை :

புலவர் பெருமக்கள் இப் பொருநை ஆற்றை இறைவனின் அருள் வடிவாகவே கருதினர்; கவிதை புனைந்து கட்டுரைத் தனர்; நூல் புனைந்தனர்; இலக்கியம் ஆக்கினர்; பாக்கள் ஆக்கிப் போற்றிப் பாராட்டினர்; பைந்தமிழ்ப் பாமாலை பாடி உள்ளம் பூரித்தனர். பொதிகை மலையில் தோன்றி, தென் பாண்டி நாட்டை வளப்படுத்தி, கொற்கைத் துறைப் பக்கத்தே கடலில் கலக்கும் இப் பொருநை யாற்றின் பெருமையைப் பண்டைப் பாவலர் பல முறைகளிலே பாராட்டினர்! பொதிகை மலையில் இருந்து இரண்டு பொருநை ஆறுகள் வழிகின்றன. ஒன்று கேரள நாட்டின் வழியே மேற்கே அரபிக் கடலில் போய்க் கலக்கின்றது; அதன் பெயர் 'ஆன்பொருநை' என்பர். மற் றொன்று, நெல்லை மாவட்டத்தைச் செழிப்பூட்டிச் சென்று, கிழக்கே மன்னார்குடாக் கடலில் போய் மண்டுகின்றது. இதன் பெயரே 'தண்பொருநை' ஆகும்! 'தண்பொருநை' என்ற தமிழ்ப் பெயரைத் தெளிவாகச் சொல்லத் தெரியாதவர், 'தாம்பிர பர்னி—தாமிர பருணி—தாமிர வருணி' என்று நாவசைந்தவாறு எல்லாம் நவில்வார் ஆயினர்! அப் பெயர்களுக்குப் பொருத்தம் வாய்ந்த காரணங்களையும் காண விரும்பினர்! ஒரு சாரார், சந்தனமரச் செம்மை (தாமிர) இலை (பர்னி)களின் வழியே நீர்

பாய்ந்து வருகின்றது என்றனர்; வேறு சிலர், சிவப்பு (தாமிரம்) நிறம் (வண்ணம்—வருணம்) பெற்றுள்ள நீராக, இந்த ஆற்று நீர் விளங்குவதால், 'தாமிர வருணி' என்றனர்; இன்னும் சிலர், இவ்வாற்று நீரில், தாமிரம் ஆகிய 'செம்பு' உலோகச் சத்துக் கலந்து வருகின்றது; ஆதலின், 'தாமிர வருணி' என்றனர். காரணம் எதுவாயினும், இன்று ஏட்டு வழக்கிலே 'தண்பொருநை' என்று உள்ளது; நாட்டு வழக்கிலே 'தாமிர வருணி' என்று உள்ளது! தமிழ் இலக்கியங்களிலே 'தண்பொருநை' என்று உள்ளது; வடமொழி நூல் வழக்கிலே, 'தாமிர வருணி' என்று உள்ளது! இதனைப் 'பொருநை' என்று பொதுவாகக் குறிப்பிடுவர்!

தென் சேரநாட்டு 'ஆன் பொருநை' ஆறு, சங்க இலக்கியங்களிலே, 'பொருநை' என்றும், 'தண் ஆன் பொருநை' என்றும் பெயர் பெற்றுள்ளது. தென்பாண்டி நாட்டுத் ''தண்பொருநை'' ஆறு, 'பொருநை' என்றும், 'தண்பொருநை' என்றும், 'பொருநல்' என்றும், 'பொருந்தம்' என்றும் வழங்கப் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களுக்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் நூல்களில் 'தண்பொருநை' என்று சீராட்டப் பெற்றுள்ளது. நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியிலே, இந்த ஆறு, 'பொருநல்' என்று வழங்கப் பெற்றுள்ளது; சேக்கிழார் ஆக்கிய பெரிய புராணத்திலே (திருநாவுக்கரசு நாயனார்), 'தண் பொருந்தப் புனல் நாடு' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது; முக்கூடல் பள்ளு என்னும் சிற்றிலக்கியத்திலே, ''பொருநையாறு பெருகிவரப் புதுமை பாரும் பள்ளீரே!'' என்று புலப்படுத்தப் பெற்றுள்ளது; கம்பராமாயணம், ''பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை எனும் திருநதி'' என்று காட்டுகின்றது; கலிங்கத்துப் பரணி என்னும் நூல் ''பொருநைக் கணவனே வாழ்த்தினவே'' என்று போற்றுகின்றது; இராசராச சோழன் உலா, 'பொருநை' என்று புகழ்ந்துள்ளது. பரஞ்சோதி முனிவர் ஆக்கிய திருவிளையாடற் புராணம், 'பொதிகை' என்னும் மலை மடந்தை, 'பெருகு தண்பொருநை' என்னும் நீத்தம்(வெள்ளம்)மிகு மகளைச் செவிலிபோல் வளர்க்கும்' என்று புனைந்துரைத்து உள்ளது; குமரகுருபர அடிகள் அருளிய

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 'பொருநைத் துறைவன் பொற் பாவாய், புதுநீர் ஆடி அருளுகவே' என்று புகன்றுள்ளது; பகழிக் கூத்தர் வழங்கியுள்ள 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்' என்னும் நூல், 'தண்பொருநைப் பேராற்றிலே, தமிழ் நாகரிகம் மணக்கும்' என்ற கருத்து புனைந்துரைக்கப் பெற்றுள்ளது. இறுதியாக, பாரதியார் இந்த ஆற்றினை 'தமிழ் கண்ட தண்பொருநை' என்று உறுதி செய்துள்ளார். இவ்வாறு, சிற்றிலக்கியங்களும், பேரிலக்கியங்களும் 'தண்பொருநை' ஆற்றினையும் நாட்டினையும் தமிழ்ப் பண்பாட்டின் தொட்டிலாக—தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடமாக—வரைந்து பறைசாற்றுகின்றன.

பொருநையாறு, 'ஏக பொதிகை' என்னும் 'அகத்தியர் முடி' யிலே சதுப்பு நில வட்டாரங்களிலே தோன்றுகின்றது! தென் மேற்கு வடகிழக்குப் பருவ மழைகளால், 'பொதிகை மலை' ஆண்டின் பெரும் பகுதி மஞ்சுசூழ் மாமலையாகவே திகழ்கின்றது. எனவே, இங்கே வற்றாது நீர் வழிந்து கொண்டே இருக்கின்றது. மலை முகடுகளில் இருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடி வருகின்றது! அங்கே அடர்ந்த மரங்கள் செறிந்த காடுகளின் ஊடே வரும் பேயாறு, உள்ளாறு என்னும் துணை ஆறுகள் இரண்டு 'தண்பொருநை' ஆற்றிலே வந்து கலக்கின்றன! இவை மூன்றும் இணைந்து பாறைகளிடையே மேட்டிலும் பள்ளத்திலும் பாய்ந்து மோதிப்பொருதுவருகின்றன. ஏறத்தாழ 30 மீ. உயரத்திலிருந்து 'வான அருவி'யாகப், பொருநையாறு வீழ்கின்றது. இதனை 'வாண தீர்த்தம்' என்று வழங்குவர்; மிக உயரமான இடத்திலிருந்து கீழ் நோக்கி அருவியாக வீழும் இந்த இடம் பார்வைக்கு மிகவும் அழகாகத் தோன்றுகின்றது. இங்கே வந்து நீராடுவது மிகவும் தூய்மை வாய்ந்தது—புனிதமானது என்று மக்கள் நம்புகின்றனர். ஆதலின், மலைப்பாதைகளில் உள்ள எத்தனையோ இடர்களைத் தாண்டி, முள் புதர்களும், சறுகல் பாறைகளும் கூடிய இந்த இடத்திற்கு மக்கள் நீராட வருகின்றனர்; இங்கே, ஆடி மாத அமாவாசை நாளில் மக்கள் கூட்டம் மிகுதியாக இருக்கும்! ஆதலின், 'கோடி கொடுத்தும் வாண தீர்த்தம் ஆடு'—'வாழ்நாளைக் கொடுத்தேனும், வான தீர்த்தம் ஆடு' என்னும் பழமொழிகள் எழுந்துள்ளன!

இந்த வியப்பூட்டும் மலை வட்டாரத்தில், 'காரியாறு' என்னும் ஓர் ஆறு ''பொருநை''யோடு வந்து கலக்கின்றது. அங்கே திகில் ஊட்டும் வண்ணம் பெரும் பள்ளத்தில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனை 'நீலகண்டன் கசம்' என்கின்றனர். இதில் முதலைகள் கூட இருக்கின்றன என்பர். இங்கே, அருவி வீழும் இனிய ஓசையும், பயங்கரமான பள்ளத்தில் நீர் தேங்கி நிற்கும் காட்சியும், புதர் அடர்ந்த மலைச்சரிவுகளும் பறவைகளின் இனிய குரலும் மாறிமாறி மகிழ்ச்சியையும், திகில்—மயக்கத்தையும் தந்துகொண்டிருப்பதை உணரலாம். இதன் பின்னர் 'பாம்பாறு' என்னும் மற்றோர் ஆறு மலைப்பாறைகளிடையே அலைவீசி விரைந்து வந்து இப் 'பொருநை' ஆற்றில் கலக்கின்றது. இதற்கு 4·5 கி. மீ.க்கு அப்பால், புகழ்பெற்ற 'சொரிமுத்து ஐயன் திருக்கோவில்' இருக்கின்றது! இந்த மலைக் காட்டுக் கோயிலுக்கு ஆடி அமாவாசை நாளில் மக்கள் கல்லிலும் முள்ளிலும் நடந்து வருவர்! எட்டு கி. மீ.க்களுக்கு இப்பால், 'சேர்வை யாறு' என்னும் வேறோர் ஆறு, பொருநை ஆற்றோடு வந்து சேர்கின்றது. இது மதங்கொண்ட களிறு போல செறுமியவாறு வந்து மோதுகின்றது. இந்த இடத்திலே தான் 'முண்டன் துறை' இருக்கின்றது. இரண்டு ஆறுகளின் நீரும் முண்டுகின்ற துறையாக இருப்பதால், இப் பெயர் பெற்றது போலும்! இவ்வாறு, பொதிகை மலை உள்ளிடங்களிலேயே, 'பொருநையாறு', ஐந்து துணையாறுகளைத் தன்னோடு இணைத்துக் கொள்வதைக் காணலாம்.

பின்னர், முண்டன் துறைக்கு இப்பால் குன்றுகள் இடைமறிப்பதால், 'பொருநை' இரு பிரிவுகளாகப் பிரிவதைக் காணலாம்; இவை பிறகு, மீண்டும் ஒன்று கூடுவதைப் பார்க்கலாம். இவ்வாறு, இணைந்த பொருநை யாறு, மிகவும் உயரமான இடத்திலிருந்து பளிங்கு அருவி போல வீழ்ந்து, பார்ப்பவர்களுக்கு வியப்பூட்டியது! இதுவே, 'கலியாண தீர்த்தம்' என்னும் பெயர் பெற்றிருந்தது! இங்கே அருவி வீழ்ந்த சூழலும், தோற்றமும் அச்சமும் வியப்பும் தருவனவாம்! இரைச்சலிட்டு வரும் இப் பொருநை யாறு, 'பழைய பாபநாசம்' என்னும் பள்ளத் தாக்கிலே மீண்டும் அருவியாகப் பொழிகின்றது! இங்கே

அகத்திய முனிவருக்கும், அழகிய முருகக் கடவுளுக்கும் திருக் கோவில்கள் உள்ளன. பெருகி வரும் பொருநை யாறு, மலை களில் மேட்டிலிருந்து பள்ளங்களில் வீழும் இடங்களில் எல்லாம் அருவிகளாகவே அமைந்துள்ளன. அவை, அகத்திய அருவி, கலியாண அருவி, பைரவ அருவி, பாபநாச அருவி எனச் சொல்லப் பெறுகின்றன.

பொதிகைமலை மேலே பொருநை யாற்றின் குறுக்கே இரண்டு மலைச் சுவர்களை இணைத்துப் பாபநாசம் நீர்த் தேக்கம் (மேலணை) கட்டப் பெற்றுள்ளது. இயற்கையாக அமைந்துள்ள மலைகளைச் சுவர்களாகக் கொண்டும், மலை இல்லாத இடங்களில் சுவர் எழுப்பியும் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணை யில் தேக்கப்பட்டுள்ள நீர், நிறைந்திருக்கும் பொழுது ஒரு குட்டிக் கடல் போலவே காட்சியளிக்கும்! இத் தேக்கத்தின் அடியில் இரு குழாய்கள் பொருத்தப் பெற்றுள்ளன. அவை கீழணைக்குக் கொண்டுவரப் பெறுகின்றன. இக் 'கீழணை' 'கலி யாண தீர்த்த அருவி' வீழும் இடத்திற்குப் பக்கத்தில் கட்டப் பட்டுள்ளது. இந்த அணையின் அடியில் இரண்டு பெரிய குழாய்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இக் குழாய்களின் வழியே இவ் வணையிலுள்ள நீர், 1230 மீட்டர் நீளம் மலைச் சரிவில் கீழ் நோக்கிச் செல்கின்றது; பிறகு ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நான்கு குழாய்களின் வழியாகச் செல்கின்றது. இக் குழாய்கள் கீழ்நோக்கிச் செல்லும் கடைசி இடத்தில், 'மின்சார உற்பத்தி நிலையம்' கட்டப்பெற்றுள்ளது!

அகத்தியரும் பொருநை ஆறும்:

'அகத்தியர் பலர்'—என்பது ஆராய்ச்சியாளர் முடிவு! அவர்களுள், 'பொதிகை மலை அகத்தியர் இருவர்' என்று கருது பவர்களும் உளர்! தமிழ் மொழிக்கு இலக்கணம் ஆக்கிய 'தமிழ் முனிவர்', ஓர் அகத்தியர்! வடக்கில் இருந்து வந்து பொதிகை மலையில் தங்கியவராகக் கூறப்பெறும் 'புராண அகத்தியர்' ஒருவர். இமயமலையிலிருந்து புறப்பட்டு, பொதிகை மலை வந்து தங்கிய 'அகத்தியர்' பற்றிய அழகிய பழங்கதை ஒன்று உண்டு. அக் கதையின் இனிமைதான் என்னே! இமயமலையிலே, சிவ

பெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் திருமணம் நிகழ இருந்தது. அங்கே தேவரும் முனிவரும் எல்லோரும் கூடினர். இதனால், வடதிசை தாழ்ந்தது; தென்திசை உயர்ந்தது! இறைவன், எதிரே நின்ற 'குறு முனிவரை' அழைத்தார்; உயர்ந்த தென் புலத்தைக் காட்டினார்; அந் நிலத்தைச் சமன் செய்யத் தென்னாடு போக ஏவினார்! அவரோ, சிவபெருமானின் திருமணக்கோலம் காணும் பேறு கிடைக்கவில்லையே என்று ஏங்கினார்! அவர்தாம், அகத்தியர்!! இதைக் கண்ட சிவபிரான் புன்னகை பூத்தவாறே, 'அகத்திய முனிவரே! வருந்த வேண்டா; தென்திசையில் உள்ள பொதிகை மலையில் சென்று தவம் புரிக. அங்கு யாமே வந்து, எம் திருமணக் கோலத்தை உமக்குக் காட்டுவோம்' என்று அருளினார்! முனிவர், இறைவன் இட்ட பணியை மேற்கொண்டார். தமக்குத் தீர்த்தம் அருளுமாறு வேண்டினார். கங்கையின் ஒரு தாரை அவர் கமண்டலத்தில் நிறைந்தது. அஃதோடு அவர், உயர்ந்த மலைகளையும், குன்றுகளையும், சமவெளிகளையும் கடந்து வந்தார்; முடிவில், தென் கயிலாயம் எனத்தகுந்த 'பொதிகை மலை', வந்து சேர்ந்தார்! தேனூறும் பொழில்கள் நிறைந்த பொதிகை மலையின் அழகிய தோற்றம் அவரை ஈர்த்தது! குளிர்ச்சி பொருந்திய இனிய சூழல் அவர் மனத்தைக் குளிர வைத்தது! பொதிய மலைச் சாரலில் உள்ள பாபநாசத்திலே, சித்திரை முதல் நாளிலே, இறைவன் அகத்திய முனிவருக்குத் தம் திருமணக்கோலக் காட்சி அருளினார்! அவர் கமண்டலத்தில் உள்ள நீரைப் பொதிகை மலை முடியிலே விடுமாறு பணித்தார்! அதுவே, 'தண்பொருநை ஆறாக' மலைச் சாரல்களின் வழியே பாய்ந்து வழிந்து ஓடியது! இந்த ஆற்று நீரில் மூழ்குகின்றவர்களின் பாவங்கள், கருமவினைகள் முதலிய தீமைகள் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை மக்கள் உள்ளத்திலே மண்டிக் கிடக்கின்றது! இதுவே, 'தாமிரவருணி' ஆறு பிறந்த பழங்கதை என்பர்!

**பொருநையின் பழைமை:**

தென்பாண்டி நாட்டின் தவப்பயனாக விளங்கும் 'பொதிகை மலையும்' 'பொருநை ஆறு'ம் மிகப் பழைமை வாய்ந்தவை என்பர்.

தெற்கே கடல் கோளுக்கு முன்னரே-வடக்கே இமயமும் கங்கை வெளியும் எழுவதற்கு முன்னரே—பொதியமும் பொருநையும் உள்ளன! ஆதலின், அவை புகழ்பூத்த தொன்மை உடையன என்பர்! வடமொழியில் உள்ள வால்மீகி இராமாயண நூலைப் பழம் பெரும் இதிகாசம் என்று பாராட்டுவர். அதில் இப் பொருநை யாறு, 'தாமிரபரணி' என்று குறிக்கப் பெற்றுள்ளது! வால்மீகியைப் போன்றே, கம்பரும் தம் இராமகாதை நூலிலே இத் தண்பொருநை ஆற்றையும், தென் பொதிய மலையையும், திருமுனிவர் தமிழ்ச் சங்கத்தையும் மிகவும் நயமாகக் குறிப்பிட்டுள்ளார்!

கிட்கிந்தை மன்னன் சுக்கிரீவன், சீதையைத் தேட நான்கு திக்குகளுக்கும் வானரப் படைகளை அனுப்புகின்றான். தெற்கு நோக்கிச் செல்லும் படையிலே அனுமன் உள்ளான். அவன் அளத்தற்கு அரிய ஆற்றல் பெற்றவன்! அவனிடம் இராமன் வேண்டுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. அதிலே, கம்பருக்கு இருந்த தமிழார்வம் துளிக்கின்றது; அதில், தமிழ் மொழியின் இனிமையிலே ஈடுபட்டோர் மனம், வேறு வேலைகளில் செல்லாது என்று தெளிவு படுத்தியுள்ளார்! இராமன் அனுமனை நோக்கி, "நீ எந்த வேலைக்காக அனுப்பப் படுகின்றாய் என்பதை நன்கு உணர்வாய். நீ செல்லும் வழியிலே பொருநையாறு தோன்றும் பொதிகை மலைப் பக்கம் போகாதே. அங்கே அகத்தியர் நடத்தும் தமிழ்ச் சங்கம் இருக்கின்றது. அங்கே போனால், தமிழின் இனிய சுவையிலே உன் நெஞ்சைப் பறி கொடுத்து விடுவாய். ஆதலின், அம் மலைக்கு இடப்பக்கமாக, 'பொருநை' என்னும் ஆறு பாயும் இடத்தைக் கடந்து, மகேந்திரமலைப் பக்கமாகச் செல்லுவாயாக" என்று எடுத்துரைக்கின்றான். இதனைக் கம்பன் உரைக்கும் கன்னித் தமிழிலேயே காணலாம்:

"தென்தமிழ்நாட்(டு) அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்,
என்றும்அவன் உறைவிடம்ஆம்! ஆதலால்
அம்மலையை இடத்திட்(டு) ஏகிப்

பொன்திணிந்த புனல்பெருகும் பொருநையெனும்
திருநதிபின் பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா
நெடுவரையும் கடலும் காண்பீர்"
[கம்பர்—கிட்கிந்தை—நாடவிட்ட படலம் : கக (4591).]

கி. மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, 'தண் பொருநையாறு' இலக்கியச் சிறப்புப் பெற்றுள்ளது. மேலை நாட்டு மெகத்தனீசு (கி. மு. 302), பெரிப்புளூசு நூல் ஆசிரியர் (கி. பி. 80), தாலமி (கி. பி. 150), அசோகன் (கி. மு. 273—232 கல் வெட்டு), பௌத்தமத ஆசிரியர்கள் முதலியோர், இந்த ஆற்றை 'தாம்ப பன்னி' என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு, இத் 'தண்பொருநையாறு' வரலாற்றுக் காலங்களுக்கு முன்னரே வயங்கி, விளக்கம் பெற்று உள்ளது!

## பொருநை நீரின் பெருமை:

இப் பொருநை யாற்று நீர் மிகவும் பெருமை உடையது; மிகவும் தண்மை வாய்ந்தது; இதன் நீரை மக்கள் 'தண்ணீர்' என்றே சொல்லுவர்; ஆதலின் இந்த ஆறும், 'தண்பொருநை' என்றே வழங்கப் பெறுகின்றது. இந்த ஆற்று நீர், உயர்ந்த பொதிகை மலையிலே உள்ள மிகச் சிறந்த மூலிகைகளையும், மரஞ் செடி கொடிகளையும் தழுவி, மோதி, உரசி வருவதால், சிறப்பும் பெருமையும் சேர்ந்து விளங்குகின்றது. இந்த ஆற்றங்கரை ஊர்கள் பல புண்ணியத் துறைகளாக விளங்குகின்றன; அரும் பெரும் திருக்கோவில்களைக் கொண்டு திகழ்கின்றன; அரிய புலவர்களையும், பெரிய தவமாண்பினர்களையும் தந்துள்ளன; நீண்ட பழங்காலம் முதல் சிவநெறியையும், திருமாலிய நெறியையும் பேணிக் காத்து வருகின்றன; பின்னாளில் கிறித்தவ, மகமதிய நெறிகளையும் வளர்த்து வந்துள்ளன. எனவே இப் பொருநை நீர் பருகியோர், மிகவும் பெருமை பெற்றே வாழ்ந் துள்ளனர் எனலாம்.


'மாறோக்கத்து நப்பசலையார்' என்னும் பெயரில் சங்ககாலத்துப் பெண்பால் புலவர் ஒருவர் உண்டு! இன்றைய 'மாற மங்கலம்'

அன்று மாரேகம் என்று வழங்கப் பெற்றிருக்க வேண்டும். தண்பொருநையாறு கடலோடு கலக்கும் இடத்திலே, 'கொற்கை' என்னும் பழைய துறைமுக நகர் இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றது! அக் கொற்கையின் பக்கத்திலே, 'மாற மங்கலம்' என்னும் சிற்றூர் உள்ளது. இன்றைய சாத்தான் குளம் பக்கத்திலே உள்ள 'பன்னம்பாரை' என்னும் ஊரினராகத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர ஆசிரியர் பனம்பாரனர் இருக்க வேண்டும்! இவ்வாறே, அகத்தியர், நம்மாழ்வார், குமரகுருபரர், சிவஞான முனிவர் முதலிய தவமாண்பினர் பலர் இத் தண்பொருநைக் கரை ஊர்களிலே திகழ்ந்துள்ளனர். இன்னும், எண்ணற்ற பிற்காலப் பெரியோர்கள், அறிஞர்கள், ஆற்றல் மிக்கோர், இத் தென்பாண்டித் திருநாட்டிலே பிறந்து சிறந்துள்ளனர். ஆதலின் இப் பொருநைத் திருநாடே, பழந்தமிழ் நாகரிகத்தின் 'முன்னேடி'யாகத் திகழ்ந்துள்ளது எனலாம். இவை எல்லாம்—பொருநை நீர் பருகிய பெருமை என்றே சொல்லலாம்!

# 4. அணைகளும் துணை ஆறுகளும்

இன்பத் தமிழ்நாடு பெற்றுள்ள ஆறுகளில் எல்லாம், மிகவும் சிறப்புடையது, 'தண்பொருநை ஆறு' என்பர்! இந்த ஆற்றின் கரைகளில் அமைந்துள்ள வயல் வெளிகளின் விளைச்சல் பெருக்கம், சிவ—திருமாலியத் திருக்கோவில்களின் சிறப்பு; சான்றோர் தவமாண்பினர் பிறப்பு முதலியன இந்த ஆற்றின் இன்றியமையாமையை மிகவும் உயர்த்தியுள்ளன. சென்னை மாநகர்க்குத் தெற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தோன்றும் ஆறுகளில் எல்லாம் மிகவும் சிறப்பு வாய்ந்தன 'தண்பொருநை'யும் 'காவிரி'யுமே என்பர். ஏன் எனில், இவை இரண்டுமே தென்மேற்குப் பருவக் காற்றின் முழுப் பயன்களையும் பெறுகின்றன. பாபநாசம் மலைக்குக் கீழே இதன் நீளம் 97 கி. மீ. தான். இதனால், இதன் சிறப்பைக் குறைத்து மதிப்பிட இயலாது! இந்தப் 'பொருநை ஆறு' பரந்து செல்லும் தூரமும் நீளமும், 'பொன்னி' யாற்றை நோக்க, குறைவுடையதுதான்! இருப்பினும், இதனால் ஏற்படும் நலன்கள் மிகப்பலவாகும்! இதனால், பொன்னியாற்றங் கரை நன்செய் வயல்களைவிட, பொருநை யாற்றங்கரை நன்செய் வயல்களின் விலை மிகுதியாக மதிப்பிடப் பெறுகின்றன என்பர்!

இரு பருவக் காற்றுகளால், பொதிகை மலையிலே, பெருமழை பொழிகின்றது. அங்கங்கே மலைச் சரிவுகளில் பள்ளத்தை நோக்கி, வெள்ளம் பாய்ந்தோடி வருகின்றது; மேட்டிலிருந்து பள்ளங்களில் இறங்கும் பொழுது, சிற்றருவிகளாகவும் 'பேரருவி'களாகவும் காட்சி தருகின்றது. ஓடைகள், கால்வாய்கள், சிற்ருறுகள் வழியே வரும் நீர்ப் பெருக்கம் பேராற்றில் வந்து கலக்கின்றது. இவ்வாறு பொங்கி வரும் நீர், வீணுகக் கடலில் போய்க் கலந்து விடாது, நம் முன்னேர் அணைகள் கட்டி, வாய்க்கால் வெட்டி, குளங்களில் நிரப்பி, வேளாண்மை செய்தனர்; வளம் பல பெருக்கினர். இதற்கு உறுதுணை புரிவது போலவே, மேற்கு மலைத் தொடரிலே தோன்றும் சில ஆறுகள்,


திருநெல்வேலி
மாவட்டம்
பொருநை-அணைகளும்
துணை ஆறுகளும்
இராமநாதபுரம் மாவட்டம்
கேரளம்
மேற்குத் தொடர்ச்சி மலைகள்
அரபிக் கடல்
மன்னார் வளைகுடா
கன்னியாகுமரி மாவட்டம்
சங்கரன்கோயில்
கோவில்பட்டி
செங்கோட்டை
தென்காசி
திருநெல்வேலி
நான்குநேரி
திருவைகுண்டம்
அம்பா
வைப்பாறு
மலட்டாறு
உப்போடை
சிற்றாறு
தாமிரவருணி
கட்டாறு
நம்பியாறு
பச்சையாறு
நொய்யாறு
மகேந்திர மலை

| அணைக்கட்டின் பெயர் | ஊர்கள் |
|---|---|
| 1. மேல் அணை (பாபநாசம்) | க. அம்பாசமுத்திரம் |
| 2. கீழ் அணை (பாபநாசம்) | உ. திருநெல்வேலி |
| 3. மணிமுத்தாறு அணை | ங. பாளையங்கோட்டை |
| 4. கோடைமேலழகியான் அணைக்கட்டு | ச. ஆழ்வார் திருநகரி |
| 5. நதியுண்ணி அணைக்கட்டு | ரு. திருவைகுண்டம் |
| 6. கன்னடியன் அணைக்கட்டு | சு. நான்குநேரி |
| 7. அரிய நாயகிபுரம் அணைக்கட்டு | எ. களக்காடு |
| 8. பழவூர் அணைக்கட்டு | அ. தூத்துக்குடி |
| 9. சுத்தமல்லி அணைக்கட்டு | கூ. திருச்செந்தூர் |
| 10. மருதூர் அணைக்கட்டு | கo. பாபநாசம் |
| 11. திருவைகுண்டம் அணைக்கட்டு | கக. கன்னியாகுமரி |
| 12. இராமநதி நீர்த்தேக்கம் | |
| 13. கடனு நீர்த்தேக்கம் | |
| 14. பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் | |

பொருநை ஆற்ருேடு வந்து இணைந்து விடுகின்றன. இவை, இப் பொருநை நாட்டிற்குப் பலவழிகளிலும் பெருமை சேர்க்கின்றன!

'பொதிகை' மலை வட்டாரங்களில் 24 கி. மீ. கரடு முரடான வழிகளிலே பொருது வரும் 'பொருநையாறு' 'பாவநாசம்' என்னும் புண்ணியத் துறையிலிருந்து, சமவெளிப் பகுதிகளிலே 96 கி.மீ. பாய்ந்து வருகின்றது! வரும் வழிகளில், மணிமுத்தாறு, கோதையாறு, வராகநதி, பச்சையாறு, சிற்ருறு என்னும் துணையாறுகளைத் தழுவிக் கொண்டு, பேராறு ஆகி ஓடிக் கடலில் போய்க் கலக்கின்றது! மொத்தம் 120 கி. மீ. பாயும் இந்த ஆற்றின் குறுக்கே, எட்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன; அவற்றிலிருந்து பல கால்வாய்கள் வெட்டப் பெற்றுள்ளன. அவற்றின் வழியே பலப்பல குளங்களுக்கு நீர்சென்று நிறைகின்றது. அவற்ருல் வேளாண்மை பெருகுகின்றது!

**அணைகள் :**

பொருநை நாட்டு ஆறுகள் எல்லாம் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலேயே பிறக்கின்றன. அவற்றின் நீர் வீணே சென்று கடலில் கலக்காதவாறு அங்கங்கே அணைகள் கட்டப் பெற்றுள்ளன; அவை நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள மிகவும் பயன் படுகின்றன; மின்சாரம் விளைவிக்கவும் நன்செய் பாசனங்களுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. இவற்ருல், காடும் நாடும் கவின் பெறுகின்றன. இந் நாளில், ஆறுகள் தோன்றும் இடங்களில் எல்லாம்—வாய்ப்பான இடங்களில் எல்லாம்—அணைகள் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டி வருகின்றனர்! இதுவரை பல அணைகளும் நீர்த்தேக்கங்களும் கட்டப் பெற்றுள்ளன. அவற்ருல், இப் 'பொதிகை நாடு' பீடும் பெருமையும் பெற்றுச் சிறப்புற்று வருகின்றது. நெல்லை மாவட்டத்திலே, 'தண் பொருநை ஆறு' ஒன்று தான் இன்றியமையாத பேராருக இலங்குகின்றது! எனவேதான், இந்தப் 'பொருநை' ஆறு பாயும் மாவட்டத்தை, முன்னுளில் 'பொருநை நாடு' என்று போற்றினர்!

இப் பொருநை நாட்டின் மலைப் பகுதிகளில் மழை மிகுதியாகப் பெய்கின்றது; கடலோரப் பகுதிகளில் மழை சிறிது குறை

வாகவே பெய்கின்றது! குற்ருலத்தில் சாரல் மழை பெய்வது வழக்கம். பொதிகை மலைப் பகுதிகளில் சில ஆண்டுகளில் 7500 மி. மீட்டர் (300 அங்.) மழை பெய்கின்றது. மகேந்திர மலைப் பகுதிகளிலும் மிகுதியாகவே மழை பெய்கின்றது. இவ்வட்டாரத்தில், புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வடகிழக்குப் பருவக் காற்றினுல் நல்ல மழை பொழிகின்றது; வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் தென்மேற்குப் பருவக் காற்ருல், தூறல் அல்லது சாரல் மழை பெய்கின்றது. இந்த இரு பருவ மழைகளால், இங்குள்ள மலைகளில் மிகுதியாக நீர்ச் செழிப்பு நிலவுகின்றது; வெள்ளம் மிகுந்து, பேராறு, சிற்ருறுகளின் கரைபுரண்டு நீர் ஓடுகின்றது. இந்த நீர்வளத்தை நல்ல முறைகளில் பயன்படுத்துகின்றனர். ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி, நீரைத் தேக்கி, வாய்க்கால்களின் வழியே ஏரி, குளங்களில் கொண்டு நிரப்பி, வயல்களுக்குப் பாய்ச்சுகின்றனர். இதனுல், நிலவளம் செழிக்கின்றது. பாபநாசம் மலைப்பகுதியில் மேலணை, கீழணை என்று இரு அணைகள் இந்த நூற்ருண்டின் முற்பகுதியிலே கட்டப்பட்டுள்ளன. அவற்ருல் பாசனவசதி மின்வசதி வாய்த்துள்ளன. பின்னர், பொருநை ஆற்றின் குறுக்கே முந்நாளிலேயே கட்டப்பெற்ற எட்டு அணைகள் உண்டு. அவை, (1) கோடை மேலழகியான் அணை, (2) நதியுண்ணி அணை, (3) கன்னடியன் அணை, (4) அரியநாயகபுரம் அணை, (5) பழவூர் அணை, (6) சுத்தமல்லி அணை, (7) மருதூர் அணை (8) சீவை குண்டம் அணை என்பனவாம். இவற்றுள் கடைசிக் கீழ் அணை ஆகிய 'சீவை குண்டம் அணை'யைத் தவிர, மற்றைய ஏழு அணைகளும் பழைமையானவையே ஆகும்! அவை யாரால் எப்பொழுது கட்டப்பட்டன என்ற விளக்கங்கள் தெளிவாகத் தெரியவில்லை! ஆயினும், ஐந்நூறு, அறுநூறு ஆண்டுகளுக்கு இப்பாலாகவே இருக்க வேண்டும் என்று கருத முடிகின்றது.

(i) கோடை மேலழகியான் அணை :

தண்பொருநை ஆற்றின் குறுக்கே கட்டப் பெற்றுள்ள பழைய அணைகளில், முதலில் உள்ளது, 'கோடை மேலழகியான்

அணைக்கட்டே' ஆகும். இது, பாபநாசம் பக்கத்தில் மலைப்பாறைகளில் மோதி வரும் நீரினைத் தடுத்துக் கட்டப்பட்டுள்ளது; கற்பாறைகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளது. இந்த அணையின் இரு புறங்களிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. அவை (i) தெற்குக் கோடைமேல் அழகியான் கால்வாய் (ii) வடக்குக் கோடைமேல் அழகியான் கால்வாய் என்பன. இவ்வாறு, ஆற்றின் வலப்புறக் கால்வாயும் இடப்புறக் கால்வாயும் புதுவெள்ளம் பாய்ந்து பெருவளம் தருகின்றன.

### (ii) நதியுண்ணி அணை :

இதனை, இரண்டாவது அணைக்கட்டு என்பர்; 'நதியுண்ணி அணை' என்று நவில்வர். இஃது ஆற்றின் மட்டத்தை உயர்த்துகின்றது; ஆற்றுப் போக்கின் ஒரு சாய்வான கோணத்திலே இந்த அணை அமைக்கப் பெற்றுள்ளது; பாறைகளின் மீதே கட்டப் பெற்றுள்ளது; இந்த அணைநீர் ஆற்றங்கரையின் இடப்பக்கம் உள்ள ஒரே ஒரு வாய்க்கால் வழியே பாய்கின்றது; வயல் பாசனங்களுக்குப் பயன் படுகின்றது. இதனுல், கீழ் அம்பாசமுத்திரம், மேல் அம்பாசமுத்திரம், பிரமதேசம், ஊர்க்காடு, சாட்டுப் பத்து முதலிய ஊர்கள் நீர்ப்பாசனம் பெறுகின்றன; பெருஞ்செழிப்பு உறுகின்றன. இதனை, 'நதியுண்ணிக் கால்வாய்' என்றே நவில்வர்.

### (iii) கன்னடியன் அணை :

மூன்ருவது அணைக்குக் 'கன்னடியன் அணைக்கட்டு' என்று பெயர். இது, நதி உண்ணி அணைக்குக் கீழே, ஒன்றரைக் கி. மீ. தொலைவிலே, பொருநை ஆற்ரோடு 'மணிமுத்தாறு' வந்து பொருந்தும் இடத்திற்குக் கீழே அமைந்துள்ளது. இதன் உயரம் ஒன்பது அடி; உச்சியிலே அகலம் ஆறு அடி. இந்த அணை, கட்டியான பாறையின் மீது உடைகற்களால் உறுதியாகக் கட்டப் பெற்றுள்ளது. இந்த அணையிலிருந்து வெட்டப் பெற்றுள்ள வாய்க்காலுக்குக், 'கன்னடியன் கால்வாய்' என்று பெயர். இஃது, ஒரு பழைமை வாய்ந்த கால்வாய். இதன் பிறப்புப் பற்றிப் பழங்கதை ஒன்று வழங்கப் பெறுகின்றது! வேலூர்

என்னும் இடத்தில் தீராத நோய் உற்ற வேந்தன் ஒருவன் இருந்தான். அந்தப் பிணியைக் 'கன்னடியன்' என்னும் முனிவன் ஒருவன், நல்ல முறையில் தீர்த்து வைத்தான்! அப் பிணி போக்கிய மறையவனுக்கு, அரசன் அளப்பரிய பெரும் பொருளை நன்கொடையாக அளித்தான். அந்த வேதியன் அக் கணக்கற்ற செல்வத்தை எடுத்துக் கொண்டு, 'தென் பாண்டித் திருநாடு' வந்தான்! பொதியமலை வாழும் அகத்திய முனிவரிடம் கலந்து ஆராய்ந்தான்! நிலைத்த ஓர் அறச்செயல் புரிய எண்ணினான். தமிழ் முனிவராகிய அகத்தியர், அந்தத் தவ முனிவரிடம், தண்பொருநை ஆற்றிலே ஓர் அணைகட்டி, வாய்க் கால் வெட்டுமாறு அறிவுரை கூறினார்! மேலும், 'ஒரு பசுவை அதன் போக்கிலே விட்டு, அது போகின்ற இடங்களின் வழியே கால்வாய் வெட்ட வேண்டும்; அப் பசு எங்கே களைப்பாறிப் படுத்துக் கொள்ளுகின்றதோ, அங்கெல்லாம் குளங்கள் தோண்ட வேண்டும்' என்று வழி முறைகள் கூறினார். அவ்வாறே வந்த பசு, 'மேலச் செவல்' என்னும் ஊர் வந்ததும், தரையில் படுத்து இருந்ததாம்; பின்னர் அங்கே அது காணமல் போயிற்றும்! எனவே, அக்குளம் 'காணமல் ஆன பேரி' [பேர்+ஏரி (குளம்)=பேரேரி—பேரி] என்று பெயர் பெற்ற தாம்; பின்னர் அப் பெயர் மருவி, 'காடவராயப் பேரி' என்று வழங்கப் பெற்றது! இப்பொழுது அதுவும் மாறி, 'காடாப்பேரி' என்று வழங்கப் பெறுகின்றது! இதற்குப் பின்னரும் அக் 'கன்னடியன் கால்' பாசனத்தால், 'கோபால சமுத்திரம்' என்னும் ஊரைச் சுற்றி எழுகுளங்கள் நீர் நிரம்புகின்றன; நானிலம் வியக்க நன்செய் வளம் நல்குகின்றன. இந்தக் 'கன்னடியன் கால்வாய்' நீர்ப் பாசனத்தின் கடைசியிடமே, அழகிய 'கோபால சமுத்திரக்' குளங்கள் எனலாம்! பசுவின் பால் உண்டவர் உடலுக்கு எத்தகைய கலப்புச் சத்து உணவின் பயனைத் தரு கின்றதோ, அத்தகைய நலங்களை இக் குளங்களின் நீர், பருகுவோர்க்குக் கொடுக்கின்றது! இவ்வாறு, நீர் வளத்தின் நெடும் பயன் கண்டவர்கள், 'கோ (பசு)வின் பால (பாலின் தன்மை வாய்ந்த) சமுத்திரம் (பெருங்கடல் போன்ற குளங்கள்) சூழ்ந்த ஊர் என்ற பொருளிலே அந்த ஊர் பெயர் பெற்றது என்பர். வேறு சிலர், நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில்,

கோபால நாயக்கன் பெயரால், அந்த ஊரைக், 'கோபால சமுத்திரம்' என்று கூறினர் என்பர்! இவ்வாறு 'கன்னட வேதியர்' ஆக்கிய இந்த அணையும், கால்வாயும், குளங்களும் கி.பி. 14ஆம் நூற்றுண்டுக்கும் 16ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட நூற்றுண்டுகளின் காலத்தனவாக இருக்கலாம் என்று பெருந்தவ மேலோர் 'கால்டுவெல்' அவர்கள் கருதியுள்ளார்கள். இந்தக் கன்னடியன் கால்வாய், 'பொருநை' ஆற்றைப் போலவே புகழும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது!

## (iv) அரியநாயக புரம் அணை :

நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் சிறந்து விளங்கிய தானைத் தளவாய், 'அரிய நாயகர்' ஆவார்! அவர் பெயரால் எழுந்த ஓர் ஊர், பொருநை யாற்றின் இடக்கரையிலே உள்ளது! அந்த 'அரிய நாயக புரம்' என்னும் அழகிய சிற்றூரின் அண்மையில், இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இந்தக் கலிங்கல் அணை கட்டப்பட்ட காலம் கி.பி. 1877. ஆற்றுக்கு வடக்கே 'கோடகன் கால்வாய்', இந்த அணையிலிருந்து பாய்கின்றது. இது, பழைய அணைகளின் வரிசையில் நான்காவது இடத்தைப் பெறுகின்றது.

## (v) பழவூர் அணை :

இம் மாவட்டத்தின் நடுவே, 'திருநெல்வேலி வட்டம்' அமைந்துள்ளது! இவ் வட்டத்தினுள், தாமிரவருணி ஆற்றின் இடக்கரையிலே 'பழவூர்' என்னும் பழைய ஊர் ஒன்று உள்ளது. இதன் பக்கத்தில் இந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பெற்றுள்ளதால், இதனைப் 'பழவூர் அணைக்கட்டு' என்று பகர்வர். இங்கிருந்து ஆற்றின் வலப்புறக் கரையை ஒட்டி 43·2 கி. மீ. நீளத்தில் 'பாளையன் கால்வாய்' என்ற பெயரிலே, ஒரு வாய்கால் செல்லுகின்றது. இந்தக் கால்வாயோடு 'தருவை' என்னும் ஊரின் பக்கத்திலே, 'பச்சையாறு' என்னும் துணையாறு கலந்து பொருநை ஆற்றில் வந்து சேர்கின்றது. இந்தப் 'பழவூர் அணை' கட்டப்பெற்றுள்ள துண்டுக்கற்களிலே பதினொரு தமிழ்க் கல்

வெட்டுகள் உள்ளன. அவை, 19 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தன என்று கணிக்கின்றனர்.

(vi) சுத்தமல்லி அணை :

இது பழைய அணை வரிசையில் ஆறுவது இடத்தைப் பெறுகின்றது. 'சுத்தமல்லி' என்னும் ஊரின் பக்கத்திலே கி.பி. 1877இல் கட்டப் பெற்றுள்ளது. ஆற்றின் இடப்புறமே இந்த ஊரும் இருக்கின்றது. இந்த அணையிலிருந்து, திருநெல்வேலிக் கால்வாய் புறப்படுகின்றது! இக் கால்வாய் நீரே, திருநெல்வேலிக் குளங்களை நிரப்புகின்றது; நன்செய் நில வளத்தால், 'நெல்வேலி' ஆக்குகின்றது!

(vii) மருதூர் அணை :

இதனை ஏழாவது அணை எனலாம்; பழைய அணைகளிலே, இறுதியானது எனலாம். இஃது ஒழுங்கான முறையிலே கட்டப் பெறவில்லை! ஆதலின், அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுகின்றது! இந்த அணையிலிருந்து ஆற்றின் இரு புறங்களிலும் கால்வாய்கள் வெட்டப் பெற்றுள்ளன; அவை 'கீழக்கால்' என்றும் 'மேலக்கால்' என்றும் வழங்கப் பெறுகின்றன; பரப்பளவு மிகுந்த பெரிய வட்டாரங்களுக்குப் பாசன வசதி வழங்குகின்றன.

(viii) *சீவைகுண்டம் அணை :

இதனை எட்டாவது அணை அல்லது இறுதி அணைக்கட்டு எனலாம்! இந்த அணையை, 'இக் கால அணை' எனலாம்! மருதூர் அணையின் 'கீழக்கால்' சீவைகுண்டம் வட்டாரக் குளங்களின் பெரும் பகுதியை நிரப்பி விடுகின்றது! 'மேலக்கால்' பாசனத்தால் ஆற்றின் சீவைகுண்ட வட்டாரத் தென்பகுதி அளவற்ற பயன்பெறுகின்றது! சீவைகுண்டம் அணையின் இரு புறங்களிலிருந்து கால்வாய்கள் வெட்டப் பெற்றுள்ளன.

---

*திருவைகுந்தம் என்பதே முன்னைய பெயர்.

இவற்றின் வடபக்கக் கால்வாய் 'கொற்கை'க் குளம் வரை செல்லுகின்றது; வரிசை யாகப் பல குளங்களை நிரப்பித்தூத்துக்குடி வரை பரவுகின்றது! இதன் தென்பக்கக் கால்வாய் ஆத்தூர்க் குளம் வரை நீளுகின்றது; பல குளங்களை நிரப்பித் 'திருச்செந்தூர்' வரை பரவுகின்றது!

இவ்வாறு, 'பொருநையாறு' அணைக்கட்டுகளின் வளத்தைப் பெற்றுள்ளது! அதனால், பல கால்வாய்களின் வழியே நீர் சென்று எண்ணற்ற குளங்களை நிரப்புகின்றது; நன்செய் வளத்தால், நானிலம் வியக்கும் நலன்களை மிகுவித்துள்ளது. இதனால் ஆண்டு தோறும் மிகுதியான விளைச்சலை இவ் வட்டாரம் பெறுகின்றது. சென்ற நூற்றாண்டிலே கி.பி. 1876—77 இலே இம் மாநிலம் மழையின்றி வாடியதாம். அந் நாட்களில்கூட, இப் பொருநை யாற்றின் கால்வரத்து வட்டாரங்கள் நல்ல விளைவினை நல்கியது என்று 'நெல்லை மாவட்ட அரசிதழ் நூல்'* கூறுகின்றது. இதற்குப் பொருநை யாற்றின் இயல்பான பெருகிய வளமே அடிப்படைக் காரணம் எனலாம். பருவமழை பொழியும் பாங்கினால், பல துணையாறுகள் 'பொருநை' ஆற்றிலே வந்து இணைகின்றன. அவற்றுள், மலைப் பகுதிகளின் உள்ளே சிறப்பாக வந்து முண்டும் ஐந்து துணை ஆறுகளைக் காண்போம்! இனி பாபநாசத்திற்குக் கீழே, பொருநையோடு வந்து பொருந்தும் ஐந்து சிறந்த துணைச் சிற்றாறுகளைப் பற்றிக் காணலாம். இவ்வாறு, ஏறத்தாழ பத்து சிற்றாறுகளின் துணை பெற்று வரும் ஒரு பேராறு, ஒரு மாவட்டத்தில் மட்டுமே பாய்கின்ற சிறப்பு வேறு எந்த மாவட்டத்திற்குமே வாய்க்கவில்லை எனலாம்!

**மணிமுத்தாறு:**

தண்பொருநை ஆற்றின் சமவெளிப் பகுதியில் வந்து முதன் முதலில் கலக்கும் முக்கியமான துணையாறு, இம் 'மணி

* Madras District Gazetteers: TINNEVELLY Volume 1. Py. H. R. Pate; ICS; 1917. Page. 169.

முத்தாறு' என்பதே ஆகும். இந்த ஆற்றின் நீர் 'மணி' போன்றும் 'முத்து'ப் போன்றும் விளங்குவதால் இப் பெயர் பெற்றது போலும்! இந்த ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் 'செங்கல் தேரி' என்னுமிடத்தில் தோன்றுகின்றது; கல்லிடைக் குறிச்சிக்கு மேற்கே மூன்று கி. மீ. தூரத்திலே, 'பொருநை' ஆற்றில் வந்து சேருகின்றது. இவ்வாறு, 'பொருநை'யில் வந்து பொருந்தும் முன்னர், 'வரட்டாறு', 'குசன்மதி யாறு' என்னும் சிற்றாறுகளின் நீரையும் பெற்று வருகின்றது. மலைப் பகுதியிலேயே மணிமுத்தாற்றின் குறுக்கே சிங்கம் பட்டி என்னும் சிற்றூரின் பக்கத்திலே கி.பி. 1957 இலே 5511 மி. க. அடி கொள்ளவிலே ஒரு சிறந்த அணை கட்டப்பெற்றுள்ளது. அந்த அணையில் தேங்கும் நீர், இம் மாவட்டத்தில் உள்ள எண்ணற்ற ஏரி குளங்களை நிரப்புகின்றது. அதன் பெயர் 'மணிமுத்தாறு நீர்த்தேக்கம்' அணைக்கட்டு என்பதாம்.

கோரை யாறு:

அம்பை வட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள பொதிகையின் தாழ்ந்த மலைப்பகுதிகளிலே 'கோரையாறு' என்னும் சிற்றாறு தோன்றுகின்றது. கல்லிடைக் குறிச்சிக்குக் கிழக்கே வெள்ளங்குழி என்னும் இடத்திலே கன்னடியன் கால் வாயில் வந்து கலக்கின்றது; எஞ்சிய நீர் பொருநையிலே புகலடைகின்றது!

வராக நதி:

'கடையம்—பெரும்பத்து' என்னும் ஊரின் பக்கத்திலே உள்ள 'குளிராட்டி' என்னும் மலையில் 'சம்புநதி' தோன்றுகின்றது; 'இராமநதி'யோடு இணைகின்றது; இந்த ஆறுகளின் குறுக்கே அங்கங்கே சிறுசிறு அணைகள் கட்டப் பெற்றுள்ளன. 'கடனுநதி' அல்லது 'கருணை ஆறு' என்னும் ஒரு சிற்றாறு 'சிவ சயிலம்' மலையிலே தோன்றுகின்றது; 'பாப்பாங்குளம்' என்னும் ஊரின் தென் பக்கத்திலே வந்து 'வராக நதி'யோடு சேர்ந்து விடுகின்றது; பின்னர்த் திருப்புடை மருதூர், அருகே 'பொருநை'யோடு இரண்டறக் கலந்து விடுகின்றது! ஆற்றின்

தென் கரையில் திருப்புடை மருதூர். வடகரையில் 'நம்பன் தட்டை' என்னும் சிற்றூர் உள்ளது. இதன் கிழக்கே 'உள்ளாறு' என்னும் சிற்றோடை 'பொருநை'யுடன் கலக்கின்றது. எனவே இதன் அருகே அமைந்துள்ள ஊரை 'முக்கூடல்' என்கின்றனர்! இந்த இடம் புனித நீராடும் இடமாகக் கருதப் பெறுகின்றது!

பச்சையாறு :

இந்த ஆறு 'களக்காடு' என்னும் ஊரின் பக்கத்திலே உள்ள 'வெள்ளிமலை'யின் வடகிழக்குச் சரிவுகளில் தோன்றுகின்றது; 'கருமாண்டி அம்மன் கால்வாய்' நீரையும் பெறுகின்றது; நான்கு நேரி வட்டத்தின் வடமேல் பகுதியை வளப்படுத்துகின்றது; இறுதியிலே, பழவூர் அணையிலிருந்து பாய்ந்து வரும் 'பாளையங் கால்வாய்'ப் பகுதியைச் செழிப்பூட்டும் வகையிலே 'தருவை' என்னும் ஊரின் பக்கத்திலே வந்து, 'தண் பொருநை' ஆற்றிலே கலந்துவிடுகின்றது.

சிற்றாறு :

குற்றால மலையிலே தோன்றுகின்றது; தென்காசி திருநெல்வேலி வட்டங்களை வளம் ஊட்டுகின்றது. இதனை வடமொழியாளர் 'சித்திரா நதி' என்றும் 'சித்தாறு' என்றும் செப்புவர். 'கழுகு மலை'ப்பகுதியிலே தோன்றும் 'உப்போடை' என்னும் 'கோதண்டராம நதி', 'கயத்தாறு' என்னும் பெயரோடு 'கங்கை கொண்டான்' என்னும் இடத்திலே 'சிற்றாற்'றில் வந்து சேர்ந்துவிடுகின்றது; கடைசியில் 'சீவலப்பேரி' என்னும் இடத்தில் பொருநையாற்றில் வந்து, 'குற்றாலச் சிற்றாறு' பொருந்துகின்றது! இந்த இடம் பழைய நாளில் 'முக்கூடல்' என்று பெயர் பெற்றிருந்தது; இவ்வூரை அடிப்படையாகக் கொண்டே 'முக்கூடல் பள்ளு' என்னும் சிற்றிலக்கியம் எழுந்துள்ளது! பொருநையாற்றிலே சிற்றாறு, உப்போடையோடு கூடுவதால் 'முக்கூடல்' என்று பெயர் பெற்றது என்பர்!

இம் மாவட்டத்திலே, இத் 'தண்பொருநைப் பேராறு' மட்டுமின்றி, வேறுசில சிற்ருறுகளும் வளம் ஊட்டுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காண்போம் :

**நம்பியாறு :**

இந்த 'நம்பியாறு', பொதிகை மலையின் தென்பகுதியிலே உள்ள 'மகேந்திர மலை'ப் பகுதிகளிலே தோன்றுகின்றது ; 'மாயம் பறம்புச் சோலை'யிடங்களிலே புறப்படுகின்றது. இம் மலைச் சரிவிலே, குற்ருலத்தை நினைப்பூட்டும் 'நம்பி கோவில்' உள்ளது. 'தாமரை யாறு', 'கோம்பை யாறு' போன்ற துணையாறுகளின் நீரைப் பெறுகின்றது. இந்த நம்பி யாற்றங்கரையிலே, 'திருக் குறுங்குடி' என்னும் திருப்பதி உள்ளது! இங்கே, திருமங்கை ஆழ்வார் நிறைவுற்ருர். இந்த ஆறு, 'குட்டங்குழி' என்னும் இடத்து அருகே கடலில் வந்து விழுகின்றது. இந்த நம்பி யாற்றிலும், இதன் துணையாறுகளிலும் ஆண்டு முழுவதும் நீர் நிரம்பி வருவது இல்லை! இந்த ஆறு பொருநை நாட்டின் தென் பகுதியை வளப்படுத்துகின்றது.

**வைப்பாறு :**

பொருநை நாட்டின் வடபால், மேற்குத் தொடர்ச்சி மலையிலே, வாசுதேவ நல்லூருக்கு அருகிலே, 'வைப்பாறு' தோன்றுகின்றது. வறண்ட காலத்திலும் 'சேமிப்பு நிதி' போன்று 'வைப்பு' ஆக இருந்து உதவுவதால், இந்த ஆறு இந்தப் பெயரைப் பெற்றது போலும்! இது, வாசுதேவ நல்லூர், பனையூர், கரிவலம் வந்த நல்லூர் வழியாகச் சாத்தூர் வரை சென்று, மீண்டும் கோவில்பட்டி வட்டத்திலே நுழைந்து, தென் கிழக்காக ஓடி 'விளாத்திகுளம்' கடந்து, 'வைப்பாறு' என்னும் சிற்றூரின் அருகே கடலில் கலந்து விடுகின்றது. இந்த ஆற்றிலே வெள்ளம் பெருகும் பொழுது, திருநெல்வேலி மாவட்டத்தின் வடபகுதியும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியும் பயன் அடைகின்றன.

**புனலூர் ஆறு :**

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பல இடங்களில் தோன்றும் பல சிற்றாறுகளின் துணையால் 'புனல் (நீர்) ஆறு' பெருகித் தோன்றுகின்றது; அச் சிற்றாறுகள் பெரும்பாலும் தென்பாண்டித் தமிழ் நாட்டிலே தோன்றுகின்றன. எனவே நீரைக் குறிக்கும் 'புனல்' என்னும் தமிழ்ப் பெயர் பெற்றுள்ளது! அம்பா சமுத்திரம் வட்டத்தில் உள்ள பொதிகை மலையின் சரிவுகளிலே பொங்கும் 'அலையாறு', 'வெள்ளியாறு', 'சின்னக்கரை ஆறு', 'சங்கிலிப் பாளையம் ஆறு' என்னும் ஆறுகள் தோன்றுகின்றன. இவை அனைத்தும் 'புனலூர் ஆற்றிலே' புகுந்து கேரள நாட்டிற்கு வளம் ஊட்டுகின்றன!

இவை போன்றே, தென்காசி வட்டத்தில் உள்ள 'பெரிய உருட்டி மலை'யிலே தோன்றும் 'தீர்த்தங்கரை யாறு', செங்கோட்டை வட்டத்தின் சுவர்ணகிரி மலையில் தோன்றும் 'சுவர்ணகிரி' ஆற்றுடன் சேர்ந்து, புனலூர் ஆற்றுக்குத் துணையாறு ஆகின்றது! 'செந்தூரணி ஆறு', தென்காசி வட்டத்தில் உள்ள 'பரதேசி மொட்டை' என்ற மலை அருகே தோன்றி நாரட்டாறு, அருவி ஆறு, உமி ஆறு என்ற மூன்று சிறிய ஆறுகளை இணைத்துக் கொண்டு 'புனலூர் ஆற்றிலே 'கலந்துவிடுகின்றது. எனவே, 'பொருநை நாடு' கேரள மாநிலத்திற்கும் வளமூட்டும் புனல் அளித்துப் புகழ் பூக்கின்றது எனலாம்.

**நிறைவுரை :**

இவ்வாறு, திருநெல்வேலி மாவட்டத்தின் உயிரோட்டமாக விளங்கும் 'பொருநை யாறு', பல துணையாறுகளாலும் அணைக்கட்டுகளாலும் சிறப்புற்று நீர்வளமும் நிலவளமும் பொழில் வளமும், தொழில் வளமும் பொங்கச் செய்கின்றது! புண்ணியத் துறைகளையும், புனித நீராடும் கரைகளையும் திருக்கோவில்களையும், திகழ வைத்துள்ளது; பேரூர்களையும், சிற்றூர்களையும் பெற்றுள்ளது; வாணிகத்தை வளர்த்துள்ளது; போக்குவரத்தைப் பெருக்கியுள்ளது; சான்றோர்களும் தவ மாண்பினர்

களும் தோன்றி வாழ்ந்த தவப்பேறு பெற்றுள்ளது; நீண்ட கால வரலாறு கண்டுள்ளது; மக்களின் அரிய நாகரிகப் பண்பாடு தோன்றச் செய்துள்ளது. மக்கள் வாழ்வு மலர்ச்சியும், மன்பதை அரசியல் ஆட்சிமுறை வளர்ச்சியும் பெற்றுள்ளது. எனவே, இந்தத் திருநெல்வேலி வட்டாரம், 'பொருநை நாடு' என்று போற்றும் பெரும்பேற்றைப் பெற்றுள்ளது!

# 5. பொருநை நாடு: அரசியல் பொது வரலாறு

வரலாறு :

அறிவின் ஆற்றல் பெற்றவன் மனிதன்; அதனால் அவன் எதனையும் சிந்திக்கின்றான்; சிறந்த நெறிகள் காண விரும்புகின்றான். அறிவியல் துணைகொண்டு ஆராய்கின்றான்; விண்ணையும் மண்ணையும் அளக்க விரும்புகின்றான்; மெய்யறிவு நெறியிலே உள்ளுணர்வு பெறுகின்றான்; வாழ்வின் உயர்வுக்கு வழி தேடுகின்றான்; சென்ற காலத்தின் அருமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றான்; வருங் காலத்தின் நன்மை தீமைகளைக் கணக்கிட முனைகின்றான். இத் துறைகளில் அவன் ஆராய்ச்சி செல்லும்பொழுது, பலப்பல உண்மைகளைக் காண்கின்றான். இந்த உண்மைகளைப் பழங்கால மனிதன் எழுதி வைக்க வில்லை! இன்றைய மனிதன், தான் கண்ட உண்மைகளை எழுதி வெளியிடுகின்றான்; அவற்றிலே, பழங்கால உலக வாழ்வு—மக்கள் வாழ்வு விளங்குகின்றன. அவையே 'வரலாறு' ஆகின்றது!

வரலாறு என்னும் சொல், 'வரல்+ஆறு' என்னும் இரு சொற்களின் இணைப்பு எனலாம். 'தொடர்ந்து வரும் (வரல்) ஆற்றொழுக்குப் போன்ற முறைமை (ஆறு)' என்பதே அதன் பொருளாகும். இயற்கை எல்லைகளுக்கு உட்பட்ட வட்டாரத்தில் வாழும் மக்களின் மொழி வழியே விளங்கும் பண்பாடும் நாகரிகமுமே நாட்டுப் பொது வரலாற்றுக்கு அடிப்படையாகும். நிலம் பற்றியும், அதில் வாழ்ந்த மன்னர் மக்கள் நிலை, வாழ்வு நிலை பற்றியும் கால முறைப்படி வகுத்து எழுதுவதே 'வரலாறு' ஆகும். எனவே நில நூலும், வரலாற்று நூலும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து செல்வனவாகவே அமையும்! நிலம் இன்றேல், உயிரில்லை—மக்கள் இனம் இல்லை—மற்றைய நாகரிகமும் பண்பாடும் இல்லை! அவற்றைக் காட்டும் வரலாறும்

இல்லை ஆகும்! எனவே, நிலமும் வரலாறும் பிரித்துப் பார்க்க இயலாதன எனலாம்.

வரலாற்றுக்கே ஒரு வரலாறு உண்டு என்று சொல்லலாம். அது தொடக்கத்தில் கற்பனைக் கதைகளாகப் புராண மரபுகளாக விளங்கியது. பின்னர் அது மன்னர்களின் காலப் பட்டியலாய்—போர் வெற்றி தோல்வி நிகழ்ச்சிக் கோப்புக்களாய் விளங்கியது. இவற்றை வரலாற்றின் பின்னணிகள் என்று கொள்ளலாம்! ஆதலின், 'உண்மை வரலாறு' என்பது, ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சி—நாகரிகக் கூறுகளின் வளர்ச்சி நிகழ்ச்சிகளை உணர்த்துவன வாகவே அமைய வேண்டும். வரலாறு உணர்வதற்குக் கால வரையறையும் இன்றியமையாததே ஆகும். அதனை வரலாற்று அறிஞர் கிறித்துக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுவர். கிறித்துவுக்கு முந்திய காலத்தை கி. மு. என்றும், பிந்திய காலத்தை கி. பி. என்றும் கொள்வர். வரலாறு கண்ட முதல் நிலம் 'தமிழ் நாடு' என்பர்! ஆயினும், அதன் முழு வரலாறு இன்னும் முறையாக எழுதப்பெற வேண்டும்! பழந்தமிழ் நாட்டின் தென்பகுதி "பாண்டிய நாடு" என்று சொல்லப் பெற்றது. இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அதனுள் அடங்கி இருந்தன.

**தென்பாண்டி நாடு:**

அந்தப் பழைய பாண்டிய நாட்டின் தென் பகுதியே, 'தென் பாண்டி நாடு' என்று சொல்லப் பெற்றது. இவ் வட்டாரம், பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகவே விளங்கியது. ஆதலின், இவ் வட்டாரத்தின் வரலாறு என்று தனியாகக் குறிப்பிடுவோர் இல்லை! பாண்டி நாட்டின் வரலாறே இதன் வரலாறும் ஆகும் எனலாம். ஆயினும், தென்பாண்டி நாட்டுப் பெருமைக் கூறுகள் சிறப்பு வாய்ந்தனவே ஆகும். 'தென்னாடு உடைய சிவனே, எந் நாட்டுக்கும் இறைவன்' என்றும்,

"—காதலவர்க்(கு),
அன்பாண்டு மீளா அருள்புரிவான் நா(டு) என்றும்
தென்பாண்டி நாடே தெளி"

என்றும் திருவாசகம் அருளிய மணிவாசகர் முழங்கியுள்ளார்! இத் தென்பாண்டி நாடே 'பொருநை நாடு' ஆகும். இனி, இதன் வளமான வரலாற்றை நோக்குவோம்.

வரலாற்றுக்கு முந்திய காலம்:

விலங்கைப் போல தனித்து வாழ்ந்த மனிதன், கூடி வாழக் கற்றுக்கொண்ட பின்னர், பனிபடர் காலம், கற்காலம், இரும்புக் காலம், செம்பு உலோகக் காலங்களைக் கடந்து, நூருயிரக் கணக்கு ஆண்டுகள் வாழ்ந்த பின்னரே, நாகரிகப் படியில் ஏறியிருக்க வேண்டும்! அவற்றை அறிவது அரிதே! ஆயினும், வரலாற்று மூலங்கள் மிகப் பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன! 'தண்பொருநை ஆற்'றின் தென்கரையில் சீவைகுண்டம் பக்கத்தே 'ஆதிச்ச நல்லூர்' உள்ளது. அங்கே நடைபெற்ற புதைபொருள் ஆராய்வு, இத் தென்பாண்டி நாட்டின் தொன்மையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கி. மு. 1200 லேயே அங்கே நெல் பயிரிடப் பட்டது என்றும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் அனுப்புவதற்காக இரும்புக் கருவிகள் தயாரிக்கப் பட்டன என்றும் தெரிய வருகின்றது. இது போன்றே, இந்த ஆற்றங்கரை ஊர்களாகிய சேரன்மாதேவி, கொற்கை முதலிய இடங்களிலும் அகழ் பொருள் ஆய்வுகள் நடை பெற்றுள்ளன! அங்கே முதுமக்கள் தாழிகளும், உரோம நாணயங்களும் பல இடங்களில் கிடைத்துள்ளன. புதைதாழிகள், இரும்புப் படைக் கருவிகள், விலை உயர்ந்த மணிகள், பிற இடங்களில் கிடைக்காத வேறு அரிய பொருள்கள் முதலியன அங்கங்கே தோண்டி எடுக்கப் பெற்றுள்ளன. வடக்கே 'சிந்து' ஆற்றங்கரையில் 'ஆரப்பா', 'மோகஞ்சதாரோ' அகழ்வு ஆய்வுப் பொருள்கள், தெற்கே 'தண்பொருநை' ஆற்றங்கரையில் 'ஆதிச்ச நல்லூர்' புதைபொருள்களோடு பலவழிகளில் ஒத்துள்ளன! ஆயினும், சிந்துவெளி நாகரிகத்தைவிட, 'தண்பொருநைக்கரை நாகரிகம்' மிகவும் முந்தியது என்று வரலாற்று வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர். சிந்துவெளிப் பண்பாட்டின் காலம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிஞர்

கள் கூறுகின்றனர். கொற்கைத் துறைமுகமும், உவரி என்னும் சிறு துறைமுகமும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பல நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்று தெரிகின்றோம்.

உடன்பிறந்தோராகிய சேரர், சோழர், பாண்டியர் என்னும் தமிழ் வேந்தர் மூவரும், முதன்முதலில் 'கொற்கை'யைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர்; பின்னரே பிரிவு நிகழ்ந்தது! பழைய கொற்கையையே கோநகராகக் கொண்டு பாண்டியர், தமிழகத்தின் தென்பகுதியை ஆள, சேரர் மேற்புலத்தையும், சோழர் வடபுலத்தையும் பெற்று ஆட்சி புரிந்து வந்தனர்! இப் பழஞ்செய்தியை முன்னரே பார்த்தோம்!

**வரலாற்றுக் காலம்:**

'இலக்கியமும் வரலாறும் பிரிக்க முடியாத இரட்டைப் பிறவிகள்' என்பர். வரலாற்று எல்லைக்கு உட்பட்ட தமிழகத்தைப் பல இலக்கியங்களும் வெளிநாட்டார் குறிப்புகளும், கோவில்களும், கட்டிடங்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும், நாணயங்களும், புதைபொருள்களும், கதைகளும், தனிப்பாடல்களும் பிறவும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு, தமிழக வரலாற்றைப் பின்வருமாறு அறிஞர்கள் வகைப்படுத்தி உள்ளனர்:

| | | |
|---|---|---|
| (i) | சங்க காலம்: | கி. மு. 3000 – கி. பி. 200 |
| (ii) | களப்பிரர் காலம்: | கி. பி. 200—கி. பி. 400 |
| (iii) | பல்லவர் காலம்: | கி. பி. 400—கி. பி. 900 |
| (iv) | பிற்காலச் சோழர் காலம்: | கி. பி. 900—கி. பி. 1200 |
| (v) | பிற்காலப் பாண்டியர் காலம்: | கி. பி. 1200—கி. பி. 1350 |
| (vi) | விசயநகர வேந்தர் (நாயக்கர்) காலம்: | கி. பி. 1350—கி. பி. 1750 |

(vii) ஐரோப்பியர்—(ஆங்கிலர்) காலம்: கி. பி. 1750—கி. பி. 1947

(viii) தற்காலம் ... 1947க்குப் பின்னர்

இவ்வாறு, தமிழ்நாட்டு வரலாற்றை ஒருவாறு ஆராய்ந்துள்ளனர்! இத்தென்னாட்டு வரலாறே இன்னும் தெளிவு பெறவில்லை என்பர். ஆதலின், 'பொருநை நாடு' ஆகிய திருநெல்வேலி மாவட்டத்திற்கு என்று ஒரு தனி வரலாறு படைப்பது அரிதுதான்! ஆயினும், பேரறிஞர்கள் பலர் ஆய்ந்து கண்டு 'திருநெல்வேலி மாவட்ட வரலாறு' படைத்துள்ளனர்! அவற்றின் அடிப்படையிலே சில செய்திகளைச் சிந்திக்கலாம்.

## சங்க காலம் :

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க நூற்களில் வரும் பாடல்கள் பாண்டிய நாட்டையும், மக்களையும் மன்னரையும் புகழ்ந்து பாராட்டுகின்றன. பாண்டியர் மீன் கொடியும், வேம்பு மாலையும் அடையாளமாகப் பெற்றிருந்தனர் என்று இலக்கியங்கள் இயம்புகின்றன. அந் நாட்களில், ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போன்ற பாண்டிய வேந்தர் பெருஞ்சிறப்போடு ஆட்சி புரிந்தனர். மக்கள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருநோக்குப் பெற்றிருந்தனர். தெற்கே கன்னியாகுமரியையும், வடக்கே வெள்ளாற்றையும், கிழக்கே கடலையும், மேற்கே பெருவழியையும், 'பாண்டி நாடு' எல்லைகளாகப் பெற்றிருந்தது என்பர். இங்கே, வடக்கே 'வைகை' ஆறும், தெற்கே 'தண்பொருநை' ஆறும் தொன்றுதொட்டே வளம்படுத்தி வந்தன. வைகை ஆற்றங்கரையிலே மதுரையும், பொருநை ஆற்றங்கரையிலே திருநெல்வேலியும், கொற்கையும் பழந்தமிழரின் வளமிகுந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் பார்அறியச் செய்தன. இங்கே தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் முகிழ்த்தன. தென்பாண்டி நாட்டின் பொதிய மலையிலே, முத்தமிழ் மொழியின் தந்தை எனப்பெறும் 'அகத்திய முனிவர்' வாழ்ந்தார். அருந்தமிழ்

இலக்கண நூல் ஆக்கினர். அப் பொதிய மலையிலே கந்தம் கமழும் சந்தன மரங்கள் உண்டு; இன்பத் தென்றல் எழுந்து வீசும். இதன் கிழக்கே கொற்கைக் கடலிலே முத்தும் பவழமும் கிடைத்தன; அவை உலக நாடுகள் எங்கும் கடல் வணிகப் பொருள்களாக உலவின; நாட்டு மக்களிடத்திலே அறம் சிறந்து ஓங்கியது.

முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் ஆகிய நீண்டகால வரலாற்றைப் பாண்டியர் பெற்றிருந்தனர். கடைச் சங்ககாலப் பாண்டிய மன்னர் கொடை வீரம் நீதி ஆகியவற்றில் மேம்பட்டு நின்றனர். குடிமக்கள் எல்லா நலன்களும் எய்தி, இன்புற்றிருந்தனர்; எண்ணற்ற புலவர் இன்பத்தமிழை ஆராய்ந்து உவந்தனர். வளம் அனைத்தும் நிறைந்திருந்தன; ஆதலின், இந் நாட்டிலே பசி, பிணி, பகை முதலிய தீமைகள் இல்லை! இத் தென்பாண்டி நாடு ஏறத்தாழ ஏழாயிரம் சதுரக் கல் பரப்பு அளவு பெற்றிருந்தது. இதன் தென்வடல் நீளம் 192 கி. மீ. என்றும் கீழ்மேல் அகலம் சுமார் 96 கி. மீ. என்றும் சொல்லுவர். இஃது ஏறக்குறைய முக்கோண வடிவம் வாய்ந் திருந்தது! இந் நாட்டிலே, வடிம்பலம்ப நின்ற பாண்டியன், முதுகுடுமிப் பெருவழுதி முதலிய பழம் பாண்டி வேந்தர் ஆட்சி புரிந்து, மக்களுக்கு நலம் பல விளைவித்து உள்ளனர்.

பிறநாட்டு நல்லறிஞர் பலர் பாண்டி நாட்டையும் பாண்டி யர்களையும் பாராட்டியுள்ளனர். கி.பி. 50இல் 'பெரிபுளுசு' என் னும் நில நூல் ஆசிரியர், பாண்டியர் அரசியல் அமைப்பினைப் பாராட்டியுள்ளார். கி.பி. 2ஆம் நூற்றுண்டில் தமிழ் நாட்டிற்கு வந்த 'தாலமி' என்னும் மேனுட்டறிஞர், பாண்டியர் மேம்பாட் டினைக் குறித்துள்ளார். அசோகன் கல்வெட்டுகளும், இலங்கை 'மகாவம்சம்' என்னும் பழைய வரலாற்று நூலும் பாண்டியர் ஆட்சியைப் பாராட்டுகின்றன. வடமொழியின் பழைய நூல்களாகிய வால்மீகி இராமாயணம், வியாசர் மாபாரதம், பாணினி வியாகரணம் முதலியன பாண்டியர் பெரு மைகளைப் பாராட்டியுள்ளன. கடைச்சங்க காலத் தமிழ் மக்க ளின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் பழந் தமிழ் இலக்கியங்களிலே, 'திருக்குறள்' மிகச் சிறந்தது என

லாம்! அதன் வளங்கள் அனைத்தும் பொருநை நாட்டு மக்களுக்கும் பொருந்தும் அல்லவா?! இக் கடைச் சங்க காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நிறைவுற்றது என்பர்.

**களப்பிரர் காலம் :**

இக் கடைச் சங்க காலத்தின் இறுதியிலே, 'களப்பிரர்' என்னும் வெளி நாட்டு அரச மரபினர், தமிழ்நாட்டில் நுழைந்தனர்; கொடுமைகள் பல புரிந்தனர்; தமிழர்களைத் தன்னடிப் படுத்தக் கருதினர்; வேற்று மொழியினையும் வேற்று மதத்தினையும் தமிழகத்தினுள் திணித்தனர்! இக் கொடுங்கோலாட்சி, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் தமிழகத்திலே நின்று நிலைத்தது எனலாம்! இக் கொடுங்கோல் களப்பிரரை, 'பாண்டியன் கடுங்கோன்' (கி.பி. 575—600) எதிர்த்து முறியடித்து விரட்டினான். இந்த வெற்றிக்குப் பின்னர், பாண்டி வேந்தர் மீண்டும் வளர்ச்சி பெற்றனர் எனலாம்!

**பல்லவர் காலம் :**

கி.பி. ஆறும் நூற்றாண்டிலே தமிழகத்தின் வடபுலத்திலே 'பல்லவர்' என்னும் புதிய அரச மரபினர் தலையெடுத்தனர்; சோழ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் அடிக்கடி போர் நடைபெற்று வந்தது! வெற்றியும் தோல்வியும் வேரூன்றியிருப்பன அல்ல அல்லவா? போரில் வெற்றியும் தோல்வியும் விரவியே வந்தன! சிற்சில வேளைகளில், பல்லவர்களோடு சோழ மன்னர்களும் சேர்ந்து கொண்டனர்! இதனால், கி.பி. 880இல் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் நடைபெற்ற பாண்டியப் பல்லவப் போரிலே, பாண்டியர் தோல்வி உற்றனர்! இந்நாட்களிலேயே, சிவநெறி 'நாயன்மார்கள்' சிறப்புற்றுத் திகழ்ந்தனர்; திருமாலிய நெறி 'ஆழ்வார்கள்' அன்பு நெறி பரப்பினர். அந்நாளைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இந்நாளைய வரலாற்றுக் கருவூலங்கள் ஆயின! அந்நாளில், இசை, ஓவியம், நடனம், சிற்பம் முதலிய நுண்கலைகள் மேன்மை உற்றன. பக்தி இலக்கியங்கள் பார் போற்ற வளர்ந்தன.

**பிற்காலச் சோழர் :**

திருப்புறம்பியப் போரிலே, பல்லவர்களோடு சோழர்களும் சேர்ந்து, பாண்டிய மன்னரைத் தோல்வியுறச் செய்தனர். ஆதலின், 'சோழன்—ஆதித்தன்' பாண்டியரிடமிருந்த சோழ நாட்டை மீட்டிக் கொண்டான்! பின்னர் பல்லவர்களையும் வென்று, தொண்டை நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான்! இவன் காலம் முதல் பிற்காலச் சோழப் பேரரசு பெருமித நிலை பெற்றது; இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் முதலிய சோழப் பேரரசர்களின் செல்வாக்குப் 'பொருநை நாடு' வரை பரவியிருந்தது. இங்குள்ள 'கங்கை கொண்டான்' என்னும் ஊர் இராசேந்திர சோழன் ஆட்சியை நினைப்பூட்டுகின்றது! 'சேரன்மாதேவி' என்னும் ஊரிலே இராசராச சோழன் கல்வெட்டுகள் உள்ளன! அந்நாட்களில் பாண்டியர் சோழர்களுக்கு உட்பட்டே வாழ்ந்தனர் எனலாம்! இருப்பினும், இடையிடையே அவ்வப் பொழுது பாண்டியர் கிளர்ந்து எழுந்தனர்; தன்னாட்சியும் தனியாட்சியும் பெற முனைந்தனர். எனினும், சோழப் பேரரசைப் போன்று, தென் பாண்டி மன்னர்கள் புகழ் பெற்றுத் திகழவில்லை! இந்நாட்களிலேயே, இடைக் காலத் தமிழ் இலக்கியங்கள் ஏற்றம் உற்று இலங்கின; திருமுறைகள் செழித்தன; சேக்கிழார் திகழ்ந்தார்; கம்பர் வாழ்ந்தார். முதலாம் குலோத்துங்க சோழன் (கி பி. 1070—1122) ஆட்சிக்குப் பின்னர், பிற்காலச் சோழர் மரபு மங்கிவிட்டது எனலாம். ஆயினும், அவர்கள் எழுப்பிய திருக்கோவில்களும் கல்கட்டிடங்களும் என்றென்றும் அழியாதனவாகக் காட்சியளித்து வருகின்றன!

**பிற்காலப் பாண்டியர் :**

பிற்காலச் சோழர் காலத்திற்குப் பின்னர், மீண்டும் பாண்டியர் ஆட்சி (கி.பி. 1190—1310) பேரொளி வீசத் தொடங்கியது! மூன்றும் குலோத்துங்க சோழன் கி.பி. 1218 இல் இறந்தான்! அதன் பின்னர், பாண்டியர் சோழ மன்னர்களுக்குத் திறை செலுத்திலர்; தனியரசு புரியும் பேரரசர் ஆயினர்! இப்பாண்டி மன்னர்களிலே குறிப்பிடத்தக்கவர் சிலர் உண்டு. முதல் சடைய

வர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1190—1218) பிற்காலப் பாண்டியர் ஆட்சியைத் தோற்றுவித்தான். முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216—1238) மதுரை மாநகரிலே முடிமன்னவனாக இருந்து, பாண்டி நாட்டை ஆட்சி புரிந்தான். இவனே, பாண்டியப் பேரரசை மீண்டும் நிலைநாட்டிய பெருந்தகை ஆவான். இவன் காலத்திலே 'தென்பாண்டி நாடு' பீடும் பெருமையும் பெற்றிருந்தது. இவன் பெயரால் 'சுந்தரபாண்டிய புரம்' என்னும் வளமிக்க ஊர், இப் பொருநை நாட்டிலே அமைந்துள்ளது. இவன் கல்வெட்டுகளும் மெய்க்கீர்த்திகளும் இனிய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளன. இவன் ஆட்சிக் காலத்திலே நாடு, ஏற்றமும் தோற்றமும் பெற்றிருந்தது. முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268—1311) 'புவனேக வீரன்' என்றும், 'கொல்லங் கொண்ட பாண்டியன்' என்றும் பாராட்டப் பெற்றான். இவன் ஆட்சிக் காலத்தில், பாண்டிய நாடு விரிவுற்று செழிப்புற்று உயர்நிலை உற்றிருந்தது; 'இத்தாலி' நாட்டு, 'வெனிசு' நகரத்துப் புகழ்பெற்ற அறிஞன் 'மார்க்க போலோ' என்பவன் பாண்டி நாடு வந்தான்; பல நகர்களையும் சுற்றிப் பார்த்தான்; பாண்டியன் ஆளுகையைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து தன் நூலிலே எழுதினான்! திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரன்மாதேவிக் கல்வெட்டு ஒன்று, இப்பாண்டியன் மலைநாடு, சோழநாடு, இரு கொங்கு நாடுகள், ஈழ நாடு, தொண்டை நாடு என்பவற்றை வென்றான் என்று கூறுகின்றது. மிகச் சீரிய நிலையில் இருந்த பாண்டிய அரசு, கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தாழ்ந்தநிலை அடையத் தொடங்கிற்று!

தென்பாண்டி நாடு; பிற்காலப் பாண்டியர் சிலரால் பெருமித நிலை பெற்றது. கி. பி. 1162ஆம் ஆண்டில் குலசேகரப் பாண்டியன் முடிசூடிக் கொண்டான்! அவன் தம்பி பராக்கிரம பாண்டியன் அரசாளும் உரிமை வேண்டினான்! ஆதலின், பராக்கிரம பாண்டியன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆள, குலசேகரப் பாண்டியன் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இந் நாளிலிருந்து, தென்பாண்டி நாடு, மதுரையிலிருந்து பிரிந்து தனித்து வாழத் தொடங்கியது!

கி. பி. 1268 இல் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் திருநெல்வேலியையே தலைநகராகக் கொண்டு சிறந்த முறையிலே அரசாண்டான். அழகன் பெருமாள் குலசேகர பாண்டியன், வீர பாண்டியன் அல்லது திருநெல்வேலிப் பாண்டியன், அதிவீர ராம பாண்டியன், வர துங்கராம பாண்டியன், சீவல்லபப் பாண்டியன் முதலிய பொருநை நாட்டு மன்னர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலே ஆட்சிபுரிந்தனர்; பல ஊர்களை உண்டாக்கினர்; பல திருக்கோவில்களை எழுப்பினர்; அறங்கள் பல புரிந்தனர்; அறிவு பெருக்கினர். இவர்களில் அதிவீர ராம பாண்டியன் 'வெற்றி வேற்கை' 'நைடதம்' போன்ற பல நல்ல தமிழ் நூல்களை ஆக்கியுள்ளான்; வர துங்கராம பாண்டியனும் தமிழில் வல்லமை பெற்ற புலவனாகத் திகழ்ந்து பல பத்தி நூல்களை ஆக்கியுள்ளான். நாடாளும் உரிமை குறித்து, வீர பாண்டியன், சுந்தர பாண்டியன் என்னும் அண்ணன் தம்பி ஆகிய இரு பாண்டி வேந்தர் பகைமை கொண்டனர்!

**விசயநகர் (நாயக்கர்) ஆட்சி:**

சுந்தர பாண்டியன் தனக்குத் துணையாக, வடநாட்டை ஆண்டு வந்த மகமதிய வேந்தன் 'அலாவுதீன் கில்சி' என்பவன் உதவியை நாடினான். அவன் படைத்தலைவன் 'மாலிக் காபூர்' என்பவனை, கி. பி. 1310 இல் பெரும்படையுடன் அனுப்பி வைத்தான். அந் நாளில், மைசூர் நாட்டில் இருந்த 'கொய்சளர்'களும், ஆந்திர நாட்டில் இருந்த 'காகதீயர்'களும் தமிழகத்தில் தங்கள் ஆட்சியினை நிறுவ முனைந்தனர்! இவர்கள் தமிழகத்தில் உள்ள பல கோவில்களுக்குப் பல திருப்பணிகள் செய்தனர். கி. பி. 1327 இல் தில்லியில் ஆண்ட 'முகமது துக்ளக்' என்பவன் தனது படைத் தலைவன் 'சலால் உதீன்' என்பவனை மதுரைக்கு அனுப்பி, அரசாளச் செய்தான்! 'சலால் உதீன்' தில்லிப் பேரரசனை மதிக்காமல், மதுரையிலே 'தனியரசு' செய்தான்! மக்களைக் கொடுமைப் படுத்தினான்; விரும்பாதவர்களையும் வற்புறுத்தி முகமதிய மதத் திணிப்பு மேற் கொண்டான்; கொடுங்கோல் ஆட்சி புரிந்தான்! அடிமையுற்றுக் கிடந்த பாண்டி நாட்டு மக்களும், வலிமை இழந்த பாண்டிய

மரபினரும் பொறுக்க இயலாது துன்புற்றனர். ஆதலின், விசய நகரப் பேரரசின் 'கம்பண்ண உடையார்' பெரும் படை கொண்டு மதுரை வந்தார். முகமதியர்களை வென்றார்! இதனால், மதுரையில் முகமதிய அரசு வீழ்ந்தது!

விசயநகரப் பெரு வேந்தர்களில் கிருட்டினதேவராயர் (கி. பி. 1509—1530) என்பவர் சீரும் சிறப்புமாகத் தென்னாட்டை ஆண்டு வந்தார். தமிழ்நாட்டு மூவேந்தர் மரபினர், விசயநகர வேந்தனுக்கு அடங்கியே நடந்தனர்! ஆயினும், வீரசேகரன் என்னும் சோழ அரசன், பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வந்தான். இதனைப் பாண்டியன் சந்திர சேகரன் விசயநகர வேந்தனிடம் சென்று சொன்னான். உடனே, கிருட்டினதேவ ராயர், தன் படைத் தலைவன் நாகம நாயக்கனைப் பெரும் படையுடன் மதுரை சென்று, சோழனை வென்று, பாண்டியனுக்கு முடி சூடி வருமாறு பணித்தார். அவ்வாறே நாகம நாயக்கன் படையெடுத்து மதுரை வந்து சோழனை வென்றான்! ஆனால், பாண்டியனுக்கு முடிசூட்டிலன்! தானே பாண்டிய நாட்டை ஆளத்தொடங்கினான்! இதனைக் கேள்வியுற்ற பேரரசன், பெருஞ் சீற்றம் உற்றான். நாகம நாயக்கனை அடக்க அவர் மகன் 'விசுவ நாத நாயக்கர்' முன்வந்தார்! அவரோடு, 'தளவாய் அரியநாத முதலியார்' பெரும் படையோடு அனுப்பி வைக்கப் பெற்றார்! அந்த இருவரும் நாகம நாயக்கனை வென்றனர். அது முதல், விசயநகரப் பெருவேந்தர் ஆட்சி தமிழ் நாட்டில் நிலை பெறுவது ஆயிற்று! அவரது சார்பாளர்களாகவே 'நாயக்க மன்னர்கள்' பாண்டி நாட்டை ஆண்டு வந்தனர்.

நாயக்கர் ஆட்சியைப் பாண்டி நாட்டில் நிலை நாட்டிய பெருமை, 'தளவாய் அரியநாதர்' (கி. பி. 1559—1600) அவர்களையே சாரும். ஆங்காங்கு ஆற்றலும் வலிமையும் உள்ளவர்களை அவர், பாராட்டி ஊக்கினார்; 72 பாளையக்காரர்களை நியமித்தார். நாயக்கர் ஆட்சியில் 'பொருநை நாடு' பல வழிகளில் பெருமை பெற்றது. கன்னியாகுமரியிலிருந்து திருச்சிக்கு வடக்கே வரை சாலைகள் போடப் பெற்றன; காடுகளை அழித்து ஊர்கள் ஆக்கப்பெற்றன; வேளாண்மை, பாசன வசதிகள் பெருக்கப் பெற்றன; நாலாத் திக்குகளிலும் சாலைகள், பெரு

வழிகள் தோன்றின; வழிப்பறி, கொள்ளை, திருடு போன்ற கொடுமைகள் நேராமல் சிறந்த காவல்கள் நிறுவப் பெற்றன. இப் பணிகள் அனைத்தும் பாளையக்காரர்களிடமே ஒப்புவிக்கப் பெற்றன. ஆக்கப் பணிகள் பல ஆர்வமுடன் இயங்கின. சான்றாகத் திருநெல்வேலி மாநகரில் தேரோடும் திருவீதிகள் போடப்பட்டன! நெல்லையப்பர் கோவிலுக்குத் திருமதில் கட்டித் திருப்பணிகள் செய்யப் பெற்றன; கோவிலிலிருந்து பொருநை யாற்றங்கரை வரை குறுக்குத் துறைக்கும், சிந்து பூந்துறைக்கும் சாலைகள் போடப் பெற்றன. இந் நாட்களிலேயே, பொருநைக் கரைப் பேரூர்களில் திருக்கோவில்கள் கற்கட்டிடங்கள் விறு விறுப்பாக எழுந்தன என்பர்!

நாயக்கர் ஆட்சியில் பாண்டி நாடு எங்கணும் பல இடங் களில் தெலுங்கர் குடியேறினர். அந்த இடங்களில் ஓயாமல் கலகங்கள் நடந்தன. அவற்றை அடக்க, மதுரை நாயக்கர், விசயநகரப் பேரரசை வேண்டினர். தெலுங்கு நாட்டிலிருந்து சேனைத் தலைவர்கள், கம்பளத்தார்கள் அனுப்பப் பெற்றனர். இவ்வாறு, நியமிக்கப் பெற்றோர், பின்னுளில் சிற்றரசர்க ளாயினர். இவ்வாறே, பாண்டி நாட்டில் நாயக்கர்களின் பாளையப் பட்டுகள், சமீன்கள் தோன்றின. இவர்கள் அனை வருமே தளவாய் அரியநாதருக்கும், விசயநகரப் பேரரசுக்கும் அடங்கி, திறை செலுத்தி வந்தனர். இவ்வாறு தோன்றிய பாளையங்களில்—எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி முதலி யவற்றை இயம்பலாம்; சமீன்களில்—சேத்தூர், சிவகிரி, நெற் கட்டுஞ் செவ்வல், வடகரை, ஊற்றுமலை முதலியவற்றைக் குறிப் பிடலாம்.

நாயக்கர் ஆட்சியிலே, சிறந்த புகழ் பெற்றிருந்தவர்கள் சிலர் உண்டு. அவர்களில், திருமலை நாயக்கர் (கி. பி. 1623-1659), இராணி மங்கம்மாள் (கி. பி. 1689—1708) முதலியவர்களைப் பெரு மிதத்தோடு குறிப்பிடலாம். திருநெல்வேலி மாவட்டத்திலே மங்கம்மாள் சாலை, மங்கம்மாள் சத்திரம் முதலிய அறக்கட்டளை களை இன்றும் கேள்விப்படுகின்றோம்! நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலங்களில், வடபுலத் தெலுங்கு வீரர்கள் மட்டும் அல் லாமல், மறையவர் (வேதியர்) குடும்பங்களும் பொருநைக்கரை

ஊர்களிலே பலவகைச் சலுகைகளோடு குடியேற்றம் செய்யப் பெற்றனர்!

## ஐரோப்பியர் (ஆங்கிலர்) காலம் :

பாண்டி நாட்டிலே நாயக்கர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே, ஐரோப்பியர்கள் தென்னாட்டில் நுழைந்தனர். வந்த வெள்ளையர் சிறிது சிறிதாக வலுப்பெற முனைந்தனர். மேலைக் கடற்கரையில் உள்ள கள்ளிக் கோட்டையில் கி. பி. 1498 இல் 'வாசுகோடகாமா' வந்து இறங்கினர் ; தொடர்ந்து தென் தமிழ்நாடு வந்தார் ; பின்னர், போர்த்துக்கீசியர் கீழ்க் கடற்கரைப் பகுதியைக் கைப்பற்றினர் ! பரதவர்கள் அனைவரும் கிறித்தவர் ஆயினர். அவர்களுக்குப் பின்னர் தச்சுக்காரர் (Duch) வந்தனர். இருவரும் தமிழகத்திலே போட்டியிட்டனர்; போர் தொடங்கினர். போரில் தச்சுக்காரர் வென்றனர் ; போர்த்துகீசியரிடமிருந்து 'தூத்துக்குடி' துறைமுகத்தைக் கைப் பற்றிக் கொண்டனர். கி. பி. 1606 இல் மதுரையை ஆண்ட கிருட்டினப்ப நாயக்கர், கிறித்தவசமயத்தைத் தமிழ் நாட்டிலே பரப்ப, 'ராபர்ட்–டி–நொபிலி' (தத்துவ போதகர்) அவர்களுக்கு உரிமை அளித்தார் ! இதனல், கிறித்தவம் நன்கு வளர்ச்சி பெற்றது.

பின்னர் ஒரு சமயம், முகமதியர் வழிவந்த 'ஆர்க்காட்டு நவாபு' தமிழகத்தைக் கைப்பற்றினர் ; தமிழகத்துப் பாளையங்களிடமும் சமீன்களிடமும் திறைப் பொருள் பெற்ருர் ! ஆர்க் காட்டு நவாபு வருவாய்க்கு மிகுதியாகவே செலவு செய்யும் இயல்பினராய் வாழ்ந்தார். ஆதலின், அந் நாளில் தமிழகத்தில் வந்து வாணிகம் புரிந்த வெள்ளை ஐரோப்பியர்களிடம்-சிறப்பாக ஆங்கிலர்களிடம் கடன் பட்டார் ! சிக்கலான ஒரு நேரத்திலே, வெள்ளையர்கள் நவாபு மன்னனிடம் கடன் தொகையினைத் திருப்பித்தர வற்புறுத்தினர் ! எனவே, 'நவாபு' வெள்ளையர் களுக்குப் பாளையக்காரர்களிடமும், சமீன்தார்களிடமும் திறைப் பொருள் பெறும் உரிமையினையும், வரிவசூலிக்கும் உரிமையினையும் ஒப்படைத்துவிட்டார்! ஆர்க்காட்டு நவாபு மன்னரின் ஆற்றலின்மையைப் பாளையக்காரர்களும் சமீன்தார்களும் நன்கு

புரிந்து கொண்டனர். ஆதலின், எவருக்குமே திறைப் பொருளோ வரிப்பணமோ கட்டுவதற்குத் தென்னாட்டுப் பாளையர்களும் சமீனர்களும் மனமில்லாதவர் ஆயினர்! இதனால், இவர்களை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை, வெள்ளையர்களுக்கு ஏற்பட்டு விட்டது!

பாளையர்கள் பாண்டி நாட்டின் கிழக்குக் கரை ஓரமுள்ள தச்சுக்காரர்களின் உதவியைப் பெற்று ஆங்கிலர்களை எதிர்த்தனர். சமீனர்கள் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற்று ஆங்கிலர்களை எதிர்த்தனர். இவ்வாறு வெள்ளை ஆங்கிலர்களை எதிர்த்தவர்களில், 'புலித்தேவன்' என்பவன் சிறந்த வீரன் ஆனான். இவன் ஆர்க்காட்டு நவாபு ஆட்சியில் அடங்கி இருந்தான்; ஆனால் ஆங்கிலர் ஆட்சியை அடியோடு வெறுத்தான்! இவன் சமீன், வாசுதேவ நல்லூர்ப் பக்கம் உள்ள 'நெற்கட்டும் செவ்வல்' என்பதே ஆகும். அவ்வூர், பொருநை நாட்டில் சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள மலைச்சாரலில் அமைந்துள்ளது. புலித்தேவன் 'களக்காடு' என்னும் இடத்திலே ஆங்கிலேயர்களைப் பலமாக எதிர்த்தான்!

'வீரபாண்டியக் கட்டபொம்மன்', பாளையக்காரர்களின் தலைவன் ஆனான்! பாளையர்களில் பலர், கட்டபொம்மனின் கட்டளைக்கு உட்பட்டனர். சிலர், வெள்ளையர்களோடு சேர்ந்து கொண்டு, கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்தனர்! ஆயினும், வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையர்களை வீரத்தோடு எதிர்த்துவந்தான். ஆயினும், ஆங்கிலேயர் சூழ்ச்சி செய்து, 'கட்டபொம்ம'னையும், அவன் தம்பி 'ஊமைத் துரை'யையும் தூக்கிலிட்டுக் கொன்றனர்! பொருநை நாடு முழுவதுமே ஆங்கிலேயர்களுக்கு உரிமையாயிற்று! தமக்கு உறுதுணை புரிந்த 'எட்டையபுரம்', 'புதுக்கோட்டை' சமீன்களுக்கு ஆங்கிலர் பல சலுகைகளையும் உரிமைகளையும் வழங்கினர். இவ்வாறே தென்பாண்டி நாடு மட்டுமோ தீந்தமிழ் நாடு மட்டுமோ இல்லாமல், ஆங்கிலர் ஏறத்தாழ 'இந்தியப் பெருநிலம்' முழுவதையுமே தம்வயப்படுத்திக் கொண்டனர்! இந்தியாவின் சிற்சில இடங்களில் பிரெஞ்சுக்காராகளும் உரிமை பெற்றிருந்தனர்!

கி.பி. 1801 முதல் 1947 வரை, இப் 'பொருநை நாடு' ஆங்கிலேயர்களாலேயே ஆளப் பெற்றது! கி.பி. 1858 சிப்பாய்க் கலகத்திற்கு இப்பால், 'ஆங்கில வணிகர் குழு'விடம் இருந்த ஆட்சி, ஆங்கில அரசிடமே அடைக்கலம் ஆயிற்று! ஏறத்தாழ இந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலத்தில் இவ் வட்டாரத்தில் நடந்த நிகழ்ச்சிகள் பலப்பல எனலாம். ஆயினும் அவற்றை இங்கே சுருக்கமாகக் காணலாம்:

ஆங்கிலேயர் உலகின் பல நாடுகளை ஆண்டனர்; இந்தியப் பெருநிலத்தையும் ஆட்சி புரிந்தனர்! அம் முறையிலே, திருநெல்வேலி மாவட்டத்திலும் அவர்கள் ஆட்சி அமைந்திருந்தது. இதனால், கிறித்தவ மதம் பேராதரவு பெற்று விளங்கியது. கிறித்தவக் கல்வி நிலையங்களின் வழியே ஆங்கிலக் கல்வி முறை பெருகியது; மேனாட்டுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்னும் மனநிலை மக்களிடையே தோன்றியது! பாளையங்கோட்டை மாநகர் வளர்ச்சி யடைந்தது. கடலோரப் பகுதி ஊர்களில் கிறித்தவம் விரைந்து பரவியது. இருப்புப் பாதைகள் போடப் பெற்றன. இதன் விளைவாக வாணிகம் பெருகியது. காயல்பட்டினம், கொற்கை, குலசேகரப்பட்டினம், உவரி முதலிய சிறு துறைமுக நகர்கள் செல்வாக்கு இழந்தன. இவற்றிற்குப் பதிலாகத் 'தூத்துக்குடித்துறைமுகம்' பெரும் வளர்ச்சி பெற்றது! இம் மாவட்டத்தில் விளைந்த பஞ்சு இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப் பெற்றது. பின்னரே இம் மாவட்டத்தில் பஞ்சாலைகள் எழுந்தன. பாபநாசத்தில் மின்சார நிலையம் அமைக்கப் பெற்றது. நிலங்களைத் தரம் பிரித்து, வரி விதித்தனர். நாட்டு மருத்துவம் ஆதரவு இழந்தது; ஆங்கில மருத்துவ முறை நாடெங்கும் பரவியது. 'குற்றால அருவி' உடல் நலம் பேணவல்லது என்ற கருத்தை ஆங்கிலேயர் பரப்பினர்! மக்கள் தொகை பெருகியது. மக்கள் சிற்றூர்களை விட்டுவிட்டு நகரங்களில் குடியேறினர். சென்ற நூற்றாண்டில் திருநெல்வேலியில் ஆட்சி புரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் (கலைக்டர்)களில், 'ஆர். கே. பக்கிள்' என்னும் ஆங்கிலேயர் சாலச் சிறந்த

வராக மதிக்கப் பெற்ருர். அவர் இவ் வட்டாரத்திற்குப் புரிந்த நன்மைகள் அளவில ஆகும்.

அவர் பணிபற்றிப் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்: "பக்கிள், பொருநை நாட்டைத் தம் தாய் நாடாகவே கருதினர். குடிகளின் நலத்தை இடையருது நாடிய இந்நல்லார், பொருநை ஆற்றைப் பிறப்பித்து, ஊற்றம் அளிக்கும் பொதிய மலைத் தொடரில் அமைந்த நெடிய சோலைகளைப் பாதுகாத்தார்; நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினர்; தாது (1876—77) பஞ்சத்தால் வாடிய மக்களுக்குத் தனி வாழ்வு அளித்தார். இவர் பெயரால் அமைந்த 'பக்கிள் கால்வாய்' பொருநை நாட்டில் உள்ளது." ஆங்கிலேயர், நம் நாட்டுச் செல்வங்கள் பலவற்றைக் கவர்ந்து சென்றனர்; மக்கள் உரிமைகளைப் பறித்தனர்; நம்மை அவர்களது ஆட்சியின்கீழ் வைத்திருந்தனர். உண்மையே!

ஆயினும், பலவழிகளில் உதவியும் புரிந்துள்ளனர்: இப் பொருநை நாட்டிலே தூத்துக்குடித் துறைமுகத்தைப் பெரிதும் விரிவுபடுத்தினர்; மறைந்து கிடந்த வரலாறுகளை வெளிக் கொணர்ந்தனர்; பொருநை யாற்றங்கரைகளில் புதைந்து கிடந்த பழம்பொருள்களை அகழ்ந்து எடுத்து ஆய்வு நடத்தினர்; நிறைந்த அளவுக்குக் கல்வி புகட்டினர்; தமிழ்மொழியின் வளத்தை அறிந்து பெருக்க முனைந்தனர். இருப்பினும், தன்மான உணர்ச்சி மிக்க பொருநை நாட்டு மக்கள் 'உரிமைப் போர்' தொடுத்தனர். இந்த விடுதலைப் போராட்டத்திலே, குறிப்பிடத் தகுந்த பொருநை நாட்டு வீரர்கள் சிலர் உண்டு. அவர்களிலே, பாரதியார், வ. உ. சிதம்பரனர், வாஞ்சிநாதனர், வ. வே. சு. ஐயர் முதலியோரைச் சிறப்பாகச் சொல்லலாம். வெள்ளையர்கள் அடக்குமுறைகளைத் தொடுத்து நடத்தினர்! ஆயினும், பயனில்லை! உரிமைப்போர் இந்தியப் பெருநிலம் எங்கணும் பரவியது. காந்தியடிகளின் அறப்போர் வென்றது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து, இந்தியப் பெருநிலம், 15—8—1947 இல் விடுதலை பெற்றது! எனவே, அப்பொழுதே, இன்பத் 'தமிழ்நாடு'—எழிலார்ந்த 'பொருநை நாடு'—அரசுஉரிமையின் அரும் பயனைத் துய்க்கும் நற்பேறு பெற்றது!

**அரசுரிமை பெற்ற இக்காலம் :**

'பொருநை நாடு' ஆகிய இத் தென்பாண்டி நன்னாடு, 'திருநெல்வேலி மாவட்டம்' என்று இப்பொழுது தெளிவாகப் பெயர் பெற்றுவிட்டது! எட்டே வட்டங்களைக் கொண்டிருந்த இம் மாவட்டம், கி.பி. 1956 அக்டோபர் முதல், மொழிவழி மாநிலச் சீர்அமைப்பின் பயனாகத் தோன்றிய புதிய செங்கோட்டையைச் சேர்த்து, ஒன்பது வட்டங்களைக் கொண்டு உள்ளது; 31 ஒன்றியங்களையும் கொண்டு இலங்குகின்றது! அரசு உரிமை பெற்ற இம் மாவட்டம் 'கட்சி—அரசிய'லால் ஆளப்பெற்று வருகின்றது! அதனால், பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப் பெற்று வருகின்றன. அவற்றால் கல்வி பெருகியது; தொழில்கள் வளர்ந்தன; மின்சாரம் முன்னேறியது; பாசன வசதி பரவியது; நெடுஞ் சாலைகள் நன்கு பேணப் பெற்றன; போக்குவரத்துத் துறையிலே ஒரு புரட்சியே ஏற்பட்டுள்ளது! தூத்துக்குடித் துறைமுகம் பெரிதும் விரிவுபடுத்தப் பெற்றுள்ளது. மணிமுத்தாறு நீர்த் தேக்கத் திட்டம் சிறந்த முறையிலே நிறைவேற்றப் பெற்றது; எல்லா அரசுத் துறைகளிலும் தனித்தனி மாவட்ட அலுவலர்கள் நியமிக்கப் பெற்றனர்; நலம்மிகுந்த ஆட்சி நிறைவுற்று நிலவுகின்றது; சமீன்கள் ஒழிக்கப் பெற்றன; சிமிண்டுத் தொழிற்சாலை, மிகப் பெரிய இரசாயனத் தொழிற்சாலை முதலிய புதிய பெருந் தொழில்கள் தொடங்கப் பெற்றன; இந்து சமயம் மறுமலர்ச்சி பெற்றுள்ளது; இனவேறுபாடுகள் மறைகின்றன; சமயப் பூசல்கள் மாய்கின்றன! எல்லோரும் ஒருநிறை ஆயினர். இதனால், மக்கள் நல்வாழ்வு பெற்று மகிழ்கின்றனர். இன்று, குடியரசு முறையால், நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆனோம்! ஆதலின் மக்கள்ஆட்சி செம்மைபெற மனம் விரும்பி நன்கு உழைப்போம்.

# 6. பொருநைக்கரைப் பேரூர்கள்

## (திருக்கோவில்கள்—புண்ணியத்துறைகள்)

மாவட்டம் :

பழைய 'பொருநை நாடு' இன்றைய 'திருநெல்வேலி மாவட்டம்' ஆயிற்று என்று கண்டோம். இது, தமிழ்நாடு, இன்று கொண்டுள்ள 15 மாவட்டங்களில் ஒன்று. இம் மாவட்டத்தின் பரப்பளவு 4407 சதுரக் கல்! இது, தமிழ் நாட்டின் மொத்தப் பரப்பளவில் பன்னிரண்டில் ஒரு பங்கு ஆகும். இம் மாவட்டத்தின் மக்கள் தொகையும், தமிழகத்தின் மக்கள் தொகையிலே பன்னிரண்டில் ஒரு பங்கு ஆகும். இம் மாவட்டத்தில் ஒன்பது வட்டங்கள் உள்ளன. அவற்றுள், பொருநை ஆறும், அதன் துணை ஆறுகளும் பாயும் வட்டங்கள் ஆறு ஆகும். பொருநை ஆறு மட்டும் ஓடும் வட்டங்கள் நான்கு. இம் மாவட்டத்திற்குச் செல்வச் செழிப்பூட்டும் இப் பொருநை ஆற்றங்கரையிலே மக்கள் தொகை மிகுதியே என்பதில் ஐயம் இல்லை! அங்கங்கே அமைந்துள்ள சிற்றூர்களும் பேரூர்களும் சிறந்து திகழ்கின்றன; பொருநைக் கரையிலே புண்ணியத் துறைகள் பல உண்டு. தமிழ் நாட்டின் தொன்மை மதங்கள் என்று போற்றப் பெறும் சிவநெறித் திருக் கோவில்களும் திருமாலியநெறித் திருப்பதிகளும் பல உண்டு. முன்னாளிலே, இந்நாட்டிலே வந்து பரப்பப் பெற்ற புத்தமதம், சமணமதம் பற்றிய சீரூர்களும் உண்டு; பின்னாளிலே வந்து பரவிய கிறித்தவம், முகமதியம் ஆகிய நெறிகளுக்கும் இங்கே இடமுண்டு! ஆதலின், விரிந்த மனமும், பரந்த உள்ளமும் கொண்ட பண்பாளர்கள் நிறைந்த ஒரு மாவட்டமாக, இப் பொருநை நாட்டைக் கருதலாம். இத்தகைய நன்மக்கள் வாழும் பேரூர்கள், பொருநைக் கரைகளிலே பொலிந்து விளங்குவதைப் பார்க்கலாம்.

(i) அம்பை வட்டம் :

பொருநை ஆறு புறப்படும் முதல் வட்டத்தை 'அம்பா சமுத்திரம் வட்டம்' என்பர்! இவ் வட்டத்தின் தெற்கு மேற்கு எல்லையாக 'மேற்குத் தொடர்ச்சி மலைகள்' அமைந்துள்ளன. இதனை, பொதிகை மலையும் தென்றல் காற்றும் பொருநை யாறும் அமைந்த 'வளநாடு' என்பர்! பொருநை அன்னையின் முதல் நீர்ப்பாசன ஊட்டம், இவ்வட்டத்திற்குக் கிடைத்த நல் லூழ் எனலாம்! பச்சைப் பசுமை தவழும் நெல் வயல்கள் நெடுந் தொலைவு காட்சி தரும் இயற்கை யன்னையின் எழில் கோலத்தை இங்கே காணலாம். அகத்தியர் வாழ்ந்த பொதிகை மலை, அடர்ந்த காடுகள், அழகு சொட்டும் அருவிகள், இன்ப நீரூற்றுகள், சுனைகள், ஆறுகள் மலிந்த இயற்கைப் பூங்காவாக, இவ் வட்டம் திகழ்கின்றது! இம் மாவட்டத்தின் ஆறுகள், பெரும் பாலும் இந்த வட்டாரத்திலிருந்தே தோன்றுகின்றன. இவற்றுள், ஈடு இணையற்றது 'பொருநை யாறு' எனலாம். இதன் துணையாறுகளான மணிமுத்தாறு, கோரையாறு, பச்சையாறு, கருணை (கடனு) ஆறு, வராக நதி, சம்பு நதி, இராம நதி என்பன, இவ் வட்டத்தின் மலைத்தொடர்களிலேயே தோன்று கின்றன. இந்த ஆறுகளின்மீது இப்பொழுது பாவநாசம் அணை, மணிமுத்தாறு அணை, கடனு அணை, இராமநதி அணை முதலிய அணைகள் கட்டப்பெற்றுள்ளன. முன்னுளிலேயே கட்டப்பெற்றுள்ள (i) கோடைமேல் அழகியான் அணை (ii) நதி உண்ணி அணை, (iii) கன்னடியன் அணை, (iv) அரிய நாயகிபுரம் அணை ஆகிய தண்பொருநை ஆற்று அணைகளின் கால்வாய்கள், இந்த வட்டத்தை மிகவும் செழிப்படையச் செய்கின்றன. இங்கே இரயில், நெடுஞ்சாலை போக்குவரத்து உண்டு; கம்பு, சோளம், மிளகு போன்ற புன்செய்ப் பயிர்களும் உண்டு; இங் குள்ள மலைப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களும், ஏலம், சிங்கோனு, மரவள்ளிக் கிழங்குத் தோட்டங்களும் உண்டு. இயற்கை வளமும், தொழில் வளமும் தரும் மிகுந்த வருவாயும் ஊதியமும் உண்டு. ஆதலின், இந்த வட்டத்தில் வாழும் மக்கள், செழித்த காவிரியாறு பாயும் தஞ்சை மாவட்டத்து மக்களைப் போன்றே அறிவுக் கூர்மையும் கலை ஆர்வமும் மிக்க

வர்களாகக் காணப் பெறுகின்றனர். இதனால், இங்கே மக்கள் தொகை மிகுந்த வளமான பேரூர்கள் பல காணப் பெறு கின்றன. அவற்றுள் சில ஊர்களை நோக்குவோம் :

பாவநாசம் :

'பொதிகை மலை'யிலே தோன்றும் 'பொருநை யாறு' மலைச் சரிவுகளிலே 24 கி. மீ. வரை பாய்ந்தோடி வந்து இறங்கி, முதன் முதலில் சமநிலப் பகுதிக்கு வரும் இடமே, 'பாவ நாசம்' எனப்படுகின்றது. இவ்வூர், வட இந்தியாவில் கங்கையாறு இமயமலையை விட்டு நிலத்தில் இறங்கும் முதல் இடமாக விளங்கும் 'அரித்துவாரம்' என்னும் அழகிய இடத்தை நினைவூட்டுகிறது! இதற்கு மேலே மலைமீது 'பழைய பாவநாசம்' என்னும் தூய இடம் உள்ளது! அங்கே அகத்திய முனிவருக்கும் அவர் வழிபட்ட முருகக் கடவுளுக்கும் தனித்தனிக் கோவில்கள் உள்ளன. இவற்றின் அருகே அகத்தியர் அருவி உள்ளது; இங்கே கயிலைத் திருமணக்கோலத்தை இறைவன் அகத்தி யருக்குக் காட்டினார் என்பர்! இதற்கும் அப்பால் கலியாண தீர்த்தம், பைரவ தீர்த்தம் என்னும் அருவிகள் உள்ளன! இம் மலைப் பகுதிகளிலே, பொருநை யாற்றிலே குட்டைகளிலே தேங்கி நிற்கும் நீர், கண்ணாடிபோலத் தெளிவாகவே இருக்கும்! பத்துப் பதினைந்து அடி ஆழமுள்ள இடங்களிலும் கூழாங் கற்களை எண்ணலாம்! அவ்வளவு தெளிவாக தண்பொருநை நீர் திகழ்கின்றது!

'பாவநாசம்' மிகவும் பழைமை வாய்ந்த பொருநைக் கரை புண்ணியத் துறைகளில் முதன்மை வாய்ந்தது ஆகும். இங்கே பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்று விளங்கும் 'பாவநாச ஈசுவரர்' திருக்கோவில் சிறந்த வேலைப்பாடுகள் கொண்டு விளங்கு கின்றது. இஃது அகத்தியர் வழிபட்ட சிறப்பு உடையது! இங்கே இறைவன் பெயர் 'முக்காளலிங்கர்'—இறைவி பெயர் 'உலகம்மை' என்பர். கோவில் முன்புறம் பொருநை யாறு விரைந்து ஓடுகின்றது! நேரே மலையிலிருந்து வருவதால், பொருநை நீர் இங்கே மிகவும் தூய நீராக விளங்குகின்றது; சான்றோர் மனம் போலத் தெளிந்து திகழ்கின்றது! இதனால், இப்

புண்ணியத் துறையிலே நீராடுவோர் பாவம் நாசம் ஆகப் போய் விடுகின்றது என்று நம்புகின்றனர். ஆதலின் இவ்வூர் 'பாவ நாசம்' என்று வழங்கப் பெறுகின்றது என்பர். இவ்வூரைக் குறித்துக் கதைகள் சொல்லுவர். அண்ணன் தங்கை என்று அறியாமலேயே திருமணம் புரிந்த இருவர், பாவம் போக்கிய புனித நீர்த்துறை இஃது என்பர்! பெற்றோரைக் கொன்ற ஒரு பிராமணன் பாவம், இங்கே நாசம் ஆயிற்று என்று தலபுராணம் சொல்லுகின்றது!

இங்குள்ள படிக்கட்டுகள் பார்வைக்கு அழகாக விளங்கு கின்றன; 'திருவாரூரில் தேர் அழகு; திருவிடை மருதூரில் தெரு அழகு; பாவநாசத்தில் படி அழகு' என்பர்! இங்கே மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. இம் மீன்களை எவரும் பிடிக்க அஞ்சுவர்; இவை மிகவும் புனிதம் வாய்ந்தனவாகக் கருதப் பெறுகின்றன. மக்கள் இம் மீன்களுக்கு இரைபோடு கின்றனர்; இங்கே பொருநைக் கரையில் அடுக்கு அடுக்காக அமைந்த படிக்கட்டுகளைக் காண்கின்றோம். இலை போலக் கருதிப் படிக்கட்டுகளிலே உணவு வைத்து உண்ணுகின்றனர்! இங்குள்ள மரங்களிலும் கோவில் சுவர்களிலும் குரங்குகளைச் செழிப்பாகக் காணலாம்.

'பாவநாச'த்திற்கு, ஒரு கி. மீ. கிழக்கே, 'விக்கிரம சிங்கபுரம்' என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் விக்கிரமசிங்க பாண்டியன் பெயரால் அமைந்தது. இவ்வூரைச் 'சிங்கை' என்றும், 'சிங்க புரம்' என்றும் சொல்லுவர். இவ்வூரில், வடநூற் கடலும், தென் தமிழ்க் கடலும் முழுதுணர்ந்த 'சிவஞான முனிவர்' (மறைவு. 1785) பிறந்தார்! 'முக்காளலிங்கம்' என்னும் பிள்ளைத் திரு நாமம் பெற்றிருந்தார்; பின்னர், இலக்கண இலக்கியங்களை, வரம்பின்றிக் கற்றார்; நூல்கள் பல ஆக்கினார்! திருவாவடு துறை ஆதீனத் தம்பிரான் ஆனார்; 'சிவஞானபோதம்' என்னும் சைவசித்தாந்த நூலுக்கு 'மாபாடியம்' என்னும் விளக்க உரை கண்டார்! ஆதலின் தண்பொருநைக்கரை தந்த தவ மாண்பினர்களில் இவர் ஒருவர் ஆனார்!

இவ்வூரிலே, மதுரை ஆர். வி. பஞ்சாலையின் கிளை 1894 இல் நீராற்றலால் தொடங்கப் பெற்றது. இங்கே ஏறத்தாழ 7000

தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர். இந்த ஆலை 1952 முதல் மின்சாரத்தால் இயங்கி வருகின்றது! இங்கே, இரு போகம் விளையும் நன்செய் நிலங்கள் உண்டு.

அம்பாசமுத்திரம் :

இவ்வூர் முன்னாளில் இளங்கோக்குடி என்று வழங்கப் பெற்றது; பொருநை யாற்றின் வடகரையிலே உள்ளது; விக்கிரமசிங்க புரத்திற்குக் கிழக்கே எட்டு கி. மீ. தொலைவிலே அமைந்துள்ளது. 'பெருங்கடல்' போல நீரை உடைய குளத்தைச் 'சமுத்திரம்' என்றனர்! நாயக்க மன்னர் காலத்திலே, இங்கு வந்து குடியேறிய படைத்தலைவர்கள் பெயர்களால், பெருங் குளங்கள் பல அங்கங்கே அமைந்தன. அவற்றைச் சார்ந்த ஊர்களை அவரவர்கள் பெயரால் அழைத்தனர். இரவணன், வடமலை, அரங்கன், தளபதி, வாலன், கோபாலன், அம்பா என்பவர்களுடைய பெயரால், தென்பாண்டி நாட்டிலே அங்கங்கே ஊர்கள் அமைந்தன. அவை முறையே இரவணசமுத்திரம், வடமலை சமுத்திரம், அரங்க சமுத்திரம், தளபதி சமுத்திரம், வால சமுத்திரம், கோபால சமுத்திரம், அம்பா சமுத்திரம் என வழங்கப் பெற்று வருகின்றன. இவ்வூரில் உள்ள பழைய கல்வெட்டுகளில் 'அம்பா சமுத்திரம்' என்ற பெயர் காணப் பெற வில்லை! ஆனால், 'வேளாக் குறிச்சி', 'இளங்கோக் குடி' என்னும் பெயர்கள் காணப்படுகின்றன! சிற்றரசன் ஒருவன் இவ்வூரைத் தன் மகளுக்கு அன்பளிப்பாக 'முத்திரை' போட்டுப் பத்திரம் வழங்கினான்! ஆதலின், இவ்வூரை 'அம்பா முத்திரை' என்றனர்; பின்னாளில் இத் தொடர் மருவி 'அம்பா சமுத்திரம்' ஆயிற்று! இவ்வாறு, 'முத்திரை' இட்டு வழங்கப் பெற்ற ஊர்கள் அனைத்துமே, பிற்காலத்தில் 'சமுத்திரம்' பின் அடை பெற்றுவிட்டன என்பர்! அம்பையில் பல கோவில்கள் உள்ளன. அக் கோவில்கள் மக்கள் உள்ளத்திலே, 'எம் மதமும் சம்மதமே' என்ற கொள்கையை ஊட்டுகின்றன. பொதிய மலை அகத்தியர்க்கு இங்கே புகழ்வாய்ந்த கோவில் ஒன்று உண்டு! இவ்வூரில் மரத் தொழிலும் மர வாணிகமும் பெருகி உள்ளன. இவ்வூரிலிருந்து பல பெருவழிகள் பல ஊர்களுக்குச் செல்லு

கின்றன. திருநெல்வேலி—செங்கோட்டை இரயில் பாதை இவ்வூர் வழியே செல்கின்றது. பள்ளிகளும் கல்லூரியும் இவ்வூரில் உள்ளன. ஆற்றங்கரை ஆலயத்திலே பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்வூரின் கிழக்கே 'ஊர்க்காடு' என்னும் அழகிய சிற்றூர் உள்ளது.

தண்பொருநை ஆற்றின் தென்கரையிலே 'கல்லிடைக் குறிச்சி' என்னும் ஊரைக் காணலாம். இங்கே கல்வெட்டுகள் உள்ள பல கோவில்களைக் காணலாம். இங்கே, செல்வச் செழிப்பு வாய்ந்த மறையவர் தெருக்கள் பல உள்ளன! அம்பைக்கும் கல்லிடைக்கும் இடையே பொருநை ஆற்றிலே 'இரயில் பாலம்' ஒன்றும் 'பெருவழிப்பாலம்' ஒன்றும் உள்ளன. நெசவு வேலை செய்யும் முகமதியர்கள் இவ்வூரிலே வாழுகின்றனர். இவ்வூரிலிருந்து 'மணிமுத்தாறு அணை' செல்லலாம்; மலைமேல் உள்ள 'மாஞ்சோலை' பார்த்து மகிழ்வதற்கு உரியது!

அம்பையின் வடக்கே, பிரமதேசம், மன்னார்கோவில் ஆகிய இரண்டு பழைய ஊர்கள் உள்ளன. சோழர்கள் பாண்டிய நாட்டை ஆண்டபொழுது, இவ்வூர்கள் சிறந்து விளங்கின என்பர். இவ்வூர்க் கோவில்களில் சோழர்காலக் கலை வண்ண உருவச்சிலைகள் காணப்படுகின்றன. பிரமதேசத்தில் சிவன் கோவில் உள்ளது. மன்னார்கோவிலில் 'குலசேகர ஆழ்வார்' கோவில் உள்ளது. இக்கோவில் சுற்று மதில்களால் சூழப் பெற்றுள்ளது; குலசேகர பாண்டியனால், இக்கோவில் கட்டப் பெற்றது என்கின்றனர். இவ்வூரின் வடபக்கம் கருணை ஆறும், தென்பக்கம் பொருநை ஆறும் சூழ்ந்து செல்வது மிகவும் அழகாக உள்ளது! இங்கே, திருமாலியர்கள் வாழுகின்றனர். இப்பொழுது, 'அம்பா சமுத்திரம்', வட்ட ஆட்சித் தலைநகராக விளங்குகின்றது.

ருப்புடைமருதூர்: /

பொருநை யாற்றின் வலப்புறக் கரையிலே 'திருப்புடை மருதூர்' என்னும் அழகிய ஊர் அமைந்துள்ளது! இங்கே, பொருநையின் இடப்புறக் கரையில் கருணையாறு வந்து கலக்

கின்றது! பொருநைக் கரை புண்ணியத் துறைகளில் இதுவும் ஒன்று. பொருநை ஆற்றங்கரையிலே மருதமரங்கள் மிகுதியாக இருந்தன. அவை மருதநில வளத்திற்கு எடுத்துக்காட்டாக இலங்கின! இங்கே இருந்த ஒரு மருத மரத்திலே ஒரு புடை காணப்பெற்றது. அதன் உள்ளே ஒரு சிவலிங்கம் இருந்தது. இங்கே, இந்த ஊர் தோன்றியது. எனவே, இது 'திருப்புடை மருதூர்' என்று பெயர் பெற்றது! மருத மரத்தின் மணம் நாறும் பூக்கள் இலிங்கத்தின்மீது விழுந்து அழகு செய்தன. எனவே, மக்கள், நாறும் பூக் கொண்டருளிய நாதர்—'நாறும் பூ நாதர்' என்று இவ்வூர் இறைவனுக்குப் பெயர் சொல்லுவார் ஆயினர்! இங்கே உள்ள திருக்கோவிலைச் சுற்றி வலம் வருவது போலப் பொருநை யாறு மேற்புறமும் வடபுறமும் வளைந்து தவழ் கின்றது. இக் கோவில், சிற்பக் கலைக் களஞ்சியம் போலக் காட்சி தருகின்றது; கோபுரம் செம்மாந்த தோற்றம் கொண்டு இலங்குகின்றது. இங்கு உள்ள 'சிற்பக் கோபுரம்' விலைமதிக்க முடியாதது என்பர்! இங்கே, 'தைப்பூசத் திருநாள்' மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. அன்று கருணை யாறு தண்பொருநையில் கலக்குமிடத்திலே மக்கள் மூழ்கி, இறைவனை வழிபடுகின்றனர்!

நலமாகப் பிள்ளைப்பேறு நடைபெறுதற்கு இக் கோவிலின் 'கோமதி அம்மனை' வேண்டிக் கொள்கின்றனர்! பேய்பிடித்த பெண்களை இங்குக் கொண்டு வந்து பிணி நீங்கத் தொழுகின் றனர்! நோன்புக் கடனாக இங்கே குழந்தைச் சிலைகள் தொட்டில்கள் முதலியன செய்து வைக்கின்றனர். இவ்வூரின் தென்பால், 'அத்தாள நல்லூர்' அமைந்துள்ளது. திருப்புடை மருதூருக்கு எதிரே தண்பொருநை யாற்றின் வடகரையிலே பீடித்தொழில் சிறப்பு வாய்ந்த 'முக்கூடல்' என்னும் ஊர் இருக் கின்றது.

### சேரன்மாதேவி :

இவ்வூரின் பெயர் 'சேர்மாதேவி' என்றும் 'சேரன் மகா தேவி' என்றும் எளியோரால் வழங்கப் பெறுகின்றது! ஆனால், 'சேரன்மாதேவி' என்பதே முறையான பெயர் ஆகும். இதனால்,

இவ்வூரின் பழைய வரலாறு ஒலிக்கின்றது! சேரன் ஒருவனின் மாதேவி பெயரால் இவ்வூர் அமைந்துள்ளது. தென்பாண்டி நாட்டிலே உள்ள இந்த ஊரில், சேர மன்னர் மரபும் தழைத்திருந்தது என்று தெரிகின்றோம்! இப்பொழுது இவ்வூர் கோட்ட ஆட்சித் தலைநகராகத் திகழ்கின்றது. இவ்வூரில் பல கோவில்கள் உள்ளன. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் ஆகியோரின் கல்வெட்டுகளை இங்கே காணலாம்! 'சேரமான் பெருமாள்' என்னும் மன்னவன் இவ்வூரை ஆண்டதாகக் கூறுவர்! இவ்வூரின் அருகிலே புதைபொருள் ஆய்வு நடைபெற்றது என்றும், வேலைப்பாடு மிகுந்த கல் ஆயுதங்கள் கிடைத்தன என்றும் அவற்றைச் செர்மன் நாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் கூறுகின்றனர்.

இவ்வூரின் பொருநை ஆற்றங்கரையிலே திருக்கோவில் திகழ்கின்றது. அதனைப் 'பக்தவச்சலர் கோவில்' என்பர்! 'பக்த பிரியர் கோவில்', 'கிருட்டினன் கோவில்' என்றும் சொல்லுகின்றனர்! இக் கோவில் கோபுரம் நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இங்கே பொருநை ஆற்றிலே தைமாத முழுநிலா நாளிலே மக்கள் பெருந்திரளாக வந்து நீராடுகின்றனர். பொருநையின் புண்ணிய நீராடு துறைகளிலே இதுவும் ஒன்று. இங்கே வேளாண்மை செழித்து விளங்குகின்றது. கன்னடியன் கால்வாய் இவ்வூரின் நடுவே கிழக்கு நோக்கி இயங்குகின்றது. இவ்வூரின் கிழக்கே இக் கால்வாயால் பயன் பெறும் பத்தமடை, கீழச்செவல், கோபால சமுத்திரம் முதலிய வளமிகுந்த ஊர்கள் உள்ளன. இங்கிருந்து மேற்கே அம்பாசமுத்திரம் செல்லலாம்; தெற்கே நாகர்கோவில் செல்லலாம்; வடகிழக்கே, இம் மாவட்டத்தின் தலைநகர் ஆகிய 'திருநெல்வேலி' உள்ளது. சேரன்மாதேவி பல பேருந்து வழிகளையும், இரயில் வழியையும் பெற்றுள்ளது.

(ii) திருநெல்வேலி வட்டம்:

பொருநை நாட்டின் நடு இடமாக, 'திருநெல்வேலி மாநகர்' திகழ்கின்றது. இதுவே, இம் மாவட்டத்தின் தலைநகர் ஆகத் திகழ்கின்றது; இவ் வட்டத்தின் கோநகர் ஆக விளங்குகின்றது.

மக்கள் பெருக்கம் மிகுந்து மிளிர்கின்றது! இவ் வட்டம், பல வகைச் சிறப்புகளைப் பெற்றுள்ளது; நீர் வளமும், நில வளமும் வாய்க்கப் பெற்றுள்ளது. அரியநாயகபுரம் அணைக்கட்டிலிருந்து வரும் கோடகன் கால்வாய், 'பழவூர்' அணையிலிருந்து வரும் பாளையங் கால்வாய், 'சுத்தமல்லி' அணையிலிருந்து வரும் திருநெல்வேலிக் கால்வாய்—ஆகிய இம் மூன்று வாய்க்கால்களும் இங்கே வளம் பெருக்கி மக்களை வாழவைக்கின்றன! திருநெல்வேலி. மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய மூன்று நகராட்சிப் பேரூர்கள் பொருநையின் இருகரைகளிலும் மிக நெருக்கமாக அமைந்துள்ளன. இப்பொழுது, 'சங்கர் நகர்' என்னும் பெயரிலே புதிய சிமெண்டுத் தொழில் நகர் தோன்றியுள்ளது! இங்கே குறுக்குத்துறை, சி. ந. சிற்றூர், மீனாட்சி புரம், சிந்துபூந்துறை, தச்ச நல்லூர், வண்ணார்பேட்டை முதலிய சிற்றூர்கள் பல செறிந்துள்ளன. ஆதலின், 'திருநெல்வேலி' 'மாநகர் அமைப்'பிற்கு உரிய மாண்புகள் பலவும் பெற்றுள்ளது எனலாம். நெல் வயல்கள் வேலி போன்று அமைந்துள்ள இயற்கைத் திருநகரை, முன்னோர்கள் 'திருநெல்வேலி' என்ற காரணப் பெயரால் அழைத்தனர். அன்னவர்களின் மதிநுட்பத்தை என் என்பது!

### திருநெல்வேலித் திருநகர் :

மேற்கே பொதிகை மலைக்கும், கிழக்கே மன்னார்குடாக் கடலுக்கும் இடையே—நடு நாயகமாக—அமைந்துள்ளது! நெல்லையிலிருந்து மேல் கீழ்ஆக உள்ள இரண்டு எல்லைகளும் ஒவ்வொன்றும் 60·8 கி. மீ. தொலைவிலேயே உள்ளது! வடக்கே மதுரையிலிருந்து தெற்கே நாகர்கோவில் - கன்னியா குமரிக்குச் செல்லும் நெடுஞ்சாலை இந் நகர் வழியே செல்கின்றது! பொருநை நாட்டின் நடு இடத்திலே இந்நகர் அமைந்திருக்கும் பொலிவு, சிந்திப்பவர்களுக்குப் பேரின்பம் தருவதாகும்! பெருவழிகளின் சந்திப்பும், இரயில் வழிகளின் சந்திப்பும், இம் மாநகர்க்கு வாய்த்த பேறுகள் ஆகும். திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும் இடையே பொருநை யாற்றிலே செல்வர் திரு. சுலோச்சன முதலியார் கி. பி. 1844-இல் கட்டியுள்ள பாலம், இப்பொழுது, அரசினரால் விரிவு செய்யப் பெற்று, 'போக்குவரத்துத் துறை'க்

குப் பேராக்கம் விளைவிக்கின்றது. இப் பாலத்தின் வழியாகவே, திருநெல்வேலியின் சுற்றுவட்டச் சிற்றூர்களுக்கும் பேரூர் களுக்கும் நகரப் பேருந்துகள் சென்று வருகின்றன!

இந் நகரிலே பல இனத்தவர்கள் - மதத்தவர்கள் வாழ் கின்றனர்! ஆயினும், சைவ வேளாளர்கள் - சிவநெறி யாளர்கள் - சிறப்பாக வாழ்ந்த சீரிடம் எனலாம்! இப் பொருநை நாட்டில் உள்ள பல ஊர்கள் சேர, சோழ, பாண்டியர் காலங் களில் சிறப்புப் பெற்றுள்ளன. இம் மாநகர் அவர்களால் பல திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளது. ஆயினும், இந் நகருக்கு, நாயக்க மன்னர்கள் காலத்திலே நலன்கள் பல குவிந்தன என லாம். இவ் வூருக்குப் பழம் பெருமையையும், புகழையும் சிறப் பையும் தரும் அமைப்பு, 'காந்திமதி—நெல்லையப்பர் திருக்கோவில்' ஆகும். நின்றசீர் நெடுமாறன் (கி. பி. 8 ஆம் நூற்றாண்டு) என்ற பாண்டியன் காலம் முதலே, இத் திருக்கோவில் புகழ் பெற்றுத் திகழ்கின்றது! பாடல் பெற்ற பழங்கோவில் என்று பாராட்டப் பெறுகின்றது. இக் கோவிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள், கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வீரபாண்டியன் பொறித்த கல்வெட்டே பழைமையானது ஆகும்!

பல இலக்கிய நூல்கள் இத் திருக் கோவிலின் புகழைப் பாராட்டியுள்ளன. பெரியார் நெல்லையப்ப பிள்ளை என்பவர், 6891 செய்யுட்களால் 'திருநெல்வேலித் தல புராணம்' பாடி யுள்ளார்! அழகிய சொக்க நாதப் புலவர், 'காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்' பாடியுள்ளார்! பேராசிரியர் சுந்தரனார், தம் 'மனோன்மணீயம்' என்னும் நாடகத்திலே இத் தலத்தினைப் போற்றியுள்ளார்! திருஞானசம்பந்தர் தேவாரம், திருத் தொண்டர் புராணம், திருவிளையாடல் புராணம் முதலியன இந் நகரின் பெருமையைப் புலப்படுத்துகின்றன. 'தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே!' என்று திருவாசகம் போற்றுவது, இத் 'திருநெல்வேலி உறை செல்வர்' ஆகிய நெல்லையப்பரையே குறிப்பிடுகின்றது எனலாம்! இத் திருநெல் வேலி நகரின் நடுவே அமைந்துள்ள திருக்கோவிலின் சிற் பங்கள், மண்டபங்கள், இறை உருவங்கள் நேரில் கண்டு மகிழ் வதற்கு உரியன. இந்த நெல்லையப்பர் கோவிலை நேரில் வந்து

காண்பவர், 'இது சிற்பக் கலைக் களஞ்சியமே' என்று சிறப்பித்துப் பாராட்டுகின்றனர்.

திருநெல்வேலி நகருக்குத் தெற்கே பொருநை யாற்றில் மக்கள் காலையில் சென்று நீராடும் புகழ்வாய்ந்த துறை ஒன்று உண்டு! இதனை, 'குறுக்குத்துறை' என்பர்! இங்கே உள்ள முருகன் கோவில் ஆற்றின் நடுவே அமைந்துள்ளது! 'திருச்செந்தூர்' முருகன் திருவுருவம் இங்குள்ள கல்லாலேயே செய்யப்பட்டுள்ளது என்பர்! திருநெல்வேலியின் நேர் கிழக்கே பொருநை யாற்றின் கரையிலே புகழ் வாய்ந்த துறை ஒன்று உண்டு. அதன் பெயரே 'சிந்து பூந்துறை' என்பது! 'மரங்களில் இருந்து தேன்திவலை சிந்தும் பூக்களை உடைய துறை' என்ற பொருளிலே,

> "கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை
> சிந்து பூந்துறை"

என்று சம்பந்தர் தேவாரத் தொடர் சாற்றுகின்றது! (மது = தேன்; திவலை = துளி) இங்கே, மந்திகள் ஒரு கிளையிலிருந்து மறுகிளைக்குப் பாய்ந்து விளையாடும்; ஆதலின், தேன் துளிகளைச் சிந்தும் பூக்கள் உதிரும் துறையாக இந்த இடம் தோன்றியது போலும்! 'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி' என்று 1300 ஆண்டுகளுக்கு முன்னரே இத் திருநகர், ஞானசம்பந்தர் தேவாரப் பதிகத்தால் பாராட்டப் பெற்றுள்ளது! இவை, பொருநைக்கரைப் புண்ணியத் துறைகளே ஆகும்.

சங்க இலக்கியங்களில் ஒன்று 'பத்துப் பாட்டு'! அவற்றுள் 'மதுரைக் காஞ்சி' என்ற நூலிலே, 'நெல்லின் ஊர்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது, இப் பேரூரே ஆகும். இதனால், இப் பொருநைக்கரைப்பேரூரின் பழைமையைப்புரிந்துகொள்ளலாம்! இம் மாநகரின் வளமையும் செழுமையும் அன்றும் இன்றும் என்றும் ஒன்றுபோல் நின்று விளங்குவதைக் காணலாம்! இம் மாநகர், தென் பாண்டி நாட்டின் தலைநகராக நீண்ட நெடுங் காலம் திகழ்ந்தது! இன்று, ஒரு மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்கின்றது; ஒரு வட்டத்தின் கோநகராகக் கொலுவீற்றிருக்கின்றது!

செப்பறை :

திருநெல்வேலிக்குக் கிழக்கே பொருநைக் கரையில் 'செப் பறை' என்னும் திருக் கோவில் விளங்குகின்றது! (செம்பு+ அறை=செப்பு+அறை=செப்பறை) செம்பினால் ஆகிய அறை என்னும் பொருளை உடையது! 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்' என்பது கம்பர் வாக்கு! இத் திருக்கோவிலில் உள்ள இறைவன், அழகிய கூத்தர் வடிவம்—நடராசர் கோலம் கொண்டு திகழ்வதைக் காணலாம்! இக் கோவில் பக்கத்திலே மக்கள் குடியிருக்கவில்லை. இதன் அருகே 'இராசவல்லி புரம்' என்னும் சிற்றூர் உள்ளது! 'இராசவல்லி' என்பது ஓர் அரசனுடைய மனைவியின் பெயர்! 'செப்பறை'யின் தென்பால் பொருநை யாறு செல்கின்றது. பொருநை ஆற்றின் மறு கரையிலே 'மணப்படை வீடு' என்னும் சிற்றூர் காணப் பெறுகின்றது! அவ் வூர் பழைய நாளில் பாண்டி வேந்தர் படைகள் தங்கியிருந்த இடமாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது! இங்கே, இடிந்த மதில்களும் தூர்ந்த அகழிகளும் காணப்படுகின்றன. அரசன் அரண்மனையைக் குறிக்கும் 'கொட்டாரம்' என்னும் பெயரில் இங்கே வேறொரு சிற்றூர் இருக்கின்றது! இவற்றால், பொருநைக் கரையில் உள்ள 'செப்பறை' ஒருகாலத்தில் பேரூராக விளங்கியிருக்கலாம் என்று தெரிகின்றது!

சீவலப் பேரி :

குற்றாலத்திலே தோன்றும் 'சிற்றாறு', கயத்தாறு என்னும் உப்போடையோடு இணைந்து, பொருநை ஆற்றிலே வந்து பொருந்துகின்றது! இந்த இடம் 'முக்கூடல்' எனப்படுகின்றது! இச் சீரூர் திருநெல்வேலிக்குக் கிழக்கே 17 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதனைச் 'சீவலப் பேரி—முக்கூடல்' என்று சாற்று கின்றனர். இங்கு பொருநை ஆறு, அகண்ட காவிரி போன்று தோன்றுகின்றது! கி.பி. 12ஆம் நூற்றாண்டில் விளங்கிய சீவலமாற பாண்டியன், இங்கே ஒரு பேர் ஏரி (பெருங்குளம்) வெட்டுவித்தான். 'பேரேரி' என்ற சொல் 'பேரி' என்று மருவி விட்டது! இதன் பரப்பு 1800 ஏக்கர் இருந்ததாம். 'சீவலன்'

(சீவல்லபன்) என்ற அவன் பெயரால், 'சீவலப் பேரேரி'—'சீவலப் பேரி' என்று இவ்வூர் வழங்கப் பெறுகின்றது!

இவ்வூரில் 'முக்கூடல் அழகர் கோவில்' உள்ளது. இங்கே, சேரர், சோழர், பாண்டியர் ஆகிய தமிழ் மூவேந்தர்களின் கல் வெட்டுகள் உள்ளன. இவ்வூரை அடிப்படையாகக் கொண்டே 'முக்கூடற் பள்ளு' என்னும் 'வஞ்சி நாடக இலக்கியம்' எழுந் துள்ளது. அதனை ஆக்கியவர், 'என்நயினுப் புலவர்' என்பர்! அவர் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும். இவ்வூர், திரு மாலியர்களுக்கு ஒரு சிறந்த தலமாக விளங்குகின்றது. இவ் வூரில் பல கோவில்கள் உள்ளன. வரலாற்றுப் புகழ் பெற்ற 'பூலுத் தேவர்' மரபினர்க்கு உரிய 'பூலுடையார் கோவில்' இவ் வூரில் உள்ளது. மதுரை நாயக்க மன்னரின் ஆளுநராகத் திருநெல்வேலியிலே விளங்கிய வடமலையப்ப பிள்ளையின் பெயரால் இங்கே ஒரு வாய்க்கால் உண்டு. அதன் பெயர் 'பிள்ளையன் கால்' என்பதே. தளவாய் அரிய நாத முதலியார் இவ்வூரிலே ஒரு சத்திரம் அமைத்துள்ளார்! நாட்டுக் கவிஞர் திரு சி. சுப்பிர மணிய பாரதியார் அவர்களின் முன்னோர் இவ்வூரிலே வாழ்ந்தனர்! அவர் பாட்டனார், 'சத்திரம்—சுப்பையர்' என்ற பெயரிலே இவ்வூரில் வாழ்ந்தார்! அந்தச் சுப்பையர் மகனே சின்னசாமி ஐயர்—பாரதியாரின் தந்தையார்—வேலை கருதி எட் டையபுரம் சென்றார்! இவ்வூர் மாட்டுச் சந்தைக்குப் பெயர் பெற்றது.

## கிருட்டிணபுரம்:

மதுரை நாயக்க மன்னர்களில், 'குமார கிருட்டினப்ப நாயக்கன்' புகழ் பெற்று விளங்கினான். அவன் சிறந்த கட்டிடக்கலை வேட்கை உடையவனாக விளங்கினான். திருநெல்வேலிக்குக் கிழக்கே 12 கி.மீ. தூரத்தில் திருச்செந்தூர் செல்லும் சாலையில் ஓர் ஊர் அமைத்தான். அவன் பெயராலேயே அவ்வூர் 'கிருட்டிணபுரம்' என்று வழங்கப் பெறுகின்றது. இங்கே 'திரு வேங்கட நாதன் கோவில்' ஒன்று திகழ்கின்றது. இஃது ஒரு சிற்பக் கலை கற்பணி நிறைந்த திருக்கோவிலாகவே திகழ்கின்றது. இக் கோவிலைத் திருநெல்வேலி வரும் பயணிகள் வந்து பார்த்து

மகிழ்கின்றனர்! இத் திருக்கோவில், நாயக்க மன்னர் ஆட்சியிலே கட்டி முடிக்கப் பெற்றுள்ளது!

ஆதித்த நல்லூர் :

பொருநைக் கரை ஊர்களில் 'ஆதித்த நல்லூர்' மிகவும் பழைமை வாய்ந்தது ஆகும். இதனை, 'ஆதிச்ச நல்லூர்' என்றும் சொல்லுவர். இவ்வூர், திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பெருவழியிலே, தண்பொருநை யாற்றின் தென் கரையிலே அமைந்துள்ளது. இதன் மேற்கே உள்ள மண்மேட்டில் புதைபொருள் ஆராய்ச்சி நடை பெற்றுள்ளது! இங்கே பழங்காலப் பாழிகளும் தாழிகளும் கிடைத்தன! பலவகைப் பழம் பொருள்கள் கிடைத்தன. அவை, பொருட்காட்சிகளில் இடம் பெற்றுள்ளன.

உலகிலே ஆற்றங்கரைகளே நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இந்த உண்மையைப், பழைய நாடுகளின் ஆற்றங்கரைகளிலே அகழ்ந்து எடுத்துக் கண்டுள்ள புதை பொருள்கள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த முறையிலே, தென் தமிழ்நாட்டு மக்களின் நாகரிக வளர்ச்சி, பண்பாட்டு முதிர்ச்சியினை, தண்பொருநை ஆற்றின் கரைகளில் உள்ள பல ஊர்களின் அகழ் பொருள்கள் அறிவிக்கின்றன; அவ்வூர்களில், சேரன்மாதேவி, பாளையங்கோட்டை, முரப்ப நாடு, வல்ல நாடு, சீவைகுண்டம், கொற்கை முதலியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடுவர்! இவற்றுள், தண்பொருநை யாற்றின் தென்பால் உள்ள 'ஆதிச்ச நல்லூர்' மண்மேடு, வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மக்கள் வாழ்வுப் பொருள்கள் பலவற்றைப் புதை பொருள்களாகத் தந்துள்ளது! ஆதிச்ச நல்லூரில் புதை பொருள் ஆராய்ச்சிகள் பல நடைபெற்றுள்ளன. அவற்றால் கண்டுகொள்ளப் பெற்றுள்ள 'பழந்தமிழர் பண்பாடு', உலகிற்கே முதன்மை பெற்று விளங்கியது என்பதை அறிஞர்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றனர். இப் பழைய ஆதித்த நல்லூரின் அண்மையில்—ஆற்றின் வடகரையில்—சீவைகுண்டம் என்னும் திருநகர் அமைந்துள்ளது.

### iii. சீவைகுண்டம் வட்டம்:

கிழக்குக் கடற்கரை ஓரம் 'சீவைகுண்டம் வட்டம்' அமைந்துள்ளது. பொருநைப் பாசனத்தால் இந்த வட்டம் மிகவும் செழிப்பு உறுகின்றது. இவ் வட்டத்திலேயே தண்பொருநை ஆற்றின் குறுக்கே ஏழாவது அணை ஆகிய 'மருதூர் அணை'யும், கடைசி எட்டாவது அணை ஆகிய 'சீவைகுண்டம் அணை'யும் அமைந்துள்ளன. இதனால், 'மருதூர் அணை'க்கட்டிலிருந்து 'மேலக்கால்', 'கீழக்கால்' ஆகிய இரு கால்வாய்களும், 'சீவைகுண்டம் அணை'க்கட்டிலிருந்து தெற்குக் கால்வாய், வடக்குக் கால்வாய் ஆகிய இரண்டு முதன்மை வாய்ந்த வாய்க்கால்களும் நீர்ப் பாசனம் வழங்கி வருகின்றன. இப்பொழுது, பொதிகை மலையிலே கட்டப்பெற்றுள்ள 'பாபநாசம்' 'மணிமுத்தாறு' நீர்த் தேக்க அணைகளின் பெரும்பயனை, இவ் வட்டமும் அடைந்து வருகின்றது!

#### சீவைகுண்டம்:

இந்த ஊரிலே, சிவன் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியை, 'கயிலாசபுரம்' என்பர்! திருமால் கோவில் கொண்டுள்ள பகுதியை 'வைகுந்தப் பதி' என்பர்! ஆக, கயிலாசபுரம், வைகுண்டபதி என்னும் இரு ஊர்களைச் சேர்த்து 'சீவைகுண்டம்' என்று சொல்லுகின்றனர். ஆதலின், வைகுந்தமும் கயிலாசமும் சேர்ந்திருக்கும் சிறப்பு இங்கே அமைந்துள்ளது! எனவே, இவ்வூர் திருமாலியர்களுக்கும் இன்றியமையாதது; சிவநெறியாளர்களுக்கும் முக்கியமானது. இவ்வூர், தண்பொருநை யாற்றின் வடகரையிலே அமைந்துள்ளது. 'திருவைகுந்தம்' அல்லது 'சீவைகுந்தம்' என்றும் இவ்வூர் வழங்கப்பெறும்.

இவ்வூரின் கயிலாச புரத்திலே, 'குமரகுருபரர்' தோன்றினார். குமரகுருபர அடிகளால் தோற்றுவிக்கப் பெற்ற மடம், இன்றும் திருப்பனந்தாளிலும், காசியிலும் நடைபெற்று வருகின்றன! இவ்வூரில் குமரகுருபரர் பெயரால் பல அற நிறுவனங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள், குமரகுருபரர் உயர் பள்ளி, கல்லூரி, சங்கம், அச்சகம், காசிமட வெளியீடு, 'குமர

குருபரன்' என்னும் இலக்கியத் திங்கள் இதழ் ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்!

திருமாலியர்கள் வழிபடும் 'ஒன்பான் திருப்பதிகள்' இந்தப் பொருநைக் கரை வட்டாரத்திலேயே அமைந்துள்ளன. அவை (i) சீவைகுண்டம், (ii) ஆழ்வார் திருநகரி, (iii) திருக்கோளூர், (iv) தென் திருப்பேரை, (v) நத்தம் (வரகுண மங்கை), (vi) திருப்புளிங்குடி, (vii) பெருங்குளம், (viii) தொலை வில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) (ix) அப்பன் கோவில் என்பன. இவை போன்றே, சிவநெறியர்கள் வழிபடும் 'ஒன்பான் கயிலாயங் கள்' இத் தண்பொருநை ஆற்றங்கரைகளிலே உண்டு! இச் சீவைகுந்தம், ஒன்பான் திருப்பதிகளிலும் ஒன்று; ஒன்பான் கயி லாயங்களிலும் ஒன்று. ஆதலின், இஃது 'அரியும் சிவனும் ஒன்று' என்னும் பெருநோக்குப் பெற்றுள்ள பேரூராக விளங்கு கின்றது!

**ஆழ்வார் திருநகரி:**

பொருநை யாற்றின் தென்கரையில் சீவைகுந்தப் பேரூரின் கிழக்கே 5 கி. மீ. தொலைவில், 'ஆழ்வார் திருநகரி' என்னும் புகழ் வாய்ந்த ஊர் உள்ளது! இப் பேரூர், வைணவர்கள் ஆகிய திருமாலியர்களுக்கு மிகவும் இன்றியமையாதது என்பர்! திரு மாலியர்கள் உளங்குளிர்ந்து உரைக்கும் 'நவதிருப்பதிகள்' என்னும் ஒன்பது பதிகளும் இவ்வூரைச் சுற்றியே அமைந் துள்ளன. இவ்வூரிலேயே, 'நம்மாழ்வார்' பிறந்தார்! அவர் பிறப் பதற்கு முன்னர் இவ்வூர் 'திருக்குருகூர்' என்று வழங்கப் பெற்றது. இப்பொழுது 'நம் ஆழ்வார்' பெயராலேயே, 'ஆழ்வார் திருநகரி' என்று அழைக்கப் பெறுகின்றது! இவ்வூரிலே, 'திருவாய்மொழி' என்னும் தெய்வப் பனுவலின் உரையாசிரியர், 'பெரிய வாச்சான் பிள்ளை' தோன்றினர்; இராமானுசக் கவி ராயர் என்னும் புலவர் தோன்றினர்.

'ஆழ்வார்' என்ற சொல்லுக்கு, 'ஆண்டவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர்' என்று பொருள்! எல்லோரும் 'நம்—ஆழ்வார்' என்று போற்றும் ஆழ்வார்,

கி.பி. எட்டு ஒன்பதாம் நூற்றுண்டுகளிலே இவ்வூரிலே தோன்றினுர்! நம்மாழ்வார் பிறந்த திருப்பதி ஆகிய 'அப்பன் கோவில்' இவ்வூரின் ஒரு பகுதியே ஆகும்! நம்மாழ்வார் பிறந்து பதினுறு ஆண்டுகள் இவ்வூர்ப் புளியமரத்து அடியிலே உண்ணுது—உறங்காது—ஆடாது அசையாது—நோன்பு நோற்று 'மெய்யறிவு' பெற்றுர் என்பர்! ஆதலின் இந்தப் புளியமரத்தை 'உறங்காப் புளி' என்றும் 'திருப்புளி ஆழ்வார்' என்றும் சொல்லுவர்! போதி மரத்து அடியில் புத்தர் மெய்யுணர்வு பெற்றுர்! அசோக மரத்து அடியில் அருகர் மெய்ப்பொருள் கண்டார்!! அவர்களைப் போன்றே புளியமரத்து அடியிலே நம்மாழ்வார் பொய்மையற்ற மெய்யறிவு பெற்றுர் போலும்! இங்கே, நம்மாழ்வார்க்கு ஒரு தனிக் கோவில் உள்ளது. திருவரங்கம் 'பூலோக வைகுந்தம்' என்று சொல்லப் பெறுவது போல, இந்த 'ஆழ்வார் திருநகரி', 'பரம பதத்து எல்லை' என்று பாராட்டப் பெறுகின்றது!

"இதுவோ திருநகரி? ஈதோ பொருநை?
இதுவோ 'பரமபதத்து எல்லை'?—இதுவோ தான்
வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்?"

இவ்வாறு, 'உடையவர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற 'இராமானுசர்' என்னும் திருமாலியப் பெரியார் பாடியுள்ளார். நம்மாழ்வாருக்குச் 'சடகோபன்', 'மாறன்', என்னும் வேறு பெயர்களும் உண்டு. நம்மாழ்வார் மீது, 'சடகோபர் அந்தாதி' என்னும் ஒரு நூல், கம்பர் இயற்றியதாகக் கருதப் பெறுகின்றது!

ஆழ்வார் திருநகரியின் பக்கத்திலே, 'ஒன்பான் திருப்பதி' களில் ஒன்ருகிய 'திருக்கோளூர்' என்னும் ஒரு சிற்றூர் உள்ளது. அங்கே ஓர் அருட் செல்வர், மறையவர் குலத்திலே தோன்றினுர்! அவர் செஞ்சொற் கவிதை வல்லவராக விளங்கினுர்; 'மதுரகவி' என்னும் பெயர் பெற்றிருந்தார்! அவரே, நம்மாழ்வாரின் தூய மாணவர் ஆனுர்! 'மதுரகவி ஆழ்வார்' ஆனுர்! நம்மாழ்வார் திருப்பாசுரங்களை நானிலம் அறியப் பாடி மகிழ்ந்தார். அவர் நம்மாழ்வாரைப் பாராட்டிப் பாடியுள்ளார். இஃதோ, அவர் திருவாக்கு:

*"தேவு மற்றறியேன் குருகூர் நம்பி,*
*பாவின் இன்னிசை பாடித்திரிவனே!"**

**கொற்கை:**

இப்பொழுது, 'கொற்கை' (கொல்+கை) நீர்வளம் மிகுந்த சிற்றூர் ஆகக் காட்சி தருகின்றது; இங்கே நெல், வாழை, வெற்றிலை ஆகிய நன்செய்ப் பயிர் வளம் நிலவுகின்றது! முன்னொரு காலத்தில் இவ்வூர் மாபெரும் துறைமுக நகராக விளங்கியிருந்தது; பாண்டி வேந்தரின் கோநகராகக் கொலுவீற்றிருந்தது; முத்துக் குளிக்கும் முதல் இடமாக விளங்கியிருந்தது; உலக நாடுகளுடன் கடல் வாணிகம் புரிந்த பெருந் துறைமுகப் பட்டினமாக விளங்கியிருந்தது. இவற்றை இலக்கிய ஏடுகள் எடுத்து விளக்குகின்றன; அயல் நாட்டுப் பயணிகளின் அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. இங்கே நடைபெற்றுள்ள தொல்பொருள் அகழ்வுத்துறை ஆராய்ச்சிகள் இவ்வூரின் பழம்பெருமையைத் துலக்குகின்றன.

இவ்வூரின் பக்கத்திலேயே, முன்னொரு காலத்தில் தண் பொருநை ஆறு கடலோடு கலந்துகொண்டிருந்தது. இப்பொழுது அத் தண்பொருநை யாறு, இவ்வூரின் பக்கத்திலேயுள்ள 'புன்னைக் காயல்' என்னுமிடத்திலே மன்னார் வளைகுடாக் கடலிலே சென்று மண்டுகின்றது! இதன் பக்கத்திலே 'பழைய காயல்' புதிய பொலிவோடு விளங்குகின்றது! இங்கிருந்து ஒரு கி. மீ. தொலைவில் பொருநை யாறு கடலுடன் கலக்கின்றது! வெளியூர் மக்கள் இச் சங்கமுகத்துறையிலே நீராடுவதற்கு அமாவாசை நாள் பார்த்து வருகின்றனர்! கொற்கைக்கும் கடலுக்கும் இடையே உள்ள கழிக்கானலில், 'பழங்காயல்' ஆகிய சிற்றூர் அமைந்துள்ளது. 13 ஆம் நூற்றாண்டில் தென் தமிழ் நாட்டிற்கு வந்த 'மார்க்கபோலோ' என்னும் இத்தாலிய அறிஞர் குறிப்பிலே 'காயல் நகர்' இடம் பெற்றுள்ளது! 16 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிற்கு வந்து வாணிகம் செய்த 'போர்த்துக்கீசியர்' காயலைக் கைவிட்டு, 'தூத்துக்குடி'யையே துறைமுகமாகத்

---

*நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - 938. (மதுரகவி யாழ்வார்) கண்ணி நுண் சிறுத்தாம்பு - 2.

திருத்தி அமைத்துக் கொண்டனர். பண்டைய கொற்கைக் கோ நகரின் பெருஞ் சிறப்புக்களை, இன்றைய 'தூத்துக்குடித் துறை முகம்' பெற்று இலங்குவதைக் கண்டு பூரிப்புக் கொள்ளலாம்!

சங்க இலக்கியங்கள் 'கொற்கைத் துறைமுக'*த்தைச் சிறப் பித்துக் கூறுகின்றன. கி. பி. 2 ஆம் நூற்றுண்டில் தமிழகம் வந்த 'கிரேக்க' வணிகர்கள், இந்நாளில் வழங்கப் பெறும் 'மன்னர் வளைகுடாக் கடலை', 'கொற்கை வளைகுடா' என்றே குறித் துள்ளனர்! கி.பி. 12 ஆம் நூற்றுண்டிற்குப் பின்னர் 'கொற்கை' தன் சிறப்பினை இழந்தது போலும்! இவ்வூருக்கு வடக்கே தூத்துக்குடி முதல், தெற்கே மணப்பாடு வரை இந் நாட்களில் முத்துக் குளிக்கப் பெறுகின்றது! ஆனல், பழங்காலத்தில், 'முத்து வாணிகம்' கொற்கை நகரிலேயே சிறப்புப் பெற்று விளங்கி யது என்பர்! "கொற்கையில் ஒரு பாண்டியர் மரபும், மதுரையில் வேறு ஒரு பாண்டியர் மரபும் இருந்ததாகத் தெரிகின்றது. கொற்கையிலே ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இருந்தன! இஃது, உலகில் முதல் நாகரிக மக்கள் வாழ்ந்த இடங்களில் ஒன்று! இங்கிருந்து 2 கி. மீ. தூரத்திலேயே பொருநையாறு கடலில் கலந்தது!" இவ்வாறு 'மார்க்க போலோ' தன் குறிப்பிலே எழுதியுள்ளார்.

### iv. திருச்செந்தூர் வட்டம்:

திருநெல்வேலி மாவட்டத்தின் கிழக்கே கடலோரத்தில் அமைந்த வட்டங்களில் 'திருசெந்தூர் வட்ட'மும் ஒன்று ஆகும். கி. பி. 1911 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி நலன் கருதி மாவட்டம், வட்டம் ஆகிய பிரிவுகளை மாற்றி அமைத்தனர்! அப்பொழுது, இராமநாதபுரம் மாவட்டம் ஏற்பட்டது! 'தென் கரை வட்டம்' என்ற பெயரில் இருந்த வட்டாரம், சீவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய வட்டங்களாக மாற்றி அமைக்கப் பெற் றது! இத் திருச்செந்தூர் வட்டத்தில் மலைகள் இல்லை! 'தேரி' என்ற செம்மண் குவியல்கள் பல இடங்களில் உள்ளன.

* " ... ... விறல்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தம் ... ... (அகம். 201)

பொருநை நாட்டின் பெருமிதம் வாய்ந்த தண்பொருநை யாறு, இவ் வட்டத்தின் வடகோடியில் உள்ள, 'புன்னைக் காயல்' என்னும் இடத்தின் அருகிலேயே கடலில் கலக்கின்றது. இவ் வட்டத்தின் தலைநகர் திருச்செந்தூர்! இஃது, உலகின் புண்ணிய துறைகளில் சிறந்த ஒன்று என்று போற்றப் பெறுகின்றது.

இந்த வட்டத்தில், ஆழ்வார் திருநகரி, நாசரேத்து, சாத்தான் குளம், உடன்குடி, ஆறுமுகனேரி, காயல் பட்டினம், குல சேகரப் பட்டினம், புத்தன் தருவை, தாமரை மொழி முதலிய ஊர்கள் குறிப்பிடத்தக்கன என்பர்! தமிழ் நாட்டின் தலை சிறந்த ஊர்களில், 'திருச்செந்தூர்' குறிப்பிடத் தகுந்தது! இவ் வூரின் கடற்கரை அமைவும், செந்திலாண்டவன் கோவில் அமைப்பும் நெஞ்சையள்ளும் தன்மை வாய்ந்தன ஆகும்!

**திருச்செந்தூர் :**

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகிய, 'திருச்செந்தூர்' என்னும் தெய்வப் பேரூர் இங்குத் திகழ் கின்றது! இதனை, 'திருச்சீரலைவாய்' என்று நக்கீரர் அருளிய 'திருமுருகாற்றுப் படை' நவில்கின்றது. இந் நகரின் அருமை, 'புறநானூறு' போன்ற சங்க இலக்கியங்களிலே சாற்றப் பெற்றுள்ளது! முருகன் கோவில் கொண்டுள்ள திருத்தலங்கள் பல இருப்பினும், இச் செந்தூரில் முருகனை வழிபடுவதே சாலச் சிறந்த மிகு பயன் தரும் என்று தமிழ் மக்கள் நம்பி வருகின் றனர்! இவ்வூரை, 'செந்தில்' என்றும், 'செந்தூர்' என்றும், 'அலைவாய்' என்றும் மக்கள் வழங்கினர். இன்று 'திரு' என்னும் அடை சேர்த்து, மக்கள், 'திருச்செந்தூர்' என்றே சொல்லுகின்றனர். இவ்வூரின் முருக வுருவை, மக்கள் உள்ளம் உருகி வழிபடுகின்றனர்; இப் பொருநை நாட்டுப் பெருமக்கள் செந்தில் வேலன் அருள் நினைந்து, 'கண்கண்ட கடவுள்' என்று போற்றி வருகின்றனர்! நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுரு பரர், பகழிக் கூத்தர் முதலிய பாவலர் பலர், 'செந்தில் முதல் வன்' சீர் அருள் சிந்தித்துப் பாக்கள் ஆக்கியுள்ளனர். இங்கே முருகன் கோவில் அமைந்துள்ள முறை, வியந்து வணங்கும் சிறப்பு வாய்ந்து விளங்குகின்றது. திருநெல்வேலி மாவட்டத்

திலே, இது போன்ற மிகு வருவாய் உடைய திருக்கோவில் வேறு இல்லை! கோவில் முழுவதும் நுரைமணல் கற்கள் மீது கட்டப் பெற்றுள்ளது. 'வெல்' என்ற வினைச் சொல்லின் முதல் எழுத்து நீண்டு, 'வேல்' என்னும் பெயர்ச் சொல்லாக விளங்கு கின்றது. 'வெற்றி' என்னும் பொருள் உடைய 'வேல்' என்னும் போர்க்கருவி இங்கே, இறைவன் திருக்கையில் திகழ்கின்றது! எனவே, வேலன், வேலவன், வேலப்பன்[1] என்ற பெயர்களால் முருகனைக் குறிப்பிடுகின்றனர்.

கோவில், அலைவந்து மோதும் கடற்கரை அருகே அழகுற அமைந்துள்ளது. கோவிலின் முன்னே 'சண்முக விலாசம்' என்னும் மண்டபம் கட்டப் பெற்றுள்ளது. கோவிலின் உள்ளே 'சந்தன மலை'யும், பல்லவர் காலத்து 'வேங்கடாசலபதி' (திருமால்) திருவுருவமும் உள்ளன. இதனால், பழங்காலச் சிவநெறியாளர்களிடம் இருந்த சமயப் பொறையை உணர்ந்து கொள்ளலாம்! கோவிலின் கோபுரம் செம்மாந்த தோற்றம் உடையது! அக் கோபுரம் ஓங்கார வடிவிலே கட்டப்பெற்றுள்ளது! கோபுரத்திலே 'வேல்' வடிவம் பொருத்தப் பெற்றுள்ளது! அது நெடுந் தூரம் தெரியும் உயரம் உற்றுள்ளது! கோவிலுக்கு வடக்கே ஒரு குகை கடலை நோக்கி இருக்கின்றது! அதனை, 'வள்ளி ஒளிந்த வள நாடு' என்பர்!

சண்முக விலாச மண்டபத்திற்குத் தெற்கே, ஒரு பெரிய கிணற்றின் உள்ளே ஒரு சிறு கிணறு அமைந்துள்ளது! அது, நாழியுருவிலே அமைந்துள்ளது. ஆதலின், அதனை 'நாழிக் கிணறு' என்பர்! இக் கிணறு, திருச்செந்தூரின் தனிச் சிறப்பினைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது!

" ... ... கடல் பெரிது
மண்ணீரும் ஆகா(து); அதன்அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்"[2]

---

1. "உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்திவாழ் வே"
(திருமுருகாற்றுப்படை பிற்சேர்க்கை : ௫.)
2. மூதுரை (ஔவையார்): கூ.

என்ற ஔவையாரின் அருள்மொழிக்கு எடுத்துக்காட்டாக இந் நாழிக் கிணறு அமைந்துள்ளது! கடலருகே, உப்புத் தண்ணீர்க் கிணற்றின் பக்கத்தில், அருகருகே அமைந்தும், ஒன்றன் நீர் மற்றொன்றுடன் கலக்காது இருக்கின்றது! இஃது, இயற்கை யின் வியத்தகு திறமே எனலாம்! நாழிக் கிணற்றின் ஆழம் ஏழு அடியே ஆகும்! இதில் உள்ள நல்ல நீர், விளிம்பு வரை நிறைந்திருக்கும். இதில் உள்ள நீர், அள்ள அள்ளக் குறை யாது; ஆயிரம் பேர் செம்பு செம்பாக முகந்து எடுத்தாலும், இதன் நீர் குறைவது இல்லை! இதில், நீரை எடுக்க எடுக்க, மீண்டும் மீண்டும் உடனுக்குடன் நிறைந்துவிடுகின்றது! நீரை எடுக்காமல் இருப்பினும், நீர் மிகுதியாக ஊறி வடிவதும் இல்லை! இதில் எப்பொழுதும் நீர் வரம்புவரையில் நிறைந்திருக்கும்! கடலில் நீராடியவர்கள் இக் கிணற்றிலும் வந்து நீராடுவது மரபு! இக் கிணறு, முருகன் திருவேல் குத்திய அருளால் அமைந்துள்ளது என்று மக்கள் நம்பி மதிக்கின்றனர்!

இத்திருக்கோவிலில் அமைந்துள்ள மற்றுமோர் அருஞ் சிறப்பு 'இலைத்திருநீறு' (இலை விபூதி) என்பர்! இங்கே பன் னீர் மரங்கள் மிகுதி. பன்னீர் இலையிலுள்ள பன்னிரண்டு நரம்புகள் முருகனின் பன்னிரண்டு திருக்கைகளை நினைவூட்டு வன என்பர்! பன்னீர்ப் பூவுக்கு உரிய அமைதிப் பண்பு, பன் னீர் இலைகளிலும் உள்ளது என்பர்! கை கால் வலிப்பு, கபம், குட்டம், காசம் முதலிய அருநோய்களைப் போக்கும் ஆற்றல் பன்னீர் இலைக்கு உண்டு என்று நம்புகின்றனர். ஆதலின், திருநீற்றைப் பன்னீர் இலையுள் வைத்தே இக்கோவிலில் வழங்கு கின்றனர்!

இக்கோவிலை அடிப்படையாகக் கொண்டு, பல நூல்கள் வெளிவந்துள்ளன. அரும் புலவர் பலர், இப்பெரும் பெயர் முருகனைப் பாடித் தொழுதுள்ளனர்! செயற்கரிய செயல்கள் இவ்விடத்திலே நிகழ்ந்துள்ளன என்பர்! மன்னர்களும் மாண் புள்ளோரும் வழிவழியே இக்கோவிலில் வந்து தொழுது வாழ்ந் துள்ளனர்!

## V. தென்காசி வட்டம் :

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு மலைத் தொடர்ப் பகுதியில் நான்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி வட்டங்கள் அமைந்துள்ளன. இவற்றுள், பொதிகை மலையைப் பெற்றுள்ள அம்பை வட்டம் நடு நாயகமாக அமைந்துள்ளது; மகேந்திர மலையைப் பெற்றுள்ள நான்குநேரி வட்டம் தென்பால் அமைந்துள்ளது; குற்றால மலையைப் பெற்றுள்ள தென்காசி வட்டம் வடபால் அமைந்து விளங்குகின்றது! இத் தென்காசி வட்டம், கேரள மாநிலத்தின் தென் பகுதிக்குச் செல்லும் வாயிலாகிய ஆரியங்காவுக் கணவாயைப் பெற்றுள்ளது.

### தென்காசித் திருநகர் :

இத் தென்காசி மாநகர், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது! பாண்டிய அரசர்களில் சிலர் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். இந்நகர் சிற்றாற்றங்கரை மீது அமைந்துள்ள சிறப்பினைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கோவில்களில் 'காசி விசுவநாதர் கோவில்' ஒன்றாகும். அஃது, இந்நகரின் நடுவே ஒரு சிறப்பக் கலைக் கூடமாக அமைந்துள்ளது! திருக்குற்றாலத்திற்குச் செல்லும் வழியிலே, இத் தென்காசித் தலைநகர் இருக்கின்றது. இது, நன்செய் நிலவளம் மிகுந்த செழித்த வட்டாரமாக விளங்குகின்றது.

### திருக்குற்றாலம் :

'சிற்றாறு', தண் பொருநை யாற்றின் சிறந்த துணையாறுகளில் முதன்மை வாய்ந்தது! இதனை, 'சித்திரா நதி' என்று வடமொழியாளர் வழங்குகின்றனர். இந்த ஆறு தோன்றும் மேற்கு மலைத் தொடர்ப் பகுதியை, 'குற்றால மலை' என்று குறிப்பிடுவர். இங்கே, குறிஞ்சி நிலவளம் அனைத்தும் கொழித்துச் செழிப்பு ஊட்டுவதைக் காணலாம்! அடர்த்தியான காடுகளும், ஏலக்காய்த் தோட்டங்களும், பழத்தோட்டங்களும் இங்கே உள்ளன. அருவிகளும், தென்றலும், சாரலும் இப்பகுதியின் தனிப் பெருஞ் சிறப்புகளாக விளங்குகின்றன. ஆதலின், இக்குற்றாலமலைப்

பகுதியை, இயற்கை அன்னையின் அருட்கொடை என்பர்! ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் இங்கே 'சாரல் காலம்' வரும். அப்பொழுது, குற்றாலத்தில் மழைத்தூறலும், இளம் வெயிலும், குளிர்தென்றலும் இயங்கும். அருவிகளில் நீராடுவது தனி இன்பம் தரும்; மூளைநோய்க்கு உற்ற மருந்து! உடல்நலன் பேணுதற்கு உற்ற வாய்ப்பு. இந்நாட்களில் குற்றாலத்தில் தங்கி மகிழ்வது பெறற்கு அரிய பேறு ஆகும்! ஆதலின், உடல் நலன் பெற விரும்புவோர், உலகின் பல இடங்களிலிருந்தும் பெருந்தொகையினராக வந்து குற்றாலத்துச் சாரலின் பயன்களை நுகர்வர்.

குற்றால நாதர் கோவில், 'சித்திர சபை' சிறப்பினைப் பெற்றுள்ளது. இக்குற்றாலம் மூவர் தேவாரம் பெற்ற முதுபதி ஆகும்! இங்கே உள்ள வட அருவி, செண்பகா அடவி அருவி, தேன் அருவி, புலி அருவி, பழைய அருவி—ஆகிய அருவிகள் மக்களுக்குப் 'பருவகால விருந்தா'கப் பயன்படுகின்றன! இந்த அருவிகளில் நீராடும் இன்பம், உடலும் உள்ளமும் ஒருசேர மகிழ உதவுகின்றது. குற்றாலத்திலே, குரங்குகள் மிகுதி. இங்கே, முக்கனி தரும் மரங்களும், நறுமணந்தரும் மரங்களும், பலவகைக் காட்டு மரங்களும் உண்டு. குற்றால மலைக் காடுகளில் [1] மிளா, மலையாடு, மான்கள் திரிகின்றன.

குற்றாலம் இயற்கை வளமும், இன்ப இறை நெறி வளமும் பெற்று இலங்குகின்றது. குற்றாலத் திருக்கோவிலில், பெருமாள், 'சிவலிங்கம்' ஆகக் காட்சி தருவதைக் காணலாம். திருநாவுக்கரசரும், மாணிக்க வாசகரும் இத் திருக் குற்றாலத்து இறைவனை நினைந்து வழிபட்டுள்ளனர்:

"உற்றார் ஆர்உளரோ? உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்(து)உறை கூத்தன்அல்லால் நமக்(கு)உற்றார்
ஆர் உளரோ?"[2]
—திருநாவுக்கரசர்

---

1. மிளா—ஒருவகைக் காட்டு விலங்கு; காட்டு எருமைபோன்றது; வருவது அறிய இயலாத ஒருவகை மிருகம்.

2. திருநாவுக்கரசர் தேவாரம்: நாலாந்திருமுறை: 9. பொது: 91

"உற்றாரை யான்வேண்டேன்; ஊர்வேண்டேன்; பேர்வேண்டேன்;
கற்றாரை யான்வேண்டேன்; கற்பனவும் இனிஅமையும்!
குற்றாலத்(து) அமர்ந்(து)உறையும் கூத்தா! உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்(து)உருக வேண்டுவனே."[2]

—மாணிக்க வாசகர்.

இவ்வாறே, பொருநை நாட்டின் புகழ்பெற்ற பேரூர்கள் பலவற்றைச் சாற்றலாம்! சங்கரன் கோவில், கரிவலம் வந்த நல்லூர், நான்குநேரி, வள்ளியூர், திருக்குறுங்குடி, களக்காடு, ஆழ்வார் குறிச்சி, சிவசைலம், கடையம் போன்ற பல ஊர் களின் நலன்கள் தனித்தனியே தெரிந்து மகிழ்வதற்கு உரியன. சிறப்பாகப் பொருநை யாறும், அதன் துணையாறுகளும் பாயும் இடங்களிலே ஆற்றங்கரை நாகரிகத்தைப் பறைசாற்றும் பெரும்புலவர்கள் பலர் தோன்றியுள்ளனர்; பொருநைப் பண் பாட்டைப் புலப்படுத்தியுள்ள பெருமக்கள் பலர் வாழ்ந் துள்ளனர். அத்தகைய தண்பொருநைக் கரை தந்த தவமாண் பினர் சிலரை இனிச் சிந்திக்கலாம்.

2. திருவாசகம்: திருப்புலம்பல்: 3.

# 7. தண்பொருநை தந்த தவமாண்பினர்

ஆற்றங்கரைகளே வளம் மிகுந்த வட்டாரங்கள் ஆகின்றன. ஆதலின், 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்ற பழமொழி எழுந்தது! செழிப்புற்று வாழும் நெஞ்சங்களிலேயே சிந்தனைச் செல்வம் சிறந்து ஒளிரும் என்பர். நம் நாட்டில் ஆறுகள் பல உண்டு! அவை யாவும் புலவர் பாடும் புகழ் உடையனவே யாம். ஐந்து சிறந்த ஆறுகள் தமிழகத்தை வாழ்விக்கின்றன! அவை, காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை என்பன. இவற்றுள், தென்பாண்டி நாட்டின் உயிரெனத் திகழ்வது, 'பொருநைத் திருநதியே' ஆகும்! இதனைக் கம்பர்,

"பொன் திணிந்த புனல் பெருகும்
பொருநை எனும் திருநதி"

என்று புகழ்ந்து பாடினார்! இந்தத் 'தண் பொருநை' (தாமிர வருணி) ஆற்றங்கரைகளில் அமைந்த பேரூர்களில், 'செயற்கரிய செய்த பெரியார்' பலர் தோன்றினர். அவர்கள் உயர்ந்த பண்பாட்டையும் சிறந்த நாகரிகத்தையும் உலகிற்கு உணர்த்தினர்; 'தவ மாண்பினரா'கத் திகழ்ந்தனர். 'தவம்'[1] 'தூயநெறி— நோன்பு' என்னும் பொருளை உடைய பெயர்ச் சொல்லாகப் பயன் படுகின்றது; தவ,[2] 'மிகுதி' என்னும் பொருளை உடைய உரிச்சொல்லாகவும் பயன்படுகின்றது! இந்த இரு பொருளையும்

---

1. தவம்=தூய துறவுநெறி.
"உற்றநோய் நோன்றல், உயிர்க்(கு)உறுகண் செய்யாமை,
அற்றே, தவத்திற்(கு) உரு." (குறள்: 261)

2. தவ=மிகுதி. "சால உறுதவ நனிகூர் கழிமிகல்"
(நன்னூல்: 456)

இணைத்தே, 'மிகுந்த தூய நோன்பினை உடைய மாண்பினர்' என்ற பொருளிலேயே, 'தவ மாண்பினர்' என்ற தொடர் பயன் படுத்தப் பெறுகின்றது.

பொருநை ஆற்று நீர் மிகவும் பெருமை உடையது என்பர். இப் பொருநையாற்றின் நீரை அருந்தியவர் கல்வி உணர்ச்சி மிகுந்தவராகக் காணப் பெறுவர். இந்த ஆற்றங்கரை ஊர்கள், அரிய புலவர் பலரை அளித்துள்ளன! இதனால், பொருநைக் கரையை, 'புலவர்களின் வளர்ப்புப் பண்ணை' என்று போற்றி வருகின்றனர்; 'தவமாண்பினர் பலர் தோன்றிய தனி வட்டாரம்' என்று பாராட்டி வருகின்றனர். அத்தகைய 'தவ மாண்பினர்' களில் ஒரு சிலரை இங்கே சிந்திக்கலாம்.

## (i) அகத்தியர்

பொருநையாறு பிறந்த மலை, 'பொதியம்' என்று கண்டோம். அதற்கு, 'அகத்தியர் மலை' என்ற வேறு பெயரும் உண்டு! ஆம்; இன்றும், 'அகத்தியர்' அங்கு வாழ்ந்து வருகின்றார் என்று நம்புபவரும் உண்டு! 'தமிழ் முனிவன் வாழு மலை' என்றார், குமரகுருபரர்! பொதியமலையிலே, மிகப்பழைய காலத்திலே ஒரு 'தமிழ் முனிவர்' வாழ்ந்தார். அவரை, அழகுத் தமிழிலே, 'அகத்தியர்' என்றனர். பிறர் எவருக்கும் கடுகளவு தீமையேனும் கருதாதவரே, உலக மக்கள் உள்ளத்துள் எல்லாம் வாழ்பவர் ஆவார்!

> "உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின், உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன்." (குறள்: 294)

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானாயின், அத்தகையவன், உலகத்தாரின் உள்ளங்களில் (அகங்களில்) எல்லாம் ஊன்றி இருப்பவன் ஆவான்! இது, திருவள்ளுவரின் தெளிந்த மொழி. இத்தகைய முறையிலே 'பொதிகைத் தமிழ் முனிவர்', மக்கள் அகத்திலே இயங்கி 'அகத்தியன்' (அகத்து+இயன்) ஆகத் திகழ்ந்தார். ஆதலின், 'அகத்தியன்' என்னும் அரிய தமிழ்ப் பெயரைப் பெற்றார்.

அகத்தியர் ஒருவர் அல்லர்; பலர் என்று ஆராய்ந்து வருகின்றனர்! பொதிகைமலையிலே ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவி, தமிழ் மொழிக்கு ஓர் அரிய இலக்கண நூல் ஆக்கிய தமிழ் முனிவர், ஓர் 'அகத்தியர்' ஆவார்! அவரே, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் பற்றி ஆராய்ந்து, பன்னீராயிரம் நூற்பாக்கள் கொண்ட 'அகத்தியம்' என்னும் முதல் தமிழ் இலக்கண நூல் ஆக்கினர்! ஆனால், அந்த நூல் இப்பொழுது முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை! கடல்கோள், கறையான் அரிப்பு, கவலையற்றோர் காப்பின்மை போன்ற பேணாக் குறையால், அந் நூலை நாம் இப்பொழுது இழந்து விட்டோம்! ஆயினும், உரையாசிரியர்களின் உரைமேற்கோள்களாக, ஒருசில அகத்திய நூற்பாக்கள் கிடைக்கப் பெற்றுள்ளோம். அவற்றுள் ஒன்று :

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின்(று) எண்ணெய் எடுப்பது போல,
இலக்கி யத்தினின்று எடுபடும் இலக்கணம்!"

இதனால், இலக்கணம் எழுகின்ற முறைமையினை, தெரிகின்றோம்! இதனை, அறிவியல் நெறியிலே உணர்த்துகின்ற 'அகத்தியம்' என்னும் அருமைநூலின் பெருமையினை உணருகின்றோம்!

சிவபெருமானால், இமயத்திலிருந்து பொதியம் அனுப்பி வைக்கப் பெற்ற புராண 'அகத்தியர்' கதையை முன்னரே பார்த்துள்ளோம்! வட ஆரியர் தென்னாடு வந்து குடியேறிய காலத்தில், ஓர் ஆரியக் குழுவின் தலைவராக 'அகத்தியர்' வீற்றிருந்தார் என்று வரலாறு தெரிவிக்கின்றது! அகத்தியர் தென்னாடு வந்து, சிவன் அருளாலும், முருகன் திருவருளாலும் தமிழ்மொழியைத் தெளிவாகக் கற்றார் என்பர்! அகத்தியர் மாணவர் பன்னிருவர் என்பர். அவர்கள் : (i) அதங்கோட்டாசான், (ii) தொல்காப்பியர், (iii) செம்பூட்சேய், (iv) காக்கைபாடினியார், (v) நத்தத்தனார், (vi) துராலிங்கனார், (vii) பனம்பாரனார், (viii) கழாரம்பனார், (ix) வையாபிகனார், (x) வாய்ப்

பியனூர், (xi) அவிநயனூர், (xii) வாமனூர். இவர்கள் அனைவரும் அகத்தியரிடம் பயின்ற தலைசிறந்த தமிழ்ப்பாவலர்கள் ஆவர்! இப் புலவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே வெவ்வேறு நூல்கள் ஆக்கினர்.

அகத்தியர் மாணவர்களுள், 'தொல்காப்பியர்' தூய்மையும், திறமையும் கொண்டு திகழ்ந்தார். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பிரிவுகளிலே, தொல்காப்பியர் இலக்கணம் எழுதியுள்ளார். அதன் பெயர் 'தொல்காப்பியம்' ஆகும். அந் நூல் முழுவதும் மொத்தம் 1610 நூற்பாக்கள் கொண்டுள்ளது. இதுவே, இன்று தமிழ்மொழிக்குக் கிடைத்துள்ள முழுமை வாய்ந்த தொன்மை இலக்கண நூலாகத் துலங்குகின்றது! இதுவும், 'தண்பொருநை யாறு' பிறக்கும் 'பொதியமலைத் தமிழ் மன்ற'த்தில் தோன்றியிருக்க வேண்டும் அன்றோ? இந் நூல் 'நிலந்தரு திருவின் பாண்டியன்' அவைக்களத்திலே அரங்கேற்றம் செய்யப் பெற்றது! பொதிகையின் மேற்பால் உள்ள திருவிதாங்கோட்டு ஆசிரியர் 'அதங்கோட்டு ஆசான்' ஆராய்ந்து மதிப்பிட்டுள்ளார்! இதனைத் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ள தோற்றம் மிகுபுலவர் 'பனம் பாரனூர்' மொழிகளால் புரிந்து கொள்கின்றோம்!

எனவே, தமிழ் மக்களும், தமிழ்ப் புலவர்களும் உச்சி மீது வைத்துப் போற்றும் உயர்மதிப்புக்கு உரியவராக, 'அகத்தியர்' திகழ்ந்தார். 'இன்றியமையாதவர்' என்ற பொருளிலும் 'அகத்தியர்' என்னும் பெயர் வழங்கப் பெற்று வந்துள்ளது. பாண்டி வேந்தர்கள் தம் அரசியல் ஆசிரியராக மரபு வழியே கருதப் பெற்று வந்தவர் 'அகத்தியர்' என்பர்! 'பொன்னி' (காவிரி) ஆற்றையும், 'பொருநை' (தாமிரவருணி) ஆற்றையும் 'அகத்திய முனிவரே' தந்தார் என்று புராணங்கள் புகல்கின்றன! அவர்மேல் இருந்த பற்றுதல் காரணமாக, தமிழர்கள், அகத்தியரைக் கடவுள் தன்மை படைத்த பெரும் புலவர் என்று போற்றிப் புகழ்ந்தனர். பொருநை நாட்டின் பல்வேறு ஊர்கள் 'அகத்தியர்' பெயர் பெற்று இலங்குகின்றன; பல்வேறு இடங்களில் அகத்தியருக்குச் சிலை செய்துவைத்து மக்கள் வழிபட்டு வரு

கின்றனர்; திருவிழா நடத்திக் கொண்டாடுகின்றனர். இன்னும் பல்வேறு நினைவுச் சின்னங்கள் வைத்துப் போற்றி வருகின்றனர். 'அகத்தியன்' என்ற தமிழ்ப்பெயர் பலவாறு சிதைவுற்று உலகெங்கும் ஒலிக்கக் காண்கின்றோம்!

ஏறத்தாழ, ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், 'அகத்தியா' பொதிகை மலையிலே தமிழ் முனிவராகத் திகழ்ந்தார்; 'அகத்தியம்' என்ற முத்தமிழ் இலக்கண நூல் மொழிந்தார்! ஆயினும், அந் நூல் இப்பொழுது முழுவதும் கிடைக்கப் பெறவில்லை! இங்ஙனம், எங்கும் புகழ் பெற்ற அகத்தியர், வட நாட்டின் இமய மலையிலிருந்து, தென் தமிழ்நாட்டின் பொதிய மலை வந்து தங்கினர் என்றும், தமிழ் நாட்டிலேயே பிறந்து, தமிழ்ப் பொதியம் வாழ்ந்து, தமிழ் இலக்கணம் செய்து தமிழராகவே மிளிர்ந்தார் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன! எப்படியோ, வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே, 'அகத்தியர்' என்ற பெருந்துறவி 'பொதியமலை'யில் வாழ்ந்தார் என்றும், அவர் தமிழ்மொழியினை ஆராய்ந்தார் என்றும், அவர் செயற்கருஞ் செயல் புரியவல்ல இறை இயல்பு பெற்றிருந்தார் என்றும் தெரிய முடிகின்றது. எனவே, இவர் பொருநைக் கரை பெற்ற பெருமைக்கு உரிய தவமாண்பினர் ஆவார்.

## (ii) சிவஞான முனிவர்

பொதிய மலைச் சாரலில் 'பாபநாசம்' உள்ளது. பொருநையாற்றின் புண்ணியத்துறை யாகிய அப் பழம்பதியின் பக்கத்திலே, 'விக்கிரம சிங்கபுரம்' என்னும் விழுமிய ஊர் உள்ளது. அவ்வூரிலே ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டிலே சிவஞான யோகி' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற 'சிவஞான முனிவர்' தோன்றினர். இவர் தம் பெற்றோர் 'ஆனந்தக் கூத்தர்—மயிலம்மையார்' என்பவர் ஆவர். இவரது இயற்பெயர் 'முக்களாலிங்கன்' என்பது. இது பாபநாசம் திருக்கோவில் இறைவன் பெயர். அங்கே, மூன்று களா மரங்களின் நிழலில் கடவுள் இலிங்க வடிவில் தோன்றினர்! ஆதலின், அவ் விறைவன் 'முக்களாலிங்கர்' என்று

மக்களால் போற்றப் பெற்ருர். இங்கே, அகத்தியர் சிவபெருமானின் கயிலைத் திருமணக் காட்சி கண்டார் என்பர்! ஆனந்தக் கூத்தர் குடும்பம் பொதிகை முனிவர் ஆகிய அகத்தியரின் அருளையும் வரத்தையும் பெற்றது என்பர். இக் குடியில் தோன்றிய இவர், தமிழ் மொழியில் பல சிற்றிலக்கிய நூல்களை ஆக்கியுள்ளார். அவை கொண்டு, இவரைப் 'பெரும் பாவலர்' என்றும், தூய 'மெய்ந்நூலாளர்' என்றும், சிறந்த 'திறனய்வாளர்' என்றும், உயர்ந்த 'உரையாசிரியர்' என்றும் அறிஞர் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

'முக்களா லிங்கர்' இளமைப் பருவத்திலேயே வளமான கல்வி பெற்றிருந்தார்; சிவவேடப் பெரியவர்களிடம் பேரன்பு கொண்டு விளங்கினர்; திருவாவடுதுறைத் துறவியர்களிடம் தூய அன்பு செலுத்தினர்; பொதுவாக, பெரியோரைப் பேணித் துணைகொள்ளும் பீடு பெற்றிருந்தார்; மெய்ந்நூல் ஓதி நன்னெறி உய்ய விரும்பினர். திருமகனர் உயர்நோக்கத்தைத் தந்தையார் கண்டார்! அறிவறிந்த நன்மகனைப் பெற்ற பெருமகிழ்ச்சி கொண்டார்! பண்பு உடைய தம்மகனர் விரும்பியவாறே, ஆவடுதுறை மடத்துத்துறவியர் தம் வீடு வந்து உணவு கொள்ள இசைந்தார்! அத் துறவியர் வேண்டுகோளுக்கு ஒப்பத் தம் திருமகனரை அவர்களிடம் ஒப்படைத்தார். அம் முனிவர்கள் முக்களாலிங்கரைத் தம்மொடு அழைத்துச் சென்றனர்; சுசீந்தரத்தில் நமச்சிவாய முனிவரின் திருவுருவத்தை வணங்கச் செய்தனர்; பின்னர்த் திருவாவடுதுறை ஆதீன சின்னப் பட்டத்துத் தம்பிரான் ஆகிய தவத்திரு வேலப்பதேசிகர் அவர்களை வணங்குமாறு செய்தனர்! அருள்திரு வேலப்பதேசிகர் அவர்கள் முக்களாலிங்கரின் அன்பினையும் அடக்கத்தினையும் அறிவினையும் கண்டு மகிழ்ந்தார்; சமய தீக்கை புரிந்தார்; கல்லாடை கொடுத்துத் துறவு நிலை மேற்கொள்ளச் செய்தார்; முக்களாலிங்கருக்குச் 'சிவஞானம்' என்னும் தீக்கைப் பெயர் வழங்கினர்! இவரே, 'சிவஞான முனிவர்' என்னும் 'சிவஞானயோகி' ஆனர்!

புலமையும் தவமும் நிறைந்த சிவஞான முனிவர், தென்மொழியும் வட மொழியும் தெள்ளத் தெளிய உணர்ந்தார்;

செயற்கரிய தவம் செய்து செம்மையுற்ருர். இவர் தம் புலமைத் திறத்தையும், தவத்தின் சிறப்பையும் தமிழகம் வியந்து புகழ்ந்தது.

"வட நூற் கடலும் தென்தமிழ்க் கடலும்
முழுதுணர்ந்(து) அருளிய முனிவரன், துறைசை
வாழ்சிவ ஞான மாதவன்"

என்று அறிஞர் போற்றினர். மேலும் இவர், தென்னூற் கடலையும் வடநூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்தவர் என்று பாராட்டப் பெற்ருர். இதனுல், இவர் வடமொழி தென்மொழிகளில் நன்கு தேர்ந்து விளங்கினர் எனலாம். தவத்திரு வேலப்பதேசிகர், இவருக்கு ஞான ஆசிரியர் ஆனுர்! மெய்கண்ட சாத்திரங்களையும், பண்டார சாத்திரங்களையும் முறையாக அறிவுறுத்தினர். இதனுல், இவர் இலக்கண இலக்கியங்கள் தருக்க நூல்கள் முதலியவற்றில் சிறந்து விளங்கினர்.

சிவஞான முனிவர் பல சிவப்பதிகளுக்கும் சென்று வழிபட்டார். இவர் அங்ஙனம் சென்ற காலங்களில் செய்த அருஞ்செயல்கள் பல உண்டு! ஒரு சான்று: ஓர் ஏழை வேதியன் பொன் முடிப்புப் பெறுமாறு உதவினுர்! திருப்பாதிரிப் புலியூரில் செய்யுள் செய்யும் சிறந்த கவிஞருக்கு நூறுபொன் அடங்கிய ஒரு முடிப்பைச் செல்வர் ஒருவர் பந்தயம் வைத்திருந்தார். "கரை ஏறவிட்ட முதல்வா! உன்னையன்றியும் ஓர் கதியுண்டாமோ?" என்ற ஈற்றடியை அமைத்து ஒரு செய்யுள் செய்பவர் இப் பொன்முடிப்பைப் பெறலாம் என்று ஏற்பாடு செய்திருந்தார். ஏழை வேதியன் ஒருவன் தவ முனிவரிடம் தனக்கு அப் பொன் முடிப்பு கிடைக்குமாறு அருளவேண்டினுன். அவ்வாறே, முனிவர் அழகிய பாடல் ஒன்றைப் பாடிக் கொடுத்தார்! வேதியன் அதனைப் பெற்று அவையோரிடம் காட்டினுன்; கேட்டோர் அக மகிழ்ந்தனர்! மறையவன் அப் பொன் முடிப்பைப் பெற்று, வறுமை நீங்கப் பெற்ருன். இதுகேட்டு, சிவஞான முனிவர் மட்டற்ற மகிழ்ச்சி உற்ருர்.

சிவஞான முனிவர் தாம் சென்று வழிபட்ட சிவப்பதிகளில் இறைவனை ஏத்திப் பதிகம் பாடினுர். இவ்வாறு இவர் பாடிய

நூல்கள் பல ஆகும். இவர் காஞ்சியம்பதியில் சில ஆண்டுகள் வாழ்ந்தார். அங்கே அவர் ஆக்கிய நூல்கள் பல. அவரது 'காஞ்சிப் புராணம்' சிவ சமய உண்மைகளை விளக்கும் சிறந்த நூலாக அமைந்தது. முனிவர் இக் காஞ்சிப் புராணத்தின் முதற் காண்டத்தையே பாடினர்! இப் புராணத்தின் பிற் பகுதியை, முனிவரின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் பாடி முடித்தார். முனிவர் தமிழ்மொழிக்கும் சிவ நெறிக்கும் பெரும் பணிகள் புரிந்துள்ளார். இவர் இயற்றிய நூல்கள் இலக்கணம், இலக்கியம், மொழி பெயர்ப்பு, சமயம், பேருரை, கண்டனம் ஆகிய பலவகைகளில் அமைந்துள்ளன. அகத்திய முனிவர் போலச் சிவஞான முனிவரும் பன்னிரு சிறந்த மாணவர்களைப் பெற்றிருந்தார்.

இறுதியில் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினர். அங்கே, சிவத் துறவியர் ஆகிய மாணவர் பலருக்குத் தமிழ் நூல்களையும் சமய நூல்களையும் கற்பித்து வந்தார். தம் ஞானாசிரியரை வழி பட்டு வந்தார். கி. பி. 1785 இல் சித்திரைத் திங்கள் ஆயிலிய நாளில் இறைவன் திருவடி அடைந்தார். இனி முனிவர் ஆக்கிய படைப்புகளைக் காணலாம்.

### 1. தொல்காப்பியச் சூத்திர விருத்தி:

இதில், தொல்காப்பியப் பாயிர விருத்தியும், எழுத்து அதி கார முதல் சூத்திர விருத்தியும் அடங்கி உள்ளன. இப் பேருரை யில், சிவஞான முனிவர், தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைகளைக் காரணம் காட்டிச் சிற்சில இடங்களில் மறுத்துத் தம் உரையினைத் தெளிவுபடுத்தி உள்ளார். அதில் சேனவரை யர் உரையினைப் புகழ்கின்றார்; ஆயினும், அவர் ஆகுபெயர் அன்மொழித் தொகை இரண்டும் ஒன்றே என்று கூறியதை மறுத்துள்ளார். வடமொழிக்கும் தென்மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்று ஒரு சாரார் பரப்பிய தவறான கொள்கையை மறுத்து, தென்மொழியாகிய தமிழின் சிறப்பு இயல்புகளைப் புலப் படுத்தியுள்ளார்! இதில், வடமொழி தென்மொழிகளுக்கு உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டியுள்ளார். இந்த விருத்தி உரை

யால், தொல்காப்பிய நுண்பொருள் சிறப்பினை நன்கு உணரலாம்.

**2. நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்:**

நன்னூலுக்குச் சிறந்த விருத்தி உரையினைப்பெரும் புலவர் சங்கர நமச்சிவாயர் எழுதினார்; அதனைத் திருத்தம் செய்து பெருமைப் படுத்தினார், சிவஞான முனிவர்! சங்கர நமச்சிவாயப் புலவர், சிவஞான முனிவர் ஆகிய இருவருமே பொருநைக் கரையில் தோன்றிய பெரும் புலவர்களாவர்.

**3. அகிலாண்டேசுவரி பதிகம்:**

தண்பொருநைக் கரைப் பேரூர்களில் 'செப்பறை'யும் அதன் பக்கத்தில் உள்ள 'இராசவல்லி புர'மும் பழைமை வாய்ந்தன வாகும். ஞான ஆசிரியர் தவத்திரு வேலப்ப தேசிகருடன், சிவஞான முனிவர் 'இராசவல்லி புரம்' சென்றிருந்தார்! தம் ஆசிரியர் கட்டளைக்கு இணங்க இந்த 'அகிலாண்டேசுவரி பதிகம்' பாடப் பெற்றது. இதில், சைவ சித்தாந்தக் கருத்துகள் அமைந்துள்ளன.

119575

**4. இளசைப் பதிற்றுப்பத்து அந்தாதி:**

இந் நூலை, சிவஞான முனிவர் இளங்காடு என்னும் திருப்பதியினை வணங்கிய பொழுது பாடினார்.

**5. கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்:**

இந் நூலினை, முனிவர் காஞ்சியம்பதியில் வாழ்ந்த போது பாடினார்.

**6. கலைசை செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்:**

'கலைசை' என்பது 'தொட்டிக் கலை' என்னும் ஊரின் மரூஉப் பெயர் ஆகும்! இந்நூல், அவ்வூர்ப் பிள்ளையார் மேல்

பாடப் பெற்றது; அவ்வூர்ச் செல்வர் திரு. கேசவ முதலியார் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கப் பாடப் பெற்றது.

7. கல்சைப் பதிற்றுப் பத்து அந்தாதி:

இந்நூல், தொட்டிக்கலை கேசவ முதலியார் வேண்டு கோளுக்கு இணங்க, அவ்வூர் இறைவன் சிதம்பரீசுவரர்மீது பாடப் பெற்றது.

8. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்:

சிவஞான யோகியார் வடதிருமுல்லை வாயிலை வணங்கினார்; அப்பதிக்கு அருகில் உள்ள 'குளத்தூர்' என்னும் திருப்பதிக்குச் சென்றார். அங்கே எழுந்தருளியுள்ள 'அமுதாம்பிகை' மீது 'பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கியம் பாடினார். இதில் சுவை மிகுந்த பல பாடல்கள் உள்ளன. இப் பிள்ளைத் தமிழ், சொல்லோவியமாகவும் சுவைகளின் உறைவிடமாகவும் திகழ்கின்றது!

9. குளத்தூர் பதிற்றுப்பத்து அந்தாதி:

இந்தச் சிற்றிலக்கியம் குளத்தூர் 'சோமேசர்' ஆகிய இறைவன்மீது பாடப்பெற்றது.

10. சோமேசர் முதுமொழி வெண்பா:

இந்நூல், குளத்தூர் இறைவன்மீது வெண்பாக்களால் பாடப்பெற்றுள்ளது. ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றிலும் ஒவ்வொரு குறட்பா அமைந்துள்ளது; முதல் இரண்டு அடிகளிலும், அக் குறட்பாவை விளக்கும் கதை நிகழ்ச்சிக் குறிப்புகள் அமைந்துள்ளன.

11. திருத்தொண்டர் திருநாமக்கோவை:

இந்நூல், முனிவர் காஞ்சிபுரத்தில் இருந்த பொழுது பாடப் பெற்றது. இதில், திருத்தொண்டர் திருப்பெயர்கள் மந்திரம் போல ஓதும் முறையில் ஆக்கப் பெற்றுள்ளன.

**12. திருமுல்லை வாயில் அந்தாதி:**

இந்நூல், 'வடதிரு முல்லை வாயில்' என்னும் ஊரில் வீற்றிருக்கும் திரு மாசிலாமணி ஈசுவரர்மீது பாடப் பெற்றது.

**13. திரு ஏகம்பர் அந்தாதி:**

இந்நூல், காஞ்சி ஏகாம்பரநாதர்மீது பாடப் பெற்றுள்ளது.

**14. திரு ஏகம்பர் ஆனந்தக் களிப்பு:**

இந்நூலும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மேல் பாடப் பெற்றுள்ளதே யாகும்.

**15. காஞ்சிப் புராணம்:**

இந்நூலின் முதல் காண்டம் சிவஞான முனிவராலும், இரண்டாவது காண்டம் இவருடைய மாணவர் கச்சியப்ப முனிவராலும் பாடப் பெற்றுள்ளன. காஞ்சி என்பது காஞ்சிபுரம் ஆம். இந்நூல் வடநூல் மொழி பெயர்ப்பு ஆகும்! 'காஞ்சியம் பதி' "முத்தி தரும் நகர் ஏழுள் முக்கியமாம், காஞ்சி" என்று பெருமையாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இந்நகரினைச் சுற்றியுள்ள சிவப்பதிகளைப் பற்றியும் காஞ்சியில் உள்ள திருக்கோவில்களின் வரலாறுகள் பற்றியும் இந்நூலுள் கூறப்பெற்றுள்ளன. இந்நூலில், பல சொல்லணிகளும் பொருள் அணிகளும் செறிந்துள்ளன; இலக்கியச் சுவைகள் இன்பந் தரும் முறையில் அமைந்துள்ளன; தொண்டை நாட்டின் வளங்கள் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

**16. பஞ்சாக்கர தேசிகர் மாலை:**

இந்நூல், திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்—ஞான ஆசிரியர் தவத்திரு நமச்சிவாய மூர்த்தி அவர்கள்மீது பாடப் பெற்றுள்ளது இதில், நமச்சிவாய தேசிகர் அன்பர்களுக்குத் திருவருள் வழங்கும் இயல்பினையும், மடவளாகத்தில் திருக்

கோவில் கொண்டுள்ள நிலையினையும், வரங்களை அளித்து வாழ் வளிக்கும் முறையினையும் காணலாம்.

**17. சித்தாந்தப் பிரகாசிகை:**

இந்நூல் வடமொழியில் அமைந்தது; சர்வான்ம சம்பு சிவாசாரியார் என்பவரால் எழுதப்பெற்றது. இதனைச் சிவஞான முனிவர் தமிழிலே மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

**18. சிவ தத்துவ விவேகம்:**

இந்நூல், இறைவனது திருப்பெயர் ஆகிய சிவநாமத்தின் உண்மையினை உணர்த்துகின்றது. இதன் முதல்நூல் வட மொழியில் அப்பைய தீட்சிதரால் ஆக்கப்பெற்றிருந்தது. அதனையே சிவஞான முனிவர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

**19. சுலோகப் பஞ்சகம்:**

இந்நூல் வடமொழியில் 'அரதத்தாசாரியார்' என்பவரால் ஆக்கப் பெற்றது. இதனை, முனிவர் தமிழிலே அகவற்பா வடிவிலே மொழி பெயர்த்து உள்ளார்.

**20. தருக்க சங்கிரக அன்னப் பட்டியம்:**

இந்நூல், தமிழ் மொழியிலே உரைநடையாக அமைந் துள்ள 'தருக்க நூல்' (Logic) - வழக்கு நூல் எனலாம். இந் நூல், தருக்க சாத்திரம் பயில்வார்க்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.

**21. சிவஞான சித்தியார் பொழிப்புரை:**

'சிவஞான போதம்' என்னும் சிறந்த சிவநெறிச் சித்தாந்த நூல் (i) சுபக்கம் (ii) பரபக்கம் என்னும் இருபிரிவுகளை உடை யது. அவற்றுள், இது சுபக்கப் பிரிவுக்கு மட்டும் எழுதப் பெற்ற 'பொழிப்புரை' ஆகும்.

22. சிவஞானபோதச் சிற்றுரை:

'சிவஞானபோதம்' என்னும் சித்தாந்த நூலுக்குச் சிவ ஞான முனிவர் இருவுரைகள் எழுதினர். ஒன்று பேருரை; அது 'மாபாடியம்' எனப்படும். இந்நூல் சிற்றுரை; சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளது!

23. சிவஞான மாபாடியம்:

இந்நூலே, 'சிவஞானபோதம்' என்னும் சிவநெறி மெய்ந் நூலுக்கு, முனிவர் எழுதிய 'பேருரை' ஆகும். இந்த உரை யால் சிவஞானபோதத்தின் உள்ளுறை கருத்துகளின் உண்மை யினைப் புரிந்து கொள்ளலாம்; பல்கலை நூல் நுண்பொருள்களை யும், மெய்ப்பொருள் உண்மைகளையும் உணர்ந்து கொள்ளலாம். இப் பேருரையால், சிவஞான யோகியாரின் வடமொழிப் புலமை யினையும் தருக்கத் திறமையினையும் தெளிவாகத் தெரியலாம்.

24. இலக்கண விளக்கச் சூருவளி:

வைத்தியநாத நாவலர் ஆக்கிய 'இலக்கண விளக்கம்' என்னும் நூலில் உள்ள குற்றங்கள் பலவற்றை, சிவஞான முனிவர் இச் 'சூருவளி' என்னும் நூல் வழியே எடுத்துக் காட்டி யுள்ளார்!

25. 'எடுத்து' என்னும் சொல்லுக்கு இட்ட வயிரக் குப்பாயம்:

'குப்பாயம்' என்பது மேலாடை என்னும் பொருளை உடை யது. 'சிவஞான சித்தியார்' என்னும் நூலில், நூல்வழி என்ற தலைப்பின்கீழ் உள்ள பாடலின் முதல் அடியில், "என்னை இப் பவத்தில் சேராவகை எடுத்து" என்னும் தொடர் வருகின்றது. இதில் 'எடுத்து' என்னும் சொல்லுக்குப் பொருள் கூறிய விளக்கமே இந்நூல் ஆகும்.

26. 'என்னை இப்பவத்தில்' என்னும் செய்யுள் சிவசம வாத உரை மறுப்பு:

திருவண்ணாமலை ஞானப்பிரகாச முனிவர், 'சிவஞான சித்தி யார்' என்னும் நூலுக்குச் சிவசம வாதக் கொள்கையைத்

தழுவி உரை எழுதினர். அவ்வுரையில், "என்னை இப்பவத்தில் சேராவகை எடுத்து" என்ற தொடருக்கு எழுதிய உரை தவறு என்று மறுத்தற்குச் சிவஞான முனிவர் இந்நூலை எழுதினர்.

27. சிவசம வாத உரை மறுப்பு :

'சிவஞான சித்தியார்' என்னும் சித்தாந்த நூலுக்கு, திருவண்ணாமலை ஞானப்பிரகாச முனிவர் உரை எழுதினர். அவ்வுரையினை முற்றிலும் கண்டித்து, சிவஞான முனிவர் மறுப்பு உரை எழுதினர். அதுவே இந்நூல் ஆகும்.

28. சித்தாந்த மரபு கண்டன கண்டனம் :

திருவாவடுதுறை மடத்திலே, 'மரபு அட்டவணை' எழுதப் பெற்றது. அதனை மறுத்துத் தருமபுர ஆதீனத்தார் 'சித்தாந்த மரபு கண்டனம்' என்னும் நூலை எழுதினர்! அக் கண்டன நூலை மறுத்துச் சிவஞான முனிவர், 'சித்தாந்த மரபு கண்டன கண்டனம்' என்னும் இந்நூலை எழுதினர்.

29. கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்திர விருத்தி:

சிவஞான முனிவர் காஞ்சியில் வாழ்ந்த பொழுது, வரம்பு மீறிய கம்பர் அன்பர்களுக்கு வழிகாட்ட விரும்பினர்! "நாடிய பொருள் கை கூடும்" என்னும் கம்பர் பாடலில் உள்ள குற்றங்களை விளக்கினர். திருமாலியர்கள் வருந்தி வணங்கி வேண்டினமையின் அவர்கள் மகிழுமாறு, தாம் குற்றங்கூறிய செய்யுளின் பொருளைச் சிறப்பித்துக் கூறினர். முனிவரின் இந்த விரிவுரையே இந்நூல் ஆகும்.

30. தனிச் செய்யுள் உரை :

இஃது ஓர் அரிய உரை நூல் என்பர்!

இவ்வாறு, சிவஞான முனிவர் செந்தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் சீரிய பணிகள் பல புரிந்தார்; தென்மொழியும் வடமொழியும் துறைபோகக் கற்று, மாணவர் பலருக்கும் அறி

வுறுத்தினர். மாதவச் சிவஞான யோகிகள் என்றும், சிவஞான முனிவர் என்றும் சிறப்பித்துக் கூறப் பெற்றார். விக்கிரம சிங்க புரத்திலும், திருவாவடு துறையிலும் படிமம் நிறுவி இவருக்குத் திருக்கோவில் அமைத்துள்ளனர்; வழிபாடு இயற்றுகின்றனர். எனவே, இவர், தண்பொருநை தந்த தவமாண்பினரே ஆவர்.

## (iii) குமரகுருபரர்

தண்பொருநை ஆற்றின் தடங்கரைகளில் அமைந்துள்ள பதிகளிலே, "சீவைகுண்டம்" என்னும் சிறந்த ஊரும் ஒன்று ஆகும் என்பதனை முன்னரே கண்டோம். இவ்வூர் திருநெல் வேலிப் பெருநகருக்கும், திருச்செந்தூர்த் திருநகருக்கும் இடையிலே அமைந்துள்ளது. இந்தத் 'திருவைகுண்டம்' என்னும் சீர் நகரின் வடபகுதி, 'கயிலாசம்' என்றும், தென்பகுதி 'வைகுந்தம்' என்றும் வழங்கப்பெறும். கயிலாசப் பகுதியிலே சிவநெறியாளர்களும், வைகுந்தப் பகுதியிலே திருமாலியர்களும் வாழ்கின்றனர். ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 'சண்முகக் கவிராயர்—சிவகாம சுந்தரி' ஆகிய இல்லறத்தவர் களுக்கு நீண்ட நாட்களாகப் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை! ஆதலின், அவர்கள் 'அறிவறிந்த மக்கட் பேறு' உற விரும்பி னர்; திருச்செந்தூர் முருகப் பெருமானை வேண்டித் தவங்கிடந் தனர்! அன்னவர்களின் அருந்தவப் பயனாக, ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது! ஆனால், ஐந்து அகவை ஆகியும் அக் குழந்தை ஊமையாகவே இருந்தது; வாய்பேச இயலவில்லை! இதனால், பெற்றோர் பெரிதும் வருந்தினர்; நொந்தனர்; நோன்பு பல புரிந்தனர்; திருச்செந்தூர் சென்றனர்.

அங்கே, அவர்கள் செந்தில் முதல்வன் திருமுன்னர் நாற்பத்தொரு நாட்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டனர்; குறிப்பிட்ட நாட்களுக்குள் குழந்தை பேசாவிடில், 'குழந்தை யோடு கடலிலே விழுந்து மடிய வேண்டும்' என்று உறுதி கொண்டனர். அப் பெற்றோரின் உறுதியை, முருகப் பெருமான் உணர்ந்து அருள் புரிந்தான்போலும். என்னே வியப்பு! நாற்பத் தோராவது நாள் குழந்தை பேசியது! இந்த வியத்தகு நிகழ்ச்சியை என்னென்பது!

அன்று காலை, செந்தூர் முருகன், குழந்தையை எழுப்பினான்; "குமரகுருபரா!" என்று அழைத்தான்! "எம்மை வழிபட வருக" என்று அருள் புரிந்தான்! "உன் புலமை எங்கே யாரிடம் தடை ஏற்படுகின்றதோ, அங்கே அவரே உன் ஞானாசிரியர் ஆகும் தகுதியாளர் ஆவார்; அவரை வழிபடுக" என்று அறிவுரை பகர்ந்தான்! முருகன் அருள்பெற்ற பின்னர், ஊமைக் குழந்தை உரை மொழிந்தான்! பெற்றோரை எழுப்பி, நிகழ்ந்ததைக் கூறினான்! பெற்றோர் மகிழ்ந்து பேரின்பம் கொண்டனர்! இவரே, தவமாண்பினர், குமரகுருபரர் ஆவார்!

## 1. கந்தர் கலி வெண்பா:

பெற்றோர், குழந்தையுடன் கடலில் நீராடினர்; கோவிலினுள் சென்று பன்னிருகைக் கோலப்பனை வழிபட்டனர்; வேலன் திருவருளை வியந்து போற்றினர். அப்பொழுதே, குழந்தையாகிய குமரகுருபரர் முருகன் மீது 'பாமாலை' தொடுத்தார்; 'கந்தர் கலி வெண்பா' என்னும் செந்தமிழ் நூலை அருளினர்! அதில், முருகனின் ஆறுமுகமும், பன்னிருகைகளும் விளக்கப் பெற்றுள்ளன.

"எழுத்துமுதல் ஆம்ஐந்(து) இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து—ஒழுக்கமுடன்
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி, ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்."

இவ்வாறு, குமரகுருபரர், செந்தில் முதல்வனிடம் இந்நூல் இறுதியிலே வரம் வேண்டினார். இந்நூலின் அருமையும் பெருமையும் ஓதுவோர் உணர்வர்! இந்நூல் நாடோறும் மனனம் செய்து வழிபடற்கு உரியது. செந்தூரில் முத்தப்பனின் முழு அருள் பெற்று, குமரகுருபரர் தம் பெற்றோரோடு திருவைகுந்தம் மீண்டார்.

## 2. கயிலைக் கலம்பகம்:

செந்தூரிலே தெய்வப் பேரருளையும் பேராற்றலையும் பெற்ற இளந்துறவியார் ஆகிய குமரகுருபரர், இயல்பாகவே

இலக்கிய இலக்கண நூல்களிலே முறையாகப் பயின்று மூதறிவு பெற்றார்! மெய்ப்பொருள் கல்வி மேவப் பெற்றார்! கலைகள் அனைத்தையும் கசடறக் கற்றுத் திறமை கைவரப் பெற்றார்! மொத்தத்திலே, தெய்வீகத் திருவருள் உற்றார்! குமரகுருபரர், ஐந்து வயதிலேயே துறவு வாழ்க்கை மேற்கொண்டார். தம் ஊரில் உள்ள கயிலை நாதரை நாள்தோறும் சென்று வழிபட்டார். அப் பெருமான் மீது, 'கயிலைக் கலம்பகம்' என்னும் சிற்றிலக்கியம் பாடினார் என்பர்! சில ஆண்டுகள் கழித்த பின்னர், குமரகுருபரர் தம் பெற்றோரிடம் விடை பெற்றார்; தலயாத்திரை செய்யப் புறப்பட்டார்; திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருச்சுழியல், திருக்கானப்பேர் முதலிய தென்னாட்டுத் தலங்களைக் கண்டு தொழுதார். இவர் புகழ் தென்பாண்டி நாடெங்கும் விரைந்து பரவியது!

### 3. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்:

சிவப்பதிச் செலவு மேற்கொண்ட குமரகுருபரர், திருப்பரங்குன்றத்தில் சில நாள் தங்கினார். வைகையாற்றங் கரையிலே வயங்கும் மதுரை மூதூரில், அந்நாளில், 'திருமலை நாயக்கன்' என்னும் மன்னவன் அரசு வீற்றிருந்தான். மதுரை மாநகரின் இயற்கைச் சூழலும், இறைவி அங்கயற்கண் அம்மையின் திருவருளும் குமரகுருபரர் உள்ளத்திலே இன்பத்தேன் பாய்ச்சின! குமரகுருபரர் மீனாட்சி அம்மை மீது பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றைப் பாடினார். மன்னவன் கனவிலே அன்னை அங்கயற்கண்ணி தோன்றினாள்! "திருப்பரங் குன்றத்தின் திருமடத்திலே முருகன் அருள் பெற்று முனிவன்—'குமரகுருபரன்' என்னும் புலவன்—தங்கியுள்ளான். அவன் என்மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியுள்ளான். அதனை இங்கே அரங்கேற்றுக; நான் கேட்க விரும்புகின்றேன்" என்று சொல்லி மறைந்தாள்! விழித்து எழுந்த வேந்தன் வியந்தான்! அமைச்சர் முதலியோரை அழைத்தான்; பரங்குன்றில் தங்கியிருக்கும் குமரகுருபரரைப் பல்லக்கில் ஏற்றி மதிப்போடு அழைத்து வருமாறு ஆணை இட்டான். அறிஞர் பெருகிய அவையிலே நூலை அரங்கேற்றம் செய்வித்தான்.

பிள்ளைத் தமிழ் நூல் பத்து பருவங்கள் கொண்டது. ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பத்துப் பாடல்கள் உண்டு. காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என்னும் பத்துப் பருவங்களை உடையது. இதில், வருகைப் பருவத்தில், 'தொடுக்கும் கடவுள் பழம் பாடல் தொடையின் பயனே!' என்று தொடங்கும் பாடல் ஒன்று உள்ளது. இப் பாடலுக்குக் குமரகுருபரர் விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது, திருமலைநாயக்கர் மடியில் அருச்சகர் மகள் வடிவில் ஒரு சிறுமி செய்யுளைக் கேட்டுச் சுவைத்துக் கொண்டிருந்தாள்; மன்னவன் கழுத்தில் கிடந்த முத்தாரத்தினைக் கழற்றி, குமரகுருபர முனிவர் கழுத்தில் அணிவித்து மறைந்தாள்! அச் சிறுமியாக வந்தவள், மீனாட்சி அம்மையே என்று அவையினர் வியந்தனர்; குமரகுருபரரின் திருவருள் திறத்தினைப் பாராட்டினர்!

4. நீதிநெறி விளக்கம்:

அரசன் திருமலை நாயக்கன் குமரகுருபர அடிகளாரைத் தன் அரண்மனைக்கு அழைத்தான்; பொன் இருக்கையில் இருக்கச் செய்து, பொன்னாலும் மணியாலும் அவர் திருமேனியை முழுக்காட்டினான்; அவர் திருவடிக்கு வீரக்கழல் அணிவித்தான்; யானை, குதிரை, பல்லக்கு, குடை, கொடி முதலிய விருதுகளையும், பரிசில்களையும் பணிவோடு வழங்கினான்; அங்கேயே சில நாள்கள் தங்குமாறு வேண்டினான்! மன்னவன் விரும்பியவாறே குமரகுருபரர் மதுரை அரண்மனையில் சில நாட்கள் தங்கினார். அப்பொழுது, அரசன் விரும்பியவாறே, அடிகளார் 'நீதிநெறி விளக்கம்' என்னும் அறிவுரை நூல் பாடினார். இதனைத் திருக்குறளின் பிழிவு என்பர்! சான்றாக ஒரு பாடல்:

"நீரில் குமிழி இளமை; நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள்! என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று."*

*குமரகுருபரர்: நீதிநெறி விளக்கம்: க. (கழக வெளியீடு-௬௦)

இந்த அழகிய சிற்றிலக்கிய நூலுக்குப் பரிசிலாக, மன்னவன், தண்பொருநை ஆற்றின் கரையில் உள்ள இருபதினுயிரம் சிறு பொன் வருவாய் உடைய 'அரிய நாயக புரம்' என்னும் ஊரினை, அடிகளுக்கு மனம் உவந்து வழங்கினான்!

5. மதுரைக் கலம்பகம்:

ஒரு சிறு நூல் பாடியதற்கு, மன்னவன் பெரும் பரிசில் வழங்கிய மாண்பினை முனிவர் உணர்ந்தார்; மதுரையிலே எழுந்தருளியுள்ள சோமசுந்தரப் பெருமானின் திருவருளை எண்ணி உருகினார்; அவர்மீது 'மதுரைக் கலம்பகம்' என்னும் மதிப்பு மிகுந்த நூலை ஆக்கினார். மேலும், அந் நாட்களிலே மீனாட்சி அம்மை மீது 'மீனாட்சியம்மை குறம்', 'மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை' முதலிய நூல்களையும் அடிகள் பாடினார் என்பர்!

மதுரை மன்னவனிடம் விடை பெற்ற அடிகளார், அன்பர் குழாம் புடைசூழ விருதுகளோடு வடபுலம் நோக்கிப் புறப்பட்டார்; வழியிலுள்ள பல திருப்பதிகளை வழிபட்டவாறே 'திருச்சி மாநகர்' வந்தடைந்தார். திருச்சி நாயக்க மன்னவன், குமர குருபர முனிவரின் பெருமைகளைத் தெரிந்து, வரவேற்றுப் போற்றினான். பின்னர், அடிகளார் 'தருமபுர ஆதீனம்' அடைந்தார். அங்கே, அப்போது, தவத்திரு மாசிலாமணி தேசிகர் அவர்கள் திருமடத்துத் தலைவராக விளங்கினார். குமரகுருபரர் அவரைக்கண்டு வணங்கினார். திருமடத்துத் தலைவர் அடிகளிடம், "'ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள' என்று தொடங்கும் பெரிய புராணத் திருப்பாட்டின் அனுபவப் பொருள் யாது?" என்று வினவினார். அப்பொழுது அடிகளாருக்கு ஒருவகைத் திகைப்பு தோன்றியது! திருச்செந்தூரில் அவருக்கு முருகன் அருளிய திருமொழி நினைவுக்கு வந்தது! உடனே குமரகுருபரர், அருள்திரு மாசிலாமணி தேசிகர் அவர்களின் திருவடியில் விழுந்து வணங்கினார்; தம் அறிவாசிரியரை (ஞான குருவை)க் கண்டு கொண்டேன் என்று களிப்புற்றார்; 'அடியேனை மாணவனாக ஏற்றுக்கொண்டு, உண்மை அறிவை உணர்த்தி அருள வேண்டும்' என்றார். மெய்யுணர்வு பெற விரும்பிய குமரகுரு

பரரின் நிலையினைத் தேசிகர் தெளிந்தார்; சிதம்பரம் சென்று திரும்புமாறு பணித்தார்.

### 6. திருவாரூர் நான்மணிமாலை :

ஆசிரியர் ஆணைவழி, மாணவர் தில்லை புறப்பட்டார். தருமபுர மடவளாகத்து முதல் தலைவரின் சீரூர் ஆகிய 'திருவாரூர்' காண விரும்பினார். அவ்வூர் சென்று, ஆரூர்ப் பெருமானை வழிபட்டார். அங்கே, 'திருவாரூர் நான்மணி மாலை' என்னும் நூலைப் பாடி அரங்கேற்றினார்.

### 7. முத்துக் குமாரசாமிப் பிள்ளைத் தமிழ் :

பின்னர், அடிகள் 'புள்ளிருக்கு வேளூர்' சென்றார்; அவ்வூரில் ஒரு திருமடத்திலே தங்கினார்; இரவிலே துயில் கொண்டார்; கனவு ஒன்று கண்டார். முருகன் ஆகிய 'முத்துக் குமரன்' தோன்றி, 'இங்கு வந்த நீ, என்னைப் பாடாதிருக்கின்றாய்! காரணம் என்ன?' என்று வினவி திருநீறு அளித்தான். உறக்கம் நீங்கி எழுந்த முனிவர், முருகன் திருவருளை எண்ணி எண்ணி வியந்தார்! பத்திச் சுவை மிகுந்த 'முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கியம் பாடினார்; திருக்கோவிலிலே முருகன் திரு முன்னரே நூலை அரங்கேற்றினார்.

### 8. சிதம்பர மும்மணிக் கோவை :

'தில்லை' என்று வழங்கப் பெறுகின்ற 'சிதம்பரம்' என்னும் திருத்தலத்தைக் குமரகுருபரர் நண்ணினார்; அங்கே 'சிற்றம்பலம்' என்று வழங்கப் பெறும் 'பொன்னம்பலம்' அடைந்தார்; கூத்தப் பெருமானின் திருவுருவைக் கண்டு வழிபட்டார்; உள்ளம் மகிழ்ந்து, 'சிதப்பர மும்மணிக் கோவை' என்னும் பாமாலை நூலைப் பாடினார்; கூத்தப்பிரான் திருவடிகளில் சாத்தினார். எல்லோரும் கேட்டு இன்புற்றனர்.

### 9. சிதம்பரச் செய்யுள் கோவை :

'தில்லை' மாநகரில் இருந்த புலவர் சிலர் ஓர் ஐயம் கொண்டனர்! 'குருபரர் யாப்பு இலக்கணம் அறிந்தவரோ?' என்னும்

வேட்கையை வெளிப்படுத்தினர். அவர்களின் ஐயத்தை, நீக்கும் நோக்கம் அடிகளுக்கு எழுந்தது! 'சிதம்பரச் செய்யுட் கோவை' என்னும் சிறந்த நூலாக, அது வெளிவந்தது! ஐயுற்ற புலவர்கள் அடிகளைப் பணிந்து மன்னிக்க வேண்டினர். மேலும், காரிகை போன்ற நூல்களில், யாப்பு இலக்கண மேற்கோள்கள் பெரும்பாலும் சமண சமயப் பாடல்களாகவே உள்ள நிலை மாறி, இந்நூலால், சிவநெறிப் பாடல்கள் மேற்கோள்கள் ஆகும் சிறப்புப் பெற்று விட்டன! அங்கே எழுந்தருளியுள்ள அம்மை மீது அடிகள், 'சிவகாமி யம்மை இரட்டை மணிமாலை' என்னும் நூலையும் பாடினர் என்பர்!

## 10. பண்டார மும்மணிக் கோவை :

தன் ஞானசிரியர் ஆணையிட்டவாறே, முனிவர் தில்லையில் நல்ல வழிபாடுகளை நிறைவேற்றினர்; தருமபுரம் திரும்பினர்; தேசிகரிடம் மெய்யறிவுரை (ஞானோபதேசம்) பெற்றார்! பின்னர் குமரகுருபரர் தம் உடல், பொருள், உயிர் ஆகிய மூன்றையுமே தேசிகர்பால் ஒப்படைத்தார்; அவர்மீது, 'பண்டார மும்மணிக் கோவை' என்னும் பைந்தமிழ் நூலைப் பாடினர்; தாம் பரிசுகளா கவும், விருதுகளாகவும் பெற்ற பொருள்களை எல்லாம் தேசிகர் திருவடியில் வைத்து வணங்கினர்! தருமபுர ஆதீனத் தலைவர், அவற்றை, குமரகுருபர அடிகளிடமே திரும்பக் கொடுத்தார்; வடக்கே 'காசி' சென்று, நம் ஒப்பற்ற சித்தாந்தச் சிவநெறி யினையும், செந்தமிழ் மொழியினையும் பரப்பும் முறையிலே அவற்றால், பல நல்லறங்கள் செய்யுமாறு பணித்தார்! அவ் வாறே, குமரகுருபரர் வடபுலச் செலவு மேற்கொண்டார். வழி களிலே, பல பதிகளையும் வணங்கியவாறே சென்று 'காசி மாநகர்' கண்டார்.

## 11. காசிக் கலம்பகம் :

அடிகள், காசியில் தங்கினர்; 'காசிக் கலம்பகம்' என்னும் காசற்ற நூலைப் பாடினர். காசியில், தம் ஆசிரியர் கட்டளை யிட்டவாறே, பல அறங்களையும் புரியக் கருதினர். அதற்கு

ஏற்றதொரு இடம் பெற அவாவினர்; காசி நகரின் மன்ன வனைக் கண்டு, அவனிடம் அதனைப் பெற விரும்பினர். அவனே, முகமதிய அரசன்! அவனேடு உரையாட, அவன் மொழியாகிய 'இந்துத்தானி' தெரிய வேண்டும்!

12. சகல கலா வல்லி மாலை :

குமர குருபர அடிகள் இந்துத்தான மொழியிலே வல்லமை பெறக் கருதினர்; கலைமகளின் திருவருளை வேண்டினர்! 'சகல கலாவல்லி மாலை' என்னும் பதிகம் பாடினர்; ஓர் அரிமாவின் மேலேறிச் சென்று, காசி வேந்தனைக் கண்டார்! முகமதிய மன்னவன் அடிகளின் திருவருள் பேற்றினையும், மிக்க தவ ஆற்றலினையும், கடல் அனைய கல்வி நலனையும், ஒழுக்க மாண் பினையும் கண்டு, மிக மிக வியந்தான்! முனிவர் வேண்டிய இடத்தை எடுத்துக்கொள்ளுமாறு ஆணை இட்டான். அந்த ஆணையைப் பெற்ற அடிகளார், காசியில் திருமடம் ஒன்றை அமைத்தார். அங்கே தங்கியிருந்து அறப்பணிகள் புரிந்தார்.

காசியிலே 'குமாரசாமி மடம்' என்னும் திருமடத்திலே குமர குருபர முனிவர் பல்லாண்டுகள் தங்கினர். இந்துத்தானி மொழியிலே பல சொற்பொழிவுகள் ஆற்றினர்; சிறப்பாக, வட நாட்டு மக்களுக்குத் தமிழ்மொழியில் வழங்கும் கம்ப ராமா யணத்தின் சிறப்பினை அறிவுறுத்தினர். இவர் பொழிவு கேட்டு நாள்தோறும் உவந்தவர்களில், 'துளசிதாசர்' என்னும் புல வரும் ஒருவர் ஆவர்! அவரே, பின்னுளில் இந்தியிலே, 'இராமா யணம்' பாடினர் என்பர்! அதுவே, இன்று 'துளசிதாசர் இராமா யணம்' என்று வழங்கப் பெறுகின்றது. அடிகளின் காசி மடத்து வருவாயிலேயே 'திருப்பனந்தாள் திருமடம்' வளர்ந்தோங்கி யுள்ளது! இவ்வாறு, செந்தமிழையும் சிவநெறியையும் வளர்த்த குமரகுருபரரின் இன்னுயிர் காசி மாநகரிலேயே ஒரு வைகாசித் தேய்பிறை நாளில் இறைமை உற்றது என்பர்.

குமரகுருபரர் இப் பன்னிரு சிற்றிலக்கியங்களை அருளிய தோடு (i) மதுரை மீனுட்சி யம்மை குறம், (ii) மீனுட்சி யம்மை இரட்டை மணிமாலை, (iii) தில்லைச் சிவகாமி அம்மை இரட்டை

மணிமாலை ஆகிய மூன்று நூல்களையும் பாடினார் என்பர்! எனவே, குமரகுருபரர், பொருநை நாட்டின் 'திருவைகுந்தம்' என்னும் திருப்பதியிலே பிறந்தார்; பொன்னி நாட்டின் தருமைத் திருமடத்திலே மெய்யறிவு பெற்றார்; கங்கை நாட்டின் காசி நகரிலே புகழ் பரப்பிச் சிறந்தார்; இறைமை உற்றார்!

கி. பி. 11 ஆம் நூற்றாண்டிலே, 'காவிரி நாடு' ஆண்ட இராசேந்திர சோழன், கங்கை யாறு வரை படை எடுத்துச் சென்றான்; வென்றான்; இமயத்திலே புலிக்கொடி நாட்டினான்; 'கங்கை கொண்ட காவலன்' என்று போற்றும் பெருமை ஈட்டினான்! ஆனால், கி. பி. 17 ஆம் நூற்றாண்டில், 'பொருநை நாடு' பெற்ற குமரகுருபர அடிகளார், 'கங்கை' வரை சென்றார்; தம்மை எதிர்த்த கவிஞர்கள் எல்லோரையும் தம் சொல்லாற்றலால் வென்றார்; காசி மன்னவனையும் தம் அருள் படுத்தினார்! 'கங்கை கொண்ட புவிக் காவலன்' ஆகிய சோழ மன்னவன் அன்று இமயத்தில் பொறித்த இலச்சினை இன்று நம் கண்களுக்குத் தெரியவில்லை! ஆனால், 'கங்கை கொண்ட கவிக் காவலர்' ஆகிய குமரகுருபரர், காசியில் அமைத்த 'குமாரசாமி மட'மும், அதன் வழியிலே தோன்றிய 'திருப்பனந்தாள் திருமட'மும் இன்றும் அறப்பணிகள் ஆற்றி வருவதைப் பார்க்கின்றோம். அவை, குமரகுருபரரின் 'அருட் பேராற்றலை' இன்றும் முரசு அறைந்து கொண்டிருக்கின்றன!

## (iv) நம்மாழ்வார்

பொருநை ஆற்றின் தென்கரையிலே புகழ்வாய்ந்த திருமால் திருப்பதி 'ஆழ்வார் திருநகரி' ஆகும். இது, திருவைகுண்டத்தின் கிழக்கே திருச்செந்தூர் செல்லும் பெருவழியிலே அமைந்துள்ளது. இவ்வூரின் பழைய பெயர், 'திருக்குருகூர்' என்பது. இவ்வூரைச் சுற்றிய வட்டாரம், அந்நாளில் தென் பாண்டி நாட்டின் ஒரு பகுதியாக 'திருவழுதி வளநாடு' என்னும் பெயர் பெற்றுத் திகழ்ந்தது. இந்த வளநாட்டிலே 'நவதிருப்பதிகள்' என்று புகழ் பெற்ற ஒன்பது திருமாலியத் திருப்பதிகள் உள்ளன. இவற்றுள் திருக் குருகூரின் ஒரு பக்கத்தே 'அப்பன்

கோவில்' அமைந்துள்ளது! அங்கே குறுநில மன்னர்களின் புகழ் வாய்ந்த 'வேளாளர் குடி' ஒன்று விளங்கியது!

இந்த அரசர் குடி வழியிலே திருவழுதி வள நாடர் மரபிலே 'போர்க்காரி' என்னும் மன்னவர் பெரும் புகழோடு விளங்கினர்; அந் நாளில், 'நாஞ்சில் நாடு' எனப்படும் 'நாகர் கோவில்' வட்டாரத்தில் உள்ள 'திருவண்பரிசாரம்' என்ற 'திருப்பதி சாரம்' என்னும் திருநகரில், 'திருவாழ்மார்பர்' என்னும் மாண்பாளர் வீறுடன் விளங்கினர். அவர் திருமகளார் 'உடைய நங்கை' என்பாளைக் 'காரியார்' திருமணம் புரிந்து களிப்போடு வாழ்ந்தார்! ஆயினும், அன்னவர்களுக்குப் பல்லாண்டுகள் மகப்பேறு வாய்க்கவில்லை! ஒருமுறை, திருவண்பரி சாரத்திலிருந்து, திருக்குருகூர் வரும் வழியிலே, மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த 'மகேந்திரகிரி' மலையடிவாரத்தில் நம்பியாற்றங்கரையிலே அமைந்துள்ள 'திருக்குறுங்குடி'யிலே, காரியாரும் உடைய நங்கையாரும் தங்கினர்; அங்கே கோவில் கொண்டுள்ள 'நம்பி' என்னும் பெருமானை நம்பினர்; வணங்கி வரங்கிடந்து, மகப்பேறு அருள வேண்டினர்! 'வானவாமலை' (நான்குநேரி) வழியே திருக்குருகூர் வந்தனர். இறைவன் 'நம்பி' அருள் கிடைத்தது! 'உடையநங்கை' ஒரு வைகாசி விசாக நாளிலே—முழு நிலா வெள்ளிக் கிழமை—ஓர் ஆண் குழந்தை பெற்றாள். குழந்தையோ அழவில்லை! கண் திறக்கவில்லை! கைகால் அசைக்கவில்லை! ஆனால், உயிரோடு இருந்தது! தாய்ப் பால் பருக வில்லை! ஆயினும், குழந்தை வாட்டமின்றி, அழகும் ஒளியும் திகழ விளங்கியது! பெற்றோரும் மற்றோரும் வியந்தனர். உலக இயல்புக்கு மாறாக இக் குழந்தை உயிர்ப்புற்று விளங்கியது! ஆதலின், 'மாறன்' என்றும் 'காரி மாறன்' என்றும் பெயர் சூட்டுவார் ஆயினர். 'சடகோபர்', 'பராங்குசர்', 'வகுளாபரணர்' என்னும் பெயர்களையும் சாற்றினர்; இக் குழந்தையைக் கண்ட பெற்றோர் வியப்பில் மூழ்கினர்! குழந்தையை இன்ன செய்வதென்று தெரிந்திலர்! பிறந்த பன்னிரண்டாம் நாள், ஊரிலே பெருமாள் கோவிலுக்குக் குழந்தையை எடுத்துச் சென்றனர்! ஆதிநாதப் பெருமாள் திருக்கோவிலிலே, இறைவன் திருமுன்னர்க் குழந்தையைக்

கிடத்தி வழிபாடு இயற்றினர். என்னே வியப்பு! அசை யாது ஆடாது கிடந்த குழந்தை குறுகுறு என்று தவழ்ந்தது! கோவிலுக்கு வடக்கே இருந்த புளியமரம் நோக்கி விரைந்தது! பெற்றோரும் உற்ருர் உறவினர்களும் உள்ளம் பூரித்து வாழ்த்தினர்! ஆனல், மரத்தடிக்குச் சென்ற குழந்தை, 'தாமரை ஆசனம்' இட்டுத் தெற்கே முகம் நோக்கி, ஒரு 'குழந்தை யோகி' போல, கண்களை மூடித் தவநிலையில் மூழ்கி விட்டது! இவ்வாறே, கண்களையும் வாயையும் திறவாமல், புளிய மரத்து அடியிலேயே, பதினறு ஆண்டுகள் 'மாறன்' கடுந்தவம் புரிந்தார்! உண்ணவில்லை; உறங்கவில்லை; ஆயினும், பருவத் திற்கேற்ப அழகு ஒளிர வளர்ந்து வந்தார்! இவரே, 'நம் ஆழ்வார்' ஆனர்!

'திருக்குருகூர்' பக்கத்திலே 'திருக்கோளூர்' என்னும் திருப் பதி உள்ளது. அங்கே வேதியர் குடியிலே தோன்றிய பெரியவர் ஒருவர், வேதங்களையும் விழுமிய சமய நூல்களையும் கற்ருர்; கவிபாடும் ஆற்றல் உற்ருர்; திருமால் பக்தியிலே திளைப்புற்ருர்; 'காரி மாறன்' பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, வட நாட்டுத் திருப்பதிகளை வணங்கி வரச் சென்றிருந்தார். அவ ருக்கு அப்பொழுது, அகவை ஐம்பது! வடக்கே அயோத்திலே தவயோகம் செய்துகொண்டு இருந்தார்! தெற்கே, ஒரு 'பேரொளி' தெரிவதைக் கண்டார்! அப் பேரொளியை நேரில் காணத் தெற்கே திரும்பி, பலநாட்கள் வழிநடந்து, விரைந்து வந்தார்! தண்பொருநை ஆற்றங்கரையிலே குருகூரிலே அப் பேரொளி ஒடுங்குவதைக் கண்டார்! திருக்குருகூர் வந்தார்!! யோகம் புரிந்து தவங்கிடந்து குறிநாடி - நெறிதேடி - வடக்கே சென்றுகொண்டிருந்த பெரியவர், தம் ஊரின் பக்கத்திற்கே திரும்பி வந்துவிட்ட நிலை கண்டு வியந்தார்! திருக்குருகூர் நிகழ்ச்சி தெரிந்தார். அரசனுக்கும் அரசிக்கும் ஆறுதல் தெரிவித்தார்; புளிய மரத்து இளம் யோகியே, தம் வளம் மிகுந்த அறிவாசிரியர் (ஞானகுரு) என்று கண்டுகொண்டார்! அன்பர்கள் வாழ - அனைத்துலகும் உய்யப் பிறந்துள்ள தவ மாண்பினர் பக்கம் சென்ருர், "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கேகிடக்கும்?" என்ற

கேள்வியை எழுப்பினுர்! என்னே வியப்பு! கண் திறவாத யோகி, கண்களைத் திறந்தார்! பேசாத தவமாண்பினர், முதல் முறையாக வாய் திறந்து பதில் பேசினுர்!! "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்ருர்! தவ இளைஞர் விடை, கிழவர்க்கு 'குருபக்தி'யை மிகுவித்தது! ஏங்கிக்கிடந்த பெற்ருேர்க்கு, இன்பத்தேன் பருகியது போன்ற மகிழ்ச்சியை ஊட்டியது! பெற்ருேர் திருக்கோளூர் முனிவரின் கால்களில் விழுந்து பணிந்தனர்; "அறிவறிந்த மகனின் பெருமை தோன்ற பேசவைத்த புண்ணியனே!" என்று போற்றினர். காரிமன்னன் பொன்னையும் மணியையும் அவர்முன் பரிசாகக் குவித்தான். மக்கள் உள்ளம் எல்லாம் களிப்பில் ஆழ்ந்தன!

'ஆண்டவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர்' என்று சொல்லப்பெற்ற 'ஆழ்வார்கள் பன்னிருவர்' ஆவர். அவர்களில், 'நம்மாழ்வார்' என்னும் நயத்திற்கு உரியவர், பொருநைக் கரை தந்த பெரியவர்—திருக்குருகூர் புளியமரத்து அடியவரே ஆவர்! இவர் அருளிய தமிழ் அமிழ்தைப் பருகிய எவரும், இவரை 'நம்மவர்' என்றே வழிபடுவார். எனவே, இவர் ஒரு சமயத்தவர்க்கோ, ஓர் இனத்தவர்க்கோ, ஒரு நாட்டவர்க்கோ மட்டும் உரியவர் அல்லர்! இவர் எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லா இனத்தவர்க்கும், எல்லா நாட்டவர்க்கும் உரியவரே ஆவார். ஆதலின், எல்லோரும் 'நம்–ஆழ்வார்' என்று போற்றும் பெரியவர் ஆனுர்! ஆதலின் தமிழ்நாடு அளித்த பெருவாழ்வு ஆகிய இத் தவமாண்பினரை, 'என்-ஆழ்வார்' என்ருே, 'எம்-ஆழ்வார்' என்ருே வணங்கி இன்புருது, உலகத்தவர் அனைவரையும் உளப்படுத்தி, எல்லோரும் 'நம்–ஆழ்வார்' என்றே நவின்றனர். இவர் மெய்ந்நெறி வழங்கிய மேலோர் ஆனுர். இந்த அருளாசிரியர், ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்த மாணவர் ஆகிய திருக்கோளூர்ப் பெரியவரும் ஓர் ஆழ்வாரே ஆவர்! அவர் தென்திக்குப் 'பேரொளி' வழிகாட்ட, தம் மெய் அறிவு ஆசிரியரைத் திருக்குருகூரில் வந்து கண்டு கொண்டார். அவரே 'மதுரகவி ஆழ்வார்' ஆனுர். எனவே, 'பகவானுடைய குணங்களில் ஆழ்ந்திருந்த ஆழ்வார்'களில், இருவர் நம் 'பொருநைக் கரை தந்த புண்ணியர்' ஆயினர்!

காரியாரும் உடையநங்கையாரும், 'மெய்ப் பொருளின் முடிவு கண்ட தம் மகனுர், வேதம் தமிழ் செய்த மெய்யன்' என்று தெரிந்துகொண்டனர்! இப் பேரொளியை உலகிற்கு உணர்த்திய பெருமை 'மதுரகவி ஆழ்வாரை'யே சாரும். எனவே, தம் நன்றி உணர்வினைப் பின்வருமாறு பன்னினர் :

"நீர்செய்த பாக்கியம்இந் நீள்நிலத்தில் செய்தவர்யார்?
பார்செய்த பாக்கியமாம் பாவலர்கள் கோமானை
இடைவிடா(து) ஆராதித்(து) ஏத்தினீர்; எங்களுக்(கு)
உடையவர் நீர்அல்லால், ஒருவர் உண்டோ?"

மதுரகவி ஆழ்வார் தம் ஐம்பதாவது அகவையிலே பேரொளிப் பிழம்பாம் பதினறு அகவை ஞானகுருவால் ஆட்கொள்ளப்பெற்ருர்! ஒரு வேதியர்க்கு, ஒரு வேளாளர் மெய்யறிவு உணர்த்தும் மேலாசிரியர் ஆனுர்! இறைவனது அழகிய குணங்களை 'நம் மாழ்வார்' பாடுவார். மாணவர் மதுரகவியார் அவற்றை ஏடு எழுதுவார். இவ்வாறு, மேலும் பத்தொன்பது ஆண்டுகள் பாடிப்பாடி நான்கு பிரபந்தங்களை வெளியிட்டார், நம்மாழ்வார்!

"எண்ணிரண்(டு) ஆண்டாக எறும்புசக் கடியாமல்
கண்ணின் மணியாக"த்

தாய்தந்தையர் பாதுகாத்தனர்; பின்னர்த் தம்மிடம் ஒப்படைத்த புளியமரத்தடி தவமாண்பரை, மாணவப் பெரியார் மதுரகவியார், தாமே தாய்தந்தையர் நிலையிலிருந்து பேணினுர்; அவர் அருளிய நால் வேதத்து உட்பொருளாம் நற்றமிழைப் பத்தொன்பது ஆண்டுகள் கண்ணின் இமை போலக் காத்து வந்தார். நம்மாழ்வார் முப்பத்தைந்து ஆண்டுகள் குருகூரிலே வாழ்ந்தார். அவர் திருமால் திருவருளிலே ஒன்றிய பின்னர், மதுரகவி ஆழ்வார் நெடுங்காலம் வாழ்ந்தார்; தம் ஞானசிரியர் விரும்பியவாறே, ஆழ்வார்கள் அனைவரும் அருளிய 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் திருமாலியச் செந்தமிழ்ப் பாக்களை நானிலம் அறியச் செய்தார்; சிறப்பாக, நம்மாழ்வார் அருளிய நான்கு நூல்களையும் ஓதி ஓதி உலகத்தவர்களுக்கு உணர்த்தி வந்தார். 'குருபக்தி' என்னும் உயர்பண்புக்கு, 'மதுரகவி ஆழ்

வார்' சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகின்றார்! இவர், தம் ஆசிரியர் ஆகிய நம்மாழ்வாரே 'எல்லாம் வல்ல இறைவன்' என்று கருதினர்; 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்று தொடங்கும் பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட பாசுரம் பாடினர்; பரம் பொருளை மிக எளிதாகவே தம் அகக்கண் கொண்டு கண்டு களித்தார்! ஆசிரியர் அருளால், தூய ஒளி நெறியை அறிந்து துய்த்தார். தம் குருவையே தெய்வமாகக் கொண்டார்.

"தேவுமற்(று) அறியேன் குருகூர் நம்பி!;
பாவின் இன்னிசை பாடித் திரிவனே"*

(கண்ணி நுண் சிறுத்தாம்பு: 2)

நம்மாழ்வார் வாயிலிருந்து பொங்கி எழுந்து வந்த அமுதப் பாடல்களை, மதுரகவி ஆழ்வார் பட்டோலை கொண்டு எழுதி வந்தார். அவை (i) திருவிருத்தம், (ii) திருவாசிரியம், (iii) பெரிய திருவந்தாதி, (iv) திருவாய்மொழி என்பன. நம்மாழ்வார் பற்றிய கருத்துகளில், எஃது உண்மையாக நடந்தது? எது கதையாக வளர்ந்தது? என்று பிரித்து அறிய இயலவில்லை! நம்மாழ்வாரை 'உயிர்' என்றும், பிற ஆழ்வார்களை 'உடல் உறுப்புகள்' என்றும் கொள்கின்றனர். எனவே, ஆழ்வார்களில் தலை சிறந்தவர், 'நம்மாழ்வாரே' என்று நவில்கின்றனர். ஆதலின், 'ஆழ்வார்' என்ற பொதுப் பெயர், 'நம்மாழ்வார்' ஒருவரையே சிறப்பாகக் குறிப்பிடும் என்பர்! இதனாலேயே, இவர் பிறந்த திருக்குருகூர் 'ஆழ்வார் திருநகரி' என்னும் பெயரால் அழைக்கப் பெறுகின்றது.

நம்மாழ்வார் வாழ்க்கை விளக்கம், அவருடைய பாக்களின் வழியே அறியக் கிடக்கின்றது. 'குருபரம்பரை' என்னும் நூலில் காணப்படும் 'ஆழ்வார் கதைகள்' ஆராய்ச்சிக்கு உரியனவாகவே உள்ளன! கவி வழியாகவும், செவி வழியாகவும் 'நம்மாழ்வார்' கொள்கைகளையும் குறிக்கோள்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வருகின்றனர்; அவற்றால், 'நம்மாழ்வார் உண்மை வரலாறு' ஓர்ந்து கொள்ளலாம். குருபரம்பரைக்

* 'நாலாயிரத் திவ்விய ப் பிரபந்தம்' (மயிலை மாதவதாசன்): 938.

கதைகள் நம்மாழ்வாரை ஓதாது உணர்ந்த ஓர் உயரிய பெரியோராகவே குறிப்பிடுகின்றன. ஆனால், அவர் தம் அருட் பாடல்கள் அவர் முறையாகக் கற்ற மூதறிஞர் என்றே காட்டு கின்றன; திருக்குறள், நாலடியார், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றைத் துறைதொறும் கற்றுத் துணிந்த தூயவர் என்றே துலக்குவதைக் காணலாம். 'பதினாறு ஆண்டுகள் புளியமரத்து அடியிலே உலகம் அறியாதவராக ஊமையாக இருந்தவர், மதுரகவியாரை மாணவராகப் பெற்ற பின்னர், உலகியல் நுட்பங்களைப் பாடினார்; அன்பு வெள்ளம் பாக்களில் பொங்க வைத்தார்; செந்தமிழ் நடையிலே பாமழை பொழிந் தார்; சமய அறிவு, மெய்ப்பொருள் அறிவு வழியும் அருட்பா அருவிகளாகக் கொட்டினார்! இன்ன பிற கதைகள், எல்லாம் இறையருள் - அருட்செயல் - அற்புதங்கள் என்று காட்டுவதற் காகக் கட்டப்பெற்ற கற்பனை மாளிகைகள் என்பது ஆராய்ச்சி யாளர் துணிபு.

மதுரகவி ஆழ்வார் அயோத்தியில் இருந்தபொழுது விண்ணிலே ஒரு பேரொளி கண்டு, அதைப் பின் பற்றி வந்து, திருக்குருகூரில் புளியமரத்து அடியில் ஆழ்வாரைக் கண்டு தொழுத கதை, புகழ் பெற்ற 'கிறித்தவக் கதை' ஆகிய 'தேவ குமரன் பிறந்தபொழுது விண்ணிலே ஒளி தோன்றி அறிஞர்கள் வந்து தெய்வக் குழந்தைக்குக் காணிக்கை செலுத்திய நிகழ்ச்சி'யை நினைப்பூட்டுகின்றது இல்லையா? நம்மாழ்வார் பாடல்களில் காணப்பெறும் இயற்கையழகு—செயற்கை அழகு வருணனைகள், அவர் தமிழகம் முழுவதும் பெருநடைச் செலவு மேற்கொண்ட பட்டறிவினையே காட்டுகின்றன! நம்மாழ்வார் பாடல்கள், 'நாலாயிரப் பிரபந்தம்' என்னும் நூலிலே, மேலா யிரமாகவே மிளிர்கின்றன.

(i) திருவிருத்தம் :

நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் இந் நூலிலே உள்ளன. இஃது ஓர் அகத்துறை இலக்கியம் போல் அமைந் துள்ளது! ஆயினும், பிறவி நீக்கத்தை விரும்பி, உலகக்

கட்டிலிருந்து விடுபடவே வேண்டுகின்றார்; விண்ணப்பிக் கின்றார்!

“பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்(கு)உடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்,
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்; இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய்; அடியேன் செய்யும் விண்ணப்பமே”*

இதனை வடமொழியிலே உள்ள ‘இருக்கு’ என்னும் வேதத்தின் சாரம் என்பர்!

(ii) திருவாசிரியம் :

இந்நூல், 9 முதல் 16 அடிவரையுள்ள ஏழு (7) ஆசிரியப் பாக்களால் அமைந்துள்ளது. இதில், இறைவன் அருட் குணங்களிலே பரமானந்தம் பொலிய, நம்மாழ்வார் அனுப வித்து நுகர்ந்து பாடியுள்ளார்; தம் இடையறாத தவவுணர்விலே கண்ட அருள் கோலத்தைச் சொல்லோவியமாக வெளியிட் டுள்ளார். இதனை வடமொழியாளர், ‘யசுர்’ வேதத்தின் சாரம் என்பர்!

(iii) பெரிய திருவந்தாதி :

இந்நூல் ‘வெண்பா’ யாப்பில் அமைந்த 87 பாடல்களைக் கொண்டுள்ளது. இதில், உள்ள சிந்தனை பலவும், பெருமானை அடைய எழுந்த வேட்கையைப் புலப்படுத்துகின்றன. தன் நெஞ்சுக்கே உணர்த்துவனவாகவும், பிறர்க்கு உணர்த்துவன வாகவும் இதில் உள்ள பாடல்கள் அமைந்துள்ளன; பாடல்கள் அந்தாதித் தொடையிலே அமைக்கப் பெற்றுள்ளன. இவை பத்திச் சுவையை மிகுவிக்கின்றன. இதனை, வடமொழி ‘அதர்வண’ வேதம் போன்றது என்பர்!

(iv) திருவாய்மொழி :

இந் நூலில், 1102 பாடல்கள் அடங்கியுள்ளன. ஆழ்வார் களில் ‘நம்மாழ்வா’ரைச் சிறப்பாகக் கொண்டாடுவர்! அது

* நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மயிலை மாதவ தாசன்): 2478.

போலவே, 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் நூலிலே, இறுதி ஆயிரமாக உள்ள 'திருவாய் மொழி'யைச் சிறப்பாகப் பாராட்டுவர். இதனைச் 'செந்தமிழ் வேதம்' என்றும், 'திரு மாலியச் சிந்தாந்தத்திற்கு உரிய பிரமாண நூல்' என்றும் போற்றுவர். இந்நூல் இசையோடு பாடுவதற்கு என்றே அமைந்தது. ஆதலின், இதனை வடமொழியின் 'சாமவேதம்' என்னும் இசைநூலோடு ஒப்பிடுவர்! இதனைத் 'தமிழ் உபநிடதம்' என்றும் சாற்றுவர்!

நம்மாழ்வார், இறையருளால் அறிவு பெற்று, இறைவனோடு பிரிவின்றியே வாழ்ந்தார். பல வகைகளிலும் இறைவனோடு கலந்து நின்ற பட்டறிவே, இவர் பாடல்களில் பட்டொளி வீசுகின்றது. சான்று இதோ பாருங்கள்: "கண்ணன் என்னுடைய சூழல் உளானே; என் அருகில் இலான்; என்னுடன் ஒழிவு இலன்; என் ஒக்கலையான்; என் நெஞ்சின் உளான்; என் தோள்இணையான்; என் நாவின் உளான்; என் கண்ணின் உளான்; என் நெற்றி உளான்; எனது உச்சி உளானே." இதனால் நம்மாழ்வார் இறைவனோடு ஒன்றி நின்று பாடியுள்ள உணர்வு புலனாகின்றது அல்லவா?

திருவாய் மொழிப் பாடல்களை, 'தோழி பாசுரம்', 'தாய் பாசுரம்', 'மகள் பாசுரம்', 'தலைவி பாசுரம்' என்று பாகு படுத்தலாம். ஆயினும், இவற்றுள் பெரும் பகுதி, 'தலைவி பாசுரமே' ஆகும். இவை, புனைந்துரைக் கற்பனைகளே; ஆயினும், பட்டறிவின் வெவ்வேறு நிலைகளே எனலாம்! நம்மாழ்வார், மத ஒருமைப்பாடு கண்ட மாண்பாளர்; இனம் குலம் கடந்த ஏந்தல்; மெய்வருத்தி உழைத்து வாழ வற்புறுத்திய தவத்தர்; தண் பொருநைக் கரை தந்த தலை சிறந்த தவமாண்பினர். 'வாழ்க அவர் ஒளிநெறி; வளர்க அவரது நெறிமுறை.'

சான்றுக்கு ஒரு பாடல் பார்க்கலாம்: "புலவர்களே வாருங்கள்; உங்கள் உடம்பை வருத்தி, கைத்தொழில் செய்து உழைத்து, வாழுங்கள்; இந்த நிலை பெற்ற உலகினில் இப்பொழுது எவருமே செல்வர் இல்லை! இதனை நன்கு கண்டு கொண்டோம்; ஆதலின், உங்கள் இனிய கவிதைகளைக்

கொண்டு உங்கள் உங்கள் விருப்ப தெய்வத்தை வழிபட்டால், அஃது எம்முடைய—செம்மையான பேரொளி விளங்கும் திரு முடியினை உடைய இறைவர் திருமால் அவர்களின் திருவடி களில் சென்று சேருமே''. ஆ! இப் பாடலின் ஒருமைப் பாட்டையும் அருமைக் கருத்துகளையும் உன்னுங்கள். "நீங்கள் விரும்பிய மதத்தைப் பின் பற்றுங்கள். ஆனால், உழைத்து வாழுங்கள்.'' ஆ! உழைத்து வாழவேண்டிய உணர்வினை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறியுள்ளார்! பாருங்கள்:

''வம்மின்; புலவீர்! நும் மெய்வருத்திக் கைசெய்(து) உய்ம்மினோ;
இம்மன் உலகினில் செல்வர் இப்போ(து) இல்லை! நோக்கினோம்
நும்இன் கவிகொண்டு நும்நும் இட்டாதெய்வம் ஏத்தினல்,
செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேருமே!''*

பொருநை நாட்டுப் பிற பெரியவர் சிலர் :

இவ்வாறு, பொருநைக் கரையிலே தோன்றிய பெரிய வர்கள்—தவமாண்பினர்—பலர் ஆவர். அவர்களில் இன்னும் ஒரு சிலரைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது இன்றியமையாதது ஆகும். அவர்கள் முற்காலத்தினர்—பிற்காலத்தினர்—இக் காலத்தினர் என்னும் மூவகையினர் ஆவர். அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டிற்கும் ஆற்றிய தொண்டுகள் அளவில எனலாம்! அவர்களால், 'தமிழர் பண்பாடும், தமிழ் நாகரிகமும்' தரணிக்கு உணர்த்தப் பெற்றன. அவர்களின் விரிந்த கொள்கைகளும், சிறந்த குறிக்கோளும் உலகிற்கு விருந்தாக வழங்கப்பெற்றுள்ளன. அதனால் ஏற்றத்தாழ்வு மிகுந்த கரடுமுரடான இச் சமுதாயக்காடு, அன்பு வாழ்விலே திளைக்க—அமைதிப் பொழிலை அமைக்க—வழிகாட்டப் பெற்றுள்ளன எனலாம்.

புறநானூறு போன்ற சங்ககால இலக்கியங்களிலே பாண்டிய மன்னர் சிலர் பாவலர்களாக விளங்கினர்; 'நம்பி' என்னும் பெயர் திருக்குறுங்குடி வட்டாரத்திற்கே உரியது.

* நாலாயிரத் திவ்விய ப் பிரபந்தம்: (திருவாய்மொழி): மயிலை மாதவ தாசன்: 2990.

"பாண்டியன் அறிவுடை 'நம்பி'" என்னும் காவலன், சிறந்த பாவலன் ஆக விளங்கியுள்ளான்! கொற்கை வட்டாரத்திற்கு அருகே, 'மாரூகம்', 'மாறமங்கலம்' என்னும் ஊர் உள்ளது! 'மாரூக்கத்து நப்பசலையார்' என்னும் பெண்பாற் புலவர் சங்க இலக்கியப் பாவலராகத் திகழ்கின்றார். 'தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்' வழங்கியவர் 'பனம் பாரனார்' ஆவர். இப் பொருநை நாட்டிலே 'பனம்பாரம்'—பனம்பாரை—என்னும் ஊர் இன்றும் உள்ளது! 'அதங்கோடு' இன்று 'திருவிதாங் கோடு' ஆகி, திருவனந்தபுரமாகத் திகழ்கின்றது! இஃது இப் பொருநை நாட்டின் பொதிகைமலையின் மேற்குச் சாரலிலே அமைந்துள்ளது. தொல்காப்பியம் 'அதங்கோட்டாசான்' முன்னிலை யிலே அரங்கேற்றம் பெற்றது! இவ்வாறு, முற்காலப் புலவர்கள் பலர், பொருநை நாட்டிலே புகழ்கொண்டு திகழ்ந்தனர் என்பது புலனாகும். இனி, பொருநை நாட்டுக்கு உரிய பிற்காலப் பெரி யோர் சிலரைப் பார்க்கலாம்:

### 1. திருமங்கை ஆழ்வார்:

சோழநாட்டில் 'திருமங்கை' என்னும் நகரில் சிற்றரசர் ஒருவர் திகழ்ந்தார்; அவர் 'குமுதவல்லி' என்னும் நல்லவளைத் திருமணம் செய்து வாழ்ந்தார். மனைவி சொல் கடவாத மாண் பாளராக, பல அறங்கள் புரிந்தார். சோழப் பேரரசின் தானைத் தலைவர் ஆனார்! திருமாலிடம் பெரும் பத்தி கொண்டார்; ஆதலின், திருவரங்கம் பெரிய கோவிலின் எழில் மதில்களைக் கட்டினார். அதற்காகக் களவு செய்தார்; கொள்ளை அடித்தார்; வழிப்பறி செய்தார்! பல தலங்களிலும் உள்ள திருமால் திருப் பதிகளுக்குச் சென்று வழிபட்டார். இவர் பாடியனவாக 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்' என்னும் ஆழ்வார் பாடல்கள் அமைந்த நூலிலே, 'ஆறு பிரபந்தங்கள்' உள்ளன. அவை (i) பெரிய திருமொழி, (ii) திருக்குறுந்தாண்டகம், (iii) திரு நெடுந்தாண்டகம், (iv) திருவெழு கூற்றிருக்கை, (v) பெரிய திருமடல், (vi) சிறிய திருமடல் என்பன. இவர் தனி வாழ்க்கை பாராட்டத் தகுந்தது இல்லை! ஆயினும், திருமால் பேரருளால் ஆட்கொள்ளப்பெற்று, செந்தமிழ்ப் பாக்கள்

பாடினர். இறுதியிலே, இவர் நம் பொருநை நாட்டிற்கு வந்தார்; திருக்குறுங்குடியிலே உள்ள பெருமாள் 'நம்பி'யை வழிபட்டுத் தொழுதார்! அங்கேயே இறைமை உற்றார்! இவரே, 'திருமங்கை ஆழ்வார்' எனப்படுவார். இன்றும் 'திருக்குறுங்குடி' என்னும் ஊரிலே, இந்த ஆழ்வார் பெயரிலே தனியே, நன்செய்நில வயல்களுக்கு இடையே, ஒரு திருக்கோவில் திகழ்வதைக் காணலாம். இவர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு என்பர்.

2. குலசேகர ஆழ்வார் :

இன்று 'கேரள மாநிலம்' என்று வழங்கப்பெறும் நிலப் பகுதி, கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன்னர், தமிழகத்தின் ஒரு பகுதியாகச் 'சேரநாடு' என்னும் செந்தமிழ்ப் பெயர் கொண்டு திகழ்ந்தது; இவருடைய பாடல்கள் 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்' என்னும் நூலிலே, 'பெருமாள் திருமொழி' என்னும் தலைப்பிலே பத்துப் பதிகங்களாக 105 காணக்கிடக்கின்றன. இவர் இராம காதையில் நீங்காத ஈடுபாடு கொண்டிருந்தார். அதிலே 'அறிவு மடம்' உற்றிருந்தார் என்பர்! ஒருநாள், இராமாயணக் கதை படித்த கலைஞர், 'அரக்கரோடு போரிட்ட இராமர் சிறிது இளைத்துப்பின் வாங்கினார்' என்று படித்தனர். இது கேட்ட குலசேகரர் தம் படைகளோடு இராமனுக்கு உதவுவதற்குப் புறப் பட்டுவிட்டார். பின்னர் அமைச்சர்கள் அறிவுரையால், அக் கலைஞர் "இராமன் வெற்றிபெற்றுச் சீதையோடு மீண்டான்" என்றனர்! அதன் பின்னரே, குலசேகரர் அமைதியுற்றார்; நிலைகொண்டார்!

இவ்வாறு அரசரை அறிவு மயங்குமாறு செய்யும் இராம காதை படிக்கும் கலைஞரை அரசவையை விட்டே நீக்குவதற்கு அமைச்சர் ஒருவகை வஞ்சகம் புரிந்தனர். ஒரு நாள், இராமர் திருவுருவுக்கு அணிவித்திருந்த பொன் அணிகலன்களைக் காண வில்லை! அமைச்சர் இராமகாதைக் கலைஞர் மீதே பழியைச் சுமத்தினர். இது கேட்ட குலசேகரர் ஒரு பாம்புக் குடத்தை வரவழைத்தார்; "கலைஞர் திருடரானால், இப் பாம்பு என்னைக் கடிக்கட்டும்" என்று சொல்லி, குடத்தினுள் வைக்கப்பட்ட

பாம்பை எடுத்துக் கீழே விட்டார்! இதனைக் கண்ட அமைச்சர் நடுநடுங்கி, தாம் இயற்றிய வஞ்சகத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு வேண்டினர். இதனால், குலசேகரர் அரசர் பொறுப்பையே அறவே வெறுத்தார்; துறவி ஆனார்!

குலசேகரர் ஆழ்வார் ஆனார்; திருமால் திருப்பதிகள் பலவும் பயணம் செய்தார்; நாராயணனைத் தொழுது நற்கதி பெற விழைந்தார்; திருவரங்கம், திருவேங்கடம் முதலிய திருப்பதிகள் கண்டார்; அங்கங்கே பதிகங்கள் பாடினார். உலகியல் பொய்மைகளை வெறுத்தார்; இறையியல் மெய்ம்மையையே விரும்பினார். வித்துவக்கோடு என்னும் மலையிடத்துப் பெருமாளை, வேண்டினார்!

*"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்(று)அவள்தன்*
*அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்(று) இருந்தேனே!"*

இவ்வாறு வேறு புகல் விரும்பாத முழு அடைக்கல வேட்கையைப் புலப்படுத்தினார்! இறுதியில், 'பொருநை நாடு' வந்தார்; பொதிகைமலைப் பக்கம் உள்ள 'மன்னார்கோவில்' என்னும் திருப்பதியிலே தங்கினார்; பரமபதம் எய்தினார். இவர் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பர். இன்றும், இந்த ஆழ்வார் திருவுருவம், மன்னார் கோவிலின் உள்ளே இருக்கின்றது; எல்லோரும் பார்க்கலாம்.

### 3. பரிமேல் அழகர்:

பழைய திருக்குறள் உரையாசிரியர்கள் பதின்மர் என்பர். அவர்களில், 'பரிமேலழகர்' முதன்மையானவர் என்று மதிக்கப் பெறுகின்றார். இவர் காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு என்பர். இவர், பொருநை யாற்றின் துணையாறு ஆகிய இராமநதிக் கரையிலுள்ள 'கடையம்' என்னும் ஊரிலே பிறந்தார். இவரது சமாதி எட்டையபுரத்துக்கு அருகில் உள்ளது! அதில் "திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர்" என்று குறிக்கப்பட்டு உள்ளது! இவர் காஞ்சிபுரம் வைணவ அருச்சகர் மரபினர் என்று சிலர் கட்டுரைத்துள்ளனர். ஆராய வேண்டுவதே!

### 4. சேனுவரையர் :

'தொல்காப்பியம்' என்னும் தொன்மை வாய்ந்த இலக்கண நூல் உரையாசிரியர்களுள் 'சேனுவரையர்' என்பவரும் ஒருவர் ஆவர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய முப்பெரும் பிரிவுகளை உடையது. இவற்றுள் நடுவில் உள்ள 'சொல்' அதிகாரத்திற்கு மட்டுமே சேனுவரையர் (சேனை+அரையர்) உரை உள்ளது. 'சேனுவரையன்' என்றால் 'படைத் தலைவன்' என்றே பொருள் ஆகும். தொல்காப்பியம் மூன்று பிரிவிற்கும் முதன் முதலில் உரை எழுதிய பெருமை, 'இளம் பூரணர்' என்பவரையே சாரும். அவருக்கு 'உரையாசிரியர்' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு! அந்த உரையாசிரியரை, இவர் பல இடங்களில் மறுத்துள்ளார்; தமிழ் இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் காட்டியுள்ளார். இவர் வடமொழியிலும் வல்லுநர் ஆவர். சிவஞான முனிவர், "வடநூற்கடலை நிலை கண்டு அறிந்த சேனுவரையர், எழுத்து அதிகாரத்திற்கு உரை செய்வாராயின், இன்னோர் அன்ன பொருள் அனைத்தும் தோன்ற—ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்" என்று பாராட்டி உள்ளார். இவர், பொருநை யாறு கடலொடு கலக்கும் கொற்கை சார்ந்த 'மாறோகம்' என்னும் வட்டாரத்தைச் சேர்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

### 5. அதிவீர ராம பாண்டியன் :

'திருநெல்வேலிப் பாண்டியன்' என்னும் பெயர் பெற்ற 'வீரபாண்டியன்' கி. பி. 1551—64 வரை ஆட்சி புரிந்தான். திருச்செந்தூரின் வடக்கே உள்ள 'வீரபாண்டியன் பட்டினம்' என்னும் ஊர், இவன் பெயர் பெற்றதே ஆகும். இவன் மகனே, 'அதிவீர ராம பாண்டியன்' ஆவான். இவன் பொருநை யாற்றின் சிறந்த துணையாறு ஆகிய, 'சிற்றாறு' என்னும் சித்திரா நதிக் கரையிலுள்ள 'தென்காசி' என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு, ஏறத்தாழப் 'பொருநை நாடு' முழுவதையுமே ஆட்சி புரிந்து வந்தான்! இவன் சிறந்த கவிஞனாகவும், அறிஞனாகவும் சிறப்புப் பெற்றான்; அறங்கள் பல ஆற்றினான்;

'வெற்றி வேற்கை' என்னும் சிறிய அறநூல் ஒன்று பாடினுன். கி. பி. 7ஆம் நூற்ருண்டில் வடநாட்டின் 'அர்சன்' என்னும் ஓர் அரசன் மாபாரதக் கதையின் ஒரு கிளைக் கதை ஆகிய 'நளன் கதை'யை வடமொழியில் 'நைசதம்' என்னும் பெயரிலே ஆக்கி யிருந்தான். அதனை, இப் பாண்டி வேந்தன் தமிழிலே 'நைடதம்' என்னும் பெயரிலே விருத்தப்பாவால் ஆக்கினுன்.

இப் பொருநை நாட்டிலே 'கரிவலம் வந்த நல்லூர்' என்னும் ஊரிலே, இவன் பெரியப்பன் மகன் ஒருவன்—ஆட்சி புரிந்து வந்தான். அவன் 'வரதுங்க ராம பாண்டியன்' என்னும் பெயரினன்; தூய அறிஞன்; சிறந்த கவிஞன்; வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் வல்லுநன். இவன் மனைவியும் நிறைந்த புலமை வாய்ந்தவளாக இருந்தாள்; கவிபாடும் ஆற்றல் பெற்றவளாக வாழ்ந்தாள். இவர்களின் அறிவுத் தொடர்பை இணைத்துப் பல கதைகள் வழங்கப் பெறுகின்றன. அவை கேட்பதற்குச் சுவை தருவன ஆகும்.

### 6. திரிகூடராசப்பக் கவிராயர் :

குற்ருல மலைக்குத் 'திரிகூட மலை' என்று வேறு ஒரு பெயரும் உண்டு! அங்கிருந்து புறப்படும் சிற்ருற்றின் இடப் புறக் கரையிலே 'தென் காசித்' திருநகர் திகழ்கின்றது; வலப்புறக் கரையிலே 'மேலகரம்' என்னும் ஊர் உளது. அங்கே ஏறத் தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 'கவிராயர்' ஒருவர் வாழ்ந்தார். அவர் பக்கத்தில் உள்ள 'குற்ருலம்' என்னும் அருவித் திருநகர் பற்றிப் பதினுன்கு நூல்கள் இயற்றியுள்ளார். அவை மாலை, உலா, வெண்பா, அந்தாதி, ஊடல், கோவை முதலிய சிற்றிலக்கியங்களாக உள்ளன. இவற்றுள், குற்ருலத் தலபுராணம், குற்ருலக் குறவஞ்சி முதலியன மிக்ச் சிறந்த நூல்களாக மிளிர்கின்றன. இவர் பெயரே, 'திரிகூட இராசப்பக் கவிராயர்' என்பது ஆகும். அந் நாளில், தென் பாண்டி நாடு, மதுரை நாயக்க மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. 'முத்துவிசய ரங்கநாத நாயக்கர்', கவிராயர் புலமையைக் கேள்வியுற்ருர். அவரே 'குற்ருலக் குறவஞ்சி'

பாடுமாறு வேண்டினார். அவர் விரும்பியவாறே கவிராயர் 'குறவஞ்சி' பாடினார். இந்நூல் கி. பி. 1781 இல் அரங் கேற்றம் செய்யப்பெற்றது. இந்த நாடக நூலைப் பாராட்டி, நாயக்க மன்னவன், கவிராயருக்குப் பலவகை விருதுகளை வழங்கினான்; 'திருக் குற்றாலக் கோவில் வித்துவான்' என்னும் பட்டம் அளித்தான்; ஆடை அணிகலன்களை வழங்கினான்; இறையிலியாக நிலம் வழங்கினான்; இந்நிலம் 'குறவஞ்சி மேடு' என்று இப்பொழுதும் சொல்லப் பெறுகின்றது! நல்ல விளை வுள்ள அந்த நன்செய் நிலத்தை இன்னமும் அவர் மரபினரே பயன்படுத்தி வருகின்றனர்.

## 7. முக்கூடற்பள்ளு ஆசிரியர்:

பொருநை ஆற்றோடு சிற்றாறு, கோதண்டராம நதி (கயத் தாறு) என்னும் ஆறுகள் கூடும் இடத்தை 'முக்கூடல்' என்று முன்னாளில் வழங்கினர். அதனை இந்நாளில், 'சீவலப்பேரி' என் கின்றனர்! இப்பொழுதும் 'முக்கூடல்' என்ற வேறு ஓர் ஊர் இப் பொருநை யாற்றின் கரையிலே உள்ளது. அது, திருப் புடை மருதூரின் பக்கத்திலே உள்ளது. அங்கே வேறு இரு துணையாறுகள் பொருநையில் வந்து புகுகின்றன! தொண்டை நாட்டிலே இவ்வாறு மூன்று ஆறுகள் கூடும் இடம் உள்ளது. அதனை 'முக்கூடல்' என்று மட்டும் சொல்லாது, 'திருமுக்கூடல்' என்று குறிப்பிடுகின்றனர். 'சீவல்லபன்' என்ற பாண்டி வேந்தன் இங்கே ஒரு பேர் ஏரி (பேரேரி) அமைத்திருந்தான். அதனைச், 'சீவல்லபப் பேரேரி' என்று வழங்கச் செய்தான். அதுவே, பின்பு 'சீவலப்பேரி' என்று மருவி வழங்கப் பெறுகின் றது! இங்கே ஓர் 'அழகர் கோவில்' உள்ளது. இதில், பழைய நாளைய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன. இக்கோவில் இறைவனை 'முக்கூடல் அழகர்' என்று குறிப்பிடு கின்றனர். இப் பெருமானைப் புகழ்ந்து போற்றும் முறையிலே 'முக்கூடற்பள்ளு' என்னும் நூல் ஒன்று உள்ளது. இந்நூல் சொல் நயம், பொருள் நயம், ஓசை இன்பம் ஒருங்கே வாய்க்கப் பெற்றுள்ளது; பள்ளன், பள்ளியர் வாழ்க்கைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றது! இதனைப் பள்ளு நூற்களிலே மிகச்

சிறந்தது என்று பாராட்டுகின்றனர். இந்நூலை ஆக்கிய ஆசிரியரின் இயற்பெயர் தெரியவில்லை! இவர் காலமும் தெளிவாகத் தெரியவில்லை! ஆயினும், இந்த 'முக்கூடற்பள்ளு' ஆக்கிய நூலாசிரியர் கி. பி. 17ஆம் நூற்றாண்டினராக இருக்கலாம் என்று ஆராய்ந்துள்ளனர். சிலர், 'முக்கூடற் பள்ளு' ஆசிரியர் 'என்னயினாப்புலவர்' என்பர்! இஃது, ஆராய்வதற்கு உரியதே ஆகும்.

## 8. வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார்: (1840—99)

பொருநை நாட்டின் நடுநகராகத் 'திருநெல்வேலி' விளங்குகின்றது! அங்கே, செந்தில் நாயகம் பிள்ளை, பேச்சிமுத்து அம்மை ஆகியவர்களின் அருந்தவப் பயனாக, கி. பி. 1840இல் அருள்திரு வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் தோன்றினார்கள்! அவர்களின் இயற்பெயர் 'சங்கரலிங்கம்' என்பதே! இவர் முருகன்மீது ஆக்கிய பாக்கள் அளவில. இவரை 'முருகதாச சுவாமிகள்' என்றும், 'வண்ணச் சரபம்' என்றும், 'தண்டபாணி அடிகள்' என்றும், 'திருப்புகழ்ச் சுவாமிகள்' என்றும் வழங்கினர்! தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம், திருச்செந்தூர்க் கோவை, திருச்செந்தூர்த் திருப்புகழ், அறுவகை இலக்கணம், ஆமாத்தூர்த் தலபுராணம், அருணகிரி நாதர் புராணம் முதலிய பல நூல்களைப் பாடியுள்ளார். இவர் புலவர் எழுபதின்மர் வரலாற்றைப் 'புலவர் புராணம்' என்னும் பெயரிலே பாடியுள்ளார். இது, 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதும் ஆசிரியர்க்குச் சிறந்த துணையாக விளங்குகின்றது.

## 9. கால்டுவெல் ஐயர்:

கிறித்தவமதப் பணியைக் குறிக்கோளாகக் கொண்டு, மேலை நாட்டிலிருந்து, இப் பொருநை நாடு வந்து, செந்தமிழ்ப் பணிபுரிந்த சிறந்தோர்கள் பலர் உண்டு. அவர்களில், பாளையங்கோட்டையைப் பற்றி வாழ்ந்த 'இரேனியசு ஐயர்' (1790-1838). சாயர்புரத்தைச் சார்ந்து இருந்த 'சி. யூ. போப்பு ஐயர்' (1824–1903), இடையன் குடியை இருப்பிடமாகக் கொண்ட 'கால்டுவெல்

ஐயர்' (1814–1891) போன்றவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தவத்திரு இராபர்டு கால்டுவெல் அவர்கள் அயர்லாந்து நாட்டிலே பிறந்தார்; காத்துலாந்து நாட்டிலே கல்வி பயின்றார்; இங்கிலாந்து நாட்டிலே கிறித்தவ சங்கம் சார்ந்தார்! ஆயினும், இந்திய நாட்டின் தென் தமிழ்ப் பொருநை நாட்டிலே உள்ள இடையன் குடி என்னும் ஊரில் நெடுங்காலம் வாழ்ந்து பல துறைத் தமிழ்ப் பணிகள் புரிந்தார்; தமிழின் பெருமைகளை ஆங்கிலத்திலே வெளியிட்டார்; உலகம் உணருமாறு செய்தார்.

இவர், தமிழ்மொழியைக் கசடறக் கற்றுத் தெளிந்தார்; தென்னிந்திய மொழிகள் ஆகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலியவற்றை நுட்பமாகக் கற்றுத் தேர்ந்தார்; 'ஐரோப்பிய மொழிகளின் ஒப்பிலக்கணம்' ஓர்ந்திருந்தார்; ஆதலின், அதனைப் பின்பற்றி, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் ஒப்பற்ற ஆங்கில நூலை உலகிற்குத் தந்தார்; இந்நூல் இன்றைய மொழிநூல் ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரிந்து வருகின்றது.

மேலும் இவர், தமிழ்மொழியின் நலத்தினையும் வளத்தினையும் உலகு அறியச் செய்தார்; 'தென்னிந்திய மொழிகளுள், தமிழ்மொழி மட்டுமே தனித்தியங்கும் தன்மை பெற்றது' என்பதனைச் சான்றுகளோடு மெய்ப்பித்தார். தாம் வாழ்ந்த இப் பொருநை நாட்டின் வரலாற்றை, ஆங்கிலத்திலே "திருநெல்வேலி மாவட்டப் பொது அரசியல் வரலாறு" என்னும் பெயரிலே மிகச் சிறந்த முறையிலே முதன் முதலாக வெளியிட்டார். கொற்கை, காயல் போன்ற இடங்களில் 'புதை பொருள் ஆராய்ச்சி' புரிந்து, பொருநை நாட்டின் பழம் பெருமை பலவற்றை உலகறியச் செய்தார். இந்த ஒப்பற்ற பெரியார்க்கு—தவமாண்பினர் அவர்களுக்கு—தமிழுலகம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது என்பதில் ஐயம் உண்டோ?

10. திரு. எச். ஏ. கிருட்டின பிள்ளை:

கிறித்தவக் கம்பர் என்று போற்றப்பெறும் கிருட்டின பிள்ளை என்பவர் 'இரட்டியார் பட்டி' என்னும் ஊரிலே பிறந்

தார்; திருப்பாற்கடல் நாதன் என்னும் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பாடங் கேட்டார்; போப்பு ஐயர் நிறுவிய சாயர்புரம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர்; 'இரட்சண்ய யாத்திரிகம்' என்னும் நூலை ஆக்கினர். கி. பி. 1900 ஆம் ஆண்டு இறைப்பேறு உற்றார்.

11. உமறுப்புலவர்:

கிறித்தவ மதப் பெரியவர்களைப் போன்றே இப் பொருநை நாட்டில் முகமதியப் புலவர்களும், புரவலர்களும் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களில், உமறுப்புலவர் சாலச் சிறந்தவர் ஆவர். அவர் 'சீருப்புராணம்' என்னும் செந்தமிழ் நூலை ஆக்கினர். அந்நூல் நபிகள் நாயகம் வரலாற்றைக் கூறுகின்றது. அதில், ஆறுகள் அற்ற அரேபிய நாட்டில் வாழ்ந்த 'நபிகள் நாயகம்' பற்றி எழுத முனைந்த உமறுப்புலவர், பொருநை நாட்டில் ஓடும் பொருநை ஆற்றை உள்ளத்தில் கொண்டு தமிழ் நாட்டுச் சூழல்களை அமைத்தே பாடியுள்ளார்!

இவர்களைப் போன்று, பொருநை நாட்டில் வாழ்ந்த பிற்காலப் புலவர்கள் ஏறத்தாழ எழுபதின்மர் உண்டு! இனி இக்காலப் புலவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பார்க்கின், இக் கட்டுரை பெரிதும் விரிந்து நூல் வடிவம் பெற்றுவிடும்! இருப்பினும், விடுதலைப் போராட்ட அரசியல் அறிஞர் திரு. வ. உ. சிதம்பரனர், நாட்டுக் கவிஞர் சி. சு. பாரதியார் (1882–1921), வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார், மு. சு. பூரணலிங்கம் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, வையாபுரிபிள்ளை, அனவரத விநாயகம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், இரா. பி. சேதுப்பிள்ளை, இரசிகமணி டி. கே. சிதம்பரனர், பெருங்குளம் அ. மாதவையா முதலிய பொருநை நாட்டு இலக்கியப் பெரியவர்களின் திருப்பெயர்களை நினைப்பது நம் கடமை ஆகும்.

# 8. பொருநைப் பெருவளம்

இயல்பாகவே, 'பொருநை நாடு' செழிப்பு மிகுந்த பழைமை வாய்ந்த நிலப்பகுதி ஆகும். இப் பகுதியைத் 'தென் தமிழ் நாடு' என்றும், 'தென்பாண்டி நாடு' என்றும் முன்னோர் வழங்கினர்! ஆனால், இன்று 'திருநெல்வேலி மாவட்டம்' என்று தெளிவாகவே குறிப்பிடுகின்றனர். இம் மாவட்டத்தினுள், ஒன்பது வட்டங்கள் அமைந்துள்ளன அவை (i) அம்பாசமுத்திரம், (ii) திருநெல்வேலி, (iii) திருவைகுண்டம், (iv) திருச்செந்தூர், (v) நான்குநேரி, (vi) தென்காசி, (vii) செங்கோட்டை, (viii) சங்கரன் கோவில், (ix) கோவில்பட்டி என்பனவாம். இம் மாவட்டத்தின் தலைநகர் 'திருநெல்வேலி' என்பதே. இதில், 'நெல்' என்னும் சொல் நடுநாயகமாக விளங்குகின்றது! இப் பெயரின் அழகினை நினையுங்கள்! இவ்வட்டாரத்தின் வளமையும் பெருமையும் இனிது விளங்கும்.

'பொருநை நாடு' ஐந்து வகை நிலங்களைப் பெற்றுள்ளது. இங்கே மலைவளம், காட்டுவளம், வயல்வளம், கடல்வளம் ஆகிய நானில நலன்களும் உண்டு; பாலை நிலமும் பயன் தரும். ஆதலின், குறிஞ்சி (மலை), முல்லை (காடு), பாலை, மருதம் (வயல்), நெய்தல் (கடல்) என்னும் ஐந்திணை வளங்களையும் இந்த வட்டாரத்தில் காணலாம். இங்கே உள்ள உயர்ந்த மலை 'பொதியம்'. இது, தமிழகத்துக்கே சிறப்பான மலையாகும். இங்கே உள்ள சிறந்த ஆறு 'தண்பொருநை' (தாமிரவருணி)யே ஆகும். இது மிகவும் புகழ்வாய்ந்த திருநதி யாகும். முத்தும், முத்தமிழும் இவ் வட்டாரத்தின் சொத்து என்பர். நீர் வளம், தொழில்வளம், வாணிகவளம், கல்விவளம், கலைவளம், மருத்துவவளம் முதலிய பல வகை வளங்களும் இங்கே நிலைப்பாக உண்டு. எனவே, 'பொருநை நாடு, பெருவளம் தரும் பெற்றி வாய்ந்தது' என்று போற்றுகின்றனர்

## 1. மலைவளம் :

பொருநை நாட்டின் மேற்கு எல்லையே, மலைத் தொடர்கள் அல்லவா? உடல் நலனுக்கு உதவும் 'குற்றாலம்' இம் மாவட்டத்தின் தனிச் சிறப்புகளில் ஒன்று என்பர்! கண்ணைக் கவரும் மரகத வண்ண மலைகளும், வானின்வழி ஒழுகுவது போன்று பொழியும் அருவிகளும் மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் அரிய விருந்து ஆகும். மலையோரங்களில் மிகுதியாக மழை பொழிகின்றது. 'அகத்தியர்மலை' அழகு வாய்ந்தது; அளவற்ற வளம் பொழிவது! 'மகேந்திரமலை' மாண்பு மிக்கது! ஆறுகளின் பிறப்பிடங்களே மலைகள் அல்லவா? எனவே, அணைகள் பல கட்டி, நீர் நிலைகள் அமைத்துள்ளனர். பாபநாசம்அணை (1942), மணிமுத்தாறுஅணை (1957) என்னும் நீர்த்தேக்கங்கள் இவ் வட்டார மக்களுக்குப் பயன் மிகுவிக்கும் பேரணைகளாக விளங்குகின்றன. அவை மின்சாரமும் மிகுநீரும் வழங்குகின்றன. மேற்குமலைத் தொடர்களில், பொருநையின் துணை ஆறுகள் தோன்றும் இடங்களில், நீர்ப் பாசன வளங்கருதிப் பல அணைத் திட்டங்கள் நிறைவுபெற்று வருகின்றன. இராமநதி நீர்த் தேக்கத் திட்டம், கடனு ஆற்று நீர்த் தேக்கத் திட்டம் (1973 இலேயே) நிறைவு பெற்றுள்ளன; கருப்பா நதி நீர்த் தேக்கம், குண்டாறு நீர்த் தேக்கம் நல்ல முறையிலே வேலைகள் நடைபெற்று வருகின்றன. குற்றாலமலை செடி கொடி வகைகளும், மூலிகைகளும், ஈச்சைகளும், பாக்கு மரங்களும் நிறைந்தது; அங்கே இருவாட்சி, மல்லிகை, செண்பகம், வெட்சி, முல்லை மலர்களும் பூக்கின்றன. பொதியமலை 2700 வகை மருந்துச் செடிகளையும் வெவ்வேறு வகையான பல மரங்களையும் உடையது. குறுமலையிலும், கொழுந்து மலையிலும் இல்லாத மருந்து மூலிகைகள் இல்லை எனலாம். இவை எல்லாம் 'பொருநை நாட்'டின் மலைவளத்திற்கு மாண்பு மிக்க சான்றுகளாக விளங்குகின்றன.

## 2. காட்டுவளம் :

காடுகளை, 'இயற்கையின் அருள் கொடை' என்று பாராட்டுவார்கள். உலகம் தோன்றிய காலம் முதல், காடுகளே வனப்

பிற்கும் வளத்திற்கும் மங்காத செல்வங்களாக மதிப்பிடப் பெற்று வருகின்றன. வனவிலங்குகளும், பறவைகளும் தென்றல் தவழும் சோலைகளும், தெளிந்த நீர்ச் சுனைகளும் காடு தரும் செல்வங்களே ஆகும். வளங்குன்றிய நிலவெளிகளே இல்லாத வாறு, பசுமை மிகுந்த பொழில்களும், பூங்காக்களும், பழத் தோட்டங்களும் இவ் வட்டாரத்தில் விளங்குவதைப் பார்க்கின் றோம். அரசின் காட்டுத்துறை, இயற்கை அழகு, காட்டு விலங்குகள், காட்டுப் பொருள்கள் ஆகியவற்றைக் கண்போன்று காத்து வருவதைக் காண்கின்றோம். தீக்குச்சி மென் மரங்கள், பிசின் மரம், மஞ்சக் கடம்பு, மருது, தேக்கு, கோங்கு முதலியன மிகச் சிறப்பு வாய்ந்த காட்டு மரங்களாகக் கருதப் பெறுகின் றன. செங்கோட்டைக் காடுகளில் தரம் உயர்ந்த தேக்கு மரங்கள் மிகுதியாக வளர்கின்றன; கடலோரப் பகுதிக் காடு களில் பனை மரங்கள் மிகுதி. பாபநாசம், சிங்கம்பட்டி காடுகளில் 'புலிகள் புகலிடம்' உருவாக்கப் பெற்றுள்ளது. காடுகளில், தேன், முந்திரி, மிளகு, மா, காப்பி, தேயிலை முதலியன சிறந்த பொருள்களாகக் காக்கப் பெறுகின்றன. இம் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பளவு 4407 சதுரக் கல்; இவற்றுள் காடு களின் பரப்பளவு 547 சதுரக் கல். எனவே, மொத்த நிலப் பரப்பில், காடுகள் 13% உள்ளன! இதனால், இப் 'பொருநை நாடு காட்டு வளம் மிக்கது' என்று போற்றுகின்றனர்.

### 3. வயல் வளம் :

"பாயும் ஆறுகளில் 'பரணி'யில் குளிக்க வேண்டும்" என்பது பழமொழி. இதில் 'பரணி' என்பது 'தாமிரவருணி' (பரணி) ஆற்றைக் குறிப்பிடுகின்றது. இத் 'தண்பொருநை' (தாமிர வருணி) யாறு, புகழ் பெற்ற 'பெரிய பொதிகை' என்னும் அகத் திய மலையிலே தோன்றி 24 கி.மீ. மலைப் பகுதிகளில் சிற்றாறுகள் சிலவற்றைச் சேர்த்துக்கொண்டு, 'பாபநாசம்' என்னும் மலை யடிவாரத் துறைவழியே அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய வட்டங்களில் வயல் களுக்கு வளமூட்டி, 'கொற்கை'ப் பக்கமுள்ள 'புன்னைக் காயல்' என்னுமிடத்திலே மன்னார் வளைகுடாவிலே கடலொடு கல

கின்றது! இதன் துணையாறுகள் ஆகிய 'சிற்றாறு' தென்காசி வட்டத்தையும், 'பச்சையாறு' நான்குநேரி வட்டத்தின் வட மேற்குப் பகுதியையும் வளமூட்டிப் பொருநையாற்றில் இணைந்து விடுகின்றன. எனவே, பொருநை நாட்டின் ஒன்பது வட்டங்களில், ஆறு வட்டங்களுக்குப் பொருநையாறும், அதன் துணையாறுகளும் வயல் வளம் பெருக வைக்கின்றன. இவ் வட்டாரத்தில், ஆறுகளின் துணையால் ஏறத்தாழ 2,460 ஏரி குளங்களும், 394 கால்வாய்களும் வயல்பாசன வசதி தருகின்றன.

## 4. கடல் வளம் :

இப் பொருநை நாட்டின் கடற்கரை நீளம் 136 கி. மீ. உள்நாட்டு நகரினைப் 'பட்டணம்' என்றும், கடற்கரை நகரினைப் 'பட்டினம்' என்றும் சொல்லுவது மரபு ஆகும். காயல் பட்டினம், வீரபாண்டியன் பட்டினம், குலசேகரன் பட்டினம் என்ற ஊர்கள் கடற்கரைத் துறைமுக நகர்களாக விளங்கின. 'காயல்' என்பது 'கடல் ஓர ஆற்றுக் கால்வாய் ஆகும். காயல் பட்டினம், மஞ்சள் நீலக் காயல், பழைய காயல், புன்னைக் காயல் ஆகிய இடங்கள் கடற்கரை ஊர்களாக விளங்குகின்றன. பொருநை நாட்டின் பெரிய துறைமுகமாக, இந்நாளில், 'தூத்துக்குடி' பெயர் பெற்று விளங்குகின்றது! இப் பெருமையை முன்னாளில் 'கொற்கை' பெற்றிருந்தது என்று இலக்கியங்கள் இயம்புகின்றன. இங்கே முத்து, சங்கு, மீன் முதலிய கடல் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. வெளிநாட்டார் அனைவரும், இதனைத் "தமிழ் நாட்டின் வாயில்" என்று விளம்பினர். இவற்றால், 'பொருநை நாட்டின் கடல் வளம்' நன்கு புலப்படுகின்றது அல்லவா?

## 5. பாலை வளம் :

நீர்வளம் இல்லாத நிலத்தையே 'பாலை' என்றனர். திருச்செந்தூர் வட்டத்தின் தென் கிழக்கு, தென் மேற்குப் பகுதிகளும், நான்குநேரி வட்டத்தின் கிழக்கு தெற்குப் பகுதிகளும் மணல் பாங்கு பரவிய வறிய நிலங்களாக விளங்குகின்றன!

இடைஇடையே இடையன் குடி, குதிரை மொழி, சாத்தான் குளம் முதலிய இடங்களில் அகன்ற மணல் மேடுகள் உள்ளன. இவற்றைத் 'தேரி' என்பர். கோடை மாதங்களில் அடிக்கும் காற்று, தேரியின் தோற்றத்தை மாற்றும் என்பர்! இவ் வட்டாரம் பாலைநிலத்திற்கு உரிய சான்றாக விளங்குகின்றது. இங்கே பனைமரங்கள் மிகுதி. ஆதலின், இதனைப் 'பனைமர வட்டாரம்' என்று பகர்வர். பனையின் எல்லா உறுப்புகளுமே பயன் தருவனவாம். இதனால், தென்னை, பனை ஆகிய மரங்களைக் 'கற்பகம்' என்னும் தெய்வ உலக மரமாகவே கருதுகின்றனர். இத்தகைய 'பாலை வள'த்தைத் தமிழ் நாட்டில் வேறு எங்குமே காண இயலாது!

இதுவரை, பொருநை நாட்டின் ஐந்துவகை நிலவளங்களின் நீர்மை கண்டோம். இனிப் 'பொருநைப் பெருவளம்' என்று போற்றப் பெறுவனவற்றுள் இன்றியமையாத வேறு சில வளங்களைச் சிந்திக்கலாம்.

## 6. தொழில் வளம் :

நிலவளமும், நீர்வளமும் வாய்ந்த இப் பொருநை வட்டாரத்தில் பலவகைத் தொழில்கள் செழிப்புற்றுத் திகழ்கின்றன. சிறப்பாக, வேளாண்மை (உழவு), மின்சாரம், மீன்பிடித்தல், சங்கு எடுத்தல், முத்துக் குளித்தல், பனை ஏறுதல் போன்றவற்றைச் சொல்லலாம். இவற்றுள்ளும் முத்துக் குளித்தலும், சங்கு எடுத்தலும் இந்தப் பொருநை நாட்டிற்கே உரிய தனிப் பெருந் தொழில்கள் எனலாம்! தொழில் வளம், தொழிலாளியின் வளமாகவே கருதப் பெறுகின்றது.

### (i) உழவுத்தொழில் :

இவ் வட்டாரத்தின் முக்கியமான தொழில் வேளாண்மை எனலாம். இதுவே பழைமை வாய்ந்த தொழில் ஆகும். ஏன் எனில், உயிர் வாழ்வதற்கு உரிய 'உணவு' தருவது, இத் தொழிலே ஆகும் அல்லவா? திருவள்ளுவர் 'உழவு' என்னும் தலைப்பிலே பத்துக் குறட்பாக்கள் ஆக்கியுள்ளார். அவற்றுள்,

ஒரு குறளின் கருத்தினை இங்கே குறிப்பிடலாம்: 'வேள்' விருப்பத்தை மிகுவிக்கும் 'நிலம்'. ஆள்+மை=ஆளும் தன்மை; ஆண்மை. நிலத்தை உழுதோ உழுவித்தோ ஆள்வது, 'வேளாண்மை' ஆகும். இதனை 'உழவுதொழில்' எனலாம். "உழவுத்தொழில் செய்து வாழ்கின்றவரே, உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர் எல்லோருமே, பிறரைத் தொழுது உண்டு, பின் செல்பவராகவே கருதப் பெறுவர்."

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள்: 1033)

எனவே, உழவுத் தொழிலே உயர்ந்த தொழில் என்பதை உணரலாம். மேற்கு மலைத் தொடர்ச்சியிலே தோன்றும் பொருநை யாறும், அதன் துணையாறுகளும் பாய்வதால், இயற்கையாகவே நீர்வளமும் நிலவளமும் கொண்ட இவ் வட்டாரம், உலகிலேயே முதன்முதலில் உழவுத்தொழில் பெற்ற இடமாக விளங்குகின்றது. நூற்றுக்கு எண்பது பேர் உழவர்களே ஆவர். நெல் விளையும் வட்டாரம், 'நெல்வேலி' ஆயிற்று. எனவே, நீர்ப்பாசன வாய்ப்பு மிகுந்த இப் 'பொருநை நாடு' வேளாண்மைத் தொழிலால் விளக்கம் உறுகிறது எனலாம்.

(ii) மின்சாரத் தொழில்:

இன்றைய நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக 'மின்சாரம்' இலங்குகின்றது. தொழில் பேட்டைக்கும் பலவகை ஆலைகளுக்கும் எழில் ஊட்டுவது மின்சாரமே ஆகும். இன்று, மின்சார இணைப்பற்ற ஊர்களே இல்லை எனலாம். 'பாபநாசம் நீர் மின்னுக்க நிலையம்' 1938 இல் தொடங்கி 1944 இல் கட்டி முடிக்கப் பெற்றது. இதனால், 'பொருநை நாடு' ஒளிமயமாகத் திகழ்கின்றது. இதனால், வேளாண்மையும் பிறதொழில்களும் சிறக்கின்றன.

(iii) மீன் பிடித்தல்:

உழுது பயிர் செய்து, உணவுப் பொருள் காணாத மிகப் பழைய காலம் ஒன்று இருந்தது. அந்தத் தொன்மை வாய்ந்த

காலம் முதல், 'மீன்' சிறந்த சத்து உணவுப் பொருளாகவே மதிக்கப் பெற்று வருகின்றது. இன்னும் சில நாடுகளில் மக்கள் மீனை மட்டுமே உணவாகக் கொண்டு வாழ்கின்றனர். இப் பொருநை வட்டாரக் கடற்கரை நீளம், நூற்று முப்பத்தாறு கி. மீ. இந்த வளமான கடலோரத்தில், 'மீன் வளம் 'மிகுந்து காணப்படுகின்றது. கடலோரம் மட்டும் அல்லாமல், உள் நாட்டில் உள்ள நீர்நிலைகளிலும் மீன் வளர்ப்புத் தொழில் மேன்மையுற்று விளங்குகின்றது. சான்றாகப், பொது மக்களுக்கு வளர்ப்புக்காக மீன் குஞ்சுகளைக் கொடுக்கும் பொறுப்பை 'அரசின் மீன் துறை'யே ஏற்றுக் கொண்டுள்ளது. 'கோபால சமுத்திரம்' என்னும் ஊரிலே, இதற்காக நான்கு நீர் நிலைகளை, 'மீன் துறை' தன்னிடம் வைத்துள்ளது. 'கூட்டுறவு மீன் சங்கங்கள்' ஏற்பட்டு வருகின்றன. இவற்றால், பொருநை நாடு மீன் காப்புத் தொழிலிலே கவனம் செலுத்தி வருவதைக் காண்கின்றோம்.

(iv) சங்கு எடுத்தல் :

சங்கு முழக்கம் எங்கும் கேட்கப் பெறும்! வெற்றியின் அடையாளமாகச் சங்கு முழங்குவதைக் கேட்கலாம். 'வலம்புரிச் சங்கு' விலை மதிக்க இயலாத ஒன்று என்பர்! முன்னாளில், பால் போன்ற தூய வெள்ளை வளையல்கள், சங்கினை அறுத்தே செய்யப் பெற்றன! அவற்றைப் பாவையர் விரும்பிக் கைகளில் அணிந்தனர். 'சங்கு அறுப்பது எங்கள் குலம்' என்றார், நக்கீரர் என்னும் பழந்தமிழ்ப் புலவர். தமிழ் நாட்டிலேயே, கடல் வளம் கொழிக்கும் ஊர்களுக்குத் தலைமை தாங்குவது, இந்த வட்டாரத்தின் 'தூத்துக்குடி'யே ஆகும். இந்த நகரமே, 'கடல் வளம் கொட்டிக் கிடக்கும் கிடங்கு' என்று சொல்லத்தகுந்த புகழைப் பெற்றுள்ளது. கடலுள் ஏறத்தாழ 21 மீட்டர் ஆழம் வரை சென்று சங்கு எடுக்கின்றனர். கடல் நீருள் மூழ்குவோருக்குக் 'குளியர்' என்று பெயர். இந்நாளில், சங்கு எடுக்கும் தொழில், முத்து எடுக்கும் தொழிலைப் போலவே அரசின் நேர் மேற்பார்வையில் அமைந்துள்ளது.

(v) முத்துக் குளித்தல்:

'பாண்டி மன்னவனின் தென்னாடு முத்து உடையது'* என்னும் பாராட்டை இவ் வட்டாரம் முன்னரே பெற்றுள்ளது! அன்றிலிருந்து இன்றுவரை உலகின் முத்துக் கிடங்காக விளங்கும் பேறு, பொருநை நாட்டுக் கடல் ஆகிய மன்னார் வளைகுடாவே பெற்று வந்துள்ளது. இன்று, 'இலண்டன் மாநக'ரில் உள்ள 'காத்தன் தோட்டம்', முத்து வாணிபத்தில் உலகிலேயே தலைசிறந்த இடமாகக் கருதப் பெறுகின்றது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சிறந்த முத்துக்கள் அங்கு வருகின்றனவாம். நமது 'முத்தும்' அங்குச் செல்கின்றது! 'உலகின் வேறு எந்தப் பகுதிகளிலிருந்தும் வரும் முத்துக்கும், பொருநை நாட்டுக் கொற்கை முத்து இணைத்தது இல்லை—மிகவும் தரம் உயர்ந்ததே' என்று அங்குள்ள வணிகர்கள் ஒருமுகமாகவே கருதுகின்றனர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே 'கொற்கை முத்து' மேலைநாட்டு அரசியரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாம்! தென்பாண்டி நாட்டின் முத்து கன்னியரைக் கவர்ந்த 'கட்டாணி முத்து' என்று கருதப் பெற்றது! 'அர்த்த சாத்திரம்' என்னும் வடமொழிப் பொருள் நூலை ஆக்கிய 'சாணக்கியர்', கி. மு. மூன்றும் நூற்றாண்டிலேயே, தண்பொருநை ஆற்றையும், முத்துக் குளிப்பையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே முத்தின் வனப்பும் வளமும் கண்டு, முன்னாளில், பிளினி, தாலமி போன்ற மேல் நாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். சீனம், எகிப்து, கிரேக்கம், பெர்சியா, உரோம் போன்ற பழம் பெரும் நாடுகளோடு தென்பாண்டி நாட்டார் முத்து வாணிகம் செய்தனர்! இப் பெருமை உலகில் வேறு எவரும் பெற்றதில்லை. அன்று போலவே இன்றும் முத்து தென்தமிழகத்தின் செல்வம்

---

*"வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"
—ஔவையார், தனிப்பாடல் திரட்டு

மிகுந்த சொத்து ஆக மதிக்கப் பெறுகிறது. எனவே, இன்றைக்கு மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, நம் 'பொருநை நாடு' 'முத்துக் குளிப்புத் தொழிலிலே' முதுபுகழ் பெற்றுவந்துள்ளது!

(vi) நூல் ஆலைத்தொழில் :

பஞ்சாலைகள், இந்நாளில் பல ஊர்களில் உள்ளன. ஆனால், தமிழகத்திலேயே முதன் முதல், பொருநை ஆற்றின் பாபநாசமலை நீர்த்தேக்கத்தால், 'விக்கிரமசிங்கபுரம் மில்' என்ற பெயரில் 'நூல் ஆலை' ஒன்று தொடங்கப் பெற்றது.

அரசு உரிமை பெற்ற (15—8—1947) பின்னர், இப்பொருநை நாடு என்னும் திருநெல்வேலி மாவட்டம் பலப் பல புதுப் புதுத் தொழில் வளங்களால் பெரும் முன்னேற்றம் பெற்று வருகின்றது. கோயமுத்தூர் மாவட்டமே தமிழகத்தில் தொழில் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது! ஆயினும், அம் மாவட்டத்திற்கு அடுத்த படியாக, விரைந்து தொழில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு இந்த வட்டாரத்திற்கே உள்ளது. அவற்றுள் சில காணலாம் :

(vii) 'மண்பாண்ட வேலை'

ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மாண்புற்று இருந்த காட்சிகளை, ஆதிச்சநல்லூர் புதை பொருள்கள் புலப்படுத்தி உள்ளன இந்த நுண்கலைத் தொழில், இன்றும் அம்பாசமுத்திரம் தென்காசி வட்டாரங்களில் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாய் நன்கு இயங்கி வருவதைப் பார்க்கலாம். 'பாய் முடையும் தொழில்' பல தலைமுறைகளாக நடைபெற்று வருகின்றது. பொருநை யாற்றில் வளரும் கோரைப் புற்களைக் கொண்டு, பாய் நெய்யப் பெறுகின்றது. 'பத்தமடை பாய்' உலகப் புகழ் பெற்றுள்ளது, சணல் நாரிலிருந்து 'இரத்தினக் கம்பளங்கள்' செய்யப்படுகின்றன. இதற்கு உரிய பயிற்சி நிலையம் 'கோபால சமுத்திரம்' என்னும் ஊரில் அரசு அமைத்துள்ளது. பட்டுப் பூச்சி வளர்ப்பு, மெத்தை, தும்பு தொழில்கள் தென்காசியில் துலக்கம் உற்றுத் திகழ்கின்றன. தொழில்பேட்

டைகளைத் திருநெல்வேலிப் பேட்டை (1960)யிலும், கோவில் பட்டி (1963)யிலும், தூத்துக்குடி (1964)யிலும் அரசு அமைத்துள்ளது. மணப்பாடு என்னும் இடத்தில் வேலைப்பாடு மிகுந்த 'பனை ஓலைத் தொழில்', 'பனை வெல்லத் தொழில்' என்பன வேண்டிய அளவு நடைபெறுகின்றன. 'உப்புக் காய்ச்சும் தொழில்' பொருநை நாட்டுக் கடற்கரையில் பெரிய அளவிலே நடைபெறுகின்றது. தூத்துக்குடி, ஆறுமுகனேரிக் கடற்கரைகளில் ஏராளமான 'உப்பளங்கள்' உள்ளன. கைத்தறி நெசவுத் தொழில் கடையநல்லூர், கல்லிடைக் குறிச்சி, வீரவநல்லூர் முதலிய ஊர்களில் பெரிய அளவில் நடைபெறுகின்றது. தமிழ் நாட்டிலேயே, திருநெல்வேலிப் பேட்டையில்தான் முதல் முதலில் தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை (195:) அமைக்கப் பெற்றது! மேலும், மாட்டு எலும்பு உரத் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை, கைத்தறி, கதர்த் தொழில், பருத்தி அரைக்கும் ஆலைத் தொழில், பலவகைக் குடிசைத் தொழில்கள், பீடி சுற்றுதல், செங்கல் செய்தல், சோப்பு உற்பத்தி, எண்ணெய்ச் செக்குத் தொழில், தோல் பதனிடும் தொழில், அச்சுத் தொழில் முதலியன பல ஊர்களில் சிறந்த தொழில்களாக அமைந்துள்ளன.

(viii) இரசாயனத் தொழிற்சாலை:

எஃகு ஆலைகளைப் போன்று, இரசாயனத் தொழிற்சாலைகளும் மிகவும் தேவையே ஆகும். பொருநை ஆறு கடலோடு கலக்கும் இடத்தின் பக்கத்தில் ஆத்தூர் உள்ளது. அதன் பக்கத்தில் 'சாகுபுரம்' என்னும் இடத்திலே 'தாரங்கதரா—கெமிக்கல்சு—இரசாயனத் தொழிற்சாலை' மூன்றரைக் கோடி ரூபாய் மூலதனத்தில் 1959 இல் அமைக்கப்பெற்றுள்ளது. இதனை 'குசராத் மாநில'த்து ஒரு வணிகக் குடும்பத்தினர், தமிழ்நாடு அரசின் ஆதரவோடு நடத்தி வருகின்றனர். இஃது, ஆசியாவிலேயே பெரிய 'இரசாயனத் தொழிற்சாலை' என்பர்.

(ix) உரத் தொழிற்சாலை :

இந்நாளில் 'தூத்துக்குடி' சென்னைக்கு அடுத்த சிறந்த 'துறைமுக நக'ராக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கே பல புதுப்

புதுத் தொழிற் சாலைகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. மத்திய உப்பு ஆராய்ச்சி நிலையம், 'பொட்டாசியம் குளோரைடு தொழிற்சாலை' ஏற்பட்டு உள்ளன. 'SPIC உரத் தொழிற்சாலை' தோன்றியுள்ளது! அணுமின்சார நிலையம் அமைந்துள்ளது; மீன் வளர்ச்சிப் பண்ணை மிளிர்கின்றது.

(x) சிமெண்டுத் தொழிற்சாலை :

'திருநெல்வேலி'யின் பக்கத்திலே 'தாழையூற்று' என்னும் இடத்தில் புதிய நகர் ஒன்று தோன்றியுள்ளது; அது 'சங்கர் நகர்' எனப்படும். இங்கே 'இந்தியா சிமெண்டுத் தொழிற்சாலை' 1948முதல் இயங்கி வருகின்றது. இது தமிழ்நாட்டின் மிகப் பெரிய சிமெண்டுத் தொழிற்சாலைகளில் ஒன்று என்கின்றனர். பொருநைக்கரை ஊர்களிலே கரும்பு ஆலைகளும் காகித ஆலைகளும் தோன்றியுள்ளன. எனவே, 'பொருநை நாடு' எண்ணற்ற சிறு தொழில்களும் பெருந் தொழில்களும் வளரும் வட்டாரமாக இலங்குகின்றது எனலாம்.

## 7. வாணிக வளம் :

பொருநை வட்டாரத்தின் உற்பத்திப் பொருள்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தன நெல், உப்பு, உலர்ந்த மீன், முத்து, பனைவெல்லம், பனைப் பொருள்கள், பருத்தி, கரும்பு முதலியன எனலாம். முக்கூடலில் பீடி வாணிகமும், செங்கோட்டையில் மர வாணிமுகம், அம்பா சமுத்திரத்தில் நெல் வாணிகமும், தூத்துக்குடியில் உப்பு வாணிகமும் பெரும்அளவில் நடைபெறுகின்றன. இவ் வட்டாரம் கடலோரமாக இருப்பதால், தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும், இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்தும் 'தூத்துக்குடித் துறைமுகம்' வழியாகவே பல பொருள்கள் ஏற்றுமதி ஆகின்றன ; இவ்வாறே பிற வெளிநாட்டுப் பொருள்கள், இங்கே இறக்குமதி ஆகின்றன. எனவே, தூத்துக்குடியிலே பல தொழில் நிறுவனங்களும், வணிக நிறுவனங்களும் வளர்ந்து வருகின்றன. 'கூட்டுறவு இயக்கம்' வணிக வளத்துக்குப் பேராக்கம் அளித்து வருகின்றது. தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் வங்கிகள் (Banks) பல உள்ளன. இந்தியா உரிமை பெற்ற பின்னர்,

இந்திய அரசு வங்கி (State Bank of India) யின் கிளைகள், பொருநை நாட்டின் பல இடங்களிலும் கிளைத்து வருகின்றன. இந்த வட்டாரத்தவர்களால் நடத்தப்பெறும் வங்கிகளே பல இருக்கின்றன. அவை அனைத்தும் 'பொருநை நாடு வாணிக வள'த்திலே செழிப்புப் பெறுவதற்கு உதவி வருகின்றன.

## 8. போக்குவரத்து வாய்ப்புவளம்:

பொருநை நாடு சீரும் சிறப்பும் மிகுந்த ஒரு வட்டாரம் அல்லவா? இங்கே 'போக்கு வரத்து'க்கு, மிகுந்த வாய்ப்புகள் அமைக்கப் பெற்றுள்ளன; நெடுஞ்சாலை, தொடர் வண்டி (இரயில்)ப் பாதை, கடல் வழி போன்ற பல நெறிகள் தோன்றி யுள்ளன. தலை நகராக விளங்கும் 'திருநெல்வேலி மாநக'ரிலிருந்து, தெற்கே—கன்னியாகுமரி, மேற்கே—நெல் வளம் மிகுந்த நிலப் பகுதியும் பொதிகையின் வாயிலும் ஆகிய அம்பை, அருவிப் புகழ்க் குற்றாலம், மேற்குமலைத் தொடர்க்கு அப்பால் கேரள மாநிலம், வடக்கே—பல ஊர்கள், கிழக்கே—துறைமுகச் சிறப்பு வாய்ந்த தூத்துக்குடி, தலச் சிறப்புள்ள திருச்செந்தூர் முதலிய நாலா திக்குகளுக்கும் நெடுஞ்சாலைகளும் தொடர் வண்டிப் பாதைகளும் நல்ல முறையிலே போடப் பெற்றுள்ளன. பழைய நாளில், 'மங்கம்மாள் சாலைகள்' எங்கும் சென்றன! இடை யிடையே குறுக்கிடும் ஆறுகளையும் பாதைகளையும் கடக்க இப் பொழுது, 'பாலங்கள்' கட்டப்பெற்றுள்ளன. சிறப்பாக, திருநெல்வேலிக்கும், பாளையங்கோட்டைக்கும் இடையே பொருநை ஆற்றிலே கட்டப்பெற்றுள்ள 'சுலோச்சன முதலியார் பாலம்' (1843) சென்ற நூற்றாண்டின் சிறப்புக்குத் தகுந்த சான்றாக நின்று நிலவுகின்றது. இந்நாளில், 'பொருநை நாடு' அரசு உதவியுள்ள புகழ் மிகுந்த பல போக்கு வரத்துப் பாதைகளையும் பாலங்களையும் பெற்று விளங்குகின்றது; குறிப்பாக, நெல்லை மாநகரிலே ''திருவள்ளுவர் ஈரடுக்கு மேம் பாலம்' (1973) கட்டப்பெற்று, சிறப்புறுகின்றது; அஞ்சலகங் களையும் கம்பிவழிச் செய்தித் தொடர்புகளையும் பெற்றுத் திகழ்கின்றது.

9. கல்வி வளம்:

செல்வ வளத்தால் சிறப்புற்று விளங்கும் பொருநை வட்டாரம், கல்வி வளத்திலும் கவர்ச்சி மிகுந்த செழிப்பு வாய்ந்ததே ஆகும். முத்துப் பிறந்ததும் முத்தமிழ் சிறந்ததும் இங்கே அல்லவா? சங்க காலத்திலிருந்து இன்றுவரை, தமிழ் மொழியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உழைத்த பெருமக்கள் தோன்றிய வட்டாரம் இஃது அன்றோ? இதற்குக் காரணம், இவ் வட்டாரத்திற்கு வாய்த்த அமைதி வாய்ந்த சூழலே ஆகும்.

தமிழகத்தின் ஏனைய வட்டாரங்களுக்கு இல்லாத இயற்கையான அமைதிச் சூழல், 'தென்தமிழ் நாடு' பெற்றிருந்தது! தமிழகம் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக வேற்றரசுகள் பலவற்றின் தாக்குதல்களுக்கு உட்பட்டிருந்தது! களப்பிரர், பல்லவர், சாளுக்கியா, மராத்தியர், முகமதியர், நாயக்கர், ஆங்கிலர் முதலிய பல வேற்று அரசுகள் தமிழ்நாடெங்கும் அவ்வப்பொழுது வந்து வேரூன்றின. அவற்றால், தமிழ் நாட்டின் வடபகுதிகள் எல்லாம் வாட்டம் உற்றன! மதுரைக்குத் தெற்கே சிறப்பாகத் "தென்பாண்டித் திருநாடு" ஆகிய இந்த வட்டாரம், வேற்றார் தாக்குதலுக்கு உட்படவில்லை! எனவே, அரசியல் சுழற்சிகளால் இப் 'பொருநை நாடு' பெரிதும் பாதிக்கப் பெறவில்லை எனலாம்! மேலும், இவ் வட்டாரத்தை ஆட்சி புரிந்து வந்த குறுநில மன்னர்களும் வள்ளல்களும் மக்கள்மீது பரிவுகொண்டதோடு, தமிழ்மொழி வாழவும் வளரவும் ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்தனர்; பல தமிழ் மன்றங்களை அமைத்துத் தமிழ்ப் புலவர்களைக் காத்து வந்தனர். இதனால் தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், மெய்ப்பொருளியல், சமயம் முதலிய பல்வேறு துறைகளில் பெரும் வளர்ச்சி பெற்றது! இன்று தெருத்தோறும் சிறு பள்ளிகள், ஊர்தோறும் உயர்பள்ளிகள், பேரூர்தோறும் கல்லூரிகள் என்ற நிலையை இவ் வட்டாரம் பெற்றுவிட்டது! பாளையங்கோட்டை, தமிழகத்தின் ஆக்சுபோர்டாக மதிக்கப் பெறுகின்றது!

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல— ..." (நாலடியார் 135)

ஆயினும்,

"என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்—397)

என்று வள்ளுவர் வினா விடுத்துள்ளார்! எனவே, 'பொருநை நாடு' என்றென்றும் கல்வி வளம் மிகுந்த பகுதியாகவே விளங்கி வந்துள்ளது எனலாம்.

## 10. கலைவளம்

ஊர்தோறும் அமைந்துள்ள, கோவில்கள் இவ் வட்டாரத்தின் பழைய கட்டிடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சான்று பகர்வனவாக நிற்கின்றன. சிறப்பாக, திருநெல்வேலி, தென்காசி, திருக்குறுங்குடி, திருச்செந்தூர், கிருட்டிணாபுரம் முதலிய ஊர்களில் வெவ்வேறு காலங்களில் அரசர்கள் அமைத்த கோவில் கட்டிடங்கள் கலைக் கூடங்களாக—களஞ்சியங்களாக விளங்குவதை இன்றும் காணலாம். உறுமி மேளம், நையாண்டி மேளம், கணியான் மேளம் முதலிய இசை வளத்தைப் 'பொருநை நாட்டுக் கலைகள்' என்றே போற்றலாம். நவசத்தி நடனம், நாடகம் முதலிய கலைகளின் பிறப்பிடமாக இந்த வட்டாரம் விளங்குகின்றது. இதற்குக் குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு முதலிய நூல்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பொருநை நாட்டுக் கலைகளிலே போற்றத் தகுந்த ஒன்று 'வில்லுப் பாட்டு' என்பர். இவ் வட்டாரச் சாத்தனார் கோவில்களில கொடை விழாக்கள் நடைபெறும். அப்பொழுது வில்லுப் பாட்டு இல்லாத விழாவே இருக்காது எனலாம்! பொதிகை மலைமேலே 'சொரிமுத்து ஐயன்' என்னும் சாத்தனார் கோவில் உண்டு. அங்கே ஆடி மாத அமாவாசை நாளில் கொடை விழா உண்டு. இவ் வட்டார மக்கள் திரள் திரளாக அங்கே கூடுவர். அங்கே மேளதாளங்களுக்கு இடையே 'வில்லுப் பாட்டே' முக்கிய இடம் பெறும். அதில் வீர வழிபாட்டுக் கதைகளை இசைத்துப் பாடுவர்! அவை கேட்பதற்கு மிகவும் கிளர்ச்சியூட்டி இன்பம் தரும்; சொல்நயம், பொருள்நயம் சொட்டும்!

எடுத்துக் காட்டாக, 'முத்துப் பட்டன்' கதையில் வரும் பொருநை நாட்டுப் பெருமையின் சிறு பகுதியைப் பாருங்கள் :

"நாடுஎல்லாம் நல்லநாடு;
நாவலர்கள் புகழும்நாடு;
கோடைமழை பொழியும்நாடு;
குளிர்ந்ததென்றல் வீசும்நாடு;
இஞ்சிபிஞ்சி பூக்கும்நாடு;
எலுமிச்சை விளையும்நாடு;
மஞ்சள்பூவும் மலரும்நாடு;
மாவீரன் பட்டன்நாடு."

எனவே, 'நுண்கலைகள்' என்றும், 'கவின் (அழகு) கலைகள்' என்றும் போற்றப் பெறும் ஓவியம், இசை, கூத்து, இலக்கியம் முதலிய கலைகள் யாவுமே, பொருநை நாட்டின் பெருமை கூறுவனவாக உள்ளன.

## 11. மருத்துவ வளம் :

மருந்துச் செடி கொடி மரங்கள் பொதியமலை, மருத்துவாழ் மலை, மகேந்திரமலை, குற்றாலமலை முதலிய மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மிகுதியாக உள்ளன. இந்த மலைகளிலிருந்து வரும் ஆறுகளின் நீரிலே உடற்பிணி போக்கும் திறம் உண்டு. இந் நாட்டின் 'ஆயுள்வேத மருத்துவம்', 'சித்த மருத்துவம்' உடற் பிணி போக்கும் உயர்ந்த முறைகளாக வளர்ந்து வந்தன.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்." (குறள்—943)

இதனால், 'தமிழ் மருத்துவக் கலை' பல தலைமுறைகளாக வளம் பெற்று வளர்ந்துள்ளது. பச்சிலை மூலிகைகளாலேயே பொருநை நாட்டு மக்கள் பல பிணிகளையும் போக்கி வந்தனர். ஆனால், இந்நாளில் ஆங்கில மருத்துவமுறை பல ஊர்களில் பரவி விட்டது! திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் 'பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை', பாளையங்கோட்டையில் 'மாவட்டத் தலைமை மருத்துவமனை' இன்னும் பல வட்ட மருத்துவ மனைகள்,

தனியார் மருத்துவ மனைகள், உயர்ந்த பணிகள் புரிந்து வரு கின்றன. இவ் வட்டாரத்தில் கிறித்தவர் நடத்தும் மருத்துவ மனைகள் பல உள்ளன. அவற்றுள் நான்குநேரி வட்டத்தில், களக்காடு என்னும் ஊரின் பக்கத்தில் உள்ள 'டோனூவூர் மருத்துவ மனை' (1896) மிகவும் புகழ் பெற்றதாகும். அது, தமிழிலே 'பரம சுக சாலை' என்றும், ஆங்கிலத்தில் 'Donavur Fellowship Hospital' என்றும் சொல்லப் பெறுகின்றது. மேலும், தூய லூக் மருத்துவமனை (நாசரேத்), புனித சூசையப்பர் தொழு நோய் (குட்டரோக) நிவாரண நிலையம் (ஆரோக்கியபுரம், தூத்துக்குடி), விக்டோரியா மருத்துவமனை (மணப்பாடு), தூய நெஞ்ச (புனித இதய) மருத்துவ மனை (இஞ்ஞாசியார் புரம், தூத்துக்குடி) முதலியன பாராட்டத் தகுந்தன என்பர். எனவே, 'பொருநை நாடு' மருத்துவ வளம் பொருந்திய வட்டாரமே எனலாம். இவ்வாறு, 'பலவகைப் பெருவளங்களைப் பெற்று விளங்கும் திருநாடாக இப் பொருநை நாடு' திகழ்கின்றது.

# 9. பொருநைக்கரை நாகரிகம்

**ஆற்றங்கரை நாகரிகம் :**

ஆற்றங்கரைச் செல்வமே, ஆறறிவு முற்றிய மக்களை அமைதியாக வாழச் செய்தது. அதனல், மக்கள் உள்ளம் மாண்பு பெற்றது; பண்பாடு உற்றது. மக்களிடம் நாகரிகம் மலர்ந்தது. பழைமை வாய்ந்த உலக நாகரிகங்கள் யாவும் ஆற்றங்கரை நகர்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. எகிப்திய நாகரிகம், 'நைல்' ஆற்றையும், மெசபொட்டேமிய நாகரிகம் உயூப்ரதீசு—தைகிரீசு என்னும் இரண்டு ஆறுகளையும், சீன நாகரிகம் மஞ்சள் ஆற்றையும், சிந்துவெளி நாகரிகம் சிந்து ஆற்றையும் அடிப்படையாகக் கொண்டனவாகும். இவை போலவே, 'பொருநைக்கரை நாகரிகம்' என்னும் பெருமை வாய்ந்த மிகப் பழைய நாகரிகம், 'பொதியம்' தோன்றி, 120 கி.மீ. ஓடுவதால் ஒரு மாவட்டத்தை மட்டுமே செழிப்பூட்டி, புன்னைக்காயல் (கொற்கை) பக்கம் மன்னூர் வளைகுடாக் கடலிலே பொருந்துகின்ற 'தண்பொருநை (த்ாமிரவருணி) யாறு' என்னும் புகழ் மிகுந்த பேராற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளது! 'திருநெல்வேலி மாவட்டப் பொது—அரசியல் வரலாறு' என்னும் நூலை ஆக்கிய தவப் பெரியார் முனைவர் இராபர்ட் கால்டுவெல் ஐயர் அவர்கள், "தென்னிந்தியாவின் மிகப் பழைய நாகரிகம், தண்பொருநை ஆற்றங்கரையிலேயே தழைத்துச் சிறந்தது" என்று குறிப்பிட்டு உள்ளார்கள். இதுவே, 'தமிழ் நாகரிகம்' என்னும் தனி நாகரிகத்தின் அடிப்படை என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

'நாகரிகம்' என்பது என்ன? ஆடம்பரமான ஆடைகளை உடுத்தி, பகட்டான அணிகலங்களை அணிந்து, மாட மாளிகைகளிலே செல்வச் செழிப்போடு வாழ்வதையே, சிலர் 'நாகரிகம்' என்கின்றனர்! வேறு சிலரோ, கல்வி ஒழுக்கங்களால் கட்டுப்பாட்டோடு வாழ்வதையே 'தலைசிறந்த நாகரிகம்' என்று நவில்கின்றனர்! மனிதன், மிகப் பழங்காலம் முதலே, பல வழிகளில்

படிப்படியே முன்னேறி வந்துள்ளான். அம் முன்னேற்றம் இரு வழிகளிலே காணக் கிடக்கின்றன. அவை ஒன்று 'புறவளர்ச்சி', மற்றொன்று 'அகவளர்ச்சி' என்பனவாம். புறவளர்ச்சிக்கு அக வளர்ச்சியே அடிப்படை என்பர்! உணவு, உடை, உறையுள், தொழில், கலைகள், மருந்து முதலியவற்றில் திருந்திய வளர்ச்சியைப் 'புறவளர்ச்சி' என்பர்; அன்பு, அருள், வாய்மை தூய்மை, ஒழுக்கம், நாணம், மானம், ஈகை, ஒப்புரவு. கண்ணோட்டம் (இரக்கம்) முதலிய மன வளர்ச்சியை 'அகவளர்ச்சி' என்பர். இது, 'மக்கட் பண்பு' எனப்படும்! பண்பட்ட மன நிலையையே 'பண்பாடு' என்பர். பண்பாட்டுக்கும் பண்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு! "பண்பெனப் படுவது 'பாடு' அறிந்து ஒழுகுதல்" (கலித்தொகை: நெய்தல்: 16) என்பர் நல்லந்துவனார். 'பாடு' என்பது 'நிலைமை', 'பயன்', 'உலக ஒழுக்கம்', 'பெருமை' என்னும் பலபொருள் உடையது. 'பண்படு' என்ற வினைச் சொல், 'பண்பாடு' என்னும் பெயர்ச் சொல் ஆயிற்று! சீர்படுத்தித் திருத்தப் பெற்ற நிலம், 'பண்படுத்தப்பட்ட நிலம்' எனப்படும். இதுபோலவே, சீர்திருத்தம் பெற்ற உள்ளம், 'பண்பட்ட உள்ளம்' எனப்படும். திருந்திய நிலம் நல்ல பொருள்களை விளைவிக்கும். இது போல, திருந்திய உள்ளம் சமுதாய வாழ்வுக்கு ஏற்ற நல்ல எண்ணங்களை உருவாக்கும். 'தமிழர் பண்பாடு' என்றால் தமிழ் மக்களுக்கே உரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள் ஆகும். எனவே, 'நாகரிகம்' (Civilization) என்னும் புற வளர்ச்சிக்குப் 'பண்பாடு' (Culture) என்னும் அகவளர்ச்சியே அடிப்படை ஆகின்றது!

தனக்கென முயலாத—பிறர் பொருட்டே முயல்கின்ற மாண்பினர் வாழ்வதாலேயே இந்த உலகம் நிலைபெற்று இருக்கின்றது![1] இந்த உலகம், மனப் பண்பு உடையவர் பொருந்தி வாழ்வதாலேயே நிலை பெற்று நிற்கின்றது. அஃது இல்லாவிடில்

---

1. "தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்(கு)என முயலுநர் உண்மை யானே
......இவ்வுலகம், உண்டு!"
—புறநானூறு: 182: கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.

இவ்வுலகு மண்ணுள் புகுந்து அழிந்து போகும்![1] இவ்வாறு, நம் முன்னோர், 'அக வளர்ச்சி பெற்ற பண்பாளர் அருமை'யை நினைவுறுத்தி உள்ளனர். நாடோடியாகத் திரிந்த மனிதன் ஆற்றங்கரைகளில் நிலைத்து வாழ முனைந்தான். அவன் உழைப்பால், அங்கே உழவுத் தொழில் பலவகை வளங்களைத் தந்து செழிக்கச் செய்தது; வாணிகம் வளர்ந்தது; செல்வம் செறிந்தது; வளமனைகள் வளர்ந்தன. 'நகர்' தோன்றியது! இந்த நகர் என்னும் சொல்லின் அடியாகத் தோன்றியதே 'நாகரிகம்!' (நகர் + அகம் = நகரகம்; நகர் + இகம் = நகரிகம்—நாகரிகம்—Civil—Civilize—Civilization) சிற்றூர் மக்களை விட, மாநகர் மாந்தர் திருந்திய வாழ்வு உடையவராகத் திகழ்ந்தனர். அவர்களிடையே 'நாகரிக வாழ்வு' வளர்ந்தது. எனவே, பழம் பெரும் நாகரிகங்கள் அனைத்தும் 'ஆற்றங்கரை'களிலேயே அரும்பியன ஆகும்.

**மன (அக) நாகரிகம் :**

'நாம் புறவளர்ச்சி' என்று புரிந்து கொண்டிருக்கும் 'நாகரிகம்', அகவளர்ச்சியின் முதல்படியாகவே அமைந்திருந்தது. திருக்குறள், 'கண்ணோட்டம்' 'நாகரிகம்' பற்றி விளக்கம் தந்துள்ளது. 'நற்றிணை' என்னும் தொகுப்பு நூலிலும் அதற்கு மேற்கோள் வந்துள்ளது. இரண்டும் பேரிரக்கம் ஆகிய கண்ணோட்டமே 'நாகரிகம்' என்கின்றன. இதுவே, 'விரும்பத் தகுந்த நாகரிகம்'—('நயத்தக்க நாகரிகம்' : குறள் : 580) என்று நவிலப் பெற்றது! "பழகியஒருவர், நஞ்சு இடுவதை நேரிலே பார்க்கும் நிலைமை பெறினும், அவர் மன நிறைவுக்காக, அந்த நஞ்சினை உண்டு அமைபவரே, நல்லோரால் விரும்பத்தக்க நாகரிகம் (கண்ணோட்டம்) என்னும் பண்பினை விரும்புபவர் ஆவர்" என்றார், திருவள்ளுவர்!

> "பெயக்கண்டும் நஞ்(சு)உண்(டு) அமைவர்; நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்" (குறள் : 580)

---

1. "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அ(து)இன்றேல்,
மண்புக்கு மாய்வது மன்" (குறள் : 996)

இவர்களையே, 'நனி நாகரிகர்'[1] (மிகுந்த நாகரிகம் உடையவர்) என்கின்றது, நற்றிணை! எனவே, நம் தமிழ் முன்னோர் 'கண்ணோட்டம்' ஆகிய பண்பாட்டையே 'நாகரிகம்' என்றனர். இவற்றால், 'நாகரிகம்' என்பது 'திருந்திய வாழ்க்கை'யே என்று தெளிகின்றோம். உள்ளத்தால் திருந்திய நிலையை 'அக நாகரிகம்' என்றும், உடம்பால்—உலகியலால்—திருந்திய வாழ்க்கையைப் 'புறநாகரிகம்' என்றும் கொள்ளவேண்டும்.

## பொருநைக்கரை நாகரிகம் :

பொருநைக் கரையிலே ஆதிச்ச நல்லூர், கொற்கை போன்ற இடங்களில் செய்த 'புதைபொருள் அகழ்வு ஆய்வு', வரலாற்றுக்கு முந்திய அந்த நாளிலேயே விளங்கிய நாகரிகத்தை எடுத்துக் காட்டும் சான்றுகளாக விளங்குகின்றன; பெருமிதத்தோடு இன்று நின்று விளங்கும் பேரூர்களின் பெருமை, வரலாற்றுக் கால நாகரிக நயத்தின் வரம்புகளாக விளங்குகின்றன. வானளாவிய வீடு, மாட மாளிகை கட்டி வாழ்வது—ஆரவார ஆடை அணிகள் அணிந்து வாழ்வது—அறிவியல் படைப்புகள் ஆகிய மின்சாரம், வானொலி, ஊர்திகள் முதலியவற்றைப் பயன் படுத்தி வாழ்வது—முதலியவை உண்மை வாய்ந்த—நயத்தக்க—நனி நாகரிகங்கள் ஆகா! இருப்பினும், அருட்குணம் ஆகிய பிறர்மீது கொள்ளும் பரிவே (இரக்கமே), 'மன (அக) நாகரிகம்' என்று மதிக்கப் பெற்று வருகின்றது. எனவே, 'பொருநைக் கரை நாகரிகம்' என்பது இவ்வட்டாரப் பேரூர்களின் வளர்ச்சியைக் கொண்டோ—வளத்தைக் கொண்டோ மதிக்கப் பெறுவது இல்லை! 'மக்களின் பண்பு' ஒன்றாலேயே மதிக்கப் பெறுவது ஆகும்!! "மக்கட் பண்பு இல்லாதவர், மதி நுட்பம் வாய்ந்தவரேனும், மரம்போல்பவரே ஆவர்"[2] என்றார், திருவள்ளுவர்! இவ்வாறு, பொருநை நாட்டுப் பெரியவர்கள், புலவர்கள் முதலிய தவமாண்பினர்

1. "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்." (நற்றிணை 355 : 5, 6)

2. "அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண்பு) இல்லா தவர்." (குறள்:997. பண்புடைமை)

தெளிவுரைகளே பொருநைக்கரை நாகரிகத்தைப் புலப்படுத்துவதற்கு உரிய போதுமான சான்றுகளாக விளங்குகின்றன. அதன் அடிப்படை, உலக மக்கள் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே ஆகும். இன்பம் விரும்பாத உயிர்களும் உண்டோ?[1]

**யாதும் ஊரே யாவரும் கேளிர் :**

நாளையும் கோளையும் கணித்து அறிந்து சொல்பவனைக் 'கணியன்' என்று குறிப்பிடுவர். இக் கணியன் வழியினர், இன்று கோவில் கொடை விழாக்களில் பறையடித்துப் பாடும் 'கணியான்கள்' ஆகக் காட்சி தருகின்றனர்! கணியன் மரபினர், இவ் வட்டாரத்திலே நீண்ட நெடுங் காலங்களாக வாழ்ந்து வருகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், 'கணியன் பூங்குன்றனுர்' என்னும் இலக்கியப் பெரியார் ஒருவர் வாழ்ந்தார். அழகிய மலையைப் 'பூங்குன்றம்' என்று அழைத்திருக்கலாம்; அது பொதிய மலைப் பகுதியாகவும் இருக்கலாம். 'பூங்குன்றன்' என்று அழைக்கப் பெற்ற புலவர், 'கணியன்' ஆகவும் இருக்கலாம். ஆதலின் 'கணியன் பூங்குன்றன்' என்ற காரணப் பெயருக்கு உரியவர் இவ் வட்டாரத்தினராகவே இருக்க வேண்டும்.[2] அவர் பாடியுள்ள இரு பாடல்களுள் ஒன்று, 'புறநானூறு' என்னும் எட்டுத் தொகை நூலிலே பொலிவு பெற்று விளங்குகின்றது. அதன் பொருள் 'பொருநைக் கரையின் பெருமிதம் வாய்ந்த பழைய பண்பாடு—நாகரிகம்' ஆகியவற்றைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த வட்டாரத்திலே பல இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் வெவ்வேறு மதங்களைத் தழுவி வாழ்பவர்களாகவும் விளங்குகின்றனர். ஆயினும், அவர் அனைவரும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற சாதி—சமயப்

---

1. "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்(று) ஆகும்"
—தொல்காப்பியம் - பொருள் - பொருளியல்: 29 (1169)

2. 'மகிபாலன் பட்டியே' பழைய நாளைய 'பூங்குன்றம்' என்கிறார், உரையாசிரியர் ஔவை. சு. துரைசாமி அவர்கள்.

பொறைப் பண்பாட்டைச் சார்ந்தே வாழ்கின்றனர். இங்கே, பழைமை வாய்ந்த சிவநெறியையும், திருமாலிய நெறியையும் தழுவி வாழும் மக்கள் உள்ளனர்; வடக்கே இருந்து வந்த புத்த மதமும் சமண மதமும் புகுந்து நின்றோர் வாழ்ந்தனர்; சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ் வட்டாரத்திலே நுழைந்த கிறித்தவ மதத்தையும், முகமதிய மதத்தையும் சார்ந்தவர்கள் வாழ்கின்றனர். அவரவர்களுக்கு உரிய பதிகளும் கோவில் களும் ஊர்களும் இவ் வட்டாரத்திலே பரவலாக உள்ளன. இவ்வாறு மதத்தாலும், இனத்தாலும் மாறுபட்டவர்களாக இப் பொருநை நாட்டு மக்கள் வாழினும், 'அனைவரும் தமிழர்களே' என்ற தணியாத அன்பால் ஒன்றுபட்டே வாழ்ந்து வருகின் றனர். சான்றாக 'பாண்டியன் நெடுமாறன்' சமண மதத்தைச் சார்ந்து நின்றான்! அவன் மனைவி மங்கையர்க்கு அரசியார் சிவ நெறியைச் சார்ந்திருந்தார்!! இத்தகைய சமயப் பொறை பொருநை நாட்டிலே என்றென்றும் நின்று நிலவி வருகின்றது!

கணியன் பூங்குன்றனாரின் புறப்பாடல் தமிழக மக்களின் ஒற்றுமையைக் காட்டுவதோடு, இப் பெரு நாட்டின் ஒருமைப் பாட்டு உணர்வினை உலகத்திற்கு உணர்த்துவதற்காகவே அமைந்துள்ளது! இயற்கையின் உறுதி வாய்ந்த இயக்கத்தினை, அப் பழம் புலவர் இயம்பியுள்ள இயல்பினை என்னென்பது? பூங் குன்றனார் வள்ளல்களையோ, வளமிக்கவர்களையோ, மன்னர் களையோ நெருங்கிப் பழகிப் பாடவில்லை! இதுகண்ட சான்றோர் சிலர், 'பாடும் ஆற்றல் வாய்ந்த நீங்கள், இதுவரை எவரையுமே பாராட்டியோ குறை கூறியோ பாடவில்லையே! இதற்குக் காரணம் உண்டோ?' என்று வினவினர். அதற்கு அப் பெரி யார், "எல்லா ஊரும் என் சொந்த ஊரே ஆகும்; மனித இனத்தவர் அனைவரும் என் உற்ற உறவினரே ஆவர்!" (யாதும் ஊரே; யாவரும் கேளிர்)* என்று பதில் அளித்தார்!

**அகத்தியர் நெறி:**

அகத்தியர் பலர் ஆவர்! 'வடநாட்டிலிருந்து தென்னாடு வந்த புராண அகத்தியர், தமிழ் மொழியைப் படைத்தார்'

* புறநானூறு: 192: 'கணியன் பூங்குன்றன்' பாட்டு.

என்று கதை சொல்லுகின்றனர்! ஆனால், 'பொதிகை மலை'யில் வாழ்ந்த புகழுக்கு உரிய ஓர் 'அகத்தியர்', இறைவனிடம் முறையாகத், தமிழ்மொழியைக் கற்றார் என்று மற்றுமோர் அரிய கதை புகல்கின்றனர்! தமிழ் இலக்கியங்களைத் தெளிவாகக் கற்று, 'தமிழ் இலக்கணம்' ஆக்கிய 'தமிழ் முனிவர்' ஒருவர் திகழ்ந்தார்! அவர் தந்த 'அகத்தியம்' என்னும் இலக்கண நூல் இப்பொழுது முழுவதும் கிடைக்கவில்லை! அந்த முத்தமிழ் இலக்கண நூலில் பன்னீராயிரம் நூற்பாக்கள் இருந்தனவாம்! அவற்றுள் இப்பொழுது ஒருசில நூற்பாக்களே மேற்கோள்களாகச் சில உரை நூல்களிடையே காணக் கிடக்கின்றன! அவற்றுள் ஒரு நூற்பா, 'இலக்கணம்' தோன்றும் இயல்பினை முறையாகக் கூறும் நெறியினைப் பாருங்கள் :

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;
எள் இன்(று) ஆகில், எண்ணெயும்இன்றே;
எள்ளினின்(று) எண்ணெய் எடுப்பது போலவே,
இலக்கியத் தினின்(று) எடுபடும் இலக்கணம்"

'அகத்தியர் தமிழ்மொழியை உண்டாக்கினார்' என்று சிலர் கதை கட்டியுள்ளனர்! இது, 'கடவுள், மொழிகளை உண்டாக்கினார்' என்று கூறுவது போலவே, கற்பனை மொழி ஆகும்! 'ஒரு மொழியை ஒருவர் படைத்தார்' என்று சொல்லுவது, பகுத்தறிவுக்குப் பொருந்துவதாக அமையுமோ? என்னதான் 'கடவுள் தன்மை' என்று படைத்துக் கூறினும், அது 'மொழி வளர்ச்சி வரலாறு' புரியாதவர் சொல்லே ஆகும்! ஒருவர் தாமாகவே ஒரு மொழியைப் படைத்து, இலக்கியங்களையும் இயற்றிப் பலரும் பயிலச் செய்தார் என்பது அறிவுக்குப் பொருந்துவதாக அமையாது. 'மொழி' என்பது மக்கள் இனத்தின் கூட்டுறவால், பல காலம் பயின்று, பலரால் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வருவது ஆகும்; மக்கள் நாகரிகம் வளரவளர மொழி பண்பட்டுத் தோன்றும். இதுவே, 'மொழி நூல்' உண்மையாகும்! ஆதலின், வடநாட்டிலிருந்து தென்னாடு வந்த ஒருவர், தமிழைத் தோற்றுவித்தார் என்ற கொள்கை பொருளற்றதே ஆகும்.

எனவே, அகத்தியர் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழகத்தில் தமிழ் மொழி இலக்கியச் செல்

வங்களைப் பெற்றிருந்தது. 'அகத்தியர்' சான்ருேரிடம் தமிழ் மொழியை ஓதி உணர்ந்து, இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஆசறக் கற்றுத் தேர்ந்தார்; 'பொதிகைத் தமிழ் மன்றம்' என்ற ஒரு தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழ் மொழியைப் புலவர்களோடு அளவளாவி ஆராய்ந்தார். அவருக்குப் பன்னிரு புலவர்கள் பார் போற்றும் மாணவராய் அமைந்திருந்தனர். அனைவரும் ஒருங்கிருந்தே அரிய தமிழ் இலக்கணம் 'அகத்தியம்' என்னும் பெயரால் உருவாக்கி யிருக்க வேண்டும். ஆதலின், "என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்" எனக் கம்பர் அகத்தியரைப் பாராட்டினர். எனவே, 'இலக்கியம் கண்டு, அதற்கு இலக்கணம் இயம்பும் முறைமையை அவர் உலகோருக்கு உணர்த்திய உயர்நெறியை உன்னுங்கள்! இது, 'பொருநைக்கரை நாகரிகம்' போற்றி வளர்த்த 'அகத்தியர் நெறி' அல்லவா?

நம்மாழ்வார் வளர்த்த நாகரிகம்:

பொருநைக் கரையிலே திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) புளியமரப் பொந்திலே, பிறந்தது முதல் பேச்சு மூச்சு அற்ற சடமாக இருந்து, பதினறு ஆண்டுகள் அரிய தவம் புரிந்த பெரியவரே நம்மாழ்வார் ஆவர்! அவர் வாழ்க்கையைப் பற்றிய கதைகள் பல உண்டு! அவை எவ்வாறு ஆயினும், அவர் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்ற பாராட்டுக்கு உரிய தவ மாண்பினர் ஆவார். அவர், இறையன்பு, உயிர்அன்பு, 'சமரசம்' என்னும் சம நிலை ஆர்வம் முதலிய உயர் நெறிகளைத் தம் பாடல்களின் வழியே உலகிற்கு உணர்த்தியுள்ளார். அவை அனைத்தும் பொருநைக்கரை நாகரிகத்தின் உறைகற்களாகவே மிளிர்கின்றன.

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்(து) எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர் ஆகிலும்,
வலந்தாங்கு சக்கரத்(து) அண்ணல் மணிவண்ணற்(கு)
[ஆள்என்(று)உள்
கலந்தார் அடியார் தம்அடி யார்தம் அடிகளே!"[1]

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மயிலை மாதவதாசன்) 1950; திருவாய்மொழி (2971).

இத் திருவாய்மொழி தரும், 'அடியவர் அன்பினை' உன்னுங்கள். 'திருமாலே சிவனாக—பிரமனாகத் தெளிவதற்கு உரிய பொதுத் தெய்வம்' என்ற இவரது 'பொதுமத—(சமரச)ப் பட்டறிவு மொழி'யினை என்னென்பது?

"ஆண் அல்லன்; பெண் அல்லன்; அல்லால் அலியும் அல்லன்!
காணலும் ஆகான்; உளன் அல்லன்; இல்லை அல்லன்;
பேணுங்கால் பேணும் உருவாகும்; அல்லனும் ஆம்;
கோணை பெரி(து)உடைத்(து)எம் பெம்மானைக் கூறுதலே" [1]

"யானும் தானாய் ஒழிந்தானை, யாதும் எவர்க்கும் முன்னோனை,
தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனி முதலை,
தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்தித்(து)என்
ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே" [2]

"முனியே! நான்முகனே! முக்கண் அப்பா! என்பொல்லாக்
கனிவாய் தாமரைக்கண் கருமாணிக்கமே! என்கள்வா!
தனியேன் ஆருயிரே! என்தலை மிசையாய் வந்திட்(டு)
இனிநான் போகல் ஒட்டேன்; ஒன்றும்மாயம் செய்யேல் எனையே"[3]

"'மயர்வு' என்னும் அறியாமை நீங்கி, மதிநலம் பெறுவதற்கு, உயர்நலம் உடைய இறைவனின் திருஅருளே வழியாகும்! இதனை என் மனமே நீ அறிவாயாக; அவன் துயர்அறு சுடர் அடிகளைத் தொழுது எழுவாயாக." இவ்வாறு, நம்மாழ்வார் தம நெஞ்சிற்குக் கூறும் அறிவுரையின் நேர்மையினை, நினைக்க நினைக்க இன்பம் பெருகுகின்றது.

"உயர்)வு)அற உயர்நலம் உடையவன் எவன்அவன்
மயர்(வு)அற மதிநலம் அருளினன் எவன் அவன்

---

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மயிலை மாதவதாசன்) 1950; திருவாய்மொழி (2838).

2. ௸ 8 : 3527

3 ௸ 10 : 3766, கருமாணிக்கமே! இது, திருநெல்வேலி மாநகரின் பெருமாள் கோவில் இறைவன் திருப்பெயர்.

அயர்(வு) அறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்
துயர்அறு சுடர்அடி தொழு(து)எழு;என் மனனே!" (2675)
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்: திருவாய்மொழி: 1.

குமரகுருபரர் அருளிய நூல்களின் வழியே, இவ் வட்டார மக்களின் நாகரிக நோக்கங்கள் பொங்கி வழிவதைக் காணலாம். அவற்றுள் ஒரே ஒரு நோக்கினை நோக்கலாம். மனிதன் உடலுறுப்புகளில் 'தாள்' (பாதம்), 'கை' என்பவற்றைக் குறிக்கும் சொற்கள் 'முயற்சி', 'உழைப்பு' என்னும் பொருள்களிலேயே வழங்கப் பெறுகின்றன. ஆதலின், மனிதன் நிலைத்த புகழ் பெறுவதற்கு ஊக்கத்தோடு உழைத்து, முயன்று வாழ வேண்டும் என்பதனையே முன்னோர்கள் நெறியாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகின்றோம். பாடுபட்டுத் தேடித் தேடிப் பொருள் குவிப்பதையே சிலர் மக்கட் பிறப்பின் பயன் என்று கருதுகின்றனர்! ஆனால், குமரகுருபரர் 'செல்வம்', 'வறுமை' ஆகிய இரு நிலைகளுக்குமே மிகவும் தெளிந்த விளக்கம் தந்துள்ளார்! 'போதும்' என்ற மனநிறைவே 'செல்வம்' என்றும், அல்லல் தருகின்ற பேராசையே 'வறுமை' (நல்குரவு) என்றும் விளக்கம் தந்துள்ளார்!

"'செல்வம்' என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாஎனப் படுமே"*
(சிதம்பர மும்மணிக் கோவை: 25)

சிவஞான முனிவர் :

பொதியமலை அடிவாரத்திலே உள்ள புகழ் பெற்ற புண்ணிய தலம், 'பாவநாசம்' எனப்படும் இதன் பக்கத்தில் உள்ள 'விக்கிரம சிங்கபுரம்' என்னும் ஊரிலே தோன்றிய 'முக்காள லிங்கம்' என்னும் இளமைப் பெயர் பெற்றிருந்த சிவஞான முனிவர், வடமொழி தென்மொழி வல்ல முனிவராக வாழ்ந்தார்! இவர் அருளிய நூல்களிலும் 'பொருநைக் கரை நாகரிகம்' பொங்கி வழிவதைக் காணலாம். ஆருயிர்களுக்கு எல்லாம் அன்பு செய்து 'விருந்து ஓம்பும பண்பாடு', 'தமிழர் நாகரிகம்'

*குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு: கழக வெளியீடு - ௫0 (1925) பக்கம் - உ௬௪.

என்று மதிக்கப் பெறுகின்றது. அதனைப், பொருநை நாடு பேணிக் காத்து வருகின்றது! திருவாவடுதுறைத் துறவியர்க்குத் தம் தாயார் விருந்து அளித்து ஓம்பிய பண்பை, முனிவர் ஓர் எளிய வெண்பாவால் விளக்கியுள்ளார் :

"அருந்ததிஎன் அம்மை அடியவர்கட்(கு) என்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெய்யும்
மானம் தவாத மயில்"

இதனால், தமிழ் நாகரிகத்தின் விருந்தோம்பும் பண்பு, பொருநை நாட்டிலே பெருகி ஓங்கி இருந்ததைப் புரிந்து கொள்கின்றோம் அல்லவா?

**நிறைவுரை :**

இவ்வாறே, பொருநை நாட்டுப் பெரியோர்கள், பறை சாற்றிய 'நாகரிகத் திருமொழிகள்' அளவில ஆகும். முன்னாளில் பூலித்தேவர் வீரவாழ்வும், வீரபாண்டிய கட்டப்பொம்மன் தீரச் செயல்களும் பொருநை நாட்டுத் தன்மான உணர்வை தரணிக்கு உணர்த்தின. அண்மைக் காலத்திலே, நாடு விடுதலை பெறுவதற்காக முதல் உரிமைக் குரல் எழுப்பிய உரவோர்கள் பொருநை நாட்டிலேயே தோன்றினார்! அவர்களில் வீரர் வ. உ. சிதம்பரனாரும், அமரகவி. சி. சு. பாரதியாரும் முன்னணியில் நிற்பவர்கள் ஆவர். அவர்களின் ஆர்வ மொழிகளும் அருந்திறல் செயல்களும் பொருநை நாட்டின் பெருமையினை, உலகிற்கு உணர்த்தின என்பர். தண்பொருநைக் கரை தந்த தவமாண்பினர்களின் அருளுரைகளும் பெருநூல்களும் தமிழர்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் தரணிக்கு உணர்த்தும் தெளிவான கண்ணாடிகளாகவே விளங்குகின்றன. எனவே, 'பைந்தமிழர் பண்பாடு' ஆகிய 'பொருநைக் கரை நாகரிகம்' அன்றும் இன்றும் என்றுமே பாரோரின் நெஞ்சங்களில் நின்று நிலவும் பான்மை பெற்று விளங்கி வருகின்றது எனலாம்.

வாழிய, பொருநை வளம்.

[library stamp]